KALAIMAKAL BHAVAN
MULLIYAWALAI.




கலாநிதி ... சுப்பிரமணியம்
முதுநிலை விரிவுரையாளர் — தரம்,
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
இலங்கை.

ஆசிரியர்:
இளங்கீரன்

V. JAYALUCKSHMI BOOK DEPOT
248, Galle Road,
WELLAWATTE
T/PHONE 88930.

வெளியீடு:

நவபாரத் பிரசுராலயம்,
9, கம்மாளர் தெரு, சென்னை 6.

முதற் பதிப்பு: 1956.

உரிமை ஆசிரியருக்கே.

விலை ரூபா. 2-4-0.
2/50

விற்பனை உரிமை:
சண்முகநாதன் புத்தகசாலை,
காங்கேசன்துறை ரோட்,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ சண்முகநாத அச்சகம்.

## இளங்கீரன் எழுதியவை:

1. பைத்தியக்காரி
2. பொற்கூண்டு
3. மீண்டும் வந்தாள்
4. மரணக்குழி
5. காதலன்
6. ஒரே அணைப்பு
7. காதல் உலகிலே
8. கலாராணி
9. அழகு ரோஜா
10. பட்டினித் தோட்டம்
11. நீதிபதி
12. ஆணும் பெண்ணும்
13. வண்ணக்குமரி
14. எதிர்பார்த்த இரவு
15. மனிதனைப் பார்
16. பாரதி கண்ட சமுதாயம்
17. தென்றலும் புயலும்
18. புயல் அடங்குமா?
19. சொர்க்கம் எங்கே?
20. மனிதர்கள்.

கலாநிதி. நா. சுப்பிரமணியன்
முதுநிலை விரிவுரையாளர் — தரம் I
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
இலங்கை.

## இந் நாவலாசிரியரைப் பற்றிப் பத்திரிகைக் குறிப்புகளில் சில:

"இன்றைய நாவல் உலகில் இளங்கீரன் விடிவெள்ளியாக மிளிர்கிறார். இலங்கையில் இவரளவு நாவல்கள் எவரும் எழுதியதில்லை. போராட்டம் நிறைந்த இவருடைய வாழ்க்கை மேல்நாட்டு மேதாவிகள் பலரின் வரலாற்றை ஞாபகமூட்டுகிறது." — சுதந்திரன்.

"....ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன் சாதாரணத் தொழிலாளியாக, இருபது வயதுகூட நிரம்பப் பெறாத ஒரு இளவலாகக் கடல் கடந்து சென்ற அவர் பல ஆண்டுகளுக்குப் பின்னர் இளங்கீரன் என்ற எழுத்தாளராகத் திரும்பினார். மலேயாவிலே, அவர் கையில் சிக்குண்ட பேனாவிலே குளுமையும், எழுச்சியும் இடம்பெற்றிருந்தன. கருத்திலே புகுந்துவிட்ட புலமையும், புரட்சியும் இன்றுவரை அந்தப் பேனாவுக்கு ஓய்வு கொடுக்கவேயில்லை." — ஈழகேசரி.

"இளங்கீரன் முற்போக்கு நாவலாசிரியர். சிறந்த எழுத்தாளர். மக்களுக்காக எழுதும், அவர்கள் அணியில் நின்று போராடும் எழுத்தாளர்." — தேசாபிமானி.

"....சிந்தனைக் கடலிலே ஆழச் சுழியோடி இளங்கீரன் தரும் முத்துக்கள் சிரஞ்சீவித்துவம் வாய்ந்தவை. அவருடைய கதைகளைப் படித்தவர்களுக்கு அவற்றின் சிறப்பைப் பற்றி நாம் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை."

— ஆனந்தன்.

# நாவலும் நானும்

—oOo—

"சமூக சீர்திருத்தம், சமுதாய அமைப்பு, அரசியற் கருத்துப் புரட்சி என்பனவெல்லாம் இளங்கீரனின் பேனாவி லிருந்து கற்பனை வளத்தோடு உருண்டோடிக் கதை உருவி லும், நாவல் உருவிலும் அடிக்கடி வெளிவந்த வண்ணமிருக் கின்றன. ஆனால், அவரது கற்பனைகள் பெரும்பாலும் இந் தியச் சூழ்நிலையைப் பின்னணியாகக் கொண்டிருந்தன என் பது ஆரம்பகால வெளியீடுகளை வாசிக்கும்போது தெரி கிறது."

— ஈழகேசரி.

ஆம். இலக்கிய உலகில் நான் புகுந்ததிலிருந்து என் னுடைய வாழ்க்கையின் பெரும்பகுதி இலங்கைக்கு வெளியேதான் (மலேயா, சிங்கப்பூர், இந்தியா முதலிய நாடுகளில்) கழிந்தது. எனவேதான், என்னுடைய கதை களும், நாவல்களும் அந்நாடுகளின் சூழ்நிலையைப் பின்னணி யாகக் கொண்டிருந்தன. ஆனால், இலங்கைக்கு வந்த பிறகு, இந்நாட்டுச் சூழ்நிலையைப் பின்னணியாகக் கொண்டு கதை களும், நாவல்களும் எழுதவேண்டுமென்ற எண்ணம் பிறந் தது. ஆர்வம் என்னைத் தூண்டியது. உடனே "தென்ற லும் புயலும்" என்ற இந்த நாவல் உருவாகி "ஆனந்தன்" இதழில் தொடர்ந்து வெளிவந்தது. வாசகர்கள் விரும்பி வரவேற்று ஆர்வத்துடன் படித்தார்கள். இந்த வரவேற்பு மேலும் எழுதத் தூண்டியது. அதன் பிறகு, தினகரனில் புயல் அடங்குமா?, சொர்க்கம் எங்கே?, மனிதர்கள் முத லிய நாவல்கள் எழுதினேன். இந்த நாவல்களை எல்லாம் இலங்கைத் தமிழர்கள் வரவேற்றார்கள்; ஆர்வத்துடன் படித் தார்கள். இதிலிருந்து நமக்கு ஒரு உண்மை தெரிகிறது. இந்தியச் சூழ்நிலையையோ, அல்லது வேறு அயல்நாட்டுச் சூழ்நிலையையோ பின்னணியாகக் கொண்டு எழுதப்படும்

கதைகளையும், நாவல்களையும், இலங்கைத் தமிழ் மக்கள் ரஸித்துப் படித்தாலும், அவர்கள் அவற்றுடன் உணர்வு பூர்வமாகக் கலந்துவிட மாட்டார்கள். அவர்களுடைய இதயத்தை அழுத்தமாகத் தொடாது. ஆனல் தங்கள் நாட்டைச் சூழ்நிலையைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்படும் நாவல்களையும், கதைகளையும் படித்து அவற்றுடன் ஒன்று கலந்துவிடுவார்கள். ஏனெனில், அந் நாவல்களில் தங்களுடைய வாழ்க்கையை, ஆசாபாசங்களை, விருப்பு வெறுப்புகளை, நேருக்குநேர் பழகும் மனிதர்களை, அன்றாடம் நடக்கும் சம்பவங்களை, கலாச்சாரத்தை—முதலியவற்றையெல்லாம் அந் நாவல்களில் காண்கிறார்கள். எனவேதான் இலங்கைச் சூழ்நிலையைப் பின்னணியாகக் கொண்டு நான் எழுதிய நாவல்களையெல்லாம் ஆர்வத்துடன் படித்தார்கள் பாராட்டிக் கடிதங்கள் எழுதினர்கள்.

"தென்றலும் புயலும்" என்ற இந்த நாவல், இலங்கைச் சூழ்நிலையைப் பின்னணியாகக் கொண்டு நான் எழுதிய முதல் நாவல் என்றபோதிலும் எத்தனையோ வாசகர்களின் இதயத்தைத் தொட்டுச் சிந்தனையைத் தூண்டியிருக்கிறது. ஆனல், "ஆனந்தன்" இதழில் இந்நாவலின் முழு உருவமும் இடம்பெறவில்லை. சில எதிர்பாராத தடங்கல்களினல், விட்டும், தொட்டும், சிதைந்தும் வெளிவந்து கொண்டிருந்தது. எனவே, ஏராளமான வாசகர்கள் இதை முழு உருவத்தோடு, ஒரே மூச்சில் படித்து முடித்துவிட வேண்டுமென்று ஆர்வப்பட்டார்கள். ஆதலால் இதை நூல் வடிவில் கொண்டுவர வேண்டுமென்று, எனக்கு எழுதியிருந்தார்கள். வாசகர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றும் எண்ணங்கொண்டு, குறைகளை நீக்கி, நாவலின் முழு உருவத்தையும், அப்படியே நூல் வடிவில் கொண்டுவரப்

N. SUBRAMANIAM
"THILEEPAN"
KALAIMAKAL NILAYAM
MULLIYAWALAI.

பட்டிருக்கிறது. தினகரனில் வெளிவந்த தொடர் கதை களும் நூல்வடிவில் வர விருக்கின்றது என்பதையும் இப் போதே சொல்லிவைக்கிறேன்.

வாசக அன்பர்களாகிய உங்களுடைய ஆதரவு நிறைய இருக்கும்போது எழுதிக் குவிக்க வேண்டியது தானே என்னுடையவேலை? இதைப் படித்துவிட்டு உங்க ளுடைய அபிப்பிராயத்தை எனக்கு எழுதியனுப்புங்கள்.

இறுதியாக, இந்நாவலை நூல்வடிவில் வெளியிட்டு, உங் கள் ஆவலைப் பூர்த்திசெய்த நவபாரத் பிரசுராலயத்தா ருக்கு உங்கள் சார்பாகவும், என் சார்பாகவும், நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்.

34, பிரப்பங்குளம் ரோட்,
யாழ்ப்பாணம்,
10-11-56.

இளங்கீரன்

---

இந்நாவலில் வரும் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனை. எவரையும் குறிப்பிடுவன ஆகா.

# தென்றலும் புயலும்

" 3500 ரூபா... ! 3500 ரூபா... ! 3500 ... ரூபா! "

அந்த வீட்டுக்குள் நின்றுகொண்டிருந்த பறையடிப்பவன் இவ்வாறு கூவினான். அவனைச்சுற்றி ஒரு கும்பல் நின்று கொண்டிருந்தது. அந்தக் கும்பலிலே ஒருவர்.

"3750 ரூபாய்" — என்றார்.

பறையடிப்பவன் கூவத்தொடங்கினான் : 3750 ரூபாய் ! 3750 ரூபாய்... !

" 4000 " கூட்டத்திலிருந்து ஒரு குரலொலி கிளம்பிற்று.

" 4000 " ரூபாய்...! 4000 ரூபாய்...! 4000 ரூபாய்...!

மீண்டும் கத்தத் துவங்கினான் பறையடிப்பவன். அவனைச் சுற்றி நின்றுகொண்டிருந்த விதானையார் சின்னத்தம்பி, உடையார் முருகேசு, நொத்தாரிசு ஆறுமுகம், 'அடைவு பிடிக்கத் தத்துவம் பெற்ற' அருணாசலம் — இப்படிப் பலர் ஏலத்தை நடத்திக்கொண்டிருந்தனர்.

அந்த வீட்டின் முன் விறாந்தையில் கிடந்த கட்டிலில் அமர்ந்திருந்தார் சபாபதி. ஆழம் பாய்ந்திருந்த அவருடைய விழிகளிரண்டும் முற்றத்திலே வேலி ஓரமாக நின்றிருந்த மாமரத்தின்மேல் பதிந்திருந்தன. அவருடைய சைவப்பற்றை எடுத்துக் காட்டுவதுபோல், அவருடைய நெற்றியில் திருநீற்றுப் பட்டை அதன் நிறத்தைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது தலைமயிர். தடியூன்றும் பருவத்தின் தலைவாசலில் நின்று

கொண்டிருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டிக்கொண்டிருந்தது அவருடைய தளர்ந்துபோன உடம்பு அதை ஒருமுறை அசைத்துக் கொண்டார்.

"4000 ரூபாய்—! 4000 ரூபாய்...!"

பறையடிப்பவனின் குரலிலிருந்து வெடித்துச் சிதறிய அந்த ஒலி, சபாபதியின் காதிலே புகுந்து இதயத்தை ஈட்டிபோலத் தாக்கிற்று. பிரமைபிடித்தவர்போல் அந்த மாமரத்தையே பார்த்துக்கொண்டிருந்தவர், விறுந்தைச் சுவரில் சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்த மனைவியின் பக்கம் விழிகளைத் திருப்பினார்: அவர் மனைவி பொன்னம்மாவின் விழிகளில் கண்ணீர்த்துளிகள் நிரம்பியிருந்தன. அவை, அவளுடைய உள்ளத்தில் அப்பிநின்ற துக்கத்தை எதிரொலித்தன. மகள் தங்கத்தைக் கவனித்தார். அவள், கால்களை மடக்கி, கைகளைக் கட்டிக்கொண்டு நிலத்திலே அமர்ந்திருந்தாள். சோகத்தின் அடி தாங்கமாட்டாது அவளுடைய குளிர்ந்த முகம் வீங்கியிருந்தது. அதைக் கண்ட சபாபதியின் உள்ளம் துடித்தது. அவருடைய எண்ணங்கள் தங்கத்தைப்பற்றியே சுழன்றன.

'ஒருவனுக்கு வாழ்க்கைப்பட இருப்பவள்...! அவளுக்குப் பணமில்லை! நகையில்லை! இப்போது குடி இருக்க வீடுகூட இல்லாமல்போகிறது!'

இதற்குமேல் அவர் எண்ணங்கள் நீளவில்லை. அந்தக் கட்டிலில் இருக்கமுடியவில்லை. தோளில் கிடந்த துண்டால் கண்களைத் துடைத்துவிட்டு, அருகில் இருந்த தடியின் உதவியால் எழுந்திருக்க முயன்றார். அப்போது "கடவுள் நம்மைச் சோதிக்கிறார்! கடவுள் நம்மைச் சோதிக்கிறார்!" என்று அரற்றிக் கொண்டிருந்தது அவரது உள்ளம்.

"5000க்கு அருணாசலமே எடுத்துக்கொண்டார்" — என்று சொல்லிக்கொண்டே விறுந்தைக்குள் வந்தார் விதானையார் சின்னத்தம்பி. இதைக் காதில் வாங்கியதுதான் தாமதம், எழுந்திருக்கமுயன்ற சபாபதி "தொப்" பென்று கட்டிலில் திரும்ப

வும் அமர்ந்தார். இதற்குள் உடையார் முருகேசு, நொத்தாரிசு ஆறுமுகம், அடைவு பிடிக்கும் அருணாசலம் இன்னும் இரண்டொருவர் அங்கே வந்துவிட்டனர்.

"ஈட்டுத்தொகையும், வட்டியும்போக மிச்சம் எண்ணூறு தான்" — என்று சொல்லிக்கொண்டே நோட்டை நீட்டினார் அருணாசலம். அதை நடுங்கும் கரங்களினால் வாங்கினார் சபாபதி. சில விநாடிகள் வைத்த விழி வாங்காது பணத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். 'இந்த எண்ணூறு ரூபாய்தான் எனது சொத்து' என்று தனக்குள் சொல்லிக்கொண்டார்.

பத்திரங்கள் எழுதப்பட்டன. காணி உறுதியில் கையெழுத்து வாங்குவதற்காக அதைச் சபாபதியிடம் நீட்டினார் நொத்தாரிசு. அதில் அவர் கையெழுத்துப்போடும்போது அவர் கை நடுங்கிற்று. விழிகளிலிருந்து இரண்டொரு நீர் முத்துக்கள் உருண்டு விழுந்தன.

எல்லா வேலைகளும் முடிந்தன. வந்தவர்கள் போகத் துவங்கினார்கள்; அருணாசலமும் படலையை நோக்கி விரைந்தார்.

"உம்மைத்தானே இப்படி வந்துவிட்டுப்போம்......" என்று பின்னாலிருந்து குரல் கொடுத்தார் சபாபதி.

அருணாசலம் திரும்பி நடந்து அவர் அருகில் போய் நின்றார்.

"நான் இன்னும் கொஞ்ச நாட்கள்தான் உயிரோடு இருப்பேன். நான் பிறந்தது இந்த வீட்டில், வளர்ந்தது இந்த வீட்டில், கலியாணம் செய்துகொண்டது, குழந்தை குட்டிகள் பெற்றது—எல்லாம் இந்த வீட்டில்தான்......! சுடுகாட்டுக்குக்கூட இங்கிருந்துதான் போகவேண்டும், ஆகையால் நான் இங்கேயே இருக்கப்போகிறேன்......! நியாயமான ஒரு வாடகையைத் தருகிறேன்."

இந்த வார்த்தைகள் துயர வெள்ளத்தில் தோய்ந்து வருவதை எடுத்துக் காட்டியது அவரது தழதழத்த குரல். 'தனது மனைவி மக்களைப்போலவே, தான் பிறந்து வளர்ந்து

வந்த வீட்டையும் மனிதன் நேசிக்கிறான்'— என்று அந்தத் தழதழத்த குரலும், அந்த வார்த்தைகளும் சொல்லின. அருணாசலத்துக்கு இதெல்லாம் எங்கே தெரியப்போகிறது? அவர் ஏன் இதைப்பற்றிச் சிந்திக்கிறார்? அவர் வேறு எதையோ சில விநாடிகள் யோசித்தார். பிறகு 'சரி' என்று ஒரே வார்த்தையில் தமது சம்மதத்தைத் தெரிவித்துவிட்டுப் போய்விட்டார். அவர் போன திக்கையே பார்த்துக்கொண்டிருந்தார் சபாபதி. அவருடைய விழிகளிலிருந்து சொட்டுச் சொட்டாய் கண்ணீர்த் துளிகள் விழுந்துகொண்டிருந்தன.

சபாபதியின் வீட்டில் நடந்த இந்தச் சம்பவங்களையெல்லாம் சரிந்துகிடந்த எல்லை வேலியால் பார்த்துக்கொண்டு நின்றான் அடுத்த வீட்டுப் பூபதி. அவன் விழிகளில்கூடக் கண்ணீர் வந்துவிட்டது.

## 2

அன்புள்ள பூபதிக்கு,

நான் கொழும்புக்கு வந்து மாதங்கள் இரண்டாகிவிட்டன. எனக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை. நண்பன் நடராசன் கூட எவ்வளவோ முயற்சி செய்தான். தோல்விதான் கண்ட பலன். இரண்டொரு வேலைகள் கிடைக்கக்கூடியதாய் இருந்தது. ஆனால் அதற்கு ஆயிரக்கணக்கில் 'லஞ்சம்' கொடுக்க வேண்டியிருந்தது. ஊதிப்பெருத்திருக்கும் திருவாளர் லஞ்சப்பரைக் கண்டு என் மனம் கொதிக்கிறது. அரசாங்க உத்தியோகமாயிருந்தாலும் சரி, கொம்பனி உத்தியோகமாக இருந்தாலும் சரி, திருவாளர் லஞ்சப்பரின் உதவிதான் வேண்டியிருக்கிறது. நானும் நடராசனும் பசியப்பர்கள். எங்களுக்குத் திருவாளர் லஞ்சப்பரின் உதவி எப்படிக் கிடைக்கும்?

அரசாங்க அலுவலகங்களில் செல்வாக்குள்ள ஒரு பெரிய மனிதர் எனக்குத் தெரிந்தவர். அவர் உதவியை நாடினேன். அந்தப் பெரிய மனிதர் சில விஷயங்களில் தனக்குப் 'பந்தம்' பிடிக்கச்சொன்னார். தலைவணங்காத தன் மானமும், வளைந்து கொடுக்காத மனப்போக்கும் கொண்ட நான் இதற்கு இணங்கியிருக்கமாட்டேன் என்பதை நீயே அறிவாய் என்று நினைக்கிறேன். வாழ்க்கையை வளைத்து நிற்கும் வறுமையைத் தகர்த்தெறிவதற்கு பந்தம் பிடித்தோ, மற்றவர்களின் தயவையோ நாடத்தான்வேண்டும். சோற்றுப் பிரச்சினை இருக்கிறதே. இதைத் தீர்த்துக்கட்ட தன்மானம், கொள்கை என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது. இப்படியிருந்தால் வறுமையும் துயரமும் குடிபெயராது—என்றெல்லாம் சில சமயங்களில் எண்ணுவதுண்டு. ஆனால், அப்படி நடந்து வாழ்க்கையில் தென்றலைப் புகுத்த என் மனம் இடங்கொடுக்கமாட்டேன் என்கிறது. அதை நினைத்தாலே மனம் கூசுகிறது!

நடராசன்கூடத் தனக்குத் தெரிந்த 'நாலு பெரிய மனிதர்கள்' — என்று கூறப்படுகிறவர்களிடம் என்னை அழைத்துக்கொண்டு போனான். அவர்களில் சிலர் "பார்க்கலாம்" — என்

றனர். இன்னும் சிலர் நாளை வா, திங்கள் வா, வெள்ளி வா. அடுத்த கிழமை வா — என்று தங்கள் பெரிய மனிதத் தன்மையைக் காட்டினார்கள். சிலருடைய முகத்தைப் பார்ப்பதுகூடக் கஷ்டமாக இருந்தது. இப்படி அந்தப் 'பெரிய மனிதர்களின்' பங்களாவுக்கு நடந்து நடந்து என் கால்களும் அலுத்துவிட்டன. 'பெரிய மனிதர்கள்' — என்று சொல்லப்படுகிறவர்களின் பங்களாக்களும், உத்தியோகமும் உண்மையில் பெரியதுதான். ஆனால் அவர்களுடைய உள்ளம் கடுகைவிடச் சிறியதென்பதை இப்போதுதான் அனுபவமூலமாகக் கண்டேன். இனி எந்தப் 'பெரிய மனிதரிடமும் இந்தச் சின்ன மனிதன் போகக்கூடாதென்று தீர்மானித்துவிட்டேன்.

இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறாய்? என்று கேட்பாய்; சொல்கிறேன் கேள்.

இங்கே ஒரு கிளப் இருக்கிறது. நடுத்தர வருமானமுள்ள உத்தியோகம் பார்க்கும் சிலர், இந்தக் கிளப்பை வைத்து நடத்துகிறார்கள். என்றாலும், படித்து விட்டு வேலையின்றித் திரியும் பலர், இந்தக் கிளப்புக்குத் தினமும் வந்து, தங்களுடைய கிளப்பைப்போல் கருதிக்கொண்டு ஆதிக்கம் செலுத்துவார்கள். காலை ஒன்பது மணியிலிருந்து இரவு பத்து மணி வரை ஒரே கலகலப்பாக இருக்கும். கேரம்போட், காட்ஸ், செஸ், டேபிள் டெனிஸ்—இப்படிப் பல விளையாட்டுகளும் நடக்கும். அது மட்டுமல்ல, ஐசனோவரின் அறிக்கையிலிருந்து இங்குள்ள ஐயனார் கோவில் திருவிழாவரையிலே உள்ள எல்லா விஷயங்களைப்பற்றியும் நீண்ட விவாதங்கள் நடக்கும். சர்வதேசப் பிரச்சனையாக இருந்தாலுஞ் சரி, சாதாரண வாழ்க்கைப் பிரச்சனையாக இருந்தாலும் சரி—இங்கிருந்து தப்பிப் போக முடியாது! இப்படிப்பட்டவர்களிடம் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சனை அகப்படாமல் இருக்குமா? இந்தப் பிரச்சனை இவர்களுடைய சொல்லடியின் உறைப்பைத் தாங்காது 'ஓ' என்று அலறும்! விழி பிதுங்கித் திணறும்.

உத்தியோகம் தேடும்வகையில் எனக்குக் கிடைத்த அனுபவங்கள் இங்குள்ள அனேகருக்குக் கிடைத்திருக்கின்றன.

இந்த அனுபவங்களை வைத்துக்கொண்டு ஒவ்வொருவனும் ஒவ்வொரு ஞானவளிப் பிரசங்கம் செய்வான். ஒருவன் அரசாங்கத்தைத் திட்டுவான்; இன்னொருவன் சமூகத்தை ஏசுவான், மற்றொருவன் பெற்றோரைக் குறை கூறுவான். வேறொருவன் அரசியல் கட்சிகளைக் குற்றம் சாட்டுவான். இந்த முறையிலே பெரிய சொற்போர் நடக்கும். அப்போது பார்க்க வேண்டும் ஒவ்வொருவரின் முகத்தையும்! கடுகை வீசினால் வெடித்துச் சிதறும் அளவுக்குக் கொதிப்பேறி இருக்கும் அவர்களுடைய முகம். இவர்களுக்குள் இப்படிப் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள் இருந்தாலும்;—உத்தியோகம் பார்க்கவேண்டும். நன்ருக உண்டு உடுத்தி வாழ வேண்டும் என்ற ஆசையைப் பொறுத்த அளவில் ஒத்த அபிப்பிராயந்தானிருக்கிறது. இதை நினைக்கும்போது "மனிதனின் இலட்சியம்; வாழ்வது! நன்ருக வாழ்வது! சந்தோஷமாக வாழ்வது!"—என்று நடராசன் சொல்வது சரியான உண்மை என்பது தெளிவாகத் தெரிகிறது.

பூபதி! நான் இவ்வாறு எழுதுவதைக் கண்டு நான், கிளப்பும் சினிமாவுமாகச் சந்தோஷமாகக் காலங் கழிக்கிறேன் என்று நீ எண்ணக்கூடும். படித்துவிட்டு வேலையின்றித் திரியும் என்னைப் போன்றவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிருர்கள் இந்த நாட்டிலே. அவர்களிலே ஒரு சிறு பகுதிதான் இந்தக் கிளப்புக்கு வருகிறவர்கள். கொழும்பு நகரத்திலே போக்குவரத்து நெருக்கடி அளவுக்கு மிஞ்சிப் போய்விட்டது. அந்த நெருக்கடியையும் தாண்டிவிட்டது இவர்களுடைய வாழ்க்கையிலே ஏற்பட்டுள்ள நெருக்கடி. கருவாக்காடு, மவுண்ட்லவேனியா போன்ற இடங்களில் பெரிய பங்களாக்களில் வாழ்கிருர்களே 'பெரிய மனிதர்கள்' அவர்களுடைய வாழ்க்கை தென்றலாக இருப்பதைப்போன்று, இந்த வேலையில்லாப் பட்டாளத்தின் வாழ்க்கை இல்லை! புயலாக இருக்கிறது! இந்தச் சூழ்நிலையில் வேதனைப்படும் இவர்கள், தங்கள் பொழுதைச் சிறிது மன அமைதியுடன் கழிக்கத்தான் இங்கே

வருகிறார்கள். இவர்களைப் போன்றவன்தான் நானும். எங்கள் பள்ளிக்கூடப் படிப்பு வாழ்க்கைக்கு வழிகாட்டாத நிலையில், இந்தக் கிளப்தான் கதியென்று கிடக்கிறோம்.

வீட்டு நிலையைப்பற்றி எழுதியிருந்தாய். தினம் ஆயிரக் கணக்கான ரூபாய் 'வரவு செலவு' செய்துகொண்டிருக்கும் கணக்கராக வேலைபார்த்தவர் ஐயா. நூற்றிருபது ரூபாய்தான் அவருக்குக் கிடைத்தது. ஐயா, அம்மா, நான், தங்கச்சி—இந்த நால்வரைக்கொண்ட எங்கள் குடும்பமே இந்தத் தொகையில்தான் சீவியம் நடத்திக்கொண்டு வந்தது. நீ கூடச் சொல்வாய், "உன் ஐயா சிக்கனமானவர்"—என்று. வருமானத்தைப் பொறுத்துத்தான் ஒருவருடைய கைவளம் நிர்ணயிக்கப்படுகிறது. என் ஐயா சுருங்கிய உள்ளம் கொண்டவரல்ல, தாராள மனப்பான்மை கொண்டவர். ஆனால், குறைந்த வருமானம் சிக்கனத்தைக் கையாளும்படி சொல்லிற்று. இதனால் எத்தனையோ அவசியத் தேவைகளெல்லாம் வீட்டின் வாசற்படியை மிதிக்காமல் கடைத்தெருவிலே கிடக்கின்றன. என்றாலும் என் படிப்பு விஷயத்தில் அவர் சிக்கனத்தைக் கையாளவில்லை. "தங்கள் பிள்ளைகள் படித்து அறிவை வளர்க்க வேண்டும், வாழ்க்கையின் பொருளுணர்ந்து, அதன் பயன் அறிந்து வாழவேண்டும். இதற்குக் கல்வி ஓர் சிறந்த கருவி. உள்ளத்தைப் பண்படுத்தி, அதை விசாலமாக்கி மனிதத் தன்மையை வளர்க்கப் பயன்படும் ஒரு சாதனந்தான் கல்வி. எனவே, இந்தக் கல்வி நம் பிள்ளைகளுக்கு அவசியம் தேவை"—என்ற கருத்தில் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கவில்லை. இன்றையப் பெற்றோர்களுக்கு இந்த எண்ணமே கிடையாது! மகன் ஏதாவது உத்தியோகம் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தினால் தான் படிக்க வைக்கின்றனர். குறிப்பாக யாழ்ப்பாணத்தார் உத்தியோகத்தில் கொண்டுள்ள மோகம், மலர்த் தேனில் வண்டுகொண்ட மோகத்தைப் போன்றது. இதற்கு என் ஐயாவோ, அம்மாவோ விதிவிலக்கானவர்களா...? வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி என்பார்களே அந்த முறையில் தான் என்னைப் படிக்க வைத்தார்கள்...! காலம் எங்களை வஞ்சிக்குமென்று எதிர்பார்க்கவில்லை. ஐயா

வுக்குப் பாரிச வாய்வு வந்து கால் கைகள் முடங்கிவிட்டன. இதனால் எவ்வளவு செலவு; தொல்லை; துயரம். வீட்டைக் கூட அடைவு வைத்துச் செலவழித்தோம்...! இந்த ஐந்து வருடங்களாகச் சுகமாகவில்லையே...! நானும் படித்து முடித்து விட்டு இப்போது வேலைக்கு அலைகிறேன். பாரிச வாய்வால் கால்கை முடங்கிக் கிடக்கும் ஐயா, மண வாழ்க்கைக்குத் தயாராக இருக்கும் தங்கை, வீட்டிலே தாண்டவமாடும் வறு மையைக்கண்டு கண்ணீர்வடிக்கும் அம்மா, சட்டிலே மாட்டிக் கொண்டிருக்கும் வீடு—இவற்றையெல்லாம் நான் எண்ணிப் பார்க்காத நாளே கிடையாது. "கடவுள் நம்மைச் சோதிக் கிறார், கடவுள் நம்மைச் சோதிக்கிறார்!" என்று அடிக்கடி ஐயா சொல்லுவார். கடவுள் இவ்வளவு கடுமையாகச் சோதிப் பதற்கு நாங்கள் என்ன குற்றம் செய்தோம் என்று எனக் குத் தெரியவில்லை. ஐயாவுக்குக் கூடத் தெரியாது! கடவு ளைப்பற்றிச் சிந்திப்பதை விட, கஷ்டம்போக்க வழியென்ன?— என்று சிந்தித்தால் ஏதாவது பயனுண்டு. இந்த எண்ணத் தில்தான் நான் இந்தக் கொழும்பு நகரைச் சுற்றிக்கொண் டிருக்கிறேன்.

பசி, பட்டினி, வெயில்—இவைகளின் சவுக்கடியினால் உள்ளத்திலும் உடம்பிலும் தழும்பேறி விட்டது. நடராசன் இல்லாவிட்டால் என்கதி என்ன ஆகுமோ?—அவனுக்கு இங்கு ஒரு வியாபாரக் கொம்பனியில் வேலை. சொற்ப சம்பளம். இந்தச் சம்பளத்தைக் கொண்டுதான் தானும் தின்று எனக் கும் சோறு போடுகிறான்! தனது சிறிய அறையில் இடந் தந்திருக்கிறான். இந்த நிலையில் என்மனம் சந்தோஷமாகவா இருக்கும்? ஒரே சஞ்சலம்......! வேதனை......! துயரம்......! இந்தச் சமயத்தில்தான் நீ நேற்று அனுப்பிய கடிதம் கிடைத்தது. அதைப் படித்ததும் என் உள்ளம் பட்டபாடு—.

பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த வீடு பகிரங்க ஏலத் தில் விற்கப்படவேண்டிய நிலைக்கு எங்கள் குடும்பத்தின் நிலை

வீழ்ச்சியடைந்து விட்டது. குடியிருக்கக் குச்சு வீடுகூட இல்லாத நிலைக்கு வந்துவிட்டோம். இதை நினைக்க நினைக்க—.

'அடைவு' அருணாசலம் என்ன, வள்ளல் பாரியின் வாரிசா? அல்ல; மூட்டைப்பூச்சி வர்க்கத்தைச் சேர்ந்த ஆசாமி! மூட்டைப்பூச்சிக்கு மனித இரத்தத்தின்மேல் குறி; அருணாசலத்துக்குப் பணத்தின்மேல் குறி! வீட்டை ஏலத்துக்கு விட்டுத் தானே எடுத்துக்கொண்டதைக் குறித்து நாம் என்ன செய்யமுடியும்? வருத்தப்பட்டுத் தான் என்ன பிரயோசனம்?

என்னைப்பற்றி நான் கவலைகொள்ளவில்லை. நான் ஆண் பிள்ளை. ஆனால், சகோதரி தங்கத்தை நினைக்கும்போதுதான் துக்கம் நெஞ்சைக்கொத்துகிறது! அவளுக்கு நகையில்லை, பணமில்லை, கடைசியாக வீடுகூடப் போய்விட்டது. ஒருவனுக்கு வாழ்க்கைப்பட இருப்பவள் இப்போது ஒன்றுமில்லாதவளாகப் போய்விட்டாள். ஒன்றுமில்லாத அவளை இனி யார் ஏற்பார்கள்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. தொடர்ந்து வரும் தொல்லைகள் துயரைப்பெருக்கி வாழ்க்கையைக் கசப்பாக்கிக் கொண்டிருக்கின்றன. இதற்கு முடிவேயில்லையா? என்று எனக்குள்ளே கேட்டுக்கொண்டிருக்கிறேன். சோகத்தின் சுமை தாங்காது 'ஓ' என்று அலறிக்கொண்டிருக்கும் எனது உள்ளம் இதற்கு எங்கே பதில் சொல்லப்போகிறது...?

கடிதம் நீண்டுவிட்டது என்று நினைக்கிறேன். இத்துடன் முடித்துக் கொள்கிறேன். என்னுடைய உள்ளக்குமுறலை—நான் படும் வேதனையை—துன்பங்களை அம்மாவிடமோ, ஐயாவிடமோ சொல்ல வேண்டாம். நான் ஒரு வேலை தேடாது யாழ்ப்பாணம் வருவதில்லையென முடிவுசெய்து விட்டேன்.

அன்புள்ள
பாலேந்திரன்

இந்தக் கடிதத்தைப் படித்து முடிந்ததும் மனம் வேதனையால் துடித்தது. அத்துடன் கலக்கமும் அடைந்தது. அதற்குக் காரணமுமிருந்தது.

பூபதியின் வீடு பாலேந்திரனின் வீட்டுக்கு அருகாமையில் இருந்தது. பூபதி தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்தவன் என்றாலும், ஒன்றுக்கொன்று அருகாமையில் இருவரின் இல்லமும் இருந்ததால், பால்யத்திலிருந்தே ஒன்றாகப் பழக வாய்ப்பு இருந்தது. பளிங்கைப் போன்று மாசுமறுவற்ற பிஞ்சுள்ளங் கொண்ட பாலகர்கள் தங்களிருவருக்குமிடையில் இருக்கும் சாதிப்பாகுபாட்டை உணரவில்லை. பாலேந்திரனின் பெற்றோரும் இதைப்பற்றி அதிக அக்கறைகொண்டதாகத் தெரியவில்லை. பூபதியுடன் பாலுமட்டுமல்ல, தங்கம்கூட ஒன்றாக விளையாடுவாள், பழகுவாள்.

நாட்கள் மாதங்களாக உருவெடுத்து, மாதங்கள் வருடங்களாக வடிவமெடுத்தன. இந்தக்கால வளர்ச்சி இந்த மூன்று இளங் கொழுந்துகளையும் இளங் காளைகளாகவும் கன்னியாகவும் மாற்றிவிட்டது!

பூபதி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவனாக இருந்தாலும், அவனுடைய தோற்றம், நடத்தை, பேச்சு—எதுவுமே அவனை அப்படி நினைக்க வைக்காது! அவனும் பாலுவைப் போலப் படித்துவிட்டு வேலையின்றித் திரிந்தான்.

சிறு வயதிலிருந்து பழகியதால் ஏற்பட்ட நட்புமட்டுமல்ல, பூபதியிடம் இருந்த விசாலமான உள்ளம், சிறந்த குணம், இனிமையான பேச்சு, அழகான தோற்றம்—இவை யாவும் தங்கத்தைக் கவர்ந்தன. பூபதியும் அவளை நேசித்தான். பருவக் குளத்தில் நீந்தும் எழிற் குமரன் குமரியாக இருவரும் இருந்தாலும் தனியே சந்தித்துப் பேச, தங்கள் காதலை வளர்த்துக்கொள்ள அடுத்து, அடுத்து இருந்த வீடுகளும், பிய்ந்திருந்த எல்லை வேலியும் உதவியாக இருந்தன.

தாழ்ந்த குலத்தில் உள்ள தான், உயர்ந்த சாதியில் உள்ள தங்கத்தைக் காதலிக்கத்தான் முடியும். ஆனால் அந்தக் காதலை கலியாண மாளிகைக்குள் குடிவைக்க முடியாது. எல்லை வேலி பிய்ந்திருந்தாலும் சாதி என்ற சுவர் இன்னும் இடிந்து சரியவில்லை. எனவே, தங்கத்தை மணப்பது முடியாத காரியம்

என்று தெளிவாக உணர்ந்துதான் இருந்தான் பூபதி. கைக்கு எட்டாத உயரத்தில் உள்ள கனியின்மேல் ஆசை வைத்து அந்த ஆசையை வளர்த்துப் பயன் என்ன? ஏமாற்றமும், அந்த ஏமாற்றத்தால் ஏற்படும் வேதனையுந்தான் மிச்சம் என்று பல முறை எண்ணித் தங்கத்தை மறக்க முயன்முன்—முடியவில்லை! தங்கத்தின் ஆழ்கடலைப் போன்ற அன்பையும், எழில் முகத்தை யும் எப்படி மறக்கமுடியும்? பாலேந்திரனிடம் தன்னுடைய உள்ளக் கிளர்ச்சிகளை விருப்பு வெறுப்புகளைச் சொல்வான். 'இரகசியம்'—என்ற திரை அவர்களிருவருக்குமிடையிலில்லை. என்ருலும், தங்கத்தின்மேல் தான் கொண்டிருக்கும் காதலை மட் டும் பூபதி சொல்லவில்லை. ஏதோ, ஒருவிதத் திகில் அதை வெளியிடத் தடையாக இருந்தது.

தன்னுடைய இந்த உள்ளப் போராட்டத்தைத் தங்கத்திடம் பலமுறை சொல்லியிருக்கிருன்! ஒருநாள் தன்னை மறந்துவிடும் படிகூட உணர்ச்சிவசத்தால் சொல்லியிருக்கிருன்! ஆனால் தங் கத்தின் விழிகளிலிருந்து பாய்ந்தோடிய கண்ணீர் வெள்ளம் "முடியாது"—என்று சொல்லிற்று. "வானத்துமதி பூமியில் தவழ்ந்து விளையாட முடியும் என்பது சாத்தியமானல், நான் உங்களை மறப்பதும் சாத்தியமாகும்" என்று கூறிவிட்டாள்.

பாலேந்திரனின் வீடு ஏலத்துக்கு வந்தபோது பூபதியின் மனம் கரையில் கிடக்கும் மீனைப்போன்று துடித்தது அடை வு அருணசலம் வீட்டைவிட்டு வெளியேற்றினுல் தங்கத்தைப் பார்க்க முடியாது...! அவளுடன் பேசமுடியாது...! அவளு டைய விழி அழகைப் பருகமுடியாது...!—என்று ஏங்கிக்கொண் டிருந்தான். எனவே, அங்கு நடந்த ஒவ்வொரு சம்பவத்தையும் கவனித்துக் கொண்டு வந்தான். நல்லவேளையாக வீடு ஏலம் போனுலும், சபாபதி குடும்பத்தார் வேறு எங்கும் போகவில்லை. இதனுல் பூபதியின் நெஞ்சை அழுத்திக்கொண்டிருந்த பெரிய பாரம் இறங்கிற்று. இதன் பிறகுதான் ஏலம்போன சம்பவத் தையும், வீட்டு நிலைமைகளையும் பானுவுக்கு அறிவித்தான். ஆனுல், பானு எழுதிய பதிலிலே இருந்த சில வரிகள் பூபதியைக்

கலங்க வைத்தன. மணவாழ்க்கைக்குத் தயாராக இருக்கும் தங்கத்துக்கு ஒன்றுமேயில்லை...... அவளை இனி யார் ஏற்றுக்கொள்வார்கள்... என்ற வரிகள்தான் அவை!

பாலுவுக்குக்கூடத் தெரியாமலிருக்கும் தனது காதல் விவகாரத்தைப்பற்றிச் சிந்தித்தான். தனக்கும், தங்கத்துக்கும் எவ்வித தொடர்புமில்லை. தொடர்பு இருக்கமுடியாது. இருப்பதற்கு மார்க்கமில்லை.—என்பதில் பாலேந்திரனுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. எனவேதான் இப்படி எழுதியிருக்கிறான். ஆனால் தனக்கும் தங்கத்துக்கும் உள்ள நேசத்தை அறிந்தால்—? அறிவித்தால்—? பாலு என்ன சொல்லுவான்—?...... தங்கத்துக்கு ஒன்றுமே இல்லையாம். பாலு இப்படி எழுதியிருக்கிறான். பைத்தியக்காரன். தங்கையிட்டமிருப்பதை ஒரு தமையன் இத்தனை நாட்களாக அறியாமலிருக்கிறனே...! தங்கத்திடம் நகையில்லை; பணமில்லை; வீடு இல்லை! உண்மைதான், ஆனால், தங்கத்திலே செதுக்கிய சிலைபோன்று இருக்கிறள் தங்கம். அவளுக்கு அழகு இருக்கிறது, குணம் இருக்கிறது, படிப்பு இருக்கிறது. இவையெல்லாம் செல்வங்களில்லையா? தனக்கு இவையே போதும்......! வேறு எதுவுமே வேண்டாம்...!—இப்படிப் பாலேந்திரனுக்கு எழுதினால்......?

பூபதியின் சிந்தனை இந்தக் கேள்வியுடன் நின்றது. இதற்கு எவ்வித பதிலும் தயாரிக்காமல் பின் வளவுக்கு வந்தான். அப்போதுதான், இடையில் தண்ணீர்க் குடத்துடன் கிணற்றிலிருந்து வந்துகொண்டிருந்தாள் தங்கம், அவள் பூபதி நிற்பதைக் கவனிக்கவில்லை.

"தங்கம்"—என்று சப்தம் வந்ததும் திரும்பிப் பார்த்தாள். பூபதி நின்றுகொண்டிருந்தான். தன்னுடைய அகன்ற விழிகளை அந்தப் பக்கம் ஒரு முறை சுழற்றிவிட்டு பிய்ந்து கிடக்கும் வேலி ஓரமாக வந்து நின்றள்.

"என்ன பூபதி?"

"அண்ணன் கடிதம் எழுதியிருக்கிறன்"—என்று கூறிக்கொண்டே கடிதத்தை அவளிடம் நீட்டினன் பூபதி.

"இங்கேயே நில்லுங்கள், குடத்தை வைத்துவிட்டு வருகிறேன்"—என்று சொல்லிவிட்டுக் கடிதத்தை வாங்கிக்கொண்டு வேகமாக நடந்தாள்.

பூபதி அங்கே நின்ற எலுமிச்சைச் செடியின் இலையைப் பிய்த்துக்கொண்டு நின்றான்.

கொஞ்சநேரம் சென்றது. கையில் கடிதமும் கண்களில் கண்ணீருமாக அங்கு வந்து நின்றாள் தங்கம்.

பூபதியின் விரலில் எலுமிச்சைச் செடியின் முள் ஒன்று குத்தியது. விருட்டென்று விரலை எடுத்தான். அதிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. அப்போது விரல் மட்டுமல்ல, தங்கத்தின் கண்ணீர் நிறைந்த விழிகளைக் கண்டதும் உள்ளமும் கூட வலித்தது. விரலில் இருந்து கசிந்த இரத்தத்தைப் போன்று பூபதியின் உள்ளத்திலிருந்தும் வேதனையென்ற இரத்தம் கசிந்தது.

"ஏன் தங்கம் அழுகிறாய்?"—என்றான் பூபதி, துக்கம் தோய்ந்த குரலில்.

"அண்ணன் இப்படிக் கஷ்டப்படுவாரென்று நான் நினைக்கவில்லை!" என்றாள் தங்கம் கண்ணீரைத் துடைத்தபடி.

"நான்கூட நினைக்கவில்லை தங்கம். இந்தக் கடிதத்தைப் படித்ததிலிருந்து என் மனம் ஒரே குழப்பமாக இருக்கிறது!"

"எனக்குந்தான் பூபதி. எண்ணமெல்லாம் எங்கேயோ ஓடுது. எங்கள் ஆசையெல்லாம் வீணாகத்தான் போகுமோ என்று பயமாக இருக்கிறது!"

"எமக்குள் இருக்கும் ஆழமான நட்பைப்பற்றிப் பாலு சிறிதளவாவது தெரிந்திருப்பான் என்ற சலனம் இருந்தது தங்கம்.

இந்தக் கடிதத்தைப் பார்த்ததிலிருந்து அந்தச் சலனம் மறைந்து விட்டது. நம்மிருவருக்குமுள்ள காதலைப்பற்றி அவனுக்குத் தெரியாது.''

"அண்ணனுக்கு எழுதினால் என்ன?''

"இப்போது அவன் மனம் நொந்துபோயிருக்கிறான். நமது விஷயம் தெரியவந்தால் அவன் உள்ளம் என்ன பாடுபடுமோ?'

"நமக்குள் இருக்கும் காதலை அவர் விரும்பமாட்டார் என்று எண்ணுகிறீர்களா?''

"பாலு முற்போக்கான எண்ணமுள்ளவன். அவன் ஒரு வேளை விரும்பக்கூடும். என்றாலும் உன் ஐயா அம்மாவுக்கு இது பிடிக்காது. இந்த நிலையிம் அவன் மனம் சங்கடப்படு மல்லவா?''

இப்படி இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது "தங் கம்......! தங்கம்......!''—என்று சபாபதி கூப்பிடும் குரல் கேட்டது.

"ஐயா கூப்பிடுகிறார். இந்தாருங்கள் கடிதம்...!''—என்று அதைப் பூபதியிடம் கொடுத்துவிட்டு வீட்டுக்குள் ஓடினாள் தங் கம். அவளையே பார்த்துக்கொண்டு நின்றான் பூபதி.

# 3

நடுப்பகல்—

உச்சி கொழுத்தும் வெயில்—

வியர்வைத் துளிகள் முகத்திலிருந்து உருண்டு விழ, அதைக் கைத்துண்டால் துடைத்தவண்ணம் நடந்து கொண்டிருந்தான் பாலு.

பாலுவின் நண்பன் நடராசன், தனக்குத் தெரிந்த சிலரிடம் சொல்லி பாலுவுக்குச் சில வீடுகளில் 'டியூஷன்' சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தான். மூன்று வீடுகள் கிடைத்தன. அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் எல்லோரும் வீட்டில் இருப்பார்கள். அன்றைக்கே போய் அறிமுகம் செய்துகொண்டால் மறுநாள் திங்கட்கிழமை துவக்கம் பாடம் சொல்லிக்கொடுக்கப் போகலாம் என்ற எண்ணத்தில் அந்த வீட்டு விலாசங்களைக் கொடுத்து அவர்களைப் போய்ச் சந்திக்கும்படி சொன்னான் நடராசன். அவனும் கூடப்போயிருப்பான், அவனுக்குக் காய்ச்சல் அடித்துக்கொண்டிருந்தது. எனவே தங்கிவிட்டான்.

நடராசன் கொடுத்த விலாசப்படி மவுண்ட்லவேனியாவுக்கு அன்று காலையிலேயே புறப்பட்டுவிட்டான் பாலு. தன்னிடமிருந்த விலாசப்படி உள்ள வீடுகளுக்குப் போனான். அந்த வீடுகள், பாலு நினைத்தபடி பெரிய பங்களாக்களாக இருந்தன. "உனக்குப் பெரிய இடங்கள் கிடைத்திருக்கின்றன!"—என்று நடராசன் சொல்லியிருந்தான். அவன் சொன்னது உண்மைதான் என்று பறைசாற்றிக் கொண்டிருந்தன அந்தப் பங்களாக்கள்.

தங்கள் பிள்ளைகளுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்க ஒத்துக்கொண்டவர்கள் பெரிய உத்தியோகத்திலிருப்பவர்கள், எனவே, பாலுவை தங்கள் அதிகார குணங்களுக்கும் பணச் செருக்குக்கும் ஏற்றமுறையில் வரவேற்றனர். பாலுவுக்கு அது

என்னவோபோல் இருந்தது. என்றாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாது, தான் வந்த விஷயத்தைச் சொன்னான். அவர்கள் தங்கள் சம்மதத்தைக் கொடுத்தனர். ஒவ்வொரு வீட்டிலும், மாதம் அறுபது தருவதாகச் சொன்னார்கள். கொதிக்கும் கால்களிலே தண்ணீரை ஊற்றினால் எப்படிக் குளிருமோ அது போலக் குளிர்ந்தது பாலுவின் மனம்.

அந்த இரண்டு பங்களாக்களின் விஷயத்தை முடித்துக் கொண்டு, வெளியேவர மத்தியானம் ஆகிவிட்டது. மூன்றாவது இடம் வெள்ளவத்தையிலிருந்தது. அங்குதான் இப்போது போய்க்கொண்டிருந்தான்.

வீதியிலே நடந்து கொண்டிருந்தாலும் அவனுடைய சிந்தனை, விளக்கைச்சுற்றி ஓடும் ஈசலைப்போல் வீட்டையே சுற்றிச் சுற்றி வந்தது. வீடு ஏலம்போன செய்தியை அறிந்த நாளிலிருந்து, பாலுவின் மனம் மிகவும் சோர்ந்துவிட்டது. சுருண்டு படுத்துவிட்டான் அறையில்.

"பாலு, இதற்கெல்லாம் கவலைப்படாதே! இருக்கும் இல்லிடமும் போய்விட்டது! ஆம், உண்மைதான். ஆனால் உன் பெற்றோர் போய்விடவில்லை. உன்மேல் அன்பைச் சொரியும் உன் தங்கை போய்விடவில்லை. உன்னை நேசிக்கும் நான் போய்விடவில்லை...! இதோபார் பாலு...! என்னைப் பார்! எனக்கு வீடு இல்லை. பெற்றோர் இல்லை. உற்றார் இல்லை, சகோதரிகள் கிடையாது. ஒருவருமேயில்லை; ஒன்றுமேயில்லை! என்றாலும் நான் கலங்கவில்லை. கவலைப்படவில்லை.......

"......பாலு, நீ கொழும்புக்கு வரும்போது உன்னை ஆதரிக்க நான் இருந்தேன். இப்போதும் இருக்கிறேன். ஆனால், நான் இங்கு வரும்போது ஒருவருமேயில்லை! வேலையில்லை; வேலையில்லாததால் கையிலே காசில்லை; படுத்துறங்க இடம்கூட இல்லை! என்றாலும் நான் கலங்கவில்லை. கண்ணீர் விடவில்லை......

"...பாலு நம்மைப் போன்றவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் இந்த நாட்டிலே. அவர்களுடைய வாழ்க்கை கோல்பேசைப்போன்று உல்லாசமானதாகவோ, இன்பமானதாகவோ இல்லை. உன்னுடைய வாழ்க்கையில் வீசும் புயல்தான் அவர்களுடைய வாழ்க்கையிலும் அடிக்கிறது. எனினும் அவர்கள் மனம் ஒடிந்து உட்காரவில்லை. வாழ்க்கைக்காகப் போராடுகிறார்கள். உணவுக்காகப் போராட்டம்; அடுத்து உடைக்காகப் போராட்டம்; அதுவும் நிறைவேறினால் இருக்கும் இடத்துக்காகப் போராட்டம். இந்த மூன்று தேவைகளுக்காகவும் நடந்த போராட்டம்தான் மனித வரலாறு. இப்போது இந்த மூன்று தேவைகளுக்காகவும் போராடும் மக்கள் இந்தப் பூமியிலே பலகோடி. அவர்களிலே ஒருபகுதி இந்த நாட்டிலும் இருக்கிறார்கள். அவர்களிலே நீ ஒருவன். நீ சோர்ந்து உட்காருவதால் சோகம் தீர்ந்துவிடாது! சுறுசுறுப்புடன் போராடவேண்டும். வாழ்க்கையிலே ஏற்படும் இந்தத் துன்பப் புயலைக்கண்டு கலங்காதே! நடுங்காதே! கண்ணீர் வடிக்காதே!"

ஒருநாள் நடராசனிடமிருந்து அமைதியாகவும், ஆணித்தரமாகவும் வந்தன இந்தச் சொற்கள். கருத்தாழமுடன் முத்தைப் போன்றிருந்த வார்த்தைகள், பாலுவுக்குச் சிந்தனையைக் கிளறிவிட்டதோடு, சோர்ந்து கிடந்த அவனது உள்ளத்தைச் சுறுசுறுப்பாக்கியன. இந்தச் சுறுசுறுப்பும் உற்சாகமும் இல்லாவிட்டால், இந்த டியூஷன் வேலையைக்கூட ஒப்புக்கொண்டிருக்கமாட்டான்.

இனி, வீட்டிற்கும் ஏதும் அனுப்பலாம். டியூஷனில் கிடைக்கும் பணம், பட்டினி போடாது, கஞ்சியாவது கிடைக்கும். அடிக்கும் புயல் ஓய்ந்து நிற்காவிட்டாலும், அதன் வேகம் ஓரளவுக்காயினும் குறையும்.

இவ்விதமான சிந்தனைச் சுழலில் சிக்கியவனாக வெள்ளவத்தைக்கு வந்துவிட்டான். அவனுக்குக் கடுமையாகப் பசி

எழுந்தது. எங்கேயாவது ஒரு ஹோட்டலில் புகுந்து வயிற்றுக்குள் ஏதும் தள்ளி வைக்கலாமென்ருல், அதற்குக் காசுமில்லை......!

இன்னும் பசியை அடக்கிப் பிடித்துக்கொண்டு குறித்த இடத்திற்கு வந்துவிட்டான். அதுவும் ஒரு பெரிய மாளிகையாக இருந்தது. உள்ளே கொம்பவுண்டைத் தாண்டிக்கொண்டு வெளி ஹோலுக்குள் போனன். ஒருவருமேயில்லை. 'கோலிங் பெல்லை' அடித்துவிட்டு, அங்கே கிடந்த குஷன் ஸீட்போட்ட கதிரையில் உட்காரப் போனன். இதே சமயத்தில் "உள்ளே வரலாம்!" என்று ஒரு இனிமையான குரல் ஒலித்தது. உள் ஹோலுக்குள் நுழைந்தான் பாலு. அவ்வளவுதான் வைத்த கண் வாங்காது, அங்கு நின்ற பெண்ணையே பார்த்துக்கொண்டு நின்ருன். ஆம், அந்தப் பெண் அழகி! அழகுக்கு அழகி! பேரழகி! அந்த மாதிரி மங்கையை அவன் கண்டதேயில்லை! இந்த அழகு மயக்கத்திலே தன்னை மறந்து நின்ற பாலுவுக்கு பசி மயக்கமும், கடும் வெயிலில் நடந்துவந்த களைப்பும் சேர்ந்து, அவன் தலையைக் கிறுகிறுக்க வைத்தன. கொஞ்ச நேரத்தில் அந்த மாளிகையே சுழலுவது போலிருந்தது. மறுகணம் அப்படியே மூர்ச்சித்து விழுந்துவிட்டான்.

திடீரென்று மூர்ச்சித்து விழுந்த பாலுவைக் கண்ட அந்தப் பேரழகி திடுக்கிட்டு விட்டாள். சிலைபோல் நின்ருள் சில விநாடிகள். பிறகு பதறிக்கொண்டே "சில்வா...! சில்வா...!" என்று கத்தினுள்.

"என்னம்மா...?" என்று கேட்டுக்கொண்டே அங்கு வந்தான் சில்வா.

"டொக்டருக்கு டெலிபோன் பண்ணு...ம்...ஓடு, சீக்கிரம்!" என்று துரிதப்படுத்தினுள் அவள்.

சில்வா டெலிபோன் இருக்கும் இடத்தைநோக்கி ஓடினுன். அந்தப் பெண்ணும் உள்ளே ஓடினுள். சில நிமிடங்களுக்குள்

கையில் தண்ணீர்ச் செம்புடன் பாலுவின் அருகே ஓடிவந்தாள்; தண்ணீரை வார்த்து. அவன் முகத்திலடித்தாள். இதற்குள் சில்வாவும் அங்கு வந்துவிட்டான். இருவருமாகச் சேர்ந்து பாலுவைத் தூக்கிப் பக்கத்திலிருந்த சோபாவில் கிடத்தினர். சில்வா மின்சார விசிறியைச் சுழலவிட்டான். அந்தப் பெண் பாலுவையே பார்த்துக்கொண்டு நின்ருள்.

இதற்குள் டொக்டரும் வந்துவிட்டார். பாலுவைச் சோதித்தார். பிறகு, ஏதோ மருந்தைக் கொடுத்தார்.

"டொக்டர்...! வந்து...?"—என்று வார்த்தைகளை மென்று விழுங்கினள் அந்த அழகி.

"அப்படி ஒன்றுமில்லை. சாதாரண மயக்கம். வயிற்றில் ஆகாரமில்லை. அத்துடன் பலயீனம். எல்லாம் சரியாகிவிடும்!" என்று கூறிவிட்டுப் போய்விட்டார் டொக்டர்.

அவர் போய்க் கொஞ்சநேரத்துக்குப் பிறகு, பாலு கண்களை விழித்தான். பரக்க, பரக்க அங்குமிங்கும் பார்த்தான். தனக்கு அருகே ஒரு பெண்ணும், இளம் பையனெருவனும் நிற்பதைக் கண்டதும் திடீரென்று எழுந்தான். சற்று நேரத்திற்குமுன் நடந்ததெல்லாம் நினைவுக்கு வந்தன. அவனுக்கு வெட்கம் தாங்கமுடியவில்லை. ஒரு அசட்டுச் சிரிப்பு அவனுடைய அதரங்களுக்கிடையில் நெளிந்துவிட்டு ஓடியது. இதை அந்த அழகு மங்கை கவனிக்கவில்லை. பாலு தலையைக் குனிந்து கொண்டான்.

சிவந்தமேனி, சிறிது ஒல்லியான உடல், கவர்ச்சியான முகம், அழகான தோற்றம், இருபத்திநான்கு வயதுக்கேற்ற பொலிவு—இத்தனையும் ஒருங்கே அமையப்பெற்ற பாலுவையே பார்த்துக்கொண்டு நின்ருள் அந்தப் பெண். விழிகளை உயர்த்தினன் பாலு! அந்தப் பெண்ணின் விழிகள் அப்போது நிலத்தை நோக்கின. இதைக் கண்டதும்,

"யான் நோக்குங்காலை நிலநோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்!"

என்ற குறளடிகள் நினைவுக்கு வந்தன பாலுவுக்கு.

"சில்வா, சோடாக் கொண்டுவா...!"—என்று குயிற் குரலில் கூறினாள் அந்தக் கோதை. பிறகு, அருகிலிருந்த சோபாவில் அமர்ந்து "நீங்கள் யார்" என்றாள் அந்த எழிலரசி.

பாலு தான் வந்த விஷயத்தைச் சொன்னான். இதைக் கேட்டதும், அவள் சில வினாடிகள் யோசித்துவிட்டு.

"ஆமாம், எங்களுக்கு ஒரு டியூஷன் மாஸ்டர் வேண்டியிருக்கிறது. வில்ஸன் கொம்பனியில் எங்களுக்கு வேண்டியவர் ஒருவர் இருக்கிறார், அவர் பெயர் புண்ணியமூர்த்தி. அவரிடம்தான் நாங்கள் சொல்லிவைத்திருந்தோம். அதே கொம்பனியில் வேலை பார்க்கும் உங்கள் நண்பர் நடராசனுக்கு அவர்தான் சொல்லியிருக்கவேண்டும். மிகவும் சந்தோஷம். இப்போது நீங்கள் எங்கே வேலை பார்க்கிறீர்கள்?" என்று மூச்சுவிடாமல் சொல்லிவிட்டு ஒரு கேள்விக் குறியுடன் நிறுத்தினாள் அவள்.

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று யோசித்தான் பாலு. 'சும்மாதான் இருக்கிறேன் என்றால் தன் மானத்திற்கு ஏதும் இழுக்காக இருக்குமோ? சே... உண்மையைச் சொல்வதால் தன் மானத்திற்கு நஷ்டம் ஒன்றும் வராது!'— என்று பல எண்ணங்கள் எழுந்தன. வேலையில்லாமல் சும்மாயிருக்கிறேன் என்று சொல்ல வாயெடுத்தான். ஆனால் வெட்கம் நடுவே குறுக்கிட்டு அதை வெளியே வராமல் தடுத்தது.

"என்ன யோசிக்கிறீர்கள்?"—என்று கேள்விப் பாணத்தை எய்தாள் அந்த எழில் மங்கை.

"ஒன்றுமில்லை......!"—என்று சொல்லி ஒரு அசட்டுச் சிரிப்பைச் சிந்தவிட்டான் பாலு.

"நான் கேட்டதற்கு இன்னும் பதில் சொல்லவில்லையே? இன்னும் மயக்கம் போகவில்லையாக்கும்? இந்தாருங்கள்

சோடா சாப்பிடுங்கள்...!''—என்று குறுநகை ஒன்றை விட்டெறிந்துகொண்டே, சற்றுநேரத்திற்கு முன்னால் சில்வா கொண்டு வந்து வைத்த சோடாவைப் பாலுவிடம் நீட்டினாள் அந்த நீள் விழியாள்.

பாலுவுக்கு நாக்கு வரட்சியாயிருந்தது. சோடாவைக் குடித்தான்.

"நீங்கள் என்ன உத்தியோகம் பார்க்கிறீர்கள்?''—திரும்பவும் அதே கேள்வியைக் கேட்டாள்.

"ஒன்றுமில்லை...! சும்மாதான் இருக்கிறேன்!''—தன்னையறியாமலே சடக்கென்று இப்படிச் சொல்லிவிட்டான் பாலு.

"சும்மா இருக்கிறேன் என்று சொல்ல வெட்கமாக இருந்ததாக்கும்!''—என்று மெதுவாகச் சிரித்தாள் அவள். பாலுவுக்கு இன்னும் வெட்கமாக இருந்தது. விழிகளைத் தாழ்த்திக் கொண்டான்.

"உத்தியோகத்துக்கு முயற்சி செய்தீர்களா?''

"ஆம். ஆனால் கிடைக்கவில்லை!''

"அப்படியா...! இப்போது எங்கேயிருக்கிறீர்கள்?''

"மருதாணையில்!''

'உங்கள் குவாலிவிகேஷன்?''.

"சீனியர்''

இத்தனை கேள்விகளையும் அடுக்கிக்கொண்டு வந்தவள் இத்துடன் நிறுத்திவிட்டு "குணம்...! குணம்...!'' என்று உள்ளே குரல் கொடுத்தாள். ஒருவரும் வரவில்லை. "கொஞ்சம் இருங்கள்'' என்று கூறிவிட்டு உள்ளே போனாள்.

கூண்டிலே நிற்கும் குற்றவாளியையோ, அல்லது சாட்சிகளையோ கேள்விகள் போட்டு விசாரிக்கும் நியாயதுரந்தரரைப்

போன்று தன்னிடம் கேள்விகள் கேட்ட அந்தப் பெண்ணை நினைக்க நினைக்க ஆத்திரமாகவும், ஆனந்தமாகவும் இருந்தது பாலுவுக்கு

இந்தக் கேள்விகளெல்லாம் எதற்கு? பெண்கள் அடக்கமானவர்கள் என்று கூறப்படுகிறது. ஆனால், அவர்களுடைய நாக்கு எவ்வளவு நீளமானது! "சில குட்டையான பெண்களுக்கும்கூட குதிரையின் வாலைப் போன்று நீண்ட தலைமயிருண்டு. அதுபோல பெண்கள் அடக்கமாயிருந்தாலும் அவர்களுடைய நாக்கு குதிரையின் நீளமான வாலைப் போல!"—என்று ஒரு நாள் நடராசன் சொன்னது நினைவுக்கு வந்தது அவனுக்கு.

மவுண்ட் லவேனியாவில் உள்ளவர்கள் இந்தமாதிரியெல்லாம் கேள்வி கேட்கவில்லை. அந்தப் பெண்ணுடைய கேள்விகளையும், தன்னுடைய பதில்களையும் ஒரு முறை நினைத்துக் கொண்டான். தன் சுயமரியாதைக்குப் பங்கம் தரக்கூடிய பதில்களா? என்று யோசித்தான் அவனுக்கு அப்படிப் படவில்லை. இத்துடன் அவளைப்பற்றிச் சிந்திப்பதை நிறுத்திவிட்டு அந்த ஹாலைச் சுற்றித் தன் விழிகளைச் சுழலவிட்டான்.

அந்த ஹால் ஆடம்பரமான முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பார்வைக்கு அந்தப் பங்களா மவுண்ட் லவேனியாவிலுள்ள அந்தப் பங்களாவைவிடப் பெரிதாகத் தோன்றியது. 'அவர்களைவிட இவர்கள் இன்னும் பெரியவர்கள்....!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். எதிரேயிருந்த கதவுச் சுவர் மேல் பார்வையை ஓடவிட்டான். அங்கே லட்சுமிப்படம் ஒன்று மாட்டப்பட்டிருந்தது. தாங்கள் பணக்காரராயிருப்பதற்கு இந்த லட்சுமியின் கடைக்கண் பார்வைதான் காரணம் என்று இவர்களின் எண்ணம்போலும்— என்று எண்ணியவாறு மறுபக்கம் திரும்பினான். அதேசமயம் அந்த அழகிய மங்கையும், அவனைப் பின்தொடர்ந்து பத்து வயது மதிக்கத்தக்க ஒரு பையனும் வந்தார்கள்.

"இவர்தான் என் தம்பி குணநாயகம். இவர் தங்கச்சி சொர்ணமலர். இவர்களிருவருக்குந்தான் நீங்கள் டியூஷன் சொல்லிக் கொடுக்கவேண்டும்." என்று பாலுவிடம் கூறி விட்டு "குணம்! இவர் யார் தெரியுமா? டியூஷன் மாஸ்டர்! சொர்ணம் இவர் சொல்கிறபடி நீயும் கேட்கவேண்டும்" என்று தன் தம்பி தங்கையைப் பார்த்துக் கூறினுள். அந்தச் 'சிறுசுகள்' இரண்டும் 'ஆம்', என்று தலையை ஆட்டின.

இந்தச் சமயத்தில் சில்வா வந்தான் அங்கே. "அம்மா வரலாம்" என்று கூறிவிட்டு அந்தச் சிறுவர்களை அழைத்துக் கொண்டு உள்ளே போனுன்.

"சரி சாப்பிடலாம் வாருங்கள்"—என்று பாலுவை அழைத்தாள் அந்தப் பாவை.

"வேண்டாம். நான் ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுத் தான் வந்தேன்" என்று புளுகினுன் பாலு.

இதைக் கேட்டதும் தன்னுடைய கொவ்வை இதழ்களை விரித்துச் சிரித்தாள் கோதை. பிறகு, "டொக்டர் என்ன சொன்னுர் தெரியுமா? உங்கள் வயிற்றில் பசியிருந்ததாம். நீங்கள் மயங்கி விழுந்ததற்கு அதுவும் ஒரு காரணம் என்று சொன்னுர். அதிலிருந்து தெரிகியது நீங்கள் சாப்பிடவில்லை யென்று!" என்ருள்.

"இல்லை வந்து...!" என்று அசடுவழிய இழுத்தான்.

"இனி, வந்ததும் போய்க் கொண்டும்தானிருப்பீர்கள். வெட்கப்படவேண்டாம்! வாருங்கள்...!" என்று வற்புறுத்தத் துவங்கிவிட்டாள், அவள்.

பாலுவுக்குச் சங்கடமாகயிருந்தது. 'பெரிய இடங்கள்' என்று சொல்லப்படும் இப்படிப்பட்ட பங்களாக்களில் அவன் அதுவரை சாப்பிட்டதேயில்லை. இப்படிப்பட்ட இடத்தில், அதுவும் ஒரு பெண் உபசரிப்பது அவனுக்கு புதிய அனுபவ

மாயிருந்தது. எனவே, வெட்கப்பட்டான். அந்தப் பெண்ணுடன் சாப்பிடுவதற்கு அவன் கூச்சப்பட்டான். எனினும், அவள் விடவில்லை. வற்புறுத்தி அழைத்துக் கொண்டு போய் விட்டாள். சாப்பாட்டு அறையில் இருவரும் அதிகம் பேசிக் கொள்ளவில்லை. பாலுவின் வயிற்றில் பசியிருந்தது. ஆனால், அவன் அதிகம் சாப்பிடவில்லை. நடுத்தர வர்க்கத்தின் சொந்தச் சரக்கான 'வரட்டுக் கௌரவம்' இருக்கிறதே அது தடுத்தது.

சாப்பாடு முடிந்ததும், இருவரும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தபின் மறுநாள் தொடக்கம் டியூஷனுக்கு வருவதாகச் சொல்லி வந்துவிட்டான், பாலு.

பாலு தன் அறைக்கு வரும் வரை அந்தப் பெண்ணைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு வந்தான். அவளிடம் அழகு இருந்தது. அத்துடன் ஆடம்பரமும் இருந்தது. பணம், அந்தஸ்து, அழகு,—இந்த மூன்றும் ஒன்றும் தெரியாதவர்களைக் கூடச் செருக்கடையச் செய்யும்! சமுதாயத்திலே எல்லோரும் பணமும், அந்தஸ்தும் கொண்டவர்களாக இல்லை. ஒருசிலர் தான் இவற்றிற்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்றனர். இவர்கள் மற்றவர்களைவிட உயர்ந்த வாழ்க்கையில் இருக்கிறோம் என்பதை எண்ணி ஒரு கர்வத்தைத் தங்கள் உள்ளத்திலும், மண்டையிலும் குடியிருக்கவிடுகின்றனர். அந்தப் பெண்ணுக்கும் இவையெல்லாம் இருந்தன. எனினும், அன்பாகவும், கௌரவமாகவும் நடந்துகொண்டாள்.

*　　　*　　　*

அன்றிரவு நடராசனுக்குக் காய்ச்சல் விட்டிருந்தது. பாலு, அன்றைய தினம் நடந்த சம்பவங்களையெல்லாம் நடராசனுக்குச் சொன்னான். வெள்ளவத்தை பங்களாவில் நடந்த சம்பவங்களை உற்சாகத்துடன் ஒன்றுவிடாமல் கூறினான். அதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான் நடராசன். அதுமட்டுமல்ல, அந்தப் பெண்ணைப்பற்றிப் பாலு சொன்னபோது அவனுடைய முகத்திலே ஏவ்வித உணர்ச்சி பாவங்கள் பளிச்சிடுகின்றன என்பதையும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தான்.

'அவள் அடுக்கடுக்காகக் கேள்விகள் போட்டதுதான் எனக்கு ஒருமாதிரியாக இருந்தது? அவள் இப்படிக் கேள்விகள் கேட்கவேண்டிய அவசியமில்லையென்றுகூட எண்ணினேன்,'' என்றான் பானு.

நடராசன் மெல்லச் சிரித்துவிட்டு, 'அவர்கள் கேட்கத்தான் செய்வார்கள், தங்கள் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பவரைப்பற்றித் தெரிந்து கொள்வதற்குத்தான் இப்படியெல்லாம் விசாரித்திருப்பார்கள்'' என்றான்.

''அந்தப் பெண்ணுக்குப் பிள்ளைகளேயில்லை. ஒரு தம்பியும், தங்கையுந்தான் இருக்கிறார்கள். அந்தப் பெண்ணைப் பார்த்தால் கல்யாணம் ஆகாதவள்போல் தெரிகிறது.''

''வேறு யாரும் அங்கு இல்லையா?''

''ஒரு சிங்களப் பொடியன் இருக்கிறான். நான் போன சமயம் யாருமில்லை.''

''பானு, அந்தப் பெண்ணும், சிறுவர்களும் ஒரு பெரிய உத்தியோகத்தரின் மக்கள். இதைக் கொம்பனியில் வேலை செய்யும் புண்யமூர்த்தி சொன்னார். தங்கள் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் விஷயத்தில் உன்னிடம் திருப்தி கண்டால் அவர்களைக் கொண்டே இன்னும் இரண்டொரு 'பெரிய இடங்கள்' கிடைக்கக்கூடும். ஆகவே, அதற்குத் தக்கபடி நடந்து கொள்! இத்துடன் இன்னொன்றையும் கூறவேண்டியிருக்கிறது. கோடையின் வெப்பத்திலிருந்து குளிர் நிறைந்த இடத்திற்குப் போயிருக்கிறாய். இப்போது, மனசுக்குச் சந்தோஷமாகத்தானிருக்கும். ஆனால், குளிர் அதிகமானால், உடம்பு விறைத்துவிடும். எனவே, எச்சரிக்கையாக இருந்துகொள்!' என்று ஒரு குட்டி லெக்ஷர் அடித்தான் நடராசன்.

நடராசனின் இந்தக் கருத்துரை பானுவின் காதில் விழவில்லை. அவன் நினைவு வெள்ளவத்தைப் பங்களாவிலிருந்தது.

அன்றிரவு பானு தூங்கும்போது பல இனிய கனவுகள் கண்டுகொண்டிருந்தான்.

# 4

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன.

இப்போது பாலுவிடமிருந்த சோர்வு சுருங்கிச் செத்துவிட்டது. ஒரே சுறுசுறுப்பு, கலகலப்பு, உற்சாகம்! இளப்பைக் கூட மறந்துவிட்டான். காலை எழுந்தவுடன் எப்போது பின்னேரம் வரும் என்று துடித்துக்கொண்டிருப்பான். இதற்கெல்லாம் காரணம் வெள்ளவத்தையிலுள்ள சொர்ணவிலாசத்துச் சொகுசுக் காரியான மனோன்மணிதான்.

தினசரி பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக, மனோன்மணியின் மாளிகைக்குப் போகும்போது அவள் மலர்முகம் காட்டி வரவேற்பாள். மவுண்ட் லவேனியாவிலுள்ள பங்களாக்களுக்குப் போய்ப் பாடம் சொல்லிக் கொடுத்துவிட்டு, கடைசியாகத் தான் மனோன்மணியின் பங்களாவுக்கு வருவான். அங்கே குணத்துக்கும், சொர்ணத்துக்கும் பாடம் சொல்லிக் கொடுப்பது இரண்டு மணித்தியாலங்கள் என்றால், மனோன்மணியுடன் பேசுவது ஒரு மணித்தியாலமாக இருக்கும். நேரம் போவதே தெரியாமல் அவளுடன் பேசிக்கொண்டிருப்பான். அவளும் கலகலப்பாகவும், வேடிக்கையாகவும் அவனுடன் பேசுவாள்; பழகுவாள். தெவிட்டாத தென்றலைப் போன்ற மனோன்மணியின் விழிப் பார்வை, பாலுவின் இதயத்தில் இன்பத் தேனைப் பாய்ச்சும். நாளடைவில் அவனுடைய அழகும், பரிவும் பாலுவின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டன. பாலுவும் மனோன்மணியின் இதயத்திலே இருப்பிடம் தேடிக்கொண்டான். ஆனால், இதை இருவரும் ஒருவருக்கொருவர் வெளிக்காட்டிக் கொள்ளாமலே நடந்துகொண்டனர்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை. அன்று விடியற்காலையிலே எழுந்து சீக்கிரமே குளித்துவிட்டு, சாப்பாடுகூட அருந்தாமல் வெளியே போகத் தயாரானான் பாலு.

"எங்கே போகிறாய்?" என்று கேட்டான் நடராசன்.

"வெள்ளவத்தைக்கு"

"காலையிலா?"

"ஆம். அவர்கள் வரச்சொல்லியிருக்கிறார்கள்."

"ஏன்?"

"இன்று சொர்ணம் பிறந்த நாள். அதற்காக அவளுடைய ஐயா பலருக்கு விருந்து வைக்கிறார். என்னைக் காலையிலே வரச் சொன்னார்கள். அதுதான் போகிறேன்."

"அவர்களே வரும்படி சொன்னார்களா, அல்லது மனோன்மணி மட்டும் சொன்னாளா?"

நடராசனின் இந்தக் கேள்வியின் அர்த்தத்தை அறிந்து கொண்டவன்போல் நண்பனை ஒரு பார்வை பார்த்தான் பாலு.

"பாலு விருந்துச் சாப்பாடு பொல்லாதது. பார்த்து நடந்துகொள்," என்று சொல்லிவிட்டு மெதுவாகச் சிரித்தான் நடராசன்.

"உனக்குக் கிடைக்கவில்லையேயென்று பொறாமையாக இருக்கிறது. ஆகவேதான் பொல்லாதது என்று எச்சரிக்கை செய்கிறாய்?" என்றான் பாலு புன்னகையுடன்.

"பொறாமை மட்டுமல்ல, பாலு. உன் வாழ்க்கையில் அடித்துக் கொண்டிருந்த புயல் ஓய்ந்து, இப்போது தென்றல் வீசத் தொடங்கியிருக்கிறது. ஆனால், இந்தத் தென்றலைப் பற்றியும் நான் கவலைப்படுகிறேன்."

"நான் சந்தோஷமாக இருப்பது உனக்குக் கவலையாகவா இருக்கிறது?"

"அப்படிச் சொல்லவில்லை பாலு. காதல் என்பது ஒரு தென்றல்தான் ஆனால், அது ஏமாற்றமடைந்தால், புயலாக மாறிவிடும். அதைத்தான் சொல்கிறேன்."

"காதலா...! என்னை யார் காதலிக்கிறார்கள்?"

"பாலு நீ மறைத்தாலும், எனக்கு எல்லாம் தெரியும்! சொர்ணவிலாசத்திலிருக்கும் அந்த அழகிக்கும் உனக்குமிடையில் இப்போது காதல் நடந்துகொண்டிருக்கிறது. இந்தக் காதல் இன்னும் கொஞ்ச நாட்கள் சென்றபிறகு ஓடத்தொடங்கிவிடும். ஆனால், ஓடும் வேகத்தில் கால் இடறி விழுந்துவிடக்கூடாதே என்றுதான் கவலைப்படுகிறேன்."

நடராசனின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் மெல்லச் சிரித்துவிட்டான் பாலு. "நடராசா நான் முட்டாளல்ல! எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று எனக்குத் தெரியும்," என்று சொல்லிவிட்டு வெளியே வந்தான். நடராசா சொல்வதிலும் உண்மையிருக்கிறது என்று ஒரு உண்மை உள்ளத்தில் ஓடியது.

* * *

சொர்ண விலாசத்தில் விருந்து நடந்து முடிந்தது. அந்த விருந்தில் பல 'பெரிய மனிதர்கள்' கலந்து கொண்டார்கள். சொர்ணத்தின் 'டியூஷன் வாத்தியார்' என்ற முறையில் பாலுவை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் மனோன்மணியின் தந்தை. அங்கு வந்த 'பெரிய மனிதர்களில்' சிலர், தங்கள் பிள்ளைகளுக்கும் டியூஷன் சொல்லிக் கொடுக்க முடியுமா என்று கேட்டனர். பாலு இரண்டொரு பேருக்குச் சம்மதம் கொடுத்தான். மற்றவர்களுக்கு நேரமில்லையென்று சொல்லிவிட்டான்.

பின்னேரம் ஆகிவிட்டது. எல்லோரும் விடைபெற்றுக் கொண்டு போகத்தொடங்கினார்கள். பாலுவும் எழுந்தான்.

"கொஞ்சம் இருங்கள் பாலு. ஏன் அவசரம்?" என்றாள் மனோன்மணி.

"இல்லை...வந்து...!" என்று இழுத்தான் பாலு.

"உங்களுக்கு வேறு ஏதும் வேலைகள் இருக்கிறதா?"

"இல்லை!" என்று தலையை ஆட்டினான் பாலு.

"அப்படியானால் கோல்பேஸுக்குப் போகலாமே?" என்று கேட்டவாறு எழுந்தாள் மனோன்மணி. சற்று நேரத்திற்குள் இருவரும் கோல்பேஸுக்குப் புறப்பட்டனர்.

அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால், கோல்பேஸ் மிகவும் கலகலப்பாக இருந்தது. சர்வதேச நாகரிகம் முழுவதும் அங்கிருந்தது! உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள மக்கள் கொழும்பிலிருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கவேண்டுமானால், ஞாயிற்றுக்கிழமைகளில் கோல்பேஸுக்குப் போகவேண்டும். விதவிதமான ஆடை அலங்காரத்துடன் ஆடவரும், பெண்டிரும், வயோதிபரும், சிறுவர்களும் கோல்பேஸில் நிறைந்திருப்பார்கள். ஹொலிவூட் நாகரிகத்தின் சின்னங்களையும் அங்கு காணலாம்! இந்தவிதமான அழகு சுந்தரிகளைப் பார்க்கத்தான் அலங்கார நவ நாகரிக ஆடைகளுடன் வருவார்கள், 'வருங்காலத் தலைவர்கள்' என்று கூறப்படும் வாலிபர்கள்! அன்றும் இப்படித்தான் கூடியிருந்தார்கள்.

பாலுவும், மனோன்மணியும் ஜனசந்தடி அதிகமில்லாத ஒரு இடத்தில் போயிருந்தார்கள்.

மாலைச் சூரியன் மேற்கிலே சாய்ந்திருந்ததால் அடிவானம் சிவப்பாயிருந்தது. அந்தச் சிவப்புடன் போட்டி போட்டது மனோன்மணி உடுத்தியிருந்த சிவப்பு நைலன் சேலை. கதிரவனின் பொன்னொளி மனோன்மணியின் மலர் வதனத்தையும் பளபளக்கச் செய்துகொண்டிருந்தது. மனோன்மணியிடமிருந்து 'சென்ற்' வாசனை வேறு பாலுவின் மூக்கைத் தாக்கி உள்ளத்தைக் கிறுகிறுக்கச் செய்துகொண்டிருந்தது.

பாலுவின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிந்துகொண்டிருந்தது. கோல்பேஸில் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை. அப்போதிருந்த மனோகரமான சூழ்நிலை, 'சொர்க்கத்தில்' இருப்பதைப் போன்ற ஒரு பிரமையை உண்டாக்கிவிட்டிருந்தது.

இதற்கு முன்னர் எத்தனையோ தடவைகளில் கோல்பேஸுக்கு வந்திருக்கிறான் பாலு. அப்போதும் இந்த இடத்

திலேதான் இருந்திருக்கிறன். இதேபோன்று சூரியனும் அடிவானத்தைச் சிவப்பாக்கித்தான் வைத்திருந்தான். காற்றும் 'ஜிலுஜிலு' என்று அடித்துக்கொண்டுதானிருந்தது. என்ருலும், அதை அனுபவித்து ஆனந்தப்படவில்லை பாலு. இன்று போல் சந்தோஷமாகவும், ஒரு இன்பமான சூழ்நிலையில் இருப்பதைப் போன்ற பிரமையுமில்லை.

மனிதன் அழகை ரஸிக்கவேண்டுமானல், அவனுடைய இதயமும் குதூகலமாயிருக்கவேண்டும். அவனுடைய உள்ளம் குதூகலமாயிருக்கவேண்டுமானல் அவனுடன் உறவாடும் நிகழ்ச்சிகளும் மகிழ்ச்சியானவையாக இருக்கவேண்டும்.

ஒரு நாள் நடராசனும் பாலுவும் கோல்பேஸில் இதே இடத்தில் இருந்தனர். அப்போது சாயங்காலக் கதிரவன் அடிவானத்திலே வண்ணக்கோலம் போட்டு அதன் சுற்றுவட்டாரத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தான். இதையெல்லாம் பாலு கவனிக்கவில்லை. வேறு எதையோ யோசித்துக்கொண்டிருந்தான். அவன் முகம் வாடியிருந்தது. அத்தனைக்கும் காரணம், அவனுடைய உள்ளம் குதூகலமாயில்லாததே! அப்போதுதான் மேற்கண்டவாறு சொன்னுன் நடராசன். இதையும் பாலு இப்போது நினைத்துக் கொண்டான்.

"ஏன் மௌனமாயிருக்கிறீர்கள்?"

நீண்ட அமைதியில் ஆழ்ந்திருந்த பாலுவை, மனேன்மணியின் இனிமைக் குரல் அவன் பக்கம் கவர்ந்திருந்தது.

"கதிரவன் வானத்திலே செய்யும் வர்ண ஜாலங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஏன் மனே, அது அழகாயில்லை?" என்ருன் பாலு.

"குருடனைத் தவிர மற்றவர்கள் அழகாய்த்தானிருக்கிறது என்பார்கள்" என்ருள் அவள்.

"உண்மைதான். ஆனல், கலாரசனை உள்ளவர்கள்தான் அதை அனுபவிப்பார்கள்!"

"உங்களுக்குக் கலாரசனை நிறைய இருக்கிறதாக்கும்!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் மனோன்மணி. அப்போது அவளுடைய கன்னங்களில் குழிவிழுந்து, முகத்தின் அழகை மேலும் சோபிக்கச் செய்தது. அதைப் பார்த்து அனுபவித்தான் பாலு.

"ஏன் பாலு நீங்கள் கல்யாணம் செய்துகொள்ளாமலிருக்கிறீர்கள்?" திடீரென்று இந்தக் கேள்வியைக் கேட்டாள் மனோன்மணி.

இப்படிக் கேட்பாளென்று பாலு எதிர்பார்க்கவில்லை. இதற்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. யோசித்துக் கொண்டிருந்தான்.

"என்ன யோசிக்கிறீர்கள்?" இந்த இரண்டாவது வினாவை வீசிவிட்டுத் தனது வேல் விழிகளால் அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வை அவன் உள்ளத்தில் ஒரு இன்பப் போதையைத் தோற்றுவித்தது. எனினும் அதைக் காட்டிக்கொள்ளவில்லை.

"கல்யாணத்தைப் பற்றிச் சிந்திக்கக்கூடிய நிலையில் நான் இல்லை" என்று அமைதியாகச் சொன்னான் பாலு.

"ஏன்?"

"அதற்கு எல்லா வசதிகளும் வேண்டும். அந்த வசதிகள் இப்போது எனக்கில்லை"

"வசதிகளென்றால்?"

"முதலாவது பணம் வேண்டும். இரண்டாவது மனசுக்குப் பிடித்த பெண் வேண்டும். மூன்றாவது..."

பாலு வாசகத்தை முடிக்கவில்லை. இடையில் "காதல் வேண்டுமாக்கும்" என்று அந்த வாசகத்தை முடித்து அவனை ஓரக்கண்ணால் பார்த்துச் சிரித்தாள் மனோன்மணி.

அவளை ஒரு விநாடி ஊடுருவிப் பார்த்தான் பாலு. பிறகு, "ஆம். அதுவும் வேண்டியதுதான்!" என்றான்.

"இந்த மூன்றும் இருந்தால் கல்யாணத்தைப் பற்றிச் சிந்திப்பீர்கள். இல்லையா?"

"ஆம்"

"அப்படியானால் இந்த மூன்று வசதிகளும் உங்களுக்கு இருப்பதாக எண்ணிக்கொண்டு கல்யாணத்தைப் பற்றிச் சிந்தியுங்கள்.' மனோன்மணி இப்படிச் சொல்லிவிட்டுத் தன் பார்வையைத் தரையில் பாயவிட்டுக் கொண்டிருந்தாள்.

இந்த வார்த்தைகளின் பொருள் பாலுவுக்கு விளங்கவில்லை. உள்ளத்தில் பல எண்ணங்கள் கூத்தாட ஒரு கேள்விக் குறியுடன் மனோன்மணியைப் பார்த்தான். அப்போது அவளுடைய பார்வை கடலை நோக்கியிருந்தது. பாலு ஏதோ நினைத்துக் கொண்டவன் போல, "இந்த மூன்றும் இருப்பதாகக் கற்பனை செய்துகொள்ள வேண்டியதுதான்!" என்றான் சற்று வெறுப்புடன்.

"கற்பனையல்ல பாலு. நிஜந்தான். காதல் வேண்டுமென்றீர்கள். என்னிடம் அது... இருக்கிறது!" என்று நாணத்தால் முகம் சிவக்கக் கூறிவிட்டுக் கடைக்கண்ணால் அவனைப் பார்த்தாள்.

மனோன்மணியின் வார்த்தைகளும், பார்வையும் பாலுவின் உள்ளத்திலும், உடலிலும் ஒரு கிறுகிறுப்பைத் தோற்றுவித்துவிட்டன. புதையலைக் கண்டவனின் முகத்திலே தவழும் பூரிப்பையும் மலர்ச்சியையும்போல, பாலுவின் முகத்திலே மலர்ச்சியும், பூரிப்பும் தோன்றின. மனோன்மணியிடமிருந்து தயங்கித் தயங்கி வந்த அந்த வார்த்தைகளை இன்னொருமுறை நினைத்துக்கொண்டான். கரும்பை நாக்கில் வைத்தால் எப்படி இனிக்குமோ அதைப்போல அந்த வார்த்தைகள் இனித்தன.

சற்றுநேரம் இந்த இன்ப மயிப்பிலே தன்னை மறந்திருந்த பாலு, திடீரென்று மனோன்மணியின் கரங்களைப் பற்றிக்

கொண்டு, "என்னைக் காதலிக்கிருபா மனோ?" என்று படபடப்புடன் கேட்டான்.

"ஆம்" என்று தலையை ஆட்டினுள் மனோன்மணி.

பாலுவுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. மகிழ்ச்சி வெறியில் தன்னுணர்வையே மறந்தவனுகிவிட்டான். இப்படிச் சில நிமிடங்கள் இருந்தபின், அவளுடைய கையை விட்டு விட்டு, ஒரு கணம் எதையோ யோசித்தான். மறுகணம், "காதலும் இருக்கிறது. என் மனசுக்குப் பிடித்த பெண் நீயும் இருக்கிருய். ஆனுல் பணமில்லையே......!" என்ருன் சிறிது துக்கத்துடன்.

"என்னிடமிருக்கிறது!"

,, உன்னிடமிருப்பதால் எனக்கு என்ன பிரயோசனம்?"

"மனைவியின் பணம் கணவனுக்கும் சொந்தந்தானே?"

"உண்மைதான். ஆனுல், திருமணம் ஆனபிறகல்லவா அது எனக்கும் சொந்தமாகும்?"

"அதற்கு முன்பாக உங்களுக்கு ஏன் காசு வேண்டும்?"—

"என் கடமையைச் செய்ய!"

"அந்தக் கடமை என்ன?"

"என் தங்கச்சிக்கு இன்னும் கல்யாணமாகவில்லை. அவளுக்கு மணமானபிறகுதான் நான் கல்யாணம் செய்துகொள்ள முடியும். எனவேதான் எனக்கும் பணம் வேண்டுமென்கிறேன்!"

"உங்களிடத்தில் பணமில்லையா...?"

இந்தக் கேள்வியைக் கேட்டதும், பாலு சில நிமிடங்கள் மௌனமாயிருந்துவிட்டுத் தன்னுடைய வீட்டு நிலையைச் சிறிது விளக்கிக் கூறினுன்.

"உங்களுக்குத் தங்கச்சி இருக்கிறுளென்று இன்றுதான் தெரியும்." என்று கூறிவிட்டு அலைகளை மிதக்கவிட்டுக் கொண்டிருந்த ஆழ்கடலைப் பார்த்தவாறு எதையோ யோசித்துக்கொண்டிருந்தாள் மனே.

தங்களுக்குள் நடந்த உரையாடலை இன்னெருமுறை நினைவுபடுத்திப் பார்த்தான் பாலு. தன்மேல் காதல் கொண்டிருக்கிறுள் அவள்— என்பதை உறுதியாகத் தெரிந்து கொண்டதும் அவனுக்குப் பெருமிதமாகவும், மகிழ்ச்சியாகவுமிருந்தது. ஆனுல், விளையாட்டுப்போல் தொடங்கிய பேச்சு இப்போது இருவருக்கும் சிந்தனையைக் கிளறிவிட்டது. அவளைப்போலவே பாலுவும் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட்டான்.

# 5

அன்று கோல்பேஸில் மனோன்மணிக்கும், பாலுவுக்கும் நடந்த காதல்—கலியாணப் பேச்சுக்குப் பிறகு அதைப்பற்றி இதுவரை ஒரு உரையாடலும் நடக்கவில்லை. என்றாலும், பாலு சொர்ணவிலாசத்துக்குப் போகும்போது வழக்கம்போல் இருவருக்குமிடையில் நடக்கும் புன்சிரிப்பு, விழிப்பேச்சு, உபசரிப்பு, கிண்டலும், கேலியும் நிறைந்த உரையாடல்—இவையெல்லாம் தொடர்ந்து நடந்துகொண்டுதானிருந்தன.

பாலுவின் டியூஷனால் மனோன்மணியின் தம்பி குணமும், தங்கை சொர்ணமும் வகுப்பில் நல்ல மார்க்குகள் வாங்கினார்கள்; கெட்டிக்காரர்களாகவும் இருந்தார்கள். இதனால், மனோன்மணியின் தந்தை சதாசிவமும், தாய் இராசம்மாவும் பாலுவின்மேல் நல்ல மதிப்பும். அனுதாபமும் கொண்டிருந்தார்கள். அதுமட்டுமல்ல, அவர் சிபார்சுசெய்த வீடுகளிலுள்ளவர்களும் பாலுவைப் பற்றி நல்லபிப்பிராயம் தெரிவித்தார்கள். இதனால் இன்னும் அதிக மதிப்பு ஏற்பட்டது அவர்களுக்கு. இந்த மதிப்பின் காரணத்தால், 'சொர்ண விலாசத்'தைப் பொறுத்த அளவில், பாலு ஒரு முக்கிய மனிதனாக விளங்கினான்.

சதாசிவம் தம்பதிகள் மிகவும் ஆடம்பரப்பிரியர்கள். அவர்களுக்கு எல்லாம் கலகலப்பாக இருக்கவேண்டும். எப்போதும் உல்லாசமாகவிருக்கவேண்டும். இதற்காகக் கிழமைக்கு ஒரு தடவை விசேஷ நிகழ்ச்சி நடத்தித்தீரவேண்டும். அப்போது தான் சதாசிவம் தம்பதிகளுக்கு நித்திரை வரும். இந்தமாதிரி நிகழ்ச்சிகளிலெல்லாவற்றிலும் பாலுவும் முக்கிய இடம் பெறுவான். அவனுடைய ஆலோசனைகளையும் விரும்பிப் பெறுவார்கள் சதாசிவம் தம்பதிகள். இதற்கு மனோன்மணியின் தூண்டுதலும் ஒரு முக்கிய காரணம். இதுமட்டுமல்ல, பாலு பாடம் சொல்லிக்கொடுக்கும் இடங்களெல்லாம் குபேரபுரியைச் சேர்ந்தவை. அங்கே வாழ்க்கை தென்றலாக இருந்தது. குதூகலம் துள்ளி விளையாடிற்று. வேடிக்கையும், விநோதமும் நாட்டியம் போட்டன. வாழ்க்கை ஒரே 'ஜொலி'யாக இருந்தது. இப்படி 'உயர்ந்த' வட்டாரங்களில் பாலு பழகி வந்ததால் அந்தச் சூழ்

நிலை, அவனுடைய மனோபாவத்தை வேறுமுறையில் வளர்க்கத் தொடங்கியது. வெயிலிலே கால்கடுக்க நடந்து உடம்பு கறுத்தவன், நிழல் கிடைத்தால், அதைவிட்டு மீண்டும் வெயிலில் நடக்கவிரும்புவானா......? துணிவானா......? அதேமாதிரி இருந்தது பாலுவின் மனப்போக்கு. பணக்கார வட்டாரச் சூழ்நிலை, அவர்களின் மனப்போக்கைப் போலவே இவனுடைய மனப்போக்கையும் மாற்றிக்கொண்டிருந்தது. ஒருவனுடைய வாழ்க்கை அமைப்பு எந்தச் சுற்றுடலிலிருந்து ஏற்படுகிறதோ, அதற்கேற்றவாறுதான் அவனுடைய மனப்போக்கும், எண்ணங்களும் இருக்கும் இந்த நியதிக்கு பாலு விதிவிலக்காகவில்லை. சுருக்கமாகச் சொன்னால், சில மாதங்களுக்குமுன் இருந்த தனது வாழ்க்கையை—அந்த வாழ்க்கையில் வீசிக்கொண்டிருந்த புயலை—மெல்ல மெல்ல மறந்துகொண்டிருந்தான். அதை நினைத்துப் பார்க்கக்கூட அவனுக்குக் கஷ்டமாகவிருந்தது. இப்போது தன்னுடைய வாழ்க்கையில் தென்றல் வீசுகிறது. இந்தத் தென்றல் இனிமையானது என்று தனக்குள் சொல்லிக்கொள்வான். மத்தியானச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு பிற்பகல் நான்கு மணிக்கு மருதானையைவிட்டுப் புறப்பட்டால், இரவு பத்து மணிக்குத்தான் திரும்புவான். இப்படி அவனுடைய பொழுது சந்தோஷமாகவும், கலகலப்பாகவும் ஓடிக்கொண்டிருந்தது.

அன்று, மனோன்மணியின் தம்பி குணத்திற்குப் பிறந்த நாள். எல்லா மக்களின் பிறந்த நாளையும் சிறப்பாகக் கொண்டாடுவதுபோல், குணத்தின் பிறந்த நாளையும் சிறப்பாகக் கொண்டாடத் தீர்மானித்தார்கள் சதாசிவம் தம்பதிகள். அவர்கள் வீட்டில் வழக்கமாக நடக்கும் பிறந்த நாளைப் போல, அன்றைய தினம் வேடிக்கையும், விநோதமுமாகக் கழிந்தது.

இரவு மணி பத்தாகிவிட்டது. பாலுவும் கிளம்பினான். அப்போது சதாசிவம் ஒரு பெரிய பார்சலை எடுத்துக்கொண்டு வந்து பாலுவிடம் நீட்டினார். அவன் ஆச்சர்யத்துடன் அவரைப் பார்த்தான். அந்தப் பார்வையில் "இது என்ன ?" என்ற கேள்விக் குறியும் குத்திட்டு நின்றது.

சதாசிவம் ஏதோ நினைத்துக்கொண்டவர்போல், பின்னு லிருந்த சோபாவைப் பார்த்தார். குணமும், மனோன்மணியும் கதைத்துக்கொண்டிருந்தார்கள்.

“குணம் இங்கே வா......?”—என்றார் சதாசிவம்.

அக்காவுடன் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்த குணம் துள்ளிக் குதித்துக்கொண்டு சதாசிவத்திடம் ஓடிவந்தான். சதா சிவம் தன் கையிலிருந்த பார்சலைக் குணத்திடம் கொடுத்து “இதை, மாஸ்டரிடம் கொடு!”—என்றார். குணம் அந்தப் பார் சலைப் பானுவிடம் கொடுத்தான்.

“இதை வாங்கும்...குணம் தன்னுடைய பிறந்த நாளுக் காகப் பாடம் சொல்லித்தரும் தனது மாஸ்டருக்குக் கொடுக்கும் பரிசு!”—என்றார் சதாசிவம். அவரிடம் புன்னகை தவழ்ந்திருந் தது அப்போது.

பானுவுக்கு மகிழ்ச்சியாகவுமிருந்தது; வெட்கமாகவுமிருந் தது. எனினும் ஒரு அசட்டுச் சிரிப்புடன் அந்தப் பார்சலை வாங்கி வைத்துக்கொண்டு மனோன்மணியைப் பார்த்தான். அவ ளும் உதட்டோரத்தில் ஒரு குறும்புச் சிரிப்புடன் அவனைப் பார்த்தாள்.

சொர்ணத்தின் பிறந்த நாளன்று பானுவுக்கு ஒரு பரிசும் கொடுக்கவில்லை இந்தமுறை குணத்தின் பிறந்தநாளையொட்டி, அவனுக்குப் பரிசு கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்தவள் மனோன்மணிதான். ‘பானு பாடம் சொல்லிக்கொடுப்பதால் குணம் கெட்டிக்காரனாக இருக்கிறான். ஆகவே தன்னுடைய பிறந்த நாளுக்காக, தனது உபாத்தியாயருக்கு அவன் பரிசு கொடுக்கவேண்டாமா!’ என்று கேட்டாள் சதாசிவத்திடம். அவரும் அவள் எண்ணத்தை ஆமோதித்தார். இப்போது பரிசு கிடைத்ததற்குக் காரணம் இதுதான். இந்த விவரம் பானுவுக்கு

எங்கே தெரியப்போகிறது? மனோன்மணியின் அதரங்களில் நெளியும் புன்னகை இதைத்தான் சொல்கின்றன என்பது அவனுக்கு எப்படித் தெரியும்?—அவன் சதாசிவத்தின் பெருங் குணத்தைப் பாராட்டினான் மனதிற்குள்ளே.

*　　*　　*

கவனம் முழுவதையும் புத்தகம் படிப்பதிலேயே செலுத்தியிருந்த நடராசன் திடீரென்று ஏதோ நினைத்துக்கொண்டவன் போல், மேசையின் மேலிருந்த மணிக்கூட்டைப் பார்த்தான். மணி பதினொன்றரையாகி இருந்தது. 'இன்னும் பாலுவைக் காணவில்லையே...!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டே எழுந்து அறைக்கு முன்னால் இருந்த விருந்தைக்கு வந்தான். அப்போதுதான், "இன்று குணம் பிறந்தநாள்......!" என்று பாலு சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. மெதுவாகச் சிரித்துக்கொண்டான் தனக்குள்.

விருந்தைத் தூணிலே சாய்ந்து நின்றபடி, அண்ணாந்து பார்த்தான். வானத்திலே வண்ண நிலவு நீந்திக் கொண்டிருந்தது. சுற்றிலும் ஒளி பாய்ச்சும் தாரகைகள் தளிர்மேனி காட்டி தவழ்ந்து கொண்டிருந்தன. கொஞ்சநேரம் வானத்தையே அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தான் அவனிடமிருந்து பெருமூச்சு ஓடிப் பாய்ந்தது வெளியே.

எவ்வளவு அழகாயிருக்கிறது இந்தக் காட்சி....! அழகு மட்டுமா, குளிர்ச்சியாக இருக்கும் இந்த வண்ண நிலவும், வானத் தாரகைகளும் எவ்வளவு ஆனந்தத்தைக் கொடுக்கின்றன...! சதாசிவத்தைப் போன்றவர்களின் வாழ்க்கை இந்த வானத்து நிலவுபோல ஆனந்தமாகவும், குளிர்ச்சியாகவும் இருக்கும்போது, அவர்கள் தங்களுடைய பிறந்த நாட்களையும் தங்கள் பிள்ளைகளுடைய பிறந்த நாட்களையும் கொண்டாடத்தானே செய்வார்கள்?......ஆனால்—எல்லோருடைய வாழ்க்கையும் குளிர் நிலவாகவா இருக்கிறது?—எத்தனையோ ஏழைமக்கள் தங்கள் பிறந்த நாளையோ, தம் மக்களுடைய பிறந்த நாளையோ நினைப்பதில்லை. ஞாபகம் வருவதுமில்லை.....! அன்

ருடம் சிவியம் நடத்துவதே பெரிய பிரச்சனையாக இருக்கிறது. அதற்காகப் போராடவேண்டியிருக்கிறது. அந்தப் போராட்டத்திலேயே நாள்முழுதும் கவனம் செலுத்தியிருப்பவர்களுக்கு, தாங்கள் பிறந்த நாள் எப்படி நினைவுக்குவரும்? நினைவுக்கு வந்தாலும் எப்படிக் கொண்டாடமுடியும்? விருந்து வேடிக்கை நடத்த வெள்ளிப் பணம் வேண்டாமா......? அவர்களிடம் அது இல்லை. எனவே, அவர்களைப் பொறுத்த அளவிலே பிறந்தநாள் என்பதேயில்லை! அதுமட்டுந்தானு, இன்னும் எத்தனையோ இன்பங்கள் அவர்களுக்கு இல்லை. ஆனால் சதாசிவத்தைப் போன்றவர்களுக்கு எல்லாம் இருக்கின்றன. இல்லாதார் ஏராளம். இருக்கிறவர்கள் கொஞ்சம்! சமுதாயத்திலே இருக்கும் இந்த ஓர வஞ்சனை, கொடுமை என்றுதான் ஒழியுமோ—"

'சிறிப்பாய்ந்த சிந்தனை வெள்ளத்திலே நீந்திக் கொண்டிருந்தான் நடராசன். வெளியே, அப்போதுதான் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய பாலுவைக்கூடக் கவனிக்கவில்லை நடராசன்.

"என்ன தீவிரமான யோசனை?"— என்று பாலுவிடமிருந்து பாய்ந்த கேள்விக்குப் பிறகுதான் தன்னுடைய சிந்தனை ஓட்டத்துக்கு 'ப்ரேக்' போட்டுவிட்டு, "நீயா....?" — என்றுன்.

"நானேதான்...! — என்று சொல்லிக்கொண்டே உள்ளே வந்தான் பாலு. "இன்றைக்கு எப்படி விருந்து...? இன்றையப்பொழுது ஒரே குதூகலமாகப் போயிருக்கும். இல்லையா பாலு......?" --என்று கேட்டுக்கொண்டே அவன் பின்னுல், வந்தான் நடராசன்.

பாலு கையிலிருந்த பார்சலை மேசையில் வைத்துவிட்டு, நடராசனைப் பார்த்துப் புன்னகைசெய்தான்.

"இதென்ன பார்சல்?"

"அங்கே கிடைத்த பரிசு!" —என்று சொல்லிவிட்டுத் தன்னுடைய ஆடைகளைக் களையத் தொடங்கினன்.

'பரிசா...! என்ன பரிசு...?" —ஆச்சரியமும், கேள்வியும் ஒன்ருகக் கட்டிப்புரண்டன நடராசனின் வார்த்தைகளில்.

"அவிழ்த்துத்தான் பாரேன்......!" என்று கூறிவிட்டு, சிகறற்றைப் பற்றவைத்தான் பாலு.

நடராசன் அவசர அவசரமாகப் பார்சலைப் பிரித்தான். நாலைந்து 'சூட்'டுகளுக்கும் 'கோட்'டுகளுக்கும் தேவையான அளவுக்கு விலை உயர்ந்த துணிகள் இருந்தன. அத்துடன் ஒரு 'கவ'ருமிருந்தது. அதைப் பிரித்துப் பார்த்தான். 150 ரூபாய் இருந்தது. நடராசன் ஆச்சர்யத்தால் அப்படியே அசந்துவிட்டான்.

சில நிமிடங்கள் சென்றதும், "பாலு, உனக்குச் சுக்ர தசை அடிக்குதடா?"—என்று கூவினன் நடராசன்.

"உனக்குத்தான் சுக்ரதசையிலும், தலையிலுள்ள சுழி எழுத்திலும் நம்பிக்கையில்லையே......!" —என்று சொல்லிக் கொண்டே பார்சலிலிருந்த துணிகளைக் கையிலெடுத்துப் பார்த்தான் பாலு.

"சுக்ரதசையென்ருல் தென்றல் என்று பொருள்! உன் வாழ்க்கையில் இப்போது தென்றல் வீசிக்கொண்டிருக்கிறது என்கிறேன்!......பாலு, சதாசிவத்தின் மக்களுடைய பிறந்த நாள் யாருக்காக வருகின்றன தெரியுமா? உனக்காகத்தான். இந்தப் பரிசும், பணம் 150 ரூபாயும் இதைத்தான் காட்டுகின்றன!" —என்ருன் குறும்புச் சிரிப்புடன்.

பாலுவுக்கு உள்ளூர மகிழ்ச்சியாகவிருந்தது. அதன் அடையாளம் அவன் முகத்திலே குழிபோட்டுக்காட்டியது. எனினும், ஒரு விதமான வெட்கத்துடன், "உன்னுடைய கேலியை இத்துடன் நிறுத்திக்கொள்!" என்ருன்.

நடராசன் மெல்லச் சிரித்துவிட்டு, " அதிருக்கட்டும். சதா சிவத்தின் பிள்ளைகள் படிப்பில் எப்படி?" என்றான்.

" நான் அவர்களுக்கு டியூஷன் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தபோது தமிழ் அரிச்சுவடிகூடத் தெரியாதவர்களாயிருந்தார்கள். தமிழ்ப் பாடங்களில் படுமோசம்! அவர்கள் மட்டுமல்ல 'மற்ற வீடுகளிலுள்ள பிள்ளைகளும் அப்படித்தான்' எல்லாம் ஒரே ஆங்கிலமயம். ஆனால் இப்போது, தமிழ்ப் பாடங்களைப் பொறுத்தவரை பரவாயில்லை என்று சொல்லலாம். ஆங்கிலப் பாடங்களில் குறை சொல்வதற்கு ஒன்றுமில்லை!"

பாலு இப்படிச் சொன்னதும் நடராசனின் அதரங்களில் வேதனைச் சிரிப்பு வெடித்துச் சிதறியது. " பாலு, அந்த வேதனை மிகுந்த விஷயத்தை நானும் நன்றாக அறிவேன். நமது சமூகத்திலேயிருக்கும் பெரிய மனிதர்களின் பெயர் மட்டும்தான் தமிழ். அவர்களுடைய உள்ளம் ஆங்கில மயம். நடையுடை பாவனைகள் அமெரிக்கமயம்! இந்த முறையிலே வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களின் பங்களாக்களிலே தமிழ் மணம் தவழாமலிருப்பதில் வியப்பென்ன? அவர்கள் வீட்டுப் பிள்ளைகள்கூட தம் பெற்றோரை அம்மா, ஐயா, என்று தேன் தமிழில் அழைக்கமாட்டார்கள்! அப்படியிருக்கிறது அவர்களுடைய நிலைமை. ஆனால், இந்தப் பெரிய மனிதர்களில் சிலர் சில கூட்டங்களிலும், சங்கங்களிலும் பேசுவதைக் கேட்கும்போதுதான் வேடிக்கையாயிருக்கிறது. தாங்கள்தான் தமிழ்ப் பண்பாட்டை வளர்க்க வந்தவர்கள், தமிழ் மொழியை வளர்க்கப் பிறந்தவர்கள், தமிழ்க் கலாச்சாரத்திற்கும், நாகரிகத்திற்குப் வளர்ப்புத் தந்தைகள் என்று கூச்சல்போடுகிறார்கள். பாலு, உண்மையில் நடைமுறையில் தமிழ் எங்கே வளர்கிறது தெரியுமா? தமிழ்ப் பண்பாடும் கலாச்சாரமும் எங்கே செழிப்புடன் இருக்கிறது தெரியுமா? ஏழைத் தமிழனின் இல்லத்திலே, அவனுடைய சிந்தனையிலே, அவனது வாழ்க்கையிலே! பெரிய மனிதர்களின் பங்களாக்களிலே அல்ல...! நிச்சயமாக அங்கு அல்ல!"

ஏதோ ஒருவித உணர்ச்சி வேகத்தில் பேசிக்கொண்டே போனான் நடராசன். பாலு அவனுடைய பேச்சைக் கேட்டுக்

கொண்டிருந்தவன், "உண்மைதான். ஆனால், நாம் என்ன செய்யமுடியும்?" என்றான்.

நடராசன் ஒன்றுமே சொல்லாமல் சற்றுநேரம் மௌனமாயிருந்தான். பிறகு, எதையோ நினைத்துக் கொண்டான்போல, "இது கிடக்கட்டும், ஏன் பாலு, உன்மீது சதாசிவம் நல்ல மதிப்பு வைத்திருக்கிறாரென்று சென்னாயல்லவா? அவரும் அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகத்திலிருக்கிறார். அவரிடமே சொல்லி உனக்கும் ஒருவேலையைத் தேடிக்கொள்ளலாமல்லவா? இந்த நல்ல சந்தர்ப்பத்தைப்பயன்படுத்திக்கொள்ளலாமல்லவா?" என்று கேட்டான் நடராசன்.

"நீ சொல்வது உண்மைதான். ஆனால் எனக்கு டியூஷன் சொல்லிக்கொடுக்கும் இந்த வேலைதான் பிடித்திருக்கிறது. தவிரவும் வருமானமும் ஓரளவுக்கு நல்ல முறையில் கிடைக்கிறது. இதை விட்டுவிட்டு அரசாங்க வேலையைத் தேடி ஏன் ஓடவேண்டும்?"

"இந்த டியூஷன் வேலை எத்தனை நாட்களுக்கு? அரசாங்க உத்தியோகம் நிரந்தரமானதல்லவா?"

"பாடம் சொல்லிக் கொடுப்பதையும் நிரந்தரமான தொழிலாக ஆக்கப்போகிறேன். இதில் எனக்கு ஒரு நம்பிக்கையுமிருக்கிறது!" என்று சொல்லிவிட்டுக் கால் முகம் அலம்புவதற்காகக் கீழே சென்றான்.

'அவனுடைய விருப்பத்தில் நான் ஏன் குறுக்கிடவேண்டும்' என்று தனக்குள் எண்ணமிட்டவாறே பரிசாகக் கிடைத்த துணிகளை திரும்பவும் கையிலெடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சதாசிவத்தின் வீட்டைப் பொறுத்தவரை பாலுவுக்கு இருக்கும் மதிப்பும், மனோன்மணிக்கும் அவனுக்குமுள்ள காதல் விவகாரமும் நடராசனுக்கு ஓரளவுக்குத் தெரியும். பாலு எல்லாவற்றையும் பச்சையாகச் சொல்லாவிட்டாலும் மேலோட்டமாகச் சொல்லியிருந்தான். தனக்கும் மனோன்மணிக்கும் உள்ள நட்பின் ஆழத்தையும், அதன் விளைவால் எழும் சம்பவங்களை

யும், உள்ளது உள்ளபடி சொல்லாமல் ஜாடையாகத்தான் சொல்கிருன் என்பதை நடராசனும் அறிதான். பாலு வெளிப் படையாகச் சொல்லாததையிட்டு அவன் வித்தியாசமாக நினைக் கவுமில்லை. இப்போது இந்தப் பரிசைக் கொடுக்கும்படி மனோன்மணிதான் தூண்டியிருப்பாள் என்று உணர்ந்து கொண் டான் நடராசன்.

சிறிது நேரத்திற்குள் கீழே சென்றிருந்த பாலுவும் வந்து விட்டான்.

"பாலு, இந்த செலக்ஷன் சதாசிவம் தம்பதிகளுடையதாக இருக்குமென்று நினைக்கின்ருயா ?" என்ருன் நடராசன் துணி களை விரித்தபடி.

"இருக்கலாம்".

"இல்லை. இது மனோன்மணியின் செலக்ஷன். உன் நிறத் துக்குப் பொருந்தக்கூடிய முறையில் துணிகள் எடுக்கப்பட்டிருக் கின்றன ! இவ்வளவு அக்கறையாக மனோன்மணிதான் எடுத் திருக்கமுடியும்...!" என்று சொல்லிவிட்டுக் கண்களைச் சிமிட்டி ஞன் நடராசன். பாலு அவன் அபிப்பிராயத்தை ஆட்சேபிக் காமல், "மனோன்மணிதான் இந்தப் பரிசைத் தெரிவுசெய்தாலும் அதிலே என்ன தப்பு?" என்று கேட்டான்.

"நான் தப்பென்று சொல்லவில்லை. ஆனால், இப்போது உனக்கு "அதிஷ்டம்" வந்திருப்பதையிட்டுத்தான் சொல் கிறேன் பாலு, சொர்ண விலாசம் உனக்குச் சொர்க்க வாழ் வைக் கொடுத்திருக்கிறது. பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக அவர்கள் தரும் எழுபத்தைந்து ரூபா காசையோ, பிறந்த நாளுக் காகக் கிடைக்கும் பரிசுகளைப் பற்றியோ நான சொல்லவில்லை. அது கிடக்குது போ...! ஆனல்... மனோன்மணி கிடைத்திருக் கிருள். இதுதான் முக்கிய விஷயம். அவள் உனக்கு ஒரு புதை யல். அந்தப் பூங்கொடியின் தொடர்பால் வரண்டிருந்த உன் வாழ்வுச் செடி இப்போது செழிப்புடன் வளர்ந்துகொண்டு வரு கிறது. இதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். அப்படித்

தானே?'' என்று ஒரு கேள்வியுடன் முடித்துவிட்டு அதரங்களில் ஒரு குறும்புச் சிரிப்பை நெளியவிட்டான்.

அதற்குப் பாலுவும், வார்த்தைகளால் அல்ல, புன்னகையால் பதில் சொன்னான்.

"பாலு, மனோன்மணியின் பிறந்த நாள் எப்போது வருகிறது?'' என்று திடீரென்று கேட்டான் நடராசன்.

"என்ன சங்கதி? கேள்வி ஒரு மாதிரியாக இருக்கிறதே?'

"மனோன்மணியின் பிறந்த நாளன்று உனக்கு எப்படிப்பட்ட பரிசு கிடைக்குமென்று கற்பனை செய்யத்தான்.''

"ஓகோ...! நன்றாகக் கற்பனை செய்! கெதியாய் வரப்போகிறது. உன்னைக்கூட அழைத்துக்கொண்டு போக எண்ணியிருக்கிறேன்.''

"வேண்டாமப்பா...! நான் வரவில்லை. பிறகு உனக்கு வில்லனாக வரவேண்டி நேரிடும். அந்தத் தொல்லை எதற்கு?'' என்று கூறி குறும்புப் புன்னகை செய்தான் நடராசன்.

"அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. வில்லன்களெல்லாம் கடைசியில் மண் கவ்வத்தானே செய்கிறார்கள். அதனால் பயமில்லை. நீ கட்டாயம் வரத்தான் வேண்டும்.''

"அப்போது பார்த்துக்கொள்வோம். இது கிடக்கட்டும். இந்தக் காசை என்ன செய்யப்போகிறாய்?''

"வீட்டுக்கு அனுப்பப்போகிறேன்.''

"அப்படியே செய். வீண் செலவு செய்துவிடாதே?''

பாலு புன்சிரிப்புடன் 'இல்லை' என்று தலையை ஆட்டினான்.

# 6

கடிதமும், காசும் அனுப்பியிருந்தான் பாலு. அதைப் படித்ததும் பரவசமானார் சபாபதி. "நாலைந்து பெரிய இடங்களில் பாடம் சொல்லிக்கொடுக்கிறேன். மாதம் இருநூறு ரூபாய்க்குமேல் கிடைக்கும்!" என்று எழுதியிருந்தான். வறுமையின் பழுவால் வேதனையுற்றிருந்த அவருடைய உள்ளம், இப்போதுதான் அந்தப் பாரத்தை இறக்கிவிட்டதைப் போன்று ஆறுதலடைந்தது. "இனி அவனைப்பற்றிக் கவலைப்பட அவசியமில்லை. கடவுள் இப்போதுதான் கண்களைத் திறந்திருக்கிறார்!" —என்று சுவரிலே மாட்டப்பட்டிருந்த பிள்ளையாரின் படத்தைப் பார்த்துத் தனது கரங்களைக் குவித்தார்.

பாலுவைப்பற்றிய கவலை இப்போது ஒழிந்துவிட்டதென்றாலும் மகள் தங்கத்தைப்பற்றிய சிந்தனை சபாபதியின் நெஞ்சை விட்டு அகலவேயில்லை. வாழைக்குருத்துப் போல் வளர்ந்து குமராகவிருக்கும் தங்கத்திற்கு யாரையாவது தேடவேண்டும். மாப்பிள்ளை தேடுவது என்ன சாதாரண வேலையா......? எவ்வளவோ பணம் வேண்டும். இதற்கு என்ன செய்வது?—என்ற கவலை அவருக்கு. தங்கத்தின் கழுத்தில் தாலி ஏறினால் அதுவே போதும். நிம்மதியாகச் சாவேன். பெருமானே நீதான் துணை— என்று பலமுறை மனசுக்குள் வேண்டிக்கொண்டார்.

ஒரு நாள் —

அப்போதுதான் பொழுது கருக்கூட்டிக்கொண்டிருந்தது. விளக்கு ஏற்றும் நேரமாகிவிட்டது. முற்றத்திலே கிடந்த கட்டிலில் உட்கார்ந்திருந்த சபாபதி, "தங்கம்! தங்கம்......!"—என்று கூப்பிட்டார். அவளிடமிருந்து பதிலேயில்லை. "இவள் எங்கே போனாள்?"—என்று முணுமுணுத்துவிட்டு, "பொன்னம்மா...! பொன்னம்மா...!" என்று உள்ளே குரல் கொடுத்தார். அவள் "என்ன......?" என்று கேட்டுக்கொண்டே முற்றத்திற்கு வந்தாள்.

"தங்கம் எங்கே?"

"கிணற்றுக்குப் போனாளே......!"

"இன்னமுமா அங்கு நின்றுகொண்டிருக்கிறாள்......? சரி, இருட்டிவிட்டது. விளக்கை வையேன்...?"—என்று சொல்லி விட்டு கைத்தடியை எடுத்துக்கொண்டு மெல்ல, மெல்ல நடந்த படி வேலி ஓரம் போனார். அவர் ஒண்ணுக்குப் போவது அந்த வேலி ஓரமாகத்தான். மாமரத்தை நெருங்கிவிட்டார். யாரோ பேசுவது கேட்டது. உற்றுக் கவனித்தார். அது தங்கத்தின் குரல். 'யாருடன் பேசுகிறாள்?'—என்ற கேள்வி உள்ளத்தில் எழுந்துநிற்கப் பேச்சுவந்த பக்கம் விழிகளைத் திருப்பினார். வெள்ளை வேஷ்டியும் சட்டையும் போட்டுக்கொண்டு யாரோ ஒருவர் தங்கத்திற்கு எதிரே நிற்பது தெரிந்தது. ஒன்றும் விளங்காமல் அங்கேயே நின்றுவிட்டார்.

மாமரத்தின் மறுபக்கம் சபாபதி நின்றுகொண்டிருப்பதைப் பூபதியும், தங்கமும் காணவில்லை. அவர்கள் அதிகமாகச் சந்திப்பதும், பேசுவதும் அந்த நேரத்தில்தான். யாருமே பார்க்காத நேரம்—சந்தேகம்கொள்ளாத நேரம் என்பது அவர்களது எண்ணம். வழக்கம்போல் அங்கே நின்று கதைத்துக்கொண்டிருந்தனர் பூபதியும் தங்கமும்.

"அண்ணன் காசு அனுப்பியது எனக்கு எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கிறது தெரியுமா தங்கம்?"

"எங்களுக்குமட்டும்......? அம்மா அந்தக் கடிதத்தை எத்தனை தடவை கண்ணில் ஒத்திக்கொண்டா தெரியுமா?"

"கடிதத்தில் வேறு என்ன எழுதியிருந்தான்?"

"தங்கச்சி விஷயத்தைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். சீக்கிரம் அதற்கு ஒரு வழிபண்ணுகிறேன்—என்று எழுதியிருக்கிறார். என்ன வழி என்றுதான் தெரியவில்லை! அது என்ன வழியாக இருந்தாலும் சரி, நான் ஒரு வழி தேடிவிட்டேன். அந்த வழிப்படி நடக்க யாரும் தடுத்தால், தண்ணீர் நிரம்பிய கிணறு இருக்கிறது!"

தங்கத்திடமிருந்து உணர்ச்சியுடன் உருண்டன சொற்கள். அவளுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்தான் பூபதி. இருட்டாக இருந்ததால் அவள் முகத்தில் ஓடிய உணர்ச்சிப் பாவங்களைப் பார்க்கமுடியவில்லை. ஒரு பெருமூச்சுத்தான் வந்தது பூபதியிடமிருந்து.

"இப்படியெல்லாம் சொல்லாதே தங்கம்"

"வேறு எப்படிச் சொல்லுவதாம்?"

பூபதி ஒன்றும் சொல்லாமல் நின்றுகொண்டிருந்தான்.

"அண்ணனுடைய எழுத்துக்களைக் கவனித்தால், என் மனம் என்னவோ பக்பக் என்று அடித்துக்கொள்கிறது. நமது ஆசைகள் நிறைவேருமல்தான் போகும்போலிருக்கிறது. என்ன செய்வது பூபதி......?"

இவ்வளவையும் சொல்லி முடிக்கு முன், அவளுடைய விழிகளில் கண்ணீர் கரைதட்டிவிட்டது. அவளது குரல் கரகரத்தது துக்கமிகுதியால்.

"வேளாளர் குலத்திலுள்ள நீ, என்னை மணக்க உன் அண்ணன் சம்மதித்தாலும், உன் ஐயா, அம்மா சம்மதிக்கமாட்டார்கள் என்பதில் சந்தேகமேயில்லை!"— இதைச் சொல்லும்போது, உள்ளத்தின் அடித்தளத்தில் குமுறி வெடித்த வேதனையால் அவனுடைய குரல் உடைந்திருந்தது.

"ஆம், பூபதி, என் மனமும் அப்படித்தான் சொல்கிறது. நான் செத்தாலும் அதை விரும்புவாரே தவிர, நமது கலியாணத்திற்கு ஐயா சம்மதிக்கவேமாட்டார்!"

இப்படி இருவரும், சுற்றிச் சுற்றித் தங்கள் காதல் நிறைவேறுமா, கலியாணம் நடக்குமா என்று குழம்பிக் கொண்டிருக்கும் தங்கள் உள்ளத்தின் எதிரொலியை ஒருவருக்கொருவர் காட்டிக் கொண்டிருந்தனர்.

சபாபதிக்கு இதற்குமேல் அங்கு நிற்கமுடியவில்லை. 'ஒண்ணுக்கு' இருப்பதைக்கூட மறந்துவிட்டார், அவருடைய உடம்பு புல்லரித்தது. ஒருவிதமான அருவருப்புணர்ச்சி உள்ளத்திலே பாய்ந்து உறைந்தது. வேகமாக நடப்பதுபோல் ஒரு பிரமையில் கட்டிலை நோக்கி வந்தார். ஆனால், அவரால் மெதுவாகத்தான் நடக்க முடிந்தது.

கட்டிலில் வந்து உட்கார்ந்தார். அவரது நெஞ்சில் ஒரு நெருப்புருண்டை கிடப்பதுபோல் இருந்தது அப்போதைய நிலை. "என்ன துணிச்சல்......! கழிசடை நாய்......! அந்தக் கீழ் சாதிப்பயல் பூபதியுடன் பேச இருட்டிலே......! சீ, கழுதை! கலியாணம் செய்யப்போகிறாளாம்...... கோடரிக் காம்பு...... குலத்துக்கே கொள்ளி வைக்கப்போகிறாளாம். சபாபதியின் மகள் சாதியில் தாழ்ந்தவனைக் காதலிக்கிறாளாம்......! இந்தப் பேச்சு நாலுக்கு வெளியே வந்தால்......ஐயோ...! பெருமானே இது என்ன சோதனையோ தெரியவில்லையே......!"

சபாபதியிடம் உறங்கிக் கிடந்த வைதீக உணர்ச்சி வாலைச் சுழற்றிக்கொண்டு எழுந்து சபாபதியின் நெஞ்சைக் கொதிக்க வைத்து, இவ்வாறு எண்ணமிடச்செய்தது.

கொஞ்சநேரம் சென்றிருக்கும். தங்கம் அவரைக் கடந்து வீட்டுக்குள் நுழைந்தாள். அவளை ஒரு பார்வை பார்த்தார் சபாபதி. அந்தப் பார்வையில் கனல் பறந்தது. ஆத்திரம் தாங்க முடியவில்லை. உதடுகளைக் கடித்துக் கொண்டார்,

'இந்தத் தங்கம் எனக்குப் பங்கத்தைத் தேடித்தந்து விடுவாள் போலிருக்கிறதே! இதற்குத்தானா இவ்வளவு அருமை பெருமையாக வளர்த்தேன். இந்த நாளைப் பொடிச்சிகளுக்குக் காதலல்லவோ தேவையாக இருக்கிறது......! படிப்பின் லட்சணம்...! இவள் படித்த படிப்பின் இலட்சணம். இவளைக் குற்றம் சொல்லி என்ன பயன். என்னைச் சொல்லவேண்டும். எல்லை வேலியை அடைந்திருக்கவேண்டும். படிப்பும் வேண்டாம், ஒரு அறுப்பும் வேண்டாம். நான் முடங்கிக் கிடக்கிறேன்

பார், அதுபோல நீயும் மூலையிலே முடங்கிக்கிட...! — என்று சொல்லியிருக்கவேண்டும்! இந்தத் தறுதலைத் தங்கம், இப்படித் தரங்கெட்ட முறையில் நடப்பாள் என்று யாருக்குத் தெரியும்? இனி இவளை இப்படி வைத்திருக்கக்கூடாது. கெதியிலே யாரை யாவது பிடித்து இவள் கழுத்தில் தாலியைக் கட்டவைக்க வேண்டியதுதான். அப்போதுதான் என் மானம் பிழைக்கும்.

சபாபதியின் இதயக் கடலிலே எண்ண அலைகள் ஒன்றுடன் ஒன்று கட்டிப் புரண்டுகொண்டிருந்தன. அவரது உள்ளத்தில் புயல் வீசிக்கொண்டிருந்தது. நேரம்போவது தெரியாமல் எதை எதையோ சிந்தித்துக்கொண்டிருந்தார்.

* * *

அன்று பாலுவுக்குக் கடிதம் வந்தது. அவனுடைய ஐயா தான் அதை எழுதியிருந்தார். தங்கத்தை இனியும் இப்படி வைத்திருக்கக் கூடாது. விரைவில் அவன் விஷயத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். எதற்கும் ஒரு முறை இங்கு வந்துவிட்டுப் போ"— என்று கூறிற்று அந்தக் கடிதம். எப்போதும் தங்கம்தான் கடிதம் எழுதுவது வழக்கம் ஆனால் அன்று வந்த கடிதம் தங்கம் எழுதியதாகத் தெரியவில்லை. அவளுக்கு ஏதும் சுகயீனமோ என்று நினைத்தான்.

வீட்டிலிருந்து வந்த அந்தக் கடிதத்தைப் படித்ததிலிருந்து அன்று முழுதும் பாலுவின் மனம் அமைதியற்று அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தது. சொர்ணவிலாசத்துக்குப் போன சமயம் அங்கு மனேன்மணியுடன் கூடக் கலகலப்பாகப் பேசவில்லை. சீக்கிரமாக அங்கிருந்து திரும்பிவிட்டான்.

அன்றிரவு முழுதும் அவனுக்கு நித்திரையே வரவில்லை. தங்கத்துக்குக் கலியாணம் நடக்கவேண்டுமானல் ஆயிரக்கணக்கான ரூபா வேண்டும். தக்க மாப்பிள்ளை எடுப்பதாயிருந்தால் ஏராளமான சீதனம் கொடுக்கவேண்டியிருக்கும். இதற்கு எங்கே போவது— என்று சிந்தித்தான்.

சமீப நாட்களாக, தங்கத்திற்குச் சீக்கிரம் கலியாணம் செய்து வைத்துவிட வேண்டுமென்ற துடிப்பு வழக்கத்தை விட அதிகமாகிக் கொண்டுவந்தது பாலுவுக்கு. இதற்குக் காரணம், அவன் எத்தனை நாட்களுக்கு வீட்டிலிருக்க முடியுமென்பதல்ல; மனோன்மணியைக் கலியாணம் செய்யவேண்டுமானல், முதலில் தங்கத்துக்குத் திருமணம் நடக்கவேண்டும். அதன் பிறகுதான், தான் கல்யாணம் செய்துகொள்ள முடியும். இல்லாவிட்டால், ஐயாவும், அம்மாவும் சம்மதிக்க மாட்டார்கள். தவிரவும், உலகமும் பேசும்—என்பதுதான்.

மனோன்மணிக்கும் தனக்குமுள்ள காதல் கலியாணத்தில் வந்து முடியுமென்பதில் அவனுக்கு அசையாத நம்பிக்கை. சதாசிவம் தம்பதிகள் சம்மதிப்பார்களா, அவர்களுடைய மனப்போக்கும், மனோன்மணியின் மனப்போக்கும், குணங்களும் ஒத்துவருமா என்றெல்லாம் அவன் சிந்திக்கவில்லை. மனோன்மணியின் அழகிலே கொண்டுள்ள மையல், அவளுடைய நாகரிகவளர்ச்சியிலே கட்டுண்ட மனம், அவளுடைய இனிமையான பேச்சிலே சொக்கிப்போன உணர்வு—இவையெல்லாம் மற்ற விஷயங்களை எடைபோட்டுப் பார்க்க - சீர்தூக்கிப் பார்க்க, சிந்திக்க மறுத்துவிட்டன, எந்தப் பிரச்னையையும் ஆழ்ந்து சிந்திக்கும் சுபாவமுடைய பாலு இப்போது வீட்டிலைச் சுற்றியோடும் வண்டின் அவசர குணத்துக்கு மட்டுந்தான் சொந்தக்காரனுக விருந்தான். காதல் என்பது ஒரு குடிவகையைப் போன்றது, குடிக்கக் குடிக்கப் போதை ஏறும். சிந்திக்கும் உணர்வு அந்தப் போதையிலே அழுந்தி முடங்கிவிடும். அவ்வித நிலையிலே தன்னைச் சுற்றி நடக்கும் எதையும் ஒருவனுல் உணரமுடியாது. அதைப்பற்றிச் சிந்திக்கவும் முடியாது. காதலும் அப்படித்தான் அந்தக்காதல் முற்ற முற்ற--அதன் வேகம் வளர, வளர ஒருவித போதை நிலைதான் உண்டாகும். அந்தக் காதல் போதையிலே சிந்திக்கும் உணர்வு முடங்கிவிடும்.

இப்போது பாலுவின் எண்ணமெல்லாம் தங்கத்துக்கு எப்படியாவது திருமணத்தை நடத்திவிட்டு தன்னுடைய கலியா

ணத்திற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதுதான். இந்த எண்ணம் அவனுடைய இதயத்தில் அழுத்தமாக இடங்கொண்டதற்குக் காரணம் மனோன்மணி கோல்பேஸில் சொன்ன வாசகங்கள்தான்.

திருமணம் சம்பந்தமாக இப்படி அவனுடைய மூளை வேகமாக வேலை செய்யும்போது நித்திரை எப்படி வரும்?

மறுநாட் காலையில் பாலு எழுந்திருக்கும்போது எட்டு மணிக்கு மேலாகி விட்டது. நடராசன் காலைக் கடன்களை முடித்துவிட்டு வேலைக்குப் போகத் தயாராருந்தான். பாலு நேரம் சென்று எழுந்ததைக் கண்டதும். "இராத்திரி நீ நித்திரை கொள்ள வெகு நேரம் சென்றதோ?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்று தன்னுடைய தலையை ஆட்டினன் பாலு.

"மனோன்மணியைப் பற்றிய சிந்தனையாக்கும்?" என்று கேலியாகக் கேட்டான் நடராசன்.

"உனக்கு ஒரே கேலிதான். ஐயா என்ன எழுதியிருக்கிருர் என்று பார்!" என்று சலிப்புடன் கூறிக்கொண்டே கடிதத்தைக் கொடுத்தான் பாலு.

நடராசன் அதை வாங்கிப் படித்துவிட்டு ஒரு பெருமூச்சுடன் அதைப் பாலுவிடம் கொடுத்தான். பாலு அதை வாங்கிக்கொண்டே "நித்திரை வராததற்கு இந்தக் கடிதம் தான் காரணம். தங்கச்சியின் கலியாணம் நடக்க வேண்டும். ஆனல் பணத்துக்கு எங்கே போவது? சீதனம், பாதனம், கலியாணச்செலவு என்று ஏராளமாக வேண்டும். எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை!" என்று வருத்தத்துடன் கூறி நீண்டபெருமூச்சு விட்டான்.

"கடைசியாக நீ என்ன முடிவுக்கு வந்திருக்கிருய்?"

"அதுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

"பாலு ! நீ மட்டுமல்ல, உன்னைப்போன்று எத்தனையோ பேர் யோசித்துக் கொண்டுதானிருக்கிறார்கள். பணம் படைத்தவர்கள் சீதனத்தைப்பற்றிச் சிந்திக்கமாட்டார்கள். அவர்களுக்கு எல்லாவசதிகளும் இருக்கின்றன. ஆனால், நம்மைப் போன்றவர்களுக்கு ஒரு வசதியுமில்லை. சீதனம் கொடுக்க வசதியில்லாததால் எத்தனையோ வஞ்சிக்கொடிகள் வாட்டமுற்றுக் கிடக்கிறார்கள். நமது சமூகத்திலே எத்தனையோ சாபத்திடுகள் இருக்கின்றன. அவற்றிலே ஒன்று இந்தச் சீதன வழக்கம். பருவச்சிறையிலே சிக்கிச் கண்ணீர் வடிக்கும் எத்தனையோ காரிகையரைப்பற்றிப் 'பெரிய மனிதர்கள்' என்று பட்டம் தாங்கிக் கொண்டிருக்கிறார்களே நமது சமூகத்திலே பலர்—அவர்கள் இந்தக் கொடிய சீதனவழக்கத்தைச் சமூகத்திலிருந்து விரட்டியடிக்க ஏதாவது முயற்சி செய்தார்களா? சீதனம்! இது கோதையரின் வாழ்க்கையைக் குலைக்கும் கொலைகாரத் திட்டம். எனக்கு ஒரு தங்கையிருந்தால் சீதனம் விரும்பாத ஒருவனுக்கு—அவன் எந்தச் சாதியாயிருந்தாலும் சரி, அவனுக்குத் தான் கலியாணம் செய்து வைப்பேன். இவ்விதம் செய்வதன் மூலமாகச் சமூகத்திலே சதிராடும் இந்தச் சதிகாரத் திட்டங்களுக்குச் சமாதிகட்ட முயற்சிப்பேன்!"

இப்படி ஆவேசமாகப் பேசிக் கொண்டுபோன நடராசன் இத்துடன் நிறுத்துவிட்டு மணியைப் பார்த்தான். மணி எட்டே முக்காலாயிருந்தது "பாலு எனக்கு நேரமாகிவிட்டது. நான் போகிறேன். பிறகு பேசிக்கொள்வோம்!" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

நடராசன் சொன்னதையெல்லாம் சிறிது நேரம் சிந்தித்துப் பார்த்தான் பாலு. அவனுக்கு அது சரியென்று தோன்றிற்று. என்றாலும் இப்போது இவ்வாறு செய்யக்கூடிய சூழ்நிலையில்லையே?—என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். நடரா

சனின் கருத்தும் அவனுடைய மனதில் இடம்பெறுமல், வேறு யோசனைகள் அவன் உள்ளத்தில் புகுந்து குடையத் துவங்கிவிட்டன.

"எதற்கும் ஒரு தடவை வீட்டுக்குப் போய்வருவோம். ஐயா, அம்மாவிடம் யோசித்து யாரையாவது ஒரு மாப்பிள்ளையைத் தேடும்படி அவர்களிடம் சொல்லுவோம். சீதனம்—செலவு எல்லாம் எவ்வளவு வரும் என்று அவர்களுடன் கலந்து யோசித்து ஒரு முடிவுக்கு வந்து, அதன் பிறகு, அந்தத் தொகைக் காசுக்கு என்ன செய்வதென்று சிந்திப்போம். ஆம். இதுதான் சரி. யாழ்ப்பாணம் கிளம்பவேண்டியதுதான்!"

இவ்விதமான எண்ண அலைகளில் மிதந்துகொண்டிருந்தான் பாலு.

# 7

வீட்டு விருந்தையில் கிடந்த கட்டிலில் அமர்ந்திருந்தார் சபாபதி. அவருடைய முகம் கடுகடுப்பாயிருந்தது. தலையில் கையை வைத்துக்கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள் அவருடைய மனைவி பொன்னம்மா. அவளது முகம் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருந்த துயரமான நினைவுகளைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. பாலு ஒரு கன்னத்தில் கையை ஊன்றிய வண்ணம் விருந்தை வாசலில் அமர்ந்திருந்தான். அவன் விழிகள் முற்றத்திலேயிருந்த அந்த மாமரத்தின்மேல் பதிந்திருந்தன. அவனது முகம் வெளுத்திருந்தது.

பாலு கொழும்பிலிருந்து வந்த உடனேயே தங்கத்துக்கும் பூபதிக்குமுள்ள காதலையும், தான் நேரில்கண்ட விஷயத்தையும் சொல்லிவிட்டார் சபாபதி. இந்த விஷயங்களையெல்லாம் பாலு அறிந்தால் கவலைப்படுவானாதலால் இதைப்பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லக்கூடாது என்று எண்ணியிருந்தார் சபாபதி. ஆனால், ஆத்திரத்தால் குமுறிக்கொண்டிருந்த தன் உள்ளத்தை அவரால் அடக்கமுடியவில்லை. உண்மையைச் சொல்லிவிட்டார். அத்துடன் அவர் நிறுத்திக்கொள்ளவில்லை. "நீதான் சொன்னாய் படிக்கவையுங்கள் ஐயா, படிக்கவையுங்கள் ஐயா என்று உன் தங்கச்சி செய்த காரியத்தைப் பார்த்தியே? நாளைக்குப் பெரியவர்களின் முகத்தில் எப்படியடா முழிக்கிறது? படித்த படிப்பு கீழ்சாதிப் பயல்களோடெல்லாம் காதல் கொள்ளச் சொல்லுதோ என்று கேட்பான்களே...? ஏன்டா நீதான் சொல்லு!"— என்று இரைந்தார்.

அதுவரை மௌனமாகச் சிந்தனைக் குளத்தில் சுழியோடிக் கொண்டிருந்த பாலு, தந்தையின் பக்கம் பார்வையைத் திருப்பி, "ஏன் ஐயா படிப்பைக் குறை சொல்கிறீர்கள்?" என்றான்.

"ஆமாம். அது என்ன செய்யும்! உன் அம்மாவைச் சொல்லவேணும். இவளாவது கட்டுமானம்பண்ணி வைச்சி

ருக்கவேண்டும். சினிமாவும் கினிமாவும் பார்த்து விட்டுக் காதல் கீதல் என்று சொல்லித் திரியுதுகளே சில குமரிகள், அந்தத் தறுதலைகளைப் போலத்தான் உன் தங்கச்சியும் சொல்கிருள். இதுக்கு இடம் வைத்தது யாரு சொல்லு பார்ப்போம், உன் அம்மாதான்!'' என்று கத்தினுர் சபாபதி.

அதுவரை ஒன்றும் பேசாமலிருந்த பொன்னம்மாவுக்கு அதற்குமேல் பொறுக்க முடியவில்லை. அழுகையும் சலிப்பும் ஒன்ருக வந்தன. எனினும் அடக்கிக்கொண்டு, ''என்னை ஏன் இழுக்கிறியள்? நாஞ இபபடியெல்லாம் நடக்கும்படி சொல்லிக் கொடுத்தேன்? அப்படித்தான் அவள் பூபதியுடன் கதைத் ததைக் கண்டால், அவளைக் கூப்பிட்டுப் புத்திமதியைச் சொல்றதுதானே? இப்படி எல்லாரையும் சத்தம்போட்டுத் திட்டிக் கொண்டிருந்தால்...? என்று சொல்லி நிறுத்திவிட்டுக் கண் களைக் கசக்கிஞள்.

பொன்னம்மா இப்படிச் சொன்னதுதான் தாமதம். சபாபதி எகிறிக் குதிக்கத் தொடங்கி விட்டார். ஒரு சிறுகுற்றம் —தவறு—நடந்தாலும் அதைப் பெரிதாக்கிச் சத்தம் போடும் சுபாவமுள்ளவர் சபாபதி. முன் கோபக்காரர். அந்தக் கோபமும் உச்சிக்கு ஏறிவிட்டால் அவருடைய வாயிலிருந்து என்ன என்ன வார்த்தைகள் வருமென்பது அவருக்கே தெரியாது. பொன்னம்மாவுக்கு 'அர்ச்சனை' விழத் தொடங்கியது.

தந்தையின் சுபாவத்தைப் பாலு நன்ருக அறிவான். ஆகையால் அவன் ஒன்றும் சொல்லாமல் எழுந்துபோய் முற்றத்தில் நின்றிருந்த மாமரத்தில் சாய்ந்து கொண்டு நின்ருன். உள்ளே சபாபதிக்கும் பொன்னம்மாவுக்கும் 'வாய்ச்சண்டை' நடக்கத் தொடங்கியது. இவர்கள் இருவரும் போட்ட சத்தம் அந்த வளவைத் தாண்டி, அடுத்த வளவுக்காரர்களையெல்லாம் காதைத் தீட்டிக்கொண்டு கேட்க வைத்தது.

ஆழ்ந்த சிந்தனையில் லயித்தவண்ணம் பின் வளவிலிருந்த தங்கம் இந்தச் சத்தத்தைக் கேட்டு உள்ளே ஓடி வந்தாள்.

அவளைக் கண்டதும் பொன்னம்மாவுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. "உன்னாலேதானடி இந்த வம்பெல்லாம்?" என்று கூறிக்கொண்டே அருகில் கிடந்த விறகுக் கொள்ளியால் தங்கத்தின் தலையில் 'ஒன்றை'ப் போட்டாள். அவள் "ஐயோ...!" என்று அலறிக்கொண்டே தரையில் விழுந்தாள். தொடர்ந்து ஒரே கூச்சலும், சத்தமும் கூரையைப் பிய்க்கத் தொடங்கின. அக்கம் பக்கத்திலுள்ளவர்களெல்லாம் சபாபதி வளவுக்குள் கூடிவிட்டனர். ஆனால், பாலு மட்டும் அந்த மாமரத்திலேயே சாய்ந்துகொண்டு நின்றான். அவனுடைய உள்ளத்திலே ஒரே எண்ணப் புயல்!

அடிபட்டு விழுந்த தங்கத்தின் நெற்றிப் பொட்டிலிருந்து இரத்தம் ஒழுகத் தொடங்கியது. ஆனால், காயம் பெரிதல்ல. தங்கம் இரத்தத்தையோ, காயத்தையோ பொருட்படுத்தவில்லை. சடேரென்று எழுந்து குசினிக்குப் பின்னாலிருந்த தாழ்வாரத்தின் பக்கம் சென்று அழுதுகொண்டிருந்தாள்.

சபாபதியும், பொன்னம்மாவும் தங்கள் வாயினால் கொட்டிய சூடான சொற்களால் வளவுக்குள் கூடி நின்ற அயல்வீட்டுக்காரர்கள் ஓரளவுக்கு விஷயத்தை விளங்கிக் கொண்டனர். அவர்களுக்கு இந்த விவகாரம் ஆத்திரத்தைக் கிளப்பிற்று. ஒவ்வொருவரும் தங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டனர். தங்கத்தை ஏசினர்; திட்டினர்; சபாபதியின் எண்ணங்களை எதிரொலித்தனர்.

இதையெல்லாம் கவனித்துக்கொண்டு தெருப்படலையில் நின்றிருந்தான் சண்டியன் மணியம். அவன் சபாபதியின் வீட்டுக்கு எதிரிலிருப்பவன். நன்றாகக் குடிப்பான். மற்றவர்களை வலிய வம்புக்கு இழுத்துச் சண்டை பிடிப்பான். அவனுடைய பொல்லாப்புகள் அப்பகுதியில் பிரசித்தம். எனவே, அவனை எல்லோரும் வெறுத்தனர்; பகைத்தனர். ஒருநாள் தன் சுபாவப்படி ஒருவருடன் சண்டை பிடித்து மண்டையையும் உடைத்துவிட்டான். இதைப் பூபதி நேரிலே பார்த்துவிட்டான். மண்டை உடைபட்டவர் மணியத்தின் மேல் வழக்கு வைத்துவிட்டார். அந்த வழக்கில் பூபதி, மணியத்திற்கு எதிராகச் சாட்சியம் சொல்லவேண்டி

வந்துவிட்டது. பூபதியின் சாட்சியத்தால் மணியம் மூன்று மாதங்கள் மறியலுக்குப் போகவேண்டி ஏற்பட்டுவிட்டது. அன்றிலிருந்து பூபதியைத் தன் முதல் எதிரியென்று தீர்மானித்துவிட்டான் மணியம். "மறியலிலிருந்து வெளியே போனதும் அவனை ஒரு கை பார்க்கிறேன்" என்று தனக்குள் சபதம் செய்துகொண்டான். வெளியே வந்ததும் பூபதியைப் பழிவாங்கத் தருணம் பார்த்துக்கொண்டிருந்தான். அந்தச் சந்தர்ப்பம் இதுவரை கிடைக்கவில்லை.

படலையடியில் நின்று கவனித்துக்கொண்டிருந்த மணியத்தின் மூளை தீவிரமாக வேலை செய்தது. வளவுக்குள் நின்றுகொண்டிருந்த அனைவரது அபிப்பிராயமும் பூபதிக்கு மாறாக உருவாகிய நிலை, அவனுக்குச் சாதகமாயிருந்தது. உடனே வாயில் புகைந்துகொண்டிருந்த சிகரட்டை ஒரு இழுப்பு இழுத்து அதை விசியெறிந்துவிட்டு பிய்ந்திருந்த எல்லை வேலியால் பூபதியின் வளவுக்குள் வேகமாகப் போனான் மணியம்.

வேதனையென்ற ஈட்டி இதயத்திலே சொருகியிருக்க, கவலைக் குறி முகத்திலே விளையாட, சபாபதியின் வீட்டிலே நடந்துகொண்டிருந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த பூபதி, மணியம் வந்ததைக் கவனிக்கவில்லை.

"டேய்...!" என்று மணியத்தின் குரல் கொடூரமாய் முழங்கிநின்றது. சடேரென்று திரும்பினான் பூபதி. அதே விநாடி மணியத்தின் கை பூபதியின் கன்னத்தில் பதிந்து 'பளார்' என்ற சப்தத்தைக் கிளப்பிற்று. எதிர்பாராதவிதமாகக் கன்னத்தில் விழுந்த பலத்த அறையினால் பொறி கலங்கிப் போனான் பூபதி. ஸ்தம்பித்து, சிலைபோல் நின்றுவிட்டான். ஆனால், மணியம் அத்துடன் நின்றுவிடவில்லை. அவனை இழுத்து வேலி ஓரம் கொண்டு வந்தான். இதற்குள் சபாபதியின் வளவுக்குள் நின்றவர்களும் தங்கள் பார்வையை வேலிப் பக்கம் பாயவிட்டனர். மணியம் பூபதியைக் காலாலும், கையாலும் அடிக்கத் தொடங்கினான். மற்றவர்களும், "விடாதே மணியம்! இந்தக் கீழ்சாதிப் பயல்களுக்கு புத்தி கற்பிக்கவேண்டும். அப்போதுதான் ஒழுங்

காக நடப்பான்கள். தங்களுடைய நிலைமையை உணராமல் கொம்பு முளைச்சவன்களைப்போல் நடக்கிறான்கள். இவங்களுக்கு எவ்வளவு தைரியம்!" என்று கூறி மணியத்திற்கு உற்சாக மூட்டினர். கேட்கவாவேண்டும்? மணியம் தன் கை வரிசையைக் காட்டிக் கொண்டிருந்தான். இன்னும் இரண்டொருவர் மணியத்துடன் சேர்ந்து தாக்கினார்கள். பூபதி எதிர்த்துத் தாக்கவில்லை. தன்மேல் அடுக்கடுக்காக விழும் அடிகளையும், உதைகளையும் வாங்கிக்கொண்டு சிரித்தான்! சிரித்துக்கொண்டேயிருந்தான்! ஆனால், தாய்மை உணர்ச்சியால் உந்தப்பட்ட அவன் அன்னை, "ஐயோ... என் மகனைக் கொல்கிறானே...! பார்த்துக்கொண்டு நிற்கிறீர்களே, அடிக்கிறானே...!" என்று அலறிக்கொண்டு வந்தவள் தலையிலடித்துக்கொண்டு ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள். அந்த ஏழைத் தாயின் பரிதாப ஓலம் இரும்பாகியிருந்த அந்த மனிதர்களின் இதயத்தை இளக வைக்கவில்லை!

மாமரத்தின்மேல் சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்த பாலு, இந்தக் காட்சியைக் கண்டு உணர்ச்சியற்ற கற்சிலைபோலாகிவிட்டான்.

சபாபதி மெல்ல, மெல்ல முற்றத்திற்கு வந்தார். "மணியம் அவனை விட்டுவிடு, போதும்! விட்டுவிடு!" என்று கத்தினார். பொன்னம்மாவோ ஒன்றும் செய்யமுடியாதவளாக நின்றுகொண்டிருந்தாள். அவளுடைய விழிகளிலிருந்து கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது!

இந்தக் கலவரத்தைக் கேட்டுக் குசினியின் பக்கமுள்ள தாழ்வாரத்தண்டை அழுதுகொண்டிருந்த தங்கம் முன் விறாந்தைக்கு ஓடிவந்தாள். தன் அன்புக்குரியவன் தாறுமாறாகத் தாக்கப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டதும், நிலை கலங்கி விறாந்தையின் கதவண்டை அப்படியே நின்றுவிட்டாள். பூபதியின் மேல் விழும் அடிகளும் குத்தும் தன்மேல் விழுவதுபோலிருந்தது. விழிகள் குளமாகிக் கண்ணீரைப் பாய்ச்சத் தொடங்கியது.

பெண்களுடைய மனம் மெழுகைப்போன்றது. இம்மாதிரியான நெருப்பைப் போன்ற சம்பவத்தைக் கண்டால் அது உருகிக் கண்ணீராகி வழிந்தோடும் என்பதை எடுத்துக் கூறியது அந்தக் கண்ணீர்.

தங்கத்துக்கு அக்காட்சியைப் பார்த்துக் கொண்டு நிற்க முடியவில்லை. உள்ளே ஓடினாள். அங்கே ஒரு மேசை கிடந்தது. அந்த மேசையின் மேல் கத்தி, மண்ணெண்ணைப் போத்தல், முதலிய இன்னும் பல சாமான்களும் கிடந்தன. மேசைக்குக் கீழே கயிறும் பாம்பைப் போன்று சுருண்டு கிடந்தது. தங்கம் அந்த மேசையின் முன்னால் நின்றுகொண்டு கத்தி, கயிறு, மண்ணெண்ணை—இந்த மூன்றையும் மாறிமாறிப் பார்த்தாள், சில நிமிடங்கள். அவளுடைய சிந்தனை இந்த மூன்று பொருட்களையும் சுற்றிச் சுழன்றது வேகமாக. 'பூபதியை அடித்துக் கொன்றுவிடுவார்கள்; என் மானமும் போய்விட்டது! இனி நான் ஏன் இருக்கவேண்டும்?...... சாகவேண்டியதுதான்...!' என்ற எண்ணங்கள் எழுந்துகொண்டிருந்தன.

தற்கொலையெண்ணம் தலையெடுத்ததும் தங்கத்தின் முகத்தில் ஒரு தெளிவு உண்டாயிற்று. உள்ளத்தில் உரம் ஏறிற்று. கத்தி, கயிறு, மண்ணெண்ணை — இவைகளில் எது நல்லது என்று சில நிமிடங்கள் பரிசீலனைபண்ணிக்கொண்டிருந்தாள், கயிறுதான் நல்லதென்ற முடிவுக்கு வந்ததும், அதை எடுத்துக் கொண்டு மேசையின் மேல் ஏறி வளையின் மேல் கயிற்றைப் போட்டாள்.

மாமரத்தடியில் கற்சிலைபோல் நின்றுகொண்டிருந்த பாலு, தங்கம் விருந்தைக் கதவில் வந்துநின்றது, அவளது விழிகளில் கண்ணீர் வழிந்தது, திரும்பி வேகமாக உள்ளே போனது— எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தான். அவனது உள்ளத்தில் ஒரு சந்தேகம் முளைவிட்டது. உடனே வீட்டுக்குள் நுழைந்தான். அப்போதுதான் கயிற்றில் சுருக்குப் போட்டுக்கொண்டு நின்ருள் தங்கம், தன் மனதில் எழுந்த சந்தேகத்தின்படியே தங்கை தற்கொலை செய்யத் தயாராகிக்

கொண்டிருப்பதைக் கண்டதும், அவன் மனம் 'திக்' என்றது. "தங்கம்! என்னவேலை இது!" என்று தன்னையுமறியாமல் கத்தினான் பாலு.

"அண்ணா! நீங்கள் போய்விடுங்கள்...! நீங்கள் போய் விடுங்கள்...! என்னைத் தடுக்கவேண்டாம். போய்விடுங்கள்...!" என்று ஆவேசமாகக் கத்தினாள் தங்கம்.

பாலு அதைக் காதில் வாங்கவில்லை, உடனே மேசையின் மேல் குதித்தேறி வளையில் மாட்டப்பட்டிருந்த கயிற்றைப் பிடித்துக்கொண்டு தங்கத்தைக் கீழே தள்ளிவிட்டான். அவள் கால் இடறிக் கீழே விழுந்தாள். பாலு கயிற்றை எடுத்து ஒரு மூலையில் வீசியெறிந்துவிட்டு, "என்ன முட்டாள்தனமான காரியம் செய்யத்துணிந்தாய்?" என்றான்.

தங்கத்துக்கு வார்த்தைகள் வரவில்லை. அழுகைதான் பொத்துக்கொண்டு வந்தது. விரல்களால் முகத்தை மூடிக் கொண்டு, கேவிக்கேவி அழத்தொடங்கினாள். அவள் அழுவதைக் கண்டதும் தன்னுடைய இதயத்தை வாள்கொண்டு அறுப்பதுபோலிருந்தது பாலுவுக்கு.

"தங்கம்......! அழாதே தங்கம்......! என்னைச் சித்திர வதை செய்யவேண்டாம் தங்கம்!" என்று தழதழத்த குரலில் கெஞ்சினான் பாலு.

தங்கத்திடமிருந்து விக்கல்தான் விடையாக வந்துகொண் டிருந்தது. பாலுவுக்கு அங்கே நிற்கமுடியவில்லை. வெளியே வந்துவிட்டான்.

வளவு முற்றத்துக்குள்ளே நின்றுகொண்டிருந்தவர்கள் எல் லோரும் போய்விட்டார்கள். அடுத்த வீட்டிலிருந்து, 'ஐயோ ......! என் மகனைக் கொன்றுவிட்டீர்களே......! இந்த அநி யாயம் அடுக்குமா......!' என்று ஒப்பாரி வைத்துக்கொண் டிருந்தாள் பூபதியின் அம்மா. தாய்மையின் அந்தச் சோகக்

கதறல் பாலுவின் நெஞ்சை ஊடுருவித் தாக்கித் துடிதுடிக்க வைத்தது. தன்னை அறியாமலே பூபதியின் வளவுக்குள் வேகமாகச் சென்றான்.

வளவின் முற்றத்திலே பேச்சுமூச்சற்று மரக்கட்டைபோலக் கிடந்தான் பூபதி. அவனுடைய முகம் வீங்கியிருந்தது. உடம்பெங்கும் கீறல்களும், சிறுசிறு காயங்களும் நிறைந்துகிடந்தன. நெற்றி புடைத்துப்போயிருந்தது. பாலுவால் அதைப் பார்த்துக்கொண்டு நிற்கமுடியவில்லை. வெளியே ஓடினான். கொஞ்ச நேரத்துக்குள் ஒரு காருடன் வந்தான். பூபதியை அதில் ஏற்றிக்கொண்டு வேகமாக ஆஸ்பத்திரிக்குச் சென்றான்.

பாலு திரும்பி வீட்டுக்கு வரும்போது இருட்டாகி விட்டது. தங்கையைப் பார்த்தான். அழுது அழுது அவள் முகம் ஊதிய பலூன்போல் வீங்கியிருந்தது. மெல்ல அவள் அருகில் சென்று, "பயப்படாதே தங்கம். பூபதிக்கு ஒன்றுமில்லை. ஆஸ்பத்திரியில் விட்டு வந்திருக்கிறேன்!" என்று தேறுதல் கூறி விட்டு வெளியே வந்தான்.

அவனைக் கண்டதும், சபாபதி. மீண்டும் கத்தத்தொடங்கி விட்டார், "பாலு, இவள் இஷ்டத்துக்கு நடக்கவிடக்கூடாது. இவள் சாகப்போனாலும் எனக்குச் சந்தோஷந்தான். ஆனால், கீழ்சாதிப்பயலை என்னுடைய மருமகனென்று ஏற்றுக்கொள்ள மாட்டேன்......!" என்று இரைந்து கொண்டிருந்தார்.

பாலு அவர் பேச்சைக் காதில் வாங்காமல் வெளியே புறப்பட்டான்.

# 8

பூபதி தாக்கப்பட்ட சம்பவம் நடந்து நான்கு நாட்களாகி விட்டன. இதற்கிடையில் எவ்வித விசேஷமும் சபாபதியின் வீட்டில் நடைபெறவில்லை. எனினும் அக்கம் பக்கத்திலுள்ள வர்களும், அவருடைய வட்டாரத்தைச் சேர்ந்தவர்களும் தங்கத் திற்கும் பூபதிக்கும் உள்ள காதலை ஒரு சமூகப் பிரச்சினையாக் கிப் பெரிய விவாதத்தில் மூழ்கியிருந்தார்கள். எல்லோரும் சபா பதியைத்தான் குறை கூறினார்கள். "மகளை மாடுபோல் வளர்த்து, இந்த மாதிரி கேவலமாக நடக்கும் அளவுக்கு இடம் கொடுத்துவிட்டார். இனி அந்தப் பெட்டையை யார்தான் கலி யாணம் செய்யப்போகிறார்கள்! விஷயம் இத்துடன் முடிந்து விடாது. தங்கம் பூபதியுடன் ஓடிவிடுவாள். ஒருநாள் இதுவும் நடக்கும்!" என்று ஊரார் பேசிக்கொண்டார்கள். இந்தப் பேச்சு சபாபதியின் காதிலும் விழுந்தது. அவமானமாயிருந்தது. நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் போலிருந்தது. இனி என்ன செய்வது?—

பாலு இதைப்பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. "நடந்து முடிந்த கூச்சலும், கலகமும் போதும். கொஞ்ச நாட் களுக்குச் சும்மாயிருங்கள். ஊரவர்கள் பலதும் சொல்லுவார் கள். அதையெல்லாம் காதில் வாங்கிக்கொண்டு மனசைப் போட்டுக் குழப்பவேண்டாம். பேசாமலிருங்கள். பிறகு, எல் லாவற்றையும் யோசிப்போம்" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான். சபாபதி வாயை மூடிக்கொண்டார்.

பூபதி தாக்கப்பட்ட சம்பவத்திற்குப் பிறகு தங்கத்தின் மனம் ஒரு நிலையிலில்லை. ஊரெல்லாம் அவமானமாகப் பேசப் படக்கூடிய அளவுக்குத் தன் காதல் விஷயம் அம்பலமாகிவிட் டதைக் குறித்துக்கூடக் கவலைப்படவில்லை. தாழ்த்தப்பட்டவன் என்ற ஒரே காரணத்திற்காக அவன் தாக்கப்பட்டதுதான் — அதுவுமிருக சுபாவமுள்ள மணியத்தால் தாக்கப்பட்டதுதான் — மற்றவர்கள் தடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்ததுதான் — அவள் உள்ளத்தைக் குத்திக் குடைந்தது. தனக்கும் பூபதிக்கு

முள்ள காதலைச் சமூகம் குற்றமாகக் கருதினால், பூபதியைமட்டு மல்ல, தன்னையும் அடித்து நொறுக்கியிருக்கவேண்டும். ஆனால், அப்படி நடக்கவில்லை. நெஞ்சிலே கொஞ்சமாவது ஈவிரக்க மின்றி பூபதியை அடித்துவிட்டார்கள். அவர் என்ன குற்றம் செய்தார்? இந்த அக்கிரமம் நடக்கலாமா? என்றெல்லாம் எண்ணி உள்ளம் நொந்தாள். அவள் மனம் சதா பூபதியைப் பற்றித்தான் எண்ணமிட்டுக்கொண்டிருந்தது. ஊணும் உறக்க மும் அவளிடமிருந்து விடைபெற்றுக்கொண்டன. தன்னுடைய காதல் என்ன ஆகும்?... ஐயாவும், அம்மாவும் என்ன செய் வார்கள் என்றெல்லாம் அவளால் சிந்திக்கமுடியவில்லை. அதைப்பற்றிய எண்ணமேயில்லை. அவளுடைய முழு நினைவும், சிந்தனையும் பூபதியிடமேயிருந்தது. பூபதி...! பூபதி...! என்று தான் அவளுடைய உள்ளம் ஒலித்துக்கொண்டிருந்தது. பூபதி தாக்கப்பட்ட சம்பவம் அவள் நெஞ்சில் நன்றாகப் பதிந்துவிட் டது. இரவில் நித்திரை கொள்ளும்போது அந்தச் சம்பவம் கன வாகத் தோன்றி அவளைத் துன்புறுத்தியது. "ஐயோ அவரை அடிக்காதீர்கள்...! அடிக்காதீர்கள்! அண்ணே அவர் பாவம்...! அவரை மணியம் அடிக்க நீங்களும் பார்த்துக்கொண்டிருந்தீர் களே, இது நியாயமா?" என்று புலம்புவாள்.

பாலுவும், தங்கமும் ஒரே அறையில்தான் நித்திரை செய் வது வழக்கம். இதனால், அவள் இரவில் புலம்புவதையெல் லாம் பாலு கேட்டான், அவன் உள்ளம் வேதனையால் துடித் தது. இப்படி நடக்குமென்று அவன் கனவுகூடக் காணவில்லை. எனவே, கொடுமை மிக்க இந்தச் சம்பவங்கள் அவனுடைய நெஞ் சைத் தாக்கி ஸ்தம்பிக்கச் செய்துவிட்டன. நடந்த சம்பவங்கள் ஒவ்வொன்றும் அவன் மனக்கண்ணாடியில் பலதடவை தோன்றி மறைந்தன. பூபதி தாக்கப்பட்டது, அவனுடைய அம்மா ஒப் பாரி வைத்தது, தங்கம் தற்கொலை செய்யப்போனது, பூபதி அடி படுவதைப் பார்த்துக்கொண்டு தான் சும்மா நின்றது, அயல் வீட் டார் தங்கத்தைப் பேசியது, ஐயாவுக்கும் அம்மாவுக்குமிடையில் நடந்த வாய்ச் சண்டை — ஆகிய எல்லாவற்றையும் பல தடவை நினைத்துக் கொண்டான். இவ்வித மனவேதனைச் சம்பவங்க

ளெல்லாம் ஏன் நிகழவேண்டும்?—என்று தனக்குள் கேட்டுக் கொண்டான். இந்தக் கேள்வி அவனைப் பலவாறு சிந்திக்கத் தூண்டிவிட்டது.

பூபதியும் தங்கமும் சிறு வயதிலிருந்து ஒன்ருகவும் அன்பாகவும் பழகினர்களென்பது பாலுவுக்குத் தெரியும். எனினும், இருவருக்குமிடையில் காதல் ஏற்படும் என்று எதிர்பார்க்கவில்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பூபதி தன் தங்கையை நேசிக்கமாட்டான் என்ற நம்பிக்கை அவனுக்கு. இப்போது அந்த நம்பிக்கை சுக்கு நூருக உடைந்துவிட்டது. ஆனல், இதற்குப் பூபதி மட்டும்தான் பொறுப்பா? அவன் மனம் இப்படிக் கேட்டது.

தனக்கும் மனேன்மணிக்குமுள்ள காதலை நினைத்துக் கொண்டான். மனேன்மணியின் பெற்ருேருக்குத் தங்கள் காதல் விவகாரம் தெரிய வந்தால் என்ன நடக்கும்? ஒருவேளை நான் ஏழையென்ற காரணத்தால் மனேன்மணியைக் கல்யாணம் செய்து தரமாட்டார்கள். ஆனல், பூபதியை அடித்து நொறுக்கியதுபோல்—ஊரார் கேவலமாகவும் அவமானமாகவும் கதைத்துக்கொள்வதுபோல்—ஒன்றும் நடக்காது. என்னை யாரும் அடிக்கமாட்டார்கள்; ஏசவும் மாட்டார்கள். நானும், மனேன்மணியும் அந்தஸ்தில் உயர்வு தாழ்வுள்ளவர்களாக இருக்கலாம். ஆனல் சாதியில் ஏற்ற தாழ்வானவர்கள் அல்ல. பூபதி அப்படியல்ல. எனினும் இருவரின் காதலுக்கும் வித்தியாசமில்லை. இரண்டும் ஒன்றுதான்! அப்படியிருந்தும் பூபதி தாக்கப்பட்டான். தங்கையை ஏசினர்கள் ஏன்? ஏன்? பூபதி தாழ்ந்த சாதிக்காரன் என்ற ஒரே காரணந்தானே? தாழ்ந்த சாதியில் உள்ள என் தங்கையைக் காதலித்தது குற்றமென்று சமூகம் கருதுகிறதே! அப்படியானல் இனித் தங்கத்தின் வாழ்வு?—

அவளுடைய வாழ்க்கைச்செடி இன்று ஒரு பெரிய சூருவளியில் சிக்குண்டு சிதைந்து கொண்டிருக்கிறது. ஆம். இதன் முடிவு?—

பூபதியுடன்தான் வாழ்வாள் தங்கம். இல்லையெனில் நிச்சயம் தற்கொலை செய்துகொள்வாள். ஆனால், என்னதான் நடந்தாலும் இக் கல்யாணத்திற்கு ஐயர் சம்மதிக்க மாட்டார். இதன் விளைவு?—

இப்படியெல்லாம் பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்தானே தவிர அவனால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. பாலுவுக்குத் தன் தங்கைமேல் ஆழமான அன்பு. அவளும் அப்படித்தான், "அண்ணே...! அண்ணே...!" என்று பாசம் தெறிக்கப் பழகுவாள். பாலுவிடமும், பூபதியிடமும் அவள் கொண்டிருந்த அன்பில் குணவேறுபாடு இருந்ததே தவிர, அளவு வேறுபாடு இல்லை. பாலுவை எந்த அளவுக்கு நேசித்தாளோ, அந்த அளவுக்குப் பூபதியையும் நேசித்தாள். இதையெல்லாம் எண்ணிப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் இப்போதுதான் பாலுவுக்குக் கிடைத்தது. எனவே, தங்கையின் வாழ்க்கையில் வீசும் புயலினால் அவனுடைய மனம் அமைதியற்றுவிட்டது. வீட்டிலிருக்கவும் பிடிக்கவில்லை. கொழும்புக்குத் திரும்பத் தீர்மானித்துவிட்டான்.

தங்கத்தின் விஷயத்தில் ஒரு முடிவும் சொல்லாமல் கொழும்புக்குப் புறப்படத் தயாரானதைப் பார்த்ததும் சபாபதிக்கு ஒரே ஏமாற்றமாயிருந்தது. "நீ ஒன்றும் சொல்லாமற் போனால் தங்கத்தின் விஷயம் என்ன ஆவது?" என்றார் சபாபதி. "இப்பொழுது என் மனம் சரியில்லை. கொழும்புக்குப் போய் எழுதுகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

*　　　*　　　*

பாலு கொழும்புக்குவந்து இரண்டுமூன்று நாட்களாகி விட்டன. ஆனால் அவன் டியூஷன் சொல்லிக்கொடுக்கப் போகவுமில்லை; மனோன்மணியைச் சந்திக்கவுமில்லை. நடராசனுடன் கூட பேசவில்லை, முன்னையைப்போல் கலகலப்பாக இருக்கவுமில்லை. கொழும்புக்கு வந்தபிறகும் அவனுடைய மனம் குழம்பிக் கொண்டிருந்ததுதான் இதற்குக் காரணம்.

பானுவின் இந்தப்போக்கைக் கண்டு நடராசன் ஆச்சர்யப் பட்டான். அவனுக்கு ஒன்றும் விளங்கவுமில்லை. விஷயத்தை விசாரித்தான். ஆனால், பானு ஒன்றும் சொல்லவில்லை. அவனுடைய உள்ளத்தில் புகைந்துகொண்டிருக்கும் விஷயத்தை அறிய நடராசனின் மனம் துடித்தது. ஆனால், வற்புறுத்திக் கேட்க அவன் விரும்பவில்லை. தானாகச் சொல்லட்டும் என்று இருந்துவிட்டான்.

ஒரு நாள் நடராசன் வேலையைவிட்டு இருப்பிடம் திரும்பியபோது, விரித்த கடிதம் கையிலிருக்க, விழிகளில் பெருகும் கண்ணீருடன் உட்கார்ந்திருந்தான் பானு.

"ஏன் பானு அழுகிறாய்? அப்படி என்ன விஷயம் கடிதத்திலிருக்கிறது?" என்று படபடப்புடன் கேட்டான் நடராசன்.

பானு ஒரு பதிலும் சொல்லாமல் கடிதத்தை நடராசனிடம் கொடுத்துவிட்டு, கட்டிலில் போய் படுத்து, முகத்தை மறுபக்கம் சாய்த்துக்கொண்டு விக்கி விக்கி அழுதான். கையில் வாங்கிய கடிதத்தை அப்படியே வைத்துக்கொண்டு சில விநாடிகள் பானுவையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, கடிதத்தைப் படிக்கத்தொடங்கினான் நடராசன்.

# 9

அன்புள்ள பாலுவுக்கு,

நேற்றுத்தான் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்தேன். உடம்பிலே வண்ணம் போட்டிருந்த காயங்கள் ஆறிவிட்டன. ஆனால், உள்ளத்திலே இருக்கும் காயம் இன்னும் ஆறவில்லை. அதிலிருந்து வேதனையென்ற சீழும், பொருமல் என்ற இரத்தமும் கசிந்துகொண்டிருக்கின்றன. இந்த இதயப் புண் ஆற எத்தனை நாட்கள் ஆகுமோ—.

நீ இங்கு இருக்கும்போது நடந்த சம்பவங்களால் உன் மனம் குழம்பியிருக்குமென்று எனக்குத் தெரியும். உன் உள்ளத்திலே என்னைப் பற்றிப் பல எண்ணங்கள் அலைமோதிக் கொண்டிருக்குமென்பதும் எனக்குத் தெரியும். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது பல உணர்ச்சிகளும், எண்ணங்களும் குமுறி எழுகின்றன. அவற்றை அடக்கமுடியவில்லை எனவேதான், கையிலுள்ள ஊமைக் காயம் வலியைக் கொடுத்தாலும், அதைப் பொருட்படுத்தாமல் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்

நானும், நீயும், தங்கமும் சிறு வயதிலிருந்தே எப்படிப் பழகினோம், எப்படி நடந்துகொண்டோமென்பதையெல்லாம் நீ அறியத்தான் செய்வாய். அப்போது நமது சிறிய உள்ளங்கள்—கள்ளங் கபடமற்ற உள்ளங்கள்—இன்றைய சமுதாய அமைப்பு எழுப்பி வைத்திருக்கும் சாதிச் சுவர்களையும், சம்பிரதாய வேலிகளையும் எண்ணிப் பார்க்கவில்லை. அவைகளைக் குறித்துச் சிந்திக்கும் அளவுக்கு நாம் வளரவில்லை; நமது அறிவு வளரவில்லை.

காலம் நம்மை வளர்த்தது. நாம் இருவரும் காளைகளானோம், தங்கமும் கன்னிப் பெண்ணாக மலர்ந்திருக்கிறாள். நம்மிருவருக்குமிடையில் உள்ள நட்பைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லையென்று நினைக்கிறேன். ஆனால், இந்தக் கால மாற்றத்தில், எனக்கும் தங்கத்திற்குமிடையில் உள்ள நட்பைப் பற்றி அவசியம் சொல்லித்தானாகவேண்டும். நடந்த சம்பவங்களுக்கும், இந்தக் கலக்கத்திற்கும் அந்த நட்புத்தானே காரணம்?

சிறுவனுயிருக்கும்போது நான் தங்கத்திடம் கொண்டுள்ள நட்பு காதலாக மாறும் என்று எனக்குத் தெரியாது. எப்படித் தெரியமுடியும்? சிறுவயதிலேயே உலக நடப்புகளைப் பற்றிய அறிவும், அவற்றை உணரக்கூடிய ஆற்றலுமிருந்தால் மனிதனுடைய பிற்கால வாழ்க்கையில் எழும் எத்தனையோ சிக்கல்களுக்கும், பிரச்சினைகளுக்கும் இடம் இருக்காது. ஆனுல், இயற்கை அப்படிச் செய்யவில்லை. எனவே, அதனுடை விதிகளுக்குக் கட்டுப்பட்டவனுகவே நானும் வளர்ந்தேன். இளைஞனுக மாறியிருக்கும் இன்றைய நிலையில்தான் தங்கத்திடம் நான் கொண்டுள்ள அன்பு, பழகியதால் ஏற்பட்டுள்ள வெறும் பாச உணர்ச்சியல்ல, இருவரையும் என்றும் இணைபிரிய முடியாதவாறு பின்னிப் பிணைக்கும் காதல் உணர்ச்சியென்பதை உணர முடிந்தது. நான் மட்டுமல்ல, தங்கமும் இப்போதுதான் உணர்ந்தாள். எங்களுக்குள்ளிருக்கும் இந்தக் காதலைச் சமூகம் அங்கீகரிக்காது என்பதை இருவரும் உணர்ந்துதான் இருக்கிறோம். சமூகக் கட்டுப்பாட்டுக்கு விரோதமாக நடக்கக்கூடாது என்பதை உணரவும் செய்கிறோம். ஆனுல், இந்தக் காரணங்கள் எங்கள் காதலைத் தடைசெய்யவில்லை. நாங்கள் ஒருவரை ஒருவர் மறக்க முயன்றோம். தோல்விதான் கண்ட பலன்! இயற்கையாக வளர்ந்து நிற்கும் இந்த நியாயமான காதல் உணர்ச்சியை, சமூகத்தின் போலிக் கட்டுப்பாட்டைக் கொண்டு நசுக்கமுடியவில்லை. எங்கள் காதல் சாதிபேதத்தைத் தகர்த்தெறிந்துவிட்டு வளர்ந்து கொண்டிருக்கிறது. எனினும் எங்கள் காதல், சாதலில்தான் வந்து முடியுமென்றுதான் நான் எண்ணியிருந்தேன். என்ருலும், காதலைத் துறக்கமுடியவில்லை. இது கட்டையோடுதான் போகும்!

எங்கள் காதல் விஷயம் உனக்குத் தெரியாது. நானே தங்கமோ சொல்லவுமில்லை. உன்னுடைய மனதிலே புயலை உண்டாக்கக் கூடாதென்ற எண்ணத்தால்தான் சொல்லவில்லை. எனினும், இந்த விஷயம் என்றைக்காவது ஒருநாள் அம்பலத்திற்கு வருமென்று எனக்கும் தங்கத்திற்கும் தெரியும். அப்போது என்ன செய்வது? என்று நாங்கள் ஒருவரை ஒருவர்

கேட்டுக்கொண்டோம். ஆனால், இதுவரை எந்த முடிவுக்கும் வரவில்லை.

பானு, நீ எந்தப் பெண்ணையாவது காதலித்திருக்கிறாயோ என்னவோ எனக்குத் தெரியாது! காதலித்திருந்தால் அந்த அனுபவம் எப்படிப்பட்டது; அது எப்படி நினைக்கவும் நடக்கவும் தூண்டும் என்பதையெல்லாம் உணர்ந்திருப்பாய். அந்த வகையில் உன்னிடமிருந்து எங்கள் காதலுக்கு எதிர்ப்பு வராது. உனக்குக் காதல் அனுபவம் இல்லாவிட்டால் எங்கள் காதலின் உண்மையை, தன்மையை உன்னால் உணர்ந்துகொள்ள முடியாது. எனினும், நீ முற்போக்கான எண்ணமுள்ளவன், காதலும், கலியாணமும் ஒவ்வொருவரின் சொந்த விவகாரம், அதில் யாரும் தலையிடக்கூடாது என்ற கருத்துமுள்ளவன். இக்கருத்தைப் பல தடவைகளில் என்னிடம் சொல்லியிருக்கிறாய். எனவே, உன்னிடமிருந்து ஒரு எதிர்ப்பும் வராது. ஆனால், உன் பெற்றோரிடமிருந்தும், உற்றாரிடமிருந்தும், சமூகத்திலிருந்தும் பலத்த எதிர்ப்பு வரும். அவற்றையெல்லாம் சமாளித்து எங்கள் காதல் வாழ்வுக்கு வழிகோலுவாயா, அந்த உரம்கொண்ட நெஞ்சு உனக்கு இருக்கிறதா — என்று பலதடவை நான் சிந்தித்ததுண்டு. இதற்கும் என்னால் விடைகாண முடியவில்லை.

விஷயத்தை நீட்டிக்கொண்டு போவதிலோ, சுற்றிவளைத்துச் சொல்வதிலோ பிரயோசனமில்லை. நேரடியாகச் சொல்லுகிறேன். எனக்கும் தங்கத்துக்குமுள்ள காதல், அம்பலமாகிவிட்டது. அதன் விளைவு என்ன ஆகும் என்பதற்கு அடையாளமாக அன்று நான் தாக்கப்பட்டேன்.

அறிவிலும், பண்பாட்டிலும் மனிதன் இன்று எவ்வளவோ வளர்ந்துவிட்டான். ஆனால், அன்று நான் தாக்கப்பட்ட சம்பவம் எதைக் காட்டுகிறது? நமது சமூகம்— தமிழர் சமுதாயம்— இன்றும் குறுகிய வளர்ச்சியிலேயே இருக்கின்றது என்பதைத்தானே? மணியம் என்னை அடிக்கும்போது, கூடியிருந்தவர்கள் மேலும் அவனுக்கு உற்சாகமூட்டினார்கள். மனித தர்மத்தை உதைத்துத் தள்ளிவிட்டு, மனிதாபிமானத்துக்கும், நாகரிகத்துக்கும் முழுமாறான செய்கையில் ஈடுபட்ட அந்தத் திருக்கூட்டத்தைக் கண்டு எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. என்மேல் அடி விழ, விழ நான் சிரித்தேன்.

"சிரி, உலகம் உன்னோடு சேர்ந்து சிரிக்கும். அழு உன்னோடு ஒருவரும் அழமாட்டார்கள்" என்று யாரோ ஒரு அறிஞன் சொன்னது ஞாபகத்துக்கு வருகிறது. அன்று நான் சிரித்தேன், ஆனால் ஒருவரும் என்னோடு சேர்ந்து சிரிக்கவில்லை. அழவுமில்லை. ஆனால், நான் வெளியில் சிரித்தேனே தவிர, உள்ளுக்குள் அழுதுகொண்டிருந்தேன். உலகம் என்னோடுசேர்ந்து அழவேண்டுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நீயாவது—.

நீயும் என்னுடன் சேர்ந்து அழுதிருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால், மனிதத்தன்மையற்ற முறையில்—கொடுமையான முறையில் — காட்டுமிராண்டித்தனமாக நான் தாக்கப்பட்டதைப் பார்த்துக்கொண்டு நீ சும்மா நின்று கொண்டிருந்தாய்; தடுக்க முயலவில்லை. இதை நினைக்கும் போதுதான் என் உள்ளம் வேதனை தாங்காமல் விம்முகிறது. உன் தங்கைமேல் நான் கொண்டுள்ள காதல் உனக்குப் பிடிக்காமலிருக்கலாம். எனினும், நான் உன்னுடைய நண்பன். நாம் இருவரும் வெவ்வேறு சாதியினராக இருக்கலாம்; எனினும் நான் உன்னுடைய தோழன். நாம் இருவரும் இடையிலே பழகி நட்புக் கொண்டவர்களல்ல. சிறு வயதுமுதல் பழகிப் பாசம் கொண்டவர்கள். அந்தமுறையில் நான் உனக்கு உற்ற நண்பன். அப்படிப்பட்ட நான் தாக்கப்படும்போது நீ தடுக்கவில்லை; என்னைக் காப்பாற்ற முன்வரவில்லை; பார்த்துக்கொண்டு நின்றாய்! ஒரு உயர்ந்த தோழன் மிருகத்தனமாக— நியாயமற்ற முறையில்— தாக்கப்படும்போது உன் உள்ளம் துடிக்கவில்லை; துடித்திருந்தால் ஓடிவந்திருப்பாய் என்னிடம். அடிப்பவனை எதிர்த்திருப்பாய்; அவனை உதைத்து உருட்டியிருப்பாய்!

நாம் சிறுவர்களாயிருக்கும்போது— ஒரு நாள், உன்னை ஒருவன் அடித்தானல்லவா? நீ கதறினாய்! அப்போது நான் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்கவில்லை. உன்னை அடித்தவன்மேல் பாய்ந்தேன். நீ அடிபடுவதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை; என் உள்ளம் துடித்தது. எனவே தான் அவனை நான் உதைத்தேன். அதேபோல நீயும் செய்திருக்கவேண்டும், உனக்கும் மணியத்திற்குமிடையில் சண்டை

நடக்கவேண்டும்— என்ற கெட்ட எண்ணத்தால் உன்னைக் குற்றஞ்சொல்லவில்லை. நீ அவ்விதம் செய்வதையும் நான் விரும்பவில்லை. அடிப்பவன்—சண்டை பிடிப்பவன்—எல்லாம் பண்பாடற்றவர்கள், மிருக உணர்ச்சியின் மிச்சசொச்ச முள்ளவர்கள் என்ற கருத்துடையவன் நான். அதனுல்தான் நான்கூட எதிர்த்துத் தாக்கவில்லை. உன்னையும் சண்டையிடும்படி சொல்லவும் மாட்டேன். ஆனுல் நீ தடுத்திருக்கலாம். அன்று நடந்த கொடுமையின் வேகத்தைக் குறைத்திருக்கலாம். நீயோ நான் அடிபடுவதைப் பார்த்துக்கொண்டு நின்ருய்! இதை எண்ணும்போதுதான் என் இதயம் மிகவும் வேதனைப்பட்டது. இப்போது இதைப்பற்றிக் குறை நினைக்கவில்லை. அந்தச் சமயம் உன் மன நிலை எப்படி இருந்ததோ—.

இப்போது நானும் தங்கமும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டோம். எங்கள் காதல் நிறைவேருவிட்டால் ஒன்ருகச் சாவது என்று தீர்மானித்துவிட்டோம். காதல் இல்லாத வாழ்வு கனல் கக்கும் பாலைவனத்தைப்போன்றது. அந்தப் பாலைவனம் எங்களுக்கு வேண்டாம். காதல் எங்கேயில்லையோ, அங்கே தென்றலைப்போன்ற வாழ்க்கையுமில்லை. புயலைப்போன்ற வாழ்க்கைதான் இருக்கும். அந்தப்புயலில் சிக்கிக்கொண்டு சிதைய எங்களுக்கு விருப்பமில்லை. ஆகவே, நாங்கள் சாகத் தீர்மானித்துவிட்டோம். எங்கள் முடிவைமாற்ற ஒரேயொரு மருந்து திருமணம்தான்: எங்களுடைய ஒன்றுபட்ட வாழ்க்கைதான். ஆனுல் சமூகமும் நாங்கள் ஒன்றுபட்டு வாழ்வதை—காதல் வாழ்வு நடத்துவதை அங்கீகரிக்காது. சமூகக் கட்டுப்பாடுகளுக்குத் தலை வணங்கும் உன் பெற்ருேரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் எனவே, எங்களுடைய மரணம் நிச்சயம். இதற்குப் பொறுப்பு யார், எது? என்ற முடிவுக்கு நீயே வா. தங்கத்தின் சாவுக்கும் நான்தான் காரணம் என்ற முடிவுக்கு நீ வந்துவிடவேண்டாம். இதை அறிவிக்கத்தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். எங்களுடைய மரணச்செய்தி என்றைக்காவது ஒருநாள் உனக்குக் கிடைக்கும்.

அன்புள்ள,
பூபதி.

---

# 10

கடிதத்தைப் படித்து முடித்ததும் நடராசனின் உடல் வியர்த்துவிட்டது. உள்ளத்தில் பலவித உணர்ச்சிகள் உருளத் தொடங்கின. பரபரப்புடன் பாலுவைப் பார்த்தான். அவன் மறுபக்கம் சாய்ந்து படுத்துக்கொண்டிருந்தான். நடராசனிடமிருந்து ஒரு பெருமூச்சு வந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பி வந்ததிலிருந்து ஒரு 'மாதிரி'யாக இருந்ததன் காரணம் இப்போதுதான் நடராசனுக்கு விளங்கிற்று. பூபதியின் உடைந்த உள்ளத்திலிருந்து வெடித்துச் சிதறிய எண்ணங்களின் தொகுப்புத்தான் அந்தக் கடிதம் என்பதை நினைக்க, நினைக்க நடராசனின் உள்ளத்திலும் வேதனை முள்ளெனத் தைத்தது. சிந்தனை சிறிட்டுப் பாய்ந்தது. அந்த அறைக்குள் குறுக்கும் நெறுக்குமாக நடந்துகொண்டிருந்தான்.

கொஞ்சநேரம் சென்றதும், பாலுவின் பக்கம் திரும்பி, "பாலு...!" என்று கூப்பிட்டான் நடராசன். பாலு திரும்பி அவனைப் பார்த்தான். அப்போது அவனுடைய கண்களிலிருந்து நீர் வடியவில்லை. ஆனால், அவை சிவந்திருந்தன.

"சிக்கலான பிரச்சினை" என்று கூறிக்கொண்டே அவனிடம் கடிதத்தை நீட்டினான் நடராசன்.

"இப்படியெல்லாம் நடக்குமென்று நான் கனவுகூடக் காணவில்லை. நான் நினைத்துக்கொண்டு போனது ஒன்று; நடந்தது ஒன்று. மணநாளைக் குறிக்கவேண்டியதற்குப் பதிலாகப் பிணநாளைக் குறிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது," என்றான் பாலு. அவனது குரல் துக்கத்தால் கரகரத்தது.

"என்ன நடந்தது பாலு? கொஞ்சம் விபரமாகத்தான் சொல்லேன்?" என்று கேட்டுவிட்டுப் பாலுவைப் பார்த்தான் நடராசன். அவன் கொஞ்சநேரம் மௌனமாயிருந்துவிட்டு, வீட்டில் நடந்த சம்பவங்களை விபரமாகக் கூறினான்.

இதைக் கேட்டதும் நடராசனின் உள்ளம் வேதனைத் தீயால் வெந்தது. பூபதியைப் பற்றியும், தங்கத்தைப் பற்றியும், அவர்

களிருவர் மேலும் தனக்கிருக்கும் ஆழமான அன்பையும் இதற்கு முன் நடராசனுக்குச் சொல்லியிருந்தான் பாலு. தன் அருமைச் சகோதரியின் வாழ்வும், தன் நண்பனின் வாழ்வும் போராட்டத் திற்குள் சிக்கியிருப்பதை எண்ணிப் பாலு வருந்துகிறான் என் பதையும் நடராசன் உணர்ந்துகொண்டான். பாலுவைப் பார்க் கப் பரிதாபமாயிருந்தது அவனுக்கு.

"பூபதி என்னைத் தவருகக் கருதிவிட்டான். நீயும் அப் படித்தான் நினைக்கிருய் போலிருக்கிறது. பூபதி அடிபடும் போது, அதைத் தடுக்காமல் சும்மா நின்றுகொண்டிருந்தது உண்மைதான். ஆனல், அப்போதைய என் நிலே, அதை தவிர வேறு எதையும் செய்யத் தூண்டவில்லே. நான் இந்தச் சம்ப வங்களைக் கனவில்கூடச் சிந்தித்ததில்லே. நடந்த சம்பவங்கள் நெஞ்சையும், மூளையையும் கலக்கிவிட்டிருந்தன. உணர்ச்சிகள் சிதறுண்டு கிடந்தன. திகிலும், திகைப்பும் என்னை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன. பூபதி அடிபடும்போது என் சிந் தனை என்வசம் இல்லே. அப்போது அங்கே நடந்தவைகளெல் லாம் கனவில் நடப்பது போன்றிருந்தன. ஆம் அவ்விதமான ஒரு பிரமை பிடித்த நிலேயில்தான் நான் இருந்தேன். இதுதான் உண்மை. பூபதி அடிபடவேண்டுமென்று நான் விரும்பவில்லே; என் தங்கையைக் காதலித்த குற்றத்திற்காக இந்தத் தண்ட னையை அவன் அனுபவிக்கத்தான் வேண்டுமென்று எண்ணிய தில்லே; இனிமேல் அப்படி எண்ணப்போவதுமில்லே!' என்றன் பாலு.

நடராசன் ஒன்றும் பேசவில்லே. ஆழ்ந்த யோசனையுடன் அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தான். கொஞ்சநேரம் இரு வருக்குமிடையில் அமைதி நிலவியது. நீண்டுகொண்டிருந்த இந்த அமைதிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு மீண்டும் உரையாடலேத் தொடங்கினுன் நடராசன்.

"இப்போது நீ என்ன செய்யப்போகின்ருய்?"

"எனக்கு ஒன்றுமே தோன்றவில்லே. என் மூளை கலங்கு கிறது."

"பூபதியைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

"அவனைப் பற்றி நினைக்க என்ன இருக்கிறது?"

"நான் அதைக் கேட்கவில்லை பாலு. தங்களுடைய காதல் தோல்வி காரணமாக இருவரும் தற்கொலை செய்துகொள்வார்களோ?"

"ஆம் கோழைத்தனத்திற்கும் பூபதிக்கும் வெகு தூரம். நெஞ்சில் ஒன்றை நினைத்தால் அதைச் செய்தே விடுவான். தங்கமும் அப்படித்தான்!"

"அப்படியானால் இரண்டு உயிர்கள் சாகப்போவது நிச்சயமாகிவிட்டது; இல்லையா?"

இந்தக் கேள்வியுடன் பாலுவின் முகத்தைப் பார்த்தான் நடராசன். அவனுடைய முகத்திலே சோகமும், கலவரமும் நிறைந்த உணர்ச்சிகள் அப்பியிருந்தன.

நடராசன் ஒரு பெருமூச்செறிந்துவிட்டு. "பூபதியும், தங்கமும் கொண்டிருக்கிற காதலைப் பற்றி நீ ஒன்றும் தப்பாக நினைக்கவில்லையா?" என்று கேட்டான்.

"இல்லை" என்று தலையை ஆட்டிவிட்டு ஆசனத்தைவிட்டு எழுந்து ஜன்னலண்டை சென்று தன் பார்வையை வெளியே பாயவிட்டான் பாலு.

"இருவரும் தம்பதிகளாவதற்குத் தகுதியுடையவர்கள் என்று கருதுகிறாயா?" நடராசன் தன்னுடைய அடுத்த கேள்வியைக் கேட்டான்.

சடேரெனத் திரும்பினான் பாலு. "அதில் சந்தேகமேயில்லை!" என்றான் சற்று உறுதியான தொனியில்.

"அப்படியானால், அவர்களிருவருக்கும் வாழ்வளிக்கவேண்டிய பொறுப்பு உன்னுடையது. சாகப்போகும் உன் தங்கையையும், பூபதியையும் தடுக்க உன்னால் முடியும்!"

"அவர்களுடைய காதலை நான் சரி காணுவதால் எல்லா வற்றையும் சாதித்துவிட முடியுமா? ஐயாவுக்கும் அம்மாவுக்கும் விருப்பமில்லாத ஒரு விஷயத்தை அவர்களையும் மீறி எப்படிச் செய்யமுடியும்? இதுவரை அவர்களை எதிர்த்து, அவர்களுடைய மனதையும் புண்படுத்தி எந்தக் காரியத்தையும் நான் செய்யவில்லை. பெற்றோர் விரும்பாததை, சமூகம் எதிர்ப்பதை நான் மட்டும் எப்படிச் செய்யமுடியும்?"

பாலு இப்படிக் கேட்டதும் நடராசனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. 'பாலு நீ சொல்வதில் பாதி உண்மையிருக்கிறது. பெற்றோரைமீறி எதையும்செய்யக்கூடாதுதான். அவர்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடாதுதான். அவர்கள் தவறிழைத்தால்—நேர்மைக்கும், நியாயத்திற்கும் விரோதமாக நடந்தால்—அதை எதிர்த்துப் போராடத்தான் வேண்டும். நியாயமும், தர்மமும் எங்கிருக்கின்றனவோ அங்குதான் நேர்மையாளரின் நெஞ்சும் இருக்கவேண்டும். பெற்றோர் என்ற காரணத்திற்காக—பெரியவர்கள் என்ற காரணத்திற்காக—அவர்கள் செய்யும் தவறுகளை அனுமதித்துக் கொண்டிருப்பதா? பிழையான பாதையில் செல்லும்போது நாமும் சேர்ந்து செல்வதா?"

"வழக்கத்திலில்லாததை — சமூக நடைமுறைக்கு எதிரானதை—நாம் செய்தால் அவர்கள் நம்மைத் தவருகக் கருதுவார்கள். நாம் தான் பிழையான 'பாதையில் போவதாக ஊராரும் உறவினரும் கூறுவார்கள். பெற்ரூர் அதை ஆமோதிப்பார்கள்.

"ஆம் பாலு. உண்மைதான். ஆனல், வயதில் பெரியவர்களாயிருக்கிறார்களே என்ற காரணத்திற்காகமட்டும், அவர்கள் செய்வதெல்லாம் சரியானதுதான் என்று கூறமுடியாது. வயதிற்கும் அறிவுக்கும் சம்பந்தமில்லை. சாதியை வளரவிட்டுக் கொண்டிருப்பது — மனித வர்க்கத்தை வர்ணரீதியாகப் பிரிப்பது — மனித தர்மத்திற்கே, நாகரீகத்திற்கே — புறம்பானது. இதை எண்ணி, மனிதரில் வேற்றுமையில்லை ஒன்றே குலம், யாவரும் சமம் என்று கூறுவது, அதை அனுசரித்து நடப்பது தவரு? பாலு, சாதிப் பாகுபாடு இருக்கிறதே. அது நமது

சமூகத்தில் வேரூன்றியிருக்கும் ஒரு சாபத்திடு; வேண்டாத ஒரு திட்டம். குலம் கோத்திரம் பார்த்து, ஜாதி ஆச்சாரம் பார்த்து, பார்த்து நமது சமூகம் பல பிரிவுகளாகச் சிதறுண்டு குட்டிச் சுவராகக் கிடக்கிறது. சுருங்கிய உள்ளமும், குறுகிய புத்தியும் கொண்டதாயிருக்கிறது. சுருங்கிய உள்ளமும், குறுகிய புத்தியும் வாழ்விலே உள்ள நெளிவு சுழிவுகளை எப்படி உணரமுடியும்? இல்லற வாழ்க்கையின் தத்துவங்களை எப்படி அறிய முடியும்? இதனால்தான் எத்தனையோ இளந்தம்பதிகளின் வாழ்க்கையிலே புயல் வீசுகிறது! குலம், கோத்திரம், ஜாதி, அந்தஸ்து, பணம்—இவைகளைப் பார்த்துத்தான் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்துவைக்கிறார்கள் பெற்றோர்கள். தாம்பத்திய வாழ்க்கையின் தத்துவம் இவற்றிலா அடங்கிக் கிடக்கிறது? உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி, குடும்ப அறிவு, ஒத்த மனப்போக்கு, அமைந்த பண்பு, ஒருவர் கொண்டுள்ள விருப்பம்—இவற்றைத்தான் கவனிக்கவேண்டும். இவைதான் தாம்பத்திய வாழ்க்கையின் தத்துவம். பூபதிக்கும் தங்கத்திற்கும் இவை பொருந்தியிருக்கின்றனவா என்று பார்! ஆம் என்றால் தயங்க அவசியமில்லை. மனித உணர்ச்சியுள்ள நல்லறிவாளர்கள் இதை ஆதரிப்பார்கள். கல்யாணம் என்பது ஒவ்வொருவரின் சொந்த விஷயம். பெற்றோர்களோ, மற்றோர்களோ ஆலோசனை கூறலாம். அது நியாயமானதாகவும், சிறந்ததாகவும், புத்திக்குப் பொருத்தமானதாகவும் இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். இல்லாவிட்டால் விட்டுவிடவேண்டியதுதான். கலியாண விஷயத்தில் மற்றவர்கள் தங்களுடைய விருப்பத்தை வற்புறுத்தித் திணிக்கக்கூடாது. மணவாழ்க்கையில் நன்மையோ தீமையோ, இன்பமோ துன்பமோ அனுபவிக்கவேண்டியவர்கள் தம்பதிகள் தான். எனவே அவர்களின் இஷ்டப்படி விட்டுவிட வேண்டியதுதான் விவேகமானது. பாலு, எல்லோருடைய விருப்பத்திற்கிணங்கவும் நடந்துகொள்ளக் காதலோ, கல்யாணமோ கால்ப்பந்து விளையாட்டல்ல. இல்லறம் என்பது ஒரு விளக்கு. எண்ணையும் திரியும் ஒன்றுசேர்ந்தால்தான் விளக்கும் பிரகாசமாக எரியும். எண்ணெய்க்குப் பதிலாகத் தண்ணீரை ஊற்றினால், விளக்கு எரியாது. பெற்றோரும், மற்றோரும் தண்ணீரால்

விளக்கு எரிக்கப் பார்க்கிறார்கள்...! பானு, பூபதி என்னைப் போன்றவன். உன் தங்கையின் குடும்பவிளக்கு நன்றாகச் சுடர் விட்டுப் பிரகாசிக்கவேண்டுமானால் பூபதிக்கு அவள் மனைவியாக வேண்டும். நீ சமூகத்தைக் கண்டோ, பெற்றோரைக் கண்டோ பயப்படாதே! சாதியின் பேரால், அந்தஸ்தின் பேரால், மதத்தின் பேரால், நிறத்தின் பேரால் மனித தர்மம் சிதைக்கப்படுவதுபோல, காதலும் சிதைக்கப்படுகிறது. இதனால் எத்தனையோ காதலர்கள் தற்கொலை செய்துகொண்டார்கள். இன்னும் தற்கொலைகளும், கொலைகளும் நடந்துகொண்டுதானிருக்கின்றன. இதனால் காதலர்களின் விருப்பத்திற்கு எதிராக நின்ற சமூகமோ, பெற்றோரோ என்ன நன்மை அடைந்தார்கள்? என்ன பலனைக் கண்டார்கள்? பானு, புரட்டுக் கொள்கைகளைக் குருட்டுத்தனமாகக் கும்பிட்டுக் கொண்டிருப்பவர்களைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். அர்த்தமற்ற தத்துவங்களுக்குத் தலைவணங்கி மூடத்தனத்திற்கும், அறியாமைக்கும் ஒத்துப் போய், உள்ளத்தாலும், உணர்ச்சியாலும் ஒன்றாயிருக்கும் இருவரின் உயிருக்கு உலை வைக்கவேண்டாம். பானு, நான் சொல்வதைக் கேள். வைதிக வல்லூறுகளின் வரட்டுக் கூச்சலுக்குப் பயப்படாமல், பெற்றோரின் அலறலுக்கு அஞ்சாமல் பூபதிக்கும், தங்கத்திற்கும் வாழ்வளிக்க முயற்சி செய்! உன்னுடைய கடமை அது. நீதியின் கடமையும் அதுதான், இதனால் உன் சிந்தனைச் சக்கரத்தைச் சுழற்றிக் கொண்டிருக்கும் சீதனப் பிரச்சினையும் ஒழிந்துவிடும்!"

# 11

சிறந்த பேச்சாளன் ஒருவன் மேடைமீது கம்பீரமாக நின்று பேசும்போது, அவனுடைய சொல் ஒவ்வொன்றும் எப்படித் தங்குதடையின்றி வந்துகொண்டிருக்குமோ அதுபோல, நடராசனின் வாயிலிருந்து உணர்ச்சியுடன் வார்த்தைகள் வந்துகொண்டிருந்தன. அவை ஒவ்வொன்றும் பாலுவின் மனச்சாட்சியை உசுப்பிவிட்டுக்கொண்டேயிருந்தது. முற்போக்கான எண்ணம் கொண்ட அவனுடைய உள்ளம், நடராசனின் கருத்துரைக்கு மறுப்புச் சொல்ல இடம் தரவில்லை. சிந்தனைத் தீ கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்க நீண்ட மௌனத்தில் ஆழ்ந்துவிட்டான்.

நீண்ட ஆலோசனையிலிருந்த பாலு நடராசனின் பக்கம் திரும்பினான். "நடராசா, நான் இதை எப்படிச் செய்யமுடியும்?"—என்று ஒரு கேள்வியை விட்டெறிந்தான்.

"தங்கம் மேஜராகிவிட்டாளென்று சொன்னாயே? ஆகையினால், பூபதியையும், தங்கத்தையும் சட்டபூர்வமாகத் தம்பதிகளாக்கமுடியும்! மற்றவர்கள் ஒன்றும் செய்யமுடியாது!"

"சரி அப்படித்தான் நடந்துவிட்டதென்று வைத்துக் கொள்வோம். இதனால் இன்னொரு சிக்கல் முளைக்கும். இந்தச் சிக்கல் என்னுடைய சொந்த வாழ்க்கையைப் பாதித்துவிடும்"

"அது என்ன... அப்படி...?"

"எனக்கும் மனோன்மணிக்குமுள்ள காதலைப்பற்றி உனக்குத் தெரியும். அவள் என்னைத் திருமணம் செய்யப் பூர்ண சம்மதத்துடனிருக்கிறாள். இந்த விஷயம் அவளுக்குத் தெரிய வந்தால் அவள் மனம் பெரிய போராட்டத்திற்குள் குதித்துவிடும். தாழ்ந்த சாதிக்காரன் ஒருவனை மணமுடித்துக்கொண்ட ஒருத்தியின் தமையனை மணாளனாகக் கொள்ள மனோன்மணியின் மனம் கூசாவிட்டாலும், அவள் பெற்றோர் என்னை மருமகனாக்கிக் கொள்ள மறுத்துவிடுவார்கள். சமூகத்தின் எதிர்ப்பையும், தாய்

தந்தையரின் எதிர்ப்பையும் நாம் அலட்சியம் செய்துவிடலாம். ஆனால், அவர்கள் அப்படி நடந்துகொள்ளமாட்டார்கள். குடும்ப கௌரவத்தை மதித்து நடப்பவர்கள். தாழ்ந்த சாதிக்காரனை மைத்துனனாக ஏற்றுக்கொண்ட என்னைத் தங்கள் மகளுக்கு மாப்பிள்ளையாக்குவதால் தங்களுடைய கௌரவத்திற்கும், அந்தஸ்திற்கும் தீங்கு வருமென்று எண்ணி மனோன்மணியின் விருப்பத்திற்கு இணங்கமாட்டார்கள். எங்களிருவருடைய காதலும், வாழ்வும் என்ன ஆவது?''

'' நீ சொல்வது உண்மைதான் பாலு. ஆனால், தங்கத்தின் விஷயம் குறுக்கிடாவிட்டால் உன்னுடைய காதல் நிறைவேறும் என்று நினைக்கிறாயா? எனக்கென்னவோ நம்பிக்கையில்லை!''

நடராசனின் இந்த அபிப்பிராயம் பாலுவுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஏன்?'' என்று படபடப்புடன் கேட்டான்.

'' நீ ஏழை. அவர்கள் பணக்காரர்கள்!'' என்று அமைதியாகப் பதில் சொன்னான் நடராசன்.

'' நான் ஏழையென்பதை மனோன்மணியும், அவள் பெற்றோரும் அறிவார்கள். எனினும், மனோன்மணியின் இஷ்டத்திற்கு இணங்காமலிருக்கமாட்டார்கள். அவர்கள் குடும்பத்திலே மனோன்மணிதான் மூத்த பெண். அவள்மேல் உயர்ந்த மதிப்பும், நிறைந்த பாசமும் அவர்களுக்கு உண்டு. தங்கத்தின் கணவனாகப் பூபதி வராவிட்டால், ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் எண்ணாமல் மகளின் விருப்பத்தை நிச்சயம் நிறைவேற்றி வைப்பார்கள்!'

''பாலு, உன்னுடைய உள்ளம் அப்படித்தான் நினைக்கும். சாதி வித்தியாசத்தை எதிர்த்து நிற்கும் காதல் வெற்றியடையலாம். ஆனால், ஏழை பணக்காரன் என்ற அந்தஸ்து வேறுபாட்டை எதிர்த்து நிற்கும் காதல் வெற்றியடைவது கடினம். நம்மைப் போன்ற நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் ஜாதி உணர்ச்சியில் ஊறிக்கிடக்கிறார்கள். மனோன்மணியின் பெற்றோரைப் போன்ற மேல் வர்க்கத்தார் 'அந்தஸ்து' என்ற

உணர்ச்சியில் ஊறிக்கிடக்கிறார்கள். தங்கள் அந்தஸ்திற்குக் கீழுள்ளவர்களுடன் உறவு கொண்டாடுவது, அவர்களுடன் கலியாண சம்பந்தம் வைத்துக்கொள்வது அவர்களுடைய அந்தஸ்தைப் பாதிக்கும். எனவே, குபேரபுரிவாசிகளான அவர்கள் குடிசையூர் வாசியான உன்னை மாப்பிள்ளையாக எடுக்கமாட்டார்கள். மனோன்மணி பிடிவாதம் செய்தால், தங்கம் பூபதியைக் கலியாணம் செய்துகொண்டதை ஒரு சாக்காகக் காட்டித் தட்டிக் கழிப்பார்கள்!''

நடராசனின் இந்த விளக்கத்தைக் கேட்டதும் அசந்துவிட்டான் பாலு. ஆனாலும், மனோன்மணி தன்னுடன் நடந்துகொள்ளும் மாதிரியை நினைத்துப் பார்த்ததும் நடராசனின் அபிப்பிராயம் சரியாகத் தோன்றவில்லை பாலுவுக்கு. அதை அலசி ஆராயவும் அப்போதைய மனநிலை இடங்கொடுக்கவில்லை.

"நடராசா, நீ கூறுவது சரியோ, பிழையோ எனக்குத் தெரியாது. ஆனால், பெற்றோர் மறுத்தாலும், மனோன்மணி என்னைத்தான் கலியாணம் செய்துகொள்வாள். இது நிச்சயம்!'' என்றான் பாலு.

நடராசன் மெல்லச் சிரித்துவிட்டுக் கொஞ்ச நேரம் ஏதோ யோசித்தான். பிறகு, "அப்படியானால், தங்கத்திற்கும் பூபதிக்கும் நடக்கும் கலியாணத்தால் உன்னுடைய காதல் நிறைவேறாது என்று ஏன் நினைக்கவேண்டும்? இதனால் மனோன்மணியின் பெற்றோருடைய கருத்தும் மாறும் என்பதைப்பற்றி ஏன் கவலைப்படவேண்டும்?'' என்று இரண்டு கேள்விக் கணைகளைத் தொடுத்தான்.

பாலுவுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. நடராசனின் கேள்விகள் சரிதானென்றுபட்டது. எனினும் ஒரு பயம் அவன் மனதை உலுக்குவது போலிருந்தது. ஒன்றும் பேசாமலிருந்தான். 'ஒருவேளை நடராசன் கூறுவதுபோல மனோன்மணியைக் கலியாணம் செய்துகொள்ள அவளுடைய பெற்றோர் பெருந்தடையாக இருப்பார்களோ—' என்ற எண்ணமும் எழுந்தது. 'அப்படியானால் எனது நம்பிக்கையெல்லாம்?—'

இந்தக் கேள்வியுடன் அவன் சிந்தனை சுழன்றது. கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தவன் ஏதோ திடீரென்று எண்ணியவன்போல் நடராசன் பக்கம் திரும்பினான்.

"நடராசா, சதாசிவம் தம்பதிகள் சம்மதிக்காவிட்டாலும் மனோன்மணி தன்னுடைய காதலுக்காக அவர்களுடன் வாதாடுவாள். அவளுடைய போராட்டம் முழு வெற்றியடையவேண்டுமானால் அதற்குத் தடைகல்லாகத் தங்கத்தின் விஷயம் இருக்கக்கூடாது என்றுதான் நான் விரும்புகிறேன்!"

"அதற்காக என்ன எதிர்பார்க்கிறாய்?"

"அதைத்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்."

"யோசனை செய்யவேண்டியதுதான் பானு. ஆனால், யோசனையிலேயே நாட்களைக் கடத்திக்கொண்டுபோக, இது சமயமல்ல. உன் தங்கையும் பூபதியும் மரணக்கயிற்றில் ஊசலாடிக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நிமிஷமும் அவர்களுடைய முடிவு நாளை விரைவாக்கிக் கொண்டிருக்கிறது. ஆதலால், கெதியாக ஒரு முடிவுக்கு வந்துவிடு!"

இத்தனையையும் சொல்லிவிட்டு ஒருகணம் பானுவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். பிறகு தன்னுடைய நெற்றியைச் சுளித்தான். திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டவன்போல தன்னுடைய அதரங்களில் ஒரு குறுநகையை நெளியவிட்டான்.

"பானு, தங்கத்தின் காதல் நிறைவேறினால், உன்னுடைய காதல் நிறைவேறாது என்று வைத்துக்கொள்வோம். சகோதரியின் காதலுக்காக—பூபதியின் உயிரையும், தங்கையின் உயிரையும் காப்பாற்றுவதற்காக — உன் காதலைத் தியாகம் செய்தாலென்ன?"

நடராசன் இப்படிக் கேட்டதும் பானு, பாம்பை மிதித்தவன் போல் திடுக்கிட்டு நிமிர்ந்தான். மறுகணம், "என்ன, என்

காதலைத் தியாகம் செய்வதா?'' என்று படபடப்புடன் கேட்டான்.

"ஆம் பாலு, உன் சகோதரியின் வாழ்வுக்காக உன் காதலை ஏன் தியாகம் செய்யக்கூடாது?'' என்று மீண்டும் கேட்டான் நடராசன்.

இந்தக் கேள்வி பாலுவின் சிந்தனையைக் கிளறிவிட்டது. மனோன்மணியுடன் தனக்குள்ள காதலும், அந்தக் காதலின் விளைவால் ஏற்பட்ட இனிமையான சம்பவங்களும் அவனுடைய நினைவுக்கு வந்தன. இதயத்தின் அடித்தட்டிலே மடங்கிக் கிடந்த பல இனிய உணர்ச்சிகள் சடக்கென்று எழுந்து உட்கார்ந்து, அவனுடைய காதற் கனவுகளைக் கற்பனைத் திரைக்கு மீண்டும் கொண்டுவந்து நிறுத்தின. கலவரமும், குழப்பமும் ஒன்று சேர்ந்து சோர்வும், சோகமும் குடிகொண்டிருந்த பாலுவின் அப்போதைய உள்ளத்திலே இவை இனிய உணர்வைப் புகுத்தி காதல் வாழ்வின்மேல் உள்ள பாசத்தையும், ஆசையையும் கிளறிவிட்டன. சடக்கென்று நிமிர்ந்து நடராசனை ஏறிட்டுப் பார்த்தான்.

"தங்கத்தின் காதலுக்காக என்னுடைய காதலைத் தியாகம் செய்யச் சொல்கிறாய். அதே கேள்வியை நான் உன்னிடம் கேட்கிறேன். என் காதலுக்காக பூபதியும், தங்கமும் தங்கள் காதலை ஏன் தியாகம் செய்யக்கூடாது?''

பாலு இப்படிக் கேட்பானென்று நடராசன் எதிர்பார்க்கவில்லை. திகைத்துவிட்டான். நடராசனால் பாலுவின் கேள்விக்குப் பதில் சொல்லமுடியவில்லை. அசந்துபோய் அப்படியேயிருந்துவிட்டான். பாலு தொடர்ந்து பேசத்தொடங்கினான்.

"உண்மையாகச் சொல்கிறேன். இப்போது என் மனம் தத்தளிக்கிறது. தங்கத்தின் காதல் நிறைவேறாது போனால், அவளுடைய வாழ்க்கை பாழாகும் என்பது எவ்வளவு உண்மையோ, அதேபோல என்னுடைய காதல் நிறைவேறாவிட்டால் என் வாழ்க்கையும் பாழாகிவிடும். நான் நடைப்பிணமாகத்தான் திரிய

வேண்டிவரும். அதை நீ விரும்புகிருயா? என்னுடைய வாழ்க்கை நாசமாக வேண்டுமென்பது உன் எண்ணமா? என்னுடைய வாழ்க்கைக்காக மட்டுமல்ல, எங்கள் குடும்பத்தின் ஒற்றுமைக்காகவும் அவர்கள் தாங்கள் ஏன் தியாகஞ்செய்யக் கூடாது?"

ஒருவித உணர்ச்சி போதை பாலுவை உலுக்க இவ்வாறு கேட்டான். நடராசனின் மூளை மிகத் தீவிரமாக வேலை செய்தது. திடீரென்று பாலுவைப் பார்த்துக் கேட்டான். "அவர்கள் தங்கள் காதலைத் தியாகம் செய்தால் உன்னுடைய காதல் நிறைவேறும் என்று எண்ணுகிருயா?"

"நிச்சயமாக!" பாலுவின் குரலில் உறுதி தொனித்தது.

"நடக்காது பாலு! இது உன் சிந்தனைக்கு மட்டுமல்ல, உன் காதலுக்கும் ஒரு சவால்!" என்ருன் நடராசன்.

பாலுவுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. "நீ தான் அப்படி நினைக்கிருய். உன்னுடைய தத்துவக் கண்களுக்கு, எங்கள் காதலின் உறுதி தெரியாது. மனோன்மணியின் உள்ளத்தை நீ அறியமாட்டாய், அறியவும் முடியாது! நான் சந்தோஷமாக இருக்க, காதல் வாழ்க்கை வாழ உனக்கு விருப்பமில்லைப்போலிருக்கிறது. மனோன்மணியைக் கலியாணம் செய்துகொண்டால் நானும் பணக்காரனுகிவிடுவேன், சந்தோஷமாக வாழ்வேன் என்று எண்ணுகிருய். அது உனக்குப் பொருமையைக் கிளறிவிட்டதுபோலிருக்கிறது. அதனுல்தான், என்னுடைய காதல் நிறைவேருது என்று என் உள்ளத்தில் அவநம்பிக்கையை உண்டாக்கி மனோன்மணியின் மீதுள்ள தொடர்பைத் துண்டித்துக்கொள்ளத் தூண்டுகிருய். சகோதரியின் காதலைச் சாக்குக் காட்டி என் காதலைத் தியாகம் செய்யச் சொல்கிருய்! பொருமை, பொச்சரிப்பு, துவேஷம் — இவைதான் உன் வார்த்தைகளின் அர்த்தம்!"

தன் வாயிலிருந்து என்ன வார்த்தைகள் வருகின்றன என்ற உணர்வில்லாமலே ஆவேசமாகப் பொழிந்து தள்ளினுன் பாலு. நடராசன் பொறிகலங்கிக் கற்சிலைபோல் அப்படியே இருந்துவிட்

டான். இரத்தம் சுண்டிவிட்டது போன்று ஒரு உணர்ச்சி உடலெங்கும் ஓடி மறைந்தது. வியர்க்க, விறுவிறுக்கப் பதைபதைப்புடன் பாலுவைப் பார்த்தான். உள்ளத்திலே உணர்ச்சிகளும் எண்ணங்களும் கட்டிப் புரண்டன. என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அங்குள்ள கதிரையில் தொப்பென்று உட்கார்ந்தான்.

பாலுவும் அங்கிருக்க விருப்பமில்லாதவனைப்போல் எழுந்து வெளியே போய்விட்டான்.

பாலு தன்னைத் தவருக நினைத்துக்கொண்டு சூடாகப் பேசியதை எண்ணி மனம் வருந்தினுன் நடராசன். என்ருலும் அவனைக் கோபிக்கவில்லை. ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தான் அதிகமாக நேசிக்கிருன். தன் வாழ்க்கையை வளப்படுத்தத்தான் பாடுபடுகிருன். வாழ்வின் மேலுள்ள பற்றுத்தான் இதற்குக் காரணம். வாழ்விலே இனிமை இருக்கிறது என்று உணர்கிருன். அந்த இனிமை காதலிலேயிருக்கிறது என்று நினைக்கிருன். காதலும், வாழ்வும்! இந்த இரண்டிலும் மனிதனுக்கு நம்பிக்கை அதிகம். இவை தாக்கப்படும்போது மனிதன் புலியாக மாறிவிடுகிருன். இது இயற்கை. இதற்குப் பாலு விதிவிலக்கல்ல. அவனுடைய நிலைதான் இப்படித் தவருக எண்ணிப் பிழையாகப் பேசவைத்துவிட்டது. பாவம், அவன் என்ன செய்வான்! சரி இதற்கு ஒரு முடிவு காணத்தான் வேண்டும். முதலாவதாக, பூபதிக்குக் கடிதம் எழுதவேண்டும். அவசரத்தனத்தில், உணர்ச்சி வேகத்தில் ஏதாவது செய்துவிடுவான். அவர்களுடைய தற்கொலையை நாம் தடுக்கவேண்டும். இருவரையும் எப்படியாவது தம்பதிகளாக்கிவிடவேண்டும்!... இப்படியான எண்ணங்கள் உருண்டுகொண்டிருந்தன.

* * *

நடராசனின்மேல் நெருப்பைப் போன்ற வார்த்தைகளை உமிழ்ந்துவிட்டு, அறையில் இருக்கப் பிடிக்காதவனுய் வெளியே வந்த பாலுவின் உள்ளம் கொந்தளிக்கத் தொடங்கியது. ஒரு இடத்தில் அமைதியாக இருந்து சிந்திக்க முடியாத அளவுக்கு

குழப்பமும், ஆத்திரமும் சூழ்ந்து நிற்க நடந்துகொண்டேயிருந்தவன் மருதாணை சென்ட்ரல் தியேட்டருக்கு முன்னால் வந்து நின்றான். புயல் வீசிக்கொண்டிருந்த அவனுடைய உள்ளத்திற்குச் சிறிது அமைதிவேண்டும்போலிருந்தது. உடனே டிக்கட்டை எடுத்துக்கொண்டு உள்ளே போனான். அங்கே, படத்திலும் அவன் மனம் செல்லவில்லை. சகோதரியின் காதலுக்காக உன் காதலைத் தியாகம் செய்தாலென்ன ?... உன்னுடைய காதல் நிச்சயம் நிறைவேறாது !'' என்ற நடராசனின் வாசகங்கள்தான் அவன் காதில் ஒலித்துக்கொண்டிருந்தன. அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் தன்னுடைய இனிய கனவுக் கோட்டைகளைத் தகர்த்தெறியும் வெடிகுண்டுபோலத் தோன்றியது அவனுக்கு. அந்த வார்த்தைகள் பெரிய மனப்போராட்டத்தைக் கிளப்பிவிட்டன.

படம் முடிந்து வெளிவரும்போதும் அவனுடைய மனப்போராட்டம் ஓயவில்லை. அறைக்கு அவன் வரும்போது மணி ஒன்றரையாகியிருந்தது. நடராசன் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான். பாலு கட்டிலில் சோர்வுடன் படுத்தான். நின்றுகொண்டிருந்த சிந்தனை நித்திரையை அணுகவிடாது தடுத்தது. நெடுநேரத்திற்குப் பிறகு நீண்டுகொண்டிருந்த சிந்தனையின் சூட்டைத் தாங்காது மூளை களைப்படைந்தது. அலுப்பும், சோர்வும் உடம்பைத் தாக்கின. அவனையறியாமலே இமைகள் மூடின. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அமைதியான நித்திரையில் ஆழ்ந்துவிட்டான்.

# 12

மறுநாள் காலை பாலு எழுந்திருக்கும்போது, மணி பத்துக்கு மேலாகிவிட்டது. அப்போது நடராசனில்லை. 'வேலைக்குப் போய்விட்டான் போலிருக்கிறது' என்று தனக்குள் முணு முணுத்துக் கொண்டு, முதல் நாளிரவு நடராசனின் மேல் அள்ளிவீசிய கடுஞ்சொற்களை நினைவுபடுத்திப் பார்த்தான். தன்னுடைய வார்த்தைகளில் எவ்வளவு விஷம் கலந்திருந்தது என்பதை அப்போதுதான் உணர்ந்தான், பாலு. சுவரில் தொங்கிக் கொண்டிருந்த நடராசனின் படத்தைப் பார்த்தான். சாந்தம் தவழும் முகம், பிரகாசமான விழிகள், தூயநெஞ்சை எடுத்துக் காட்டும் இனிய புன்னகை, அறிவின் வளர்ச்சியை எடுத்துக் காட்டும் விரிந்த நெற்றி...இத்துடன் இருந்த நடராசனின் உருவத்தைப் பார்த்ததும் அவனுடன் பழகியதிலிருந்து, அவன் செய்த உதவிகளும், கூறிய நல்லுரைகளும் ஞாபகத்திற்கு வந்தன.

'சீ... என்ன முட்டாள்தனம்! சந்திரனில்கூடக் களங்கம் உண்டு. நடராசனின் உள்ளத்தில் அதுகூட இல்லை. இன்று நான் உயிருடன் இருக்கிறேன். நாலு பெரிய வீடுகளில் டியூஷன் சொல்லிக்கொடுக்கிறேன், பணம் சம்பாதிக்கிறேன். மஞேன்மணியுடன் காதல் கொண்டிருக்கிறேன் — இதற்கெல்லாம் காரணம் நடராசன்தானே? பொருமையும், குறுகிய உள்ளமும் கொண்டவனுயிருந்தால் இந்த உதவிகளையெல்லாம் செய்வானு? வேலை கிடைக்காமல், கையில் காசில்லாமல், வறுமை வாட்டிவதைக்க, வாழ்க்கையில் கசப்பு மலிந்து, உள்ளம் நொந்து இருந்த வேளையில் அவன் எத்தகைய உதவிகளெல்லாம் செய்திருக்கிறுன்! "உடுக்கையிழந்தான் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு!" என்று வள்ளுவன் கூறிய நட்பின் இலக்கணத்திற்கு இலக்கியமாக நடந்துகொண்டானே...! அப்படிப்பட்டவனை மோசக்காருத்துள்ளவன் என்று குருட்டுத்தனமாகப் பேசிவிட்டோமே! தனக்காகவா என் காதலைத் தியாகம் செய்யும்படி சொன்னுன்? என் சகோதரிக்காக, அவளுடைய வாழ்வுக்காக என்னுடைய காதலைத் தியாகம் செய்யும்

படி சொன்னான். இதில் என்ன பிழை?... அவனுடைய குணத்தையும், தன்னலமற்ற தன்மையையும் அறிந்திருந்தும் வாயில் வந்தபடி பேசிவிட்டேன். அவன் மனம் எவ்வளவு வேதனைப்பட்டிருக்குமோ, எப்படிப் புண்பட்டிருக்குமோ—'

விழித்துக்கொண்ட பாலுவின் மனச்சாட்சி இவ்வாறு இடித்துக் கூறியது. அவன் உள்ளம் வருந்தியது. நடராசனிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு குளிக்கப்போனான்.

குளிக்கும்போதுதான் அவனுக்கு டியூஷன் ஞாபகம் வந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து வந்தபிறகும் டியூஷனுக்கும் போகவில்லை. பாடம் சொல்லிக்கொடுக்கும் விடுகளில் என்ன நினைக்கிறார்களோ—? மனோன்மணிகூட என்ன நினைத்தாளோ? இன்று கட்டாயம் போகவேண்டும் என்று எண்ணினான்.

* * *

அன்று வழக்கம்போல் எல்லா வீடுகளுக்கும் சென்று பாடம் சொல்லிக்கொடுத்துவிட்டு சொர்ண விலாசத்திற்கு வரும்போது இரவு எட்டு மணியாகிவிட்டது. அவன் போகும்போது மனோன்மணி மட்டும்தான் இருந்தாள். பாலுவைக் கண்டதும் மகிழ்ச்சியால் அவள் முகம் மலர்ந்தது.

"இரண்டு நாட்களில் வந்துவிடுவேன் என்று சொல்லிச் சென்றீர்கள். இன்றுடன் இருபது நாட்களாகிவிட்டன! ஒரு கடிதம்கூடப் போடக்கூடாதா?" என்றாள் மனோன்மணி.

"நான் கடிதம் எழுதக்கூடிய நிலையிலா இருந்தேன்?" என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்டே தன் காதலியைப் பார்த்தான். "மனோ, நான் போன நாள் தொடக்கம் ஒரே கரைச்சல். நிம்மதியேயில்லை; பல வேலைகள். கடிதம் எழுதலாமென்று நினைப்பேன். பிறகு...? என்று சொல்லி நிறுத்திவிட்டு, என்ன கூறுவது என்று ஒரு கணம் யோசித்தான். இதற்குள் மனோன்மணி, "பிறகு மறந்துவிடுவீர்கள். என்னுடைய

நினைவு இருந்தால்தானே—?" என்று அந்த வாசகத்தை முடித்து விட்டு முகத்தைக் கொஞ்சம் கோபமாக வைத்துக்கொண்டாள்.

கலியாணமான கணவன் மனைவிக்கிடையேதான் அடிக்கடி ஊடல் ஏற்படும் என்பதில்லை. கலியாணம் முடிப்பதற்கு முன்பாகவும் காதலர்களுக்குள்ளே ஊடல் உண்டாவது சகஜம். பானுவுக்கும் மனோன்மணிக்குமிடையில் அடிக்கடி ஊடல் ஏற்படுவதுண்டு. அப்போதெல்லாம் மனோன்மணியின் அழகிய முகம் இப்படித்தான் கோபத்தால் சிவந்து வெடுவெடு என்றிருக்கும். அந்தச் சமயங்களில், தன் அதரங்களில் குறும்புப் புன்னகை நெளிய அவனுடைய பட்டுக் கன்னத்தைச் செல்லமாகத் தட்டுவான். அவனுடைய அந்தக் குறுநகையும், கன்னத்தில் படும் கையின் ஸ்பரிச உணர்ச்சியும் சேர்ந்து அவளது கோபத்தைத் தீயிலிட்ட பஞ்சு பொசுங்குவதுபோலப் பொசுங்கச் செய்துவிடும். அதைத்தான் இப்போதும் கையாண்டான். மனோன்மணியின் முகம் குளிர் நிலவைப்போல் மாறியது.

"அதுசரி, நீங்கள் இன்று காலையில்தான் வந்தீர்களா!" என்று கேட்டாள் மனோன்.

"ஆம்" என்று புளுகினான் பானு. மனோன்மணியின் மாளிகைக்கு வரும்போதே, 'இன்று காலையில்தான் வந்தேன். என்று சொல்லவேண்டும். நாலைந்து நாட்களாகிவிட்டன என்றால், இத்தனை நாட்களாக ஏன் வரவில்லை?' என்று கேட்பாள். தன் மனநிலை சரியில்லையென்று சொல்லி அதற்குரிய காரணத்தையும் சொல்லவேண்டிவரும். தன்னுடைய மனப்போராட்டத்தையோ, வீட்டில் நடந்த சம்பவங்களையோ சொல்லக் கூடாது. அவள் அறிந்தால், இப்போதுள்ள பிரச்சினைகள் இன்னும் சிக்கலாகிவிடும்' என்று நினைத்துத்தான் இப்படிப் பொய் சொன்னான் பானு.

பானு சொன்ன பொய்யை நம்பிவிட்டாள் மனோன்மணி. "காலையில் வந்த உடனேயே இங்கு வந்திருக்கலாமே! எனக்குப் பொழுதே ஓடவில்லை. அம்மா சொர்ணத்தை அழைத்துக் கொண்டு மாமாவைப் பார்க்கக் கண்டிக்குப் போய்விட்டாள்.

மாமா அங்கேதான் நீதிவானுக இருக்கிருர். ஐயா கந்தோர் வேலையாக இன்று காலே காலிக்குப் போயிருக்கிருர். அவர் நாளைக்குத்தான் வருவார். நான் தனியாகத்தான் இருக்க வேண்டி வந்துவிட்டது. நீங்கள் வந்திருந்தால் சந்தோஷமாகப் பொழுதுபோயிருக்கும்?" என்ருள்.

"குணம் எங்கே?"

"அவனுக்குத் தலையிடிக்கிறது என்று சொல்லிப் படுத்து விட்டான்!" என்று கூறிவிட்டு "வில்லியம் வில்லியம்...!" என்று உள்ளே குரல் கொடுத்தாள் மனேன்மணி.

சில விநாடிகளுக்குள் வில்லியமும் அங்கு வந்தான். மனேன்மணி பாலுவைச் சுட்டிக்காட்டி, "ஐயாவுக்கும் சேர்த்துச் சாப்பாடு தயார் செய்!" என்று உத்தரவிட்டாள். அவன் சரி, என்று தலையை ஆட்டிவிட்டு உள்ளே சென்ருன்.

பாலு அந்தப் பங்களாவில் பலதடவை சாப்பிட்டிருக்கிருனதலால் அவன் ஆட்சேபிக்கவில்லே.

"சரி, யாழ்ப்பாணம் போனீர்களே, உங்கள் சகோதரியின் கல்யாணத்தைப்பற்றி என்ன முடிவு செய்தீர்கள்?" என்று உரையாடலேத் தொடர்ந்தாள் மனேன்மணி.

"இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லே,"

"ஏன்"

மனேன்மணியின் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது கஷ்டமாயிருந்தது. ஒன்றும் பேசாமல் சிகரட்டைப் பற்ற வைத்தான்.

"ஏன் முடிவாகவில்லே? மாப்பிள்ளை கிடைக்கவில்லேயா?" என்று மீண்டும் அதே கேள்வியைக் கேட்டாள், மனேன்மணி.

பாலுவுக்குச் சட்டென்று பூபதியின் நினைவு வந்தது. அவனை மனதில் எண்ணிக்கொண்டே, "மாப்பிள்ளையைப்பற்றி கவலையில்லே......!" என்ருன்.

" அப்ப, பணத்தைப்பற்றித்தான் கவலையாக்கும்? எவ்வளவு சீதனம் வேண்டுமென்கிறார்கள்? பாலு, காசைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். என் ஐயாவிடம் சொல்லி, பத்தாயிரம் ரூபாய் வாங்கித்தருகிறேன் அதைக்கொண்டு உங்கள் சகோதரியின் கல்யாணத்திற்கு முடிவுசெய்யுங்கள்!"

இதை கேட்டதும் பாலு திகைத்துவிட்டான். "பத்தாயிரம் ரூபாயா...! எனக்கா...!" என்று ஆச்சர்யத்துடன் கேட்டான்.

" ஆம். உங்களுக்கு ஆச்சர்யமாயிருக்கும் பாலு. உங்களுக்காக இந்த உதவியை நான் செய்யக்கூடாதா?" என்று அன்பாகக் கேட்டாள்.

பாலுவின் சிந்தனை வேறு எங்கேயோ இருந்ததால் மனோன்மணி சொன்னது காதில் விழவில்லை. "பத்தாயிரம் ரூபாய்...! பத்தாயிரம் ரூபாய்!" என்று அவன் வாய் முணுமுணுத்தது. அவன் மனக்கண்முன் பூபதியின் உருவம் வந்து நின்றது. "வேண்டாம் மனோ, வேண்டாம். உன் ஐயாவிடம் கேட்க வேண்டாம்!" என்றான் பதட்டத்துடன்.

மனோன்மணி மெல்லச் சிரித்தாள். "பயப்படுகிறீர்களா பாலு? பத்தாயிரம் ரூபாயை எப்படித் திருப்பித் தருவது என்று திகைக்கிறீர்கள் போலிருக்கிறது. பாலு, நான் உங்களுக்குச் சொந்தமாயிருக்கும்போது என் பணமும் உங்களுக்குச் சொந்தம் தானே? பத்தாயிரம் ரூபாய், பெரிய விஷயமா?... உங்கள் மேல் ஐயாவுக்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறதென்பது தெரியும் தானே?"

' ஆம். மனோ, தெரியும். நன்றாகத் தெரியும். என்றாலும்..."

"ஐயாவிடம் பணம் வாங்குவதால் உங்களுடைய சுயமரியாதைக்குப் பங்கம் ஏற்படுமென்று எண்ணுகிறீர்களா? உங்கள் சுயமரியாதையில் எனக்கும் அக்கறை உண்டு. அதற்கு

மாருக நான் ஏதும் செய்வேன் என்று எதிர்பார்க்கிறீர்களா பாலு? நீங்கள் தப்பாக ஒன்றும் நினைக்கவேண்டாம். ஐயாவும் அப்படி நினைக்கமாட்டார். நாம் எத்தனை நாட்களுக்கு இப்படியே இருப்பது? கல்யாணம் செய்துகொள்ள வேண்டாமா? உங்கள் சகோதரியின் திருமணம் நடந்தால்தானே நாமும் கல்யாணம் செய்துகொள்ள முடியும்? நான் சொல்வதைக் கேளுங்கள். கூச்சப்படாதீர்கள்!"— இத்தனையையும் மூச்சுவிடாமல் கூறிமுடித்தாள் மனோன்மணி.

ஆர்வமும், அன்பும் ததும்ப மனோன்மணியிடமிருந்து வந்த வார்த்தைகளைக் கேட்டதும், பாலுவின் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது. தங்கையின் கல்யாணத்திற்கு அவள் உதவி செய்வாளென்று ஏற்கனவே ஓரளவுக்கு எதிர்பார்த்திருந்தான். என்றாலும், தான் கேட்காமலிருக்கவே, அவளாக வலிய அதைச் சொன்னதும் ஒரு கணம் தன்னையே மறந்து, கனிவுடன் மனோன்மணியைப் பார்த்தான். அவளுடைய பவள உதடுகளுக்குள் புன்சிரிப்புப் புதைந்திருக்கத் காதல் உணர்ச்சி பொங்க அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். தனக்காக, தன் காதலுக்காக எதையும் செய்வாளென்று, அந்த வார்த்தைகளும், பார்வையும் கூறுவது போலிருந்தன பாலுவுக்கு. இதே சமயம், "பாலு, உன் காதல் நிறைவேருது. இது நிச்சயம்" என்று நடராசன் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. "பைத்தியம். இப்போது நடராசன் இங்கே இருக்கவேண்டும். மனோன்மணி சொன்னதைக் கேட்டிருக்கவேண்டும்!......ம்...... நடராசன் தோல்வியடையப் போகிருன்..." என்று எண்ணியது அவன் மனம்.

மௌனமாயிருந்த பாலுவை நோக்கி, என்ன யோசிக்கிறீர்கள்?" என்ருள் அவள்.

"காசைப்பற்றிக் கவலைப்படவில்லை மனோ, ஆனல்...!

"ஆனல்...? வேறு எதைப்பற்றிக் கவலைப்படுகிறீர்கள்?"

இந்தக் கேள்வி அவளிடமிருந்து வந்ததும் கொஞ்சம் திண றிப் போனான் பாலு. "பணத்தைப்பற்றியோ, சீதனத்தைப் பற்றியோ அல்ல, கவலைப்படுவது. சாதியைப்பற்றித்தான் என்று சொல்ல வாயெடுத்தான். மறுகணம் அந்த வார்த்தை களை விழுங்கிவிட்டான். திடீரென்று அவன் மனக்கண்முன் வீட்டிலே நடந்த சம்பவங்கள் காட்சி கொடுத்தன. பாலுவின் முகம் கறுத்து வியர்த்தது. மனோன்மணியின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று யோசிப்பதிலே மூழ்கிவிட்டான்.

மனோன்மணி அதற்குமேல் ஒன்றும் சொல்லாமல் எழுந்து உள்ளே சென்றாள். சில நிமிடங்களுக்குள் திரும்பி வந்து, "சாப்பிட வாருங்கள். சாப்பிட்டுவிட்டுக் கதைக்கலாம்!" என் றாள்.

சாப்பாட்டு மேசைக்கு முன்னால் இருவரும் வந்து அமர்ந் தார்கள். அப்போதும் ஆழ்ந்த யோசனையிலிருந்தான் பாலு. வில்லியம் உணவு பரிமாற வந்தான். ஆனால், அவனைப் போகச் சொல்லிவிட்டுத்தானே பரிமாறினாள் மனோன்மணி.

பாலுவுக்குச் சாப்பாட்டிலே மனம் செல்லவில்லை. கை உணவுத் தட்டுக்குள் கோலம் போட்டுக் கொண்டிருந்தது. அவன் அப்படி மௌனமாக — கலகலப்பில்லாமலிருந்தது மனோன்மணிக்கு என்னவோ போலிருந்தது. மற்றச் சமயங் களில் மட்டுமல்ல, சாப்பிடும்போதுகூட கலகலப்பாகப் பேசிக் கொண்டும், பகிடிபண்ணிக்கொண்டும் இருப்பான். அவனு டைய வார்த்தைகளில் குறும்பும், கிண்டலும் நர்த்தனமாடும். அப்படிப்பட்ட பாலு, வழக்கத்திற்குமாறாக சோர்வுடனும், மௌனத்துடனும் இருந்தது மனோன்மணிக்குப் பிடிக்கவில்லை. ஒரு கேள்விக் குறியுடன் காதலனைப் பார்த்தாள்.

அந்தப் பார்வையின் அர்த்தத்தைப் பாலு விளங்கிக் கொண் டான். தன் மனப்போராட்டத்தை வெளிக்காட்டிக் கொண்டு இப்படி மௌனமாகவும், சோர்வாகவும் இருந்தால் மனோன் மணிக்கு பலவித சந்தேகங்கள் உண்டாகும் என்று எண்ணி, சந் தோஷமாக இருப்பதுபோல் நடிக்க ஆரம்பித்தான். உடனே

வழக்கம் போல் கலகலப்பாகப் பேசத்தொடங்கினான். காதலர்களிருவரும் திரும்பவும் கல்யாணத்தைப்பற்றியே கதைத்துக் கொண்டிருந்தனர்.

"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள். கல்யாணத்திற்கு ஏற்பாடுபண்ணுங்கள் !" என்றாள் மனோன்மணி.

"எனக்குக் கவலையில்லை. ஆனால், இப்போது தனக்குக் கல்யாணம் வேண்டாம். இரண்டு வருஷம் போகட்டும் என்று தங்கச்சி சொல்கிறாள் !" என்று புளுகினான் பானு.

இதைக் கேட்டதும் மனோன்மணி மெல்லச் சிரித்தாள். "பைத்தியக்கார மனுஷன் ; இதற்காகவா இத்தனை யோசனை ? தனக்காக அண்ணன் கஷ்டப்படவேண்டியிருக்கிறதே என்ற எண்ணத்தில் அவள் அப்படிச் சொல்லியிருக்கலாம். அவளும் ஒரு பைத்தியக்காரப் பெண். பானு, நீங்கள் ஒன்றும் யோசிக்க வேண்டாம். எல்லாம் நல்ல மாதிரியாக முடியும் !" என்று தங்கத்தின் கல்யாணக் கதைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாள்.

பானுவும் அதைத்தான் விரும்பினான். எனவே, தங்கத்தின் விஷயத்தைக் குறித்துப் பேச்சு எடுக்காது உணவிலே கவனத்தைச் செலுத்தினான்.

# 13

சாப்பாடு முடிந்ததும் வெளியே வந்து, பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று பாலு தன் கைக்கடியாரத்தைப் பார்த்தான். மணி 10-30 ஆகியிருந்தது.

'சரி, மனோ. எனக்கு நேரமாகிவிட்டது'' என்று கூறிக் கொண்டே எழுந்தான் பாலு.

"ஏன் இவ்வளவு அவசரம்?" என்ருள் மனோன்மணி.

"அவசரமா......சரிதான்போ! மணி என்ன தெரியுமா?" என்று கேட்டுக்கொண்டு அவளருகில் சென்று, தன் 'ரிஸ்ட் வாட்சை'க் காட்டினன்.

மனோன்மணி கலகலவெனச் சிரித்தாள். "மணி பத்தரை தானே? மனைவி உங்களுக்காகக் காத்திருப்பாள் என்று அவசரப்பட, நீங்கள் என்ன கல்யாணமானவரா? பிரமச்சாரிக் கட்டை! ஏன் இவ்வளவு அவசரம்?"

"ஆம். நான் பிரமச்சாரியாய் இருப்பதால்தான் இங்கிருந்து போகவேண்டுமென்கிறேன். நீயும் ஒரு பருவ மங்கை. நான் பிரமச்சாரி! அதனுலே...!" என்று வாசகத்தை முடிக்காமலே அவளைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தான்.

"அதனுலே என்ன...? அப்படி என்னதான் நடந்துவிடும்? ஒருவேளை உங்கள்மீது பாய்ந்துவிடுவேன் என்று பயப்படுகிறீர்களா?"

பாலு மெல்லச் சிரித்துவிட்டு, "ஏற்கனவே, என் இதயத்தில் பாய்ந்துவிட்டாயே, இன்னெரு தடவை பாயவேண்டுமா?" என்ருன்.

"நான் பாய்ந்ததால் உங்களுக்குப் பாதகம் ஒன்றும் ஏற்படவில்லையே? ஏன் பயப்படவேண்டும்?"

"அதற்காகச் சொல்லவில்லை மனோ. நாம் இருவரும் தனியாயிருக்கிறோம் பார்! அம்மாவும், ஐயாவுமில்லை. அதனாலே...!"

"அதற்காகத்தான் உங்களை இங்கேயிருக்கும்படி சொல்கிறேன். எனக்கு நித்திரையே வரவில்லை. நித்திரை வரும் வரை கதைத்துக் கொண்டிருக்கலாமே?"

"நேரமாகிவிட்டால் நான் எப்படிப் போவது?"

"போகவேண்டாம். இங்கேயே படுக்கலாம்".

"இங்கே படுப்பதா......! வேண்டாம் மனோ. அது சரியல்ல!"

"படுப்பதையும் நித்திரைகொள்வதையும் யார் சரியல்ல என்று சொன்னார்கள்? போகவேண்டும், போகவேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்காதீர்கள்" என்று சொல்லிக்கொண்டே மனோன் எழுந்தாள்.

"இங்கேயேயிருக்கும் அந்தநாள் இன்னும் வரவில்லையே?"

"அந்தநாளும் கெதியாக வந்துவிடும் பாலு".

"அதைத்தான் நானும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்".

"அது வருகிறநாள் வரட்டும். இப்போது நீங்கள் வாருங்கள்". என்று சொல்லி பாலுவின் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு உள்கூடத்தை நோக்கி நடந்தாள்.

நீல வானத்தைப்போன்று விரிந்துகிடக்கும் கடலை அடுத்துத்தான் "சொர்ண விலாசம்" மாளிகை கட்டப்பட்டு இருந்தது. ஆடம்பரமும், அழகுமிக்க அந்த மாளிகையின் பின்பக்கம் ஒரு பூந்தோட்டமும் இருந்தது. அதன் நடுவே ஒரு சிறு கட்டிடமும் இருந்தது. அந்தக்கட்டிடம் கீழே ஒரு மண்டபமும், மேலேயொரு மாடியும் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது.

மேல்மாடியிலே ஒரு அறை. அதையடுத்து மொட்டைமாடி. அங்கிருந்து அண்ணாந்து பார்த்தால், விரிந்துகிடக்கும் நீல வானமும், அதிலே நீந்திவிளையாடும் வெண்ணிலாவும், கண் சிமிட்டும் விண்மீன்களும் மனோகரமான காட்சியாக இருக்கும். மறுபக்கம் பார்த்தால் அலையெழும்பும் ஆழ்கடல் தெரியும்.

பாலுவை அழைத்துக்கொண்டு அந்த மேல் மாடிக்கு வந்தாள் மனோன்மணி. பாலு அதற்குமுன் அங்கே வந்திருந்து பொழுதுபோக்கியது கிடையாது. எனவே, சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, "அற்புதமான இடம், மனோ......! என்று கூறிக்கொண்டே, அங்கேயிருந்த கதிரையில் அமர்ந்தான் பாலு.

"ம்......!" என்ற ஓசையைக் கிளப்பிக்கொண்டே பாலுவைப் பார்த்த மனோ, "இங்கேவந்து இருவரும் சந்தோஷமாகப் பொழுது போக்கவேண்டும் என்று நினைப்பதுண்டு, இன்றுதான் அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது!" என்று சொல்லிக்கொண்டே மாடிச்சுவரின் அருகேசென்று கடலைப் பார்த்தாள்.

கருமுகிலை எதிர்த்து நீந்திக்கொண்டிருந்த நிலவு திடீர் என்று வானவெளியிலே பாய்ந்தது. அந்தக் குளிர் நிலவின் வெண்ணொளியாலே வானம் பளிச்சென்று இருந்ததோடு கடல் அலைகளும் தங்கம்போன்று தகதக என்று மின்னின. அந்த அழகைச் சில விநாடிகள் ரஸித்துக் கொண்டிருந்த மனோன்மணி மெல்லத் திரும்பினாள்.

"பாலு இங்கே வந்துபாருங்கள்!"

"என்ன?" என்று கேட்டுக்கொண்டே அவள் அருகில் சென்றான் பாலு.

"கடலைப்பார்க்க அழகாயில்லை?"

பாலு கடலைப் பார்த்துவிட்டு, வானத்தைப் பார்த்தான். வாரியிறைக்கப்பட்ட வைரங்கள்போன்று நட்சத்திரங்கள் ஒளிர்ந்துகொண்டிருந்தன. வான முகட்டிலே தங்க வட்டம்

போல் தொங்கிய வண்ணநிலவு நகைமுகங்காட்டிச் சிரித்தது. கடல் அலைகளின்மேல் தவழ்ந்துவந்த காற்று 'ஜிலு ஜிலு' என்று வீசிக்கொண்டிருந்தது. மலர்த்தொட்டிகளில் இருந்த பூக்களின் இனிய மணம், மனோன்மணி பூசியிருந்த 'சென்ற்' வாசனையுடன் இரண்டறக் கலந்து வீசிக்கொண்டிருந்தது. மனோகரமான அந்தச் சூழ்நிலை. பாலுவின் மனதிலே மகிழ்ச்சி வெள்ளத்தைப் பெருகச்செய்தது. இவ்வித சூழ்நிலையில், அழகும், பருவமும் நிறைந்த பெண்ணுடனிருந்த இந்த முதல் அனுபவம், அவனுடைய உணர்ச்சிகளைக் கிளறிவிட்டன. என்றுமில்லாத ஒரு இனிய சுகம், உணர்ச்சி அவனைப் போதை யேறச் செய்துகொண்டிருந்தது. அந்தப் போதைக் கிறுக் குடனே, 'மனோ' எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது? என்ருன்.

பாலுவைப்போலவே, அந்த இனிய சூழ்நிலையில் சொக்கித் தன்னை மறந்திருந்த மனோன்மணி "ஆம் பாலு, இன்றுபோல் இவ்வளவு மகிழ்ச்சியுடன் நான் என்றுமே இருந்ததில்லை!" என்று சொல்லிவிட்டு அவனைப் பார்த்தாள். கம்பீரமும், இளமையும், கவர்ச்சியும் அவனிடம் பொங்கி வழிவதுபோலிருந்தது அவளுக்கு. அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

பாலுவும் அப்படித்தான். தன் எதிரிலே நிற்கும் மனோன்மணியையே பார்த்துக்கொண்டு நின்ருன். பருவப்பொலிவுடன் எழில்மின்ன நின்றுகொண்டிருந்த அவள் எப்போதையும்விட அப்போது மிகுந்த அழகும், கவர்ச்சியும் உள்ளவளாகத் தோன்றினுள்.

நீண்ட மௌனத்திலிருந்த பாலு, "மனோ......" என்ருன்.

"என்ன பாலு?"

"எவ்வளவு அழகாயிருக்கிருய்?"

"இப்போது எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது?" என்று கூறிக்கொண்டே பாலுவின் கையைப் பிடித்தாள்.

பாலு அவளுடைய பட்டுக்கன்னங்களை வருடினன். இருவரின் ஸ்பரிசமும் அவர்களுக்கு உணர்ச்சிகளை ஊட்டி வளர்த்து கிறு கிறுக்கச் செய்துகொண்டிருந்தன. என்ன பேசுகிறோம், என்ன செய்கிறோம் என்பதையெல்லாம் மறந்து இன்பவுலகில் இருந்தனர்.

நேரம் போய்க்கொண்டேயிருந்தது. கோடைகால வரட்சியிலே எத்தனை கிளாஸ் தண்ணீர் குடித்தாலும் தாகம் அடங்குவதில்லை. அதைப்போல இளமைப்பருவமும் கோடைகாலத்தைப் போன்றதுதான். ஸ்பரிச உணர்ச்சிகள் எத்தனை தரம் பரிமாறப்பட்டாலும் காதல் தாகம் அடங்குவதில்லை. ரோஜா இதழ்போன்ற தன்னுடைய அதரங்களை அவன் எத்தனைமுறை சுவைத்தான். மலரைவிட மென்மைவாய்ந்த தனது கன்னங்களை எத்தனை தடவை முத்தமிட்டான் என்பது மனோன்மணிக்கே தெரியாது! அவள் தன்னைமறந்த ஒரு இனிய போதையில் சூழ்கியிருந்தாள்.

தணலைப்போன்றிருந்த இருவரின் பருவ உணர்ச்சிகளும் கொழுந்துவிட்டு எரியத்தொடங்கின அந்த இனிய வேதனையை மனோன்மணியால் தாங்கமுடியவில்லை. திடீரென்று அங்கிருந்த அறைக்குள் ஓடினாள். பாலுவும் பின்தொடர்ந்தான்.

உள்ளே ஓடிப்போன மனோன்மணி அங்கிருந்த மஞ்சத்தில் 'தொப்'பென்று விழுந்தாள். மறுகணம் பாலுவைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் காதலின் கனிவு அல்ல, வெறிதான் மண்டிக்கிடந்தது. அவளுடைய மார்பகம் விம்மிப் பூரித்துப் புடைத்தன. அவளது பவள உதடுகள் உணர்ச்சியால் துடித்தன. பாலுவும் தன் நிலைமறந்தான். தன் நெஞ்சம் கவர்ந்தவளை நெருங்கினன்.

*   *   *

நீண்ட நேரமாக இந்த உலகையே மறந்திருந்த அவர்களிருவரும் அப்போதுதான், தங்களுடைய இன்பப் போதையிலிருந்து விடுபட்டனர். மகிழ்ச்சியும், திருப்தியும் இருவருடைய உள்ளங்

களிலும் நிறைந்திருந்தன. ஒருவரை ஒருவர் பார்க்க முயன்றனர். அதுவரை 'தலைமறைவாக' இருந்த வெட்கம் அப்போது வெளிப்பட்டு ஒருவரை ஒருவர் பார்க்கத் தடை விதித்தது. குமுறிக் கொந்தளித்த அவர்களுடைய பருவ உணர்ச்சிகள் தணிந்து ஒரு பேரமைதியை இருவருக்குமிடையில் நுழைத்தது. என்றாலும் தாங்கள் அனுபவித்த அந்த இன்பத்தின் போதை மயக்கம் முற்றிலும் தெளிவடையாத நிலையில் ஒருவரை ஒருவர் கடைக்கண்களால் பார்த்துக் கொண்டிருப்பதிலும், புன்னகையை நெளிய விடுவதிலும் கொஞ்ச நேரத்தைச் செலவழித்தனர்.

திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவன்போல் "மனோ......" என்றான் பாலு.

அவள் '...ம்...' என்றாள்.

"நமது காதல் விஷயம் உன் ஐயா அம்மாவுக்குத் தெரியுமா?"—என்றான் பாலு.

மனோன்மணி மெல்ல அவன் பக்கம் திரும்பினாள். "தெரிந்திருக்குமென்று நான் நினைக்கவில்லை. இதை ஏன் கேட்டீர்கள் பாலு?"

"தெரிந்தால் என்ன நடக்குமென்று கற்பனை செய்யத்தான்!"— என்று கூறிக்கொண்டே கலைந்து கிடந்த அவளுடைய தலைமயிரை ஒதுக்கினான்.

"என்ன நடக்குமென்று நினைக்கிறீர்கள்?"

"நமது விஷயம் தெரியவந்தால் உன் வீட்டில் பெரிய குழப்பம் ஏற்படுமென்று நினைக்கிறேன்."

"குழப்பமா......?" — என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள் மனோன்மணி.

"ஆம். குழப்பம் ஏற்படும்!" என்று மீண்டும் சொன்னான் பாலு.

"ஏன் ?"

"நமது காதலையோ, நாம் இருவரும் கலியாணம் செய்து கொள்ள உறுதி கொண்டிருப்பதையோ அவர்கள் எதிர்பார்த் திருக்கமாட்டார்கள். இது விஷயம் அவர்களுக்குத் தெரியவந் தால் பெரிய அதிர்ச்சிக்குள்ளாவார்கள். அதைத் தொடர்ந்து குழப்பமும் ஏற்படும்."

"அதிர்ச்சியைக் கொடுக்குமென்று நான் நினைக்கவில்லை. ஆனால், ஆச்சர்யப்படுவார்கள். அதனால், நமது ஆனந்தத்திற்கு ஒன்றும் நேர்ந்துவிடாது !"

"எனக்கென்னவோ சந்தேகமாகத்தான் இருக்கிறது மனோ."

"ஏன் இந்த வீண் சந்தேகம் ?"

"உண்மையாகச் சொன்னால், எனக்கும் உனக்கும், என் குடும்பத்திற்கும் உன் குடும்பத்திற்கும் எவ்வளவோ வித்தியாச மிருக்கிறது. பணம், பட்டம், பதவி—இவற்றினால் உயர்ந்த செல்வாக்குடன் இருக்கும் உன் பெற்றோர், என்னை மாப்பிள்ளை யாக ஏற்றுக்கொள்வார்களா ? என்பதுதான் தினமும் என் உள்ளத்தில் எழுந்து நிற்கும் கேள்வி. என் விஷயம் பூராவும் உனக்குத் தெரியும். என்னிடம் என்ன இருக்கிறது. என் குடும்பந்தான் உங்களைப் போல் உயர்ந்த நிலையிலிருக்கிறதா ?"

ஒரு கேள்வியுடன் தன் வார்த்தைகளை நிறுத்திய பாலுவின் முகத்தைப் பார்த்தாள் மனோன்மணி. அவனுடைய முகம் சிறிது வாட்டமடைந்திருந்தது. கொஞ்ச நேரம் எதையோ யோசித்தாள் அவள். பிறகு.

"இதெல்லாம் வீண் சந்தேகம் பாலு. என் விஷயத்தில் அவர்கள் குறுக்கிடமாட்டார்கள் !"—என்றாள்.

"அப்படிக் குறுக்கிட்டால் ?"

"என் சொந்த விஷயத்தில் தலையிடக்கூடிய முறையில் நான் நடந்துகொள்ளமாட்டேன்."

"நீ அப்படி நினைக்கலாம் மஹோ. ஆனால், கலியாண விஷயத்தைப் பிள்ளைகளின் சொந்த விஷயமென்று பெற்றோர் நினைக்கமாட்டார்கள். திருமண விஷயத்தில் முக்கிய பங்கும், பொறுப்பும் எடுத்துக்கொள்கிறவர்கள் தாய் தகப்பன்தானே? அவர்கள் தலையிடமாட்டார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?"

"நீங்கள் சொல்வது உண்மைதான் பாலு. ஆனால், என் விருப்பத்திற்கு விரோதமாக எதுவும் செய்யமாட்டார்கள். இதுவரை அவர்கள் அப்படி நடந்துகொண்டதேயில்லை. என் திருமண விஷயத்திலும் அவர்கள் என்னுடன் ஒத்துவருவார்கள் என்பதில் அசையாத நம்பிக்கையிருக்கிறது. அதனால்தான் இப்படியெல்லாம் நடந்துகொண்டேன். இந்தத் துணிவும், நம்பிக்கையும் இல்லாவிட்டால் உங்களை இங்கு தங்கும்படி வற்புறுத்தியிருக்கமாட்டேன்."

"நீ சொல்வதில் எனக்கு நம்பிக்கை உண்டு மஹோ. உன்னிடம் நான் வைத்திருக்கும் நம்பிக்கையால்தான் உயிர்வாழ்கிறேன் என்று கூறவேண்டும். சுருக்கமாகச் சொன்னால், மஹோ! நீ இல்லாவிட்டால் எனக்கு வாழ்வே இல்லை. உன்னைச் சந்திக்கு முன்பதாக என்னுடைய வாழ்க்கை ஒரே போராட்டமயமாயிருந்தது. புயல் வீசிக்கொண்டிருந்தது. அமைதியோ, சந்தோஷமோ அணுவளவுகூட இல்லை. வாழ்க்கையிலே நம்பிக்கையேயில்லை! ஆனால், என்று உன்னைச் சந்தித்தேனோ, எப்போது நம்மிருவருக்குள்ளும் காதல் ஏற்பட்டதோ அன்று தொட்டு, என் வாழ்க்கையில் போராட்டம் ஓய்ந்தது, புயல் ஓய்ந்தது. தென்றல் வீசத்தொடங்கியது. அமைதியும் சந்தோஷமும் என் வாழ்க்கையில் குடிபுகுந்தன. இந்த நிலையில் நீ என்னிடமிருந்து பிரிக்கப்பட்டால், பழையபடி என் வாழ்க்கை புயலும், போராட்டமும் நிறைந்ததாகிவிடும். அந்த வாழ்க்கையை நினைத்துப் பார்த்தாலே உள்ளமும், உடலும் நடுங்குகின்றன. நீ இல்லாத அந்தப் பயங்கர வாழ்க்கையில், சோக

மும். துயரமும் சூழ்ந்த அந்த வாழ்க்கையில் கிடந்து வேதனையை அனுபவிப்பதைவிடச் சாவதுமேல். ஆம், மனோ. நீ இல்லாவிட்டால் நான் இருக்கமாட்டேன். நான் உயிரை மாய்த்துக்கொள்வேன். நிச்சயம் என் உயிரைப் போக்கிக்......!''

சடக்கென்று தன் கையால் பாலுவின் வாயைப் பொத்தினாள் மனோன்மணி. துயர வெள்ளத்திலே வந்த பாலுவின் உணர்ச்சி மிக்க சொற்குவியலை அதற்குமேல் கேட்கமுடியவில்லை மனோன்மணிக்கு.

"திகிலும், துக்கமும் நிறைந்த வார்த்தைகளை ஏன் சொல்கிறீர்கள்? இனி இப்படிக் கதைக்கவேண்டாம். வீண் சந்தேகங்களால் மனதைச் சஞ்சலத்திற்குள்ளாக்க வேண்டாம். நீங்கள் ஏழையென்பதைத் தவிர, வேறு எதிலும் என்னைவிடக் குறைந்தவரல்ல. காதல் ஏழையென்றும், பணக்காரனென்றும் பார்க்காது. காதலுக்கு, ஓரளவுக்கு மதிப்புக் கொடுப்பவர் ஐயா தவிரவும் உங்கள்மீது அவருக்கு உயர்ந்த மதிப்பும் மரியாதையுமிருக்கிறது. நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். நமது கலியாணம் நிச்சயம் நிறைவேறிவிடும் என்று பல தரம் நான் சொல்லியிருந்தும் எதற்காக வீண் சந்தேகம் கொள்கிறீர்கள்? நான் இல்லாத வாழ்க்கை உங்களுக்கு எப்படி வெறுப்பாயிருக்குமோ, அதுபோல, நீங்களில்லாத வாழ்க்கை எனக்கும் கசப்பைக் கொடுக்கும். கசப்பான அந்த வாழ்க்கையை நான் மட்டும் விரும்புவேனு பாலு?''

மனோன்மணியிடமிருந்தும் உணர்ச்சியுடன் உருண்டன சொற்கள். அவளுடைய வார்த்தையில் அவனுக்கு அசையாத நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. இதே சமயம், "சிந்தனைக்கு மட்டுமல்ல, உன காதலுக்கும் ஒரு சவால்!'—என்று நடராசன் கூறியது நினைவுக்கு வந்தது. "நடராசன் ஒரு பைத்தியகாரன்!''—என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அன்றிரவு முழுதும் இருவரும் நித்திரையே கொள்ளவில்லை. தங்களுடைய காதற் கனவுகளையும், கல்யாண வாழ்க்கையையும் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தனர்.

# 14

மறுநாள் பாலு தன் அறைக்கு வரும்போது முற்பகல் பதினெரு மணியிருக்கும். அப்போது நடராசனில்லை. உடம்பு அலுப்பாயிருந்ததோடு, நித்திரை மயக்கமும்கூட இருந்தது. உடனே படுத்துவிட்டான். நித்திராதேவி அவனைக் கட்டி அணைத்தாள்.

பாலு மீண்டும் கண்விழித்தபோது, பொழுதுபடும் சமயமாயிருந்தது. நேரமாகிவிட்டதாலும், மனம் சிறிது சோர்வுற்றிருந்ததாலும் பாடம் சொல்லிக்கொடுக்கப் போகவிரும்பாமல் அறைக்குள்ளேயே இருந்துவிட்டான். முதல் நாளிரவு நடந்த காதல் அனுபவங்களை மீண்டும் நினைத்துக் கொண்டான். அவை இன்பமும், மகிழ்ச்சியும் உள்ளவையாயிருந்ததை எண்ணி அவன் மனம் சந்தோஷத்தால் ஆரவாரம் செய்தது. திடீரென்று, தங்கத்தின் நினைவு ஓடிவந்தது.

'இதைப்போலத்தானே தங்கத்திற்கும், பூபதிக்கும் நடந்திருக்கும்? எங்களைப்போல் அவர்களும் எத்தனையோ இன்பக் கனவுகளையும், காதல் கோட்டைகளையும் கற்பனை செய்திருப்பார்கள்? எங்களுடைய காதல் இன்பத்திற்கும் அவர்களுடைய காதல் இன்பத்திற்கும் என்ன வித்தியாசமிருக்கிறது? மனேன்மணியில்லாத வாழ்க்கை எனக்கு எப்படி கசப்பையும், வெறுப்பையும் கொடுக்குமோ, தங்கமில்லாத வாழ்க்கை பூபதிக்கும் கசப்பையும், வெறுப்பையும் கொடுக்கும்? மனேன்மணியில்லாவிட்டால் எனக்கு வாழ்க்கையில்லை; நான் உயிரோடு இருந்தும் பயனில்லை. பூபதியும் அப்படித்தானே எழுதியிருக்கிருன்? என்னுடைய காதலையும், அதன் இன்பத்தையும் தியாகம் செய்ய விரும்பவில்லை. இது நியாயமாயிருக்கும்போது, அவர்களுடைய காதலைத் தியாகம் செய்யவேண்டுமென்று வற்புறுத்துவது எப்படி நியாயமாகும்?'

இப்படியான எண்ணங்கள் கேள்வியுருவில் எழும்பிக் குதிக்கத் தொடங்கின. திடீரென்று இன்னொரு எண்ணமும் தோன்

றியது. முதல் நாளிரவு தானும் மனோன்மணியும் காதல் இன் பத்தில் திளைத்ததைப்போல், தங்கமும், பூபதியும் திளைத்திருப் பார்களோ, அப்படி நடந்திருப்பார்களோ என்று எண்ணினான். மறுகணம் 'சே, அவர்கள் அப்படி நடந்திருக்கமாட்டார்கள்' என்று தனக்குள் சமாதானம் செய்துகொண்டான். எனினும், தான் நடந்துகொண்டதைச் சிந்தித்துப் பார்த்ததும், அவனு டைய உள்ளம் வெட்கத்தாலும், வேதனையாலும் கூசிற்று, உணர்ச்சி போதையில் மயங்கித் தாங்கள் தவறாக நடந்துகொண் டதற்காக வருத்தப்பட்டான். ஒழுக்கமும், நேர்மையும் கொண்ட அவனுக்கு மனோன்மணியும், தானும் காதல் இன்பம் அனுபவித்தது தவறானது என்று தெரிந்தது, தன்னுடைய அவ சரத்தனத்தை நொந்து கொண்டான். கல்யாணம் ஆவதற்குள் வித்தியாசமாக ஏதும் நடந்துவிடுமோ என்ற பயமும் எழுந்து அவன் உடம்பை நடுங்கச் செய்தது. உள்ளத்தில் திகில் ஏறி நின்றது. கொஞ்சநேரம்வரை அமைதியாக இருந்த அவனு டைய மனம் திரும்பவும் எண்ணப்போராட்டத்திற்குள் குதித்து விட்டது.

இரவாகிவிட்டது. அப்போதுதான் நடராசன் வந்தான். அறை திறந்திருந்தாலும், இருட்டாயிருந்தது. சிந்தனையின் சிகரத்தில் ஊஞ்சலாடிக்கொண்டிருந்த பாலு லைற்றைப் போட மறந்துவிட்டான். அறைக்குள் வந்த நடராசன் லைற்றைப் போட்டுவிட்டு கட்டிலைப் பார்த்தான். பாலு கண்களை மூடிக் கொண்டு கிடந்தான்.

"பாலு?" என்று கூப்பிட்டான் நடராசன்.

அவன் அப்போதுதான் கண்களைத் திறந்தான். "இராத் திரி எங்கே போனாய்?" என்று அடுத்த கேள்வியை வீசினான் நடராசன்.

அப்போதுதான் பாலுவின் கவனமும், எண்ணமும் நடராச னின்மேல் தாவிற்று. தான் அன்று அவனைக் கண்டபடி பேசி யதையிட்டுத் தன்னுடன் கோபமாயிருப்பான்; கதைக்கமாட் டான் என்று எண்ணியிருந்தான். ஆனால், தான் எண்ணியிருந்த

தற்கு மாருக நடராசன் வலியப் பேசியதைக் கண்டதும், அவனுடைய விசாலமான உள்ளத்தையும், விரிந்த நோக்கத்தையும் நினைத்து உள்ளம் நெகிழ்ந்தான். உடனே எழுந்து உட்கார்ந்துகொண்டு. "நடராசா, உன்னை நன்ருக அறிந்திருந்தும், முந்த நாள் இராத்திரி உன்னைக் கேவலமாக ஏசிவிட்டேன். அதையிட்டு நீ வருத்தப்படுவாயென்பதைப் பிறகுதான் உணர்ந்தேன். என்னை மன்னித்துவிடு!" என்று கூறிவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டான். நடராசனின் முகத்தைப் பார்க்க அவன் உள்ளம் கூசிற்று.

நடராசன் இலேசாகச் சிரித்துவிட்டு "அதை நான் மறந்துவிட்டேன் பாலு. ஒருவனுடன் மோதுப்படும் சம்பவங்களையும், அந்தச் சம்பவங்கள் எழுப்பும் உணர்ச்சிகளையும் பொறுத்துத்தான் அவனுடைய மனோநிலை உருவாகிறது. அப்போதிருந்த உனது மனோநிலை எனக்கு இருந்தால் நானும் அப்படித்தான் ஏசியிருப்பேன். மனிதனுடைய உணர்ச்சிகள் எப்போதும் அறிவுக்குக் கட்டுப்பட்டிருப்பதில்லை. சிலசமயங்களில் அறிவை மீறிக்கொண்டு, இயற்கையாக அமைந்திருக்கும் நல்ல பண்பையும் மீறிக்கொண்டு வெளிவருவதுண்டு. அப்போது அவன் பிழையாகப் பேசவும், நடக்கவும் நேரிடுகிறது. அதற்காக ஒருவனுடன் பகை பாராட்டுவதோ, நட்பை இழப்பதோ முட்டாள்தனம்" என்ருன்.

இதைக் கேட்டதும் பாலுவின் உள்ளம் உருகியது. "உன்னுடைய மனவளர்ச்சியும், அறிவும் இவ்வாறு சொல்லத் தூண்டலாம். ஆனல் அன்று நான் உன்னை ஏசியது கொடுமை! மிகவும் கொடுமையான வார்த்தைகளைக் கூறிவிட்டேன். அதனல் உன் அன்பை இழந்துவிடுவேனே என்று பயந்துகொண்டிருந்தேன்.

"பாலு, நீ ஒரு பைத்தியம். நான் உன்மீது வைத்திருக்கும் நட்பிருக்கிறதே, அது காகிதத்தைப் போன்றதல்ல. உன் தீ போன்ற வார்த்தைகளுக்குக் கருகிவிட. அது இமயத்தைப் போன்று உறுதியானது. உனது கோபப்புயலுக்கு அது

அசைந்துவிடாது! நீ ஆத்திரம் கொண்டு ஆவேசமாகத் திட்டினுலும், நான் கோபப்படமாட்டேன். உன்னுடைய குணம் எனக்குத் தெரியும். என்மீது உனக்கு இருக்கும் அன்பின் ஆழத்தையும் நான் அறிவேன்!"

நடராசனின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பாலுவின் கண்களிற் கண்ணீர் வந்துவிட்டது. நடராசனுக்குத் தெரியாமல் அதைத் துடைத்துக்கொண்டான். இதே சமயத்தில், முதல் நாளிரவு தானும் மனோன்மணியும் அனுபவித்த காதலின்பத்தை நடராசனிடம் சொல்லலாமா என்ற ஒரு எண்ணம் தோன்றிற்று. ஆனுல், தான் நடந்துகொண்டது பிழை என்ற எண்ணம் அவனுடைய மனதில் ஏற்கனவே ஒரு பயத்தை உருவாக்கியிருந்ததால் இதைப்பற்றிச் சொல்லக்கூடாதென்று முடிவு செய்து கொண்டான்.

# 15

ஆஸ்பத்திரியிலிருக்கும்போது, பூபதிக்குச் சுயஉணர்வு வந்து, ஓரளவுக்குச் சிந்திக்கும் நிலைமை ஏற்பட்டதும், தான் தாக்கப் பட்டதும் தங்கத்தின் வீட்டில் நடந்த கலவரமும் ஞாபகத்திற்கு வந்தன. தனக்கும் தங்கத்திற்குமுள்ள காதலைச் சமூகம் எதிர்க் கிறது. அதனால் கல்யாணம் நடக்காது. தாய் தந்தையர்கள் தடையாக நிற்பார்கள் என்பது பூபதிக்குத் திட்டமாகத் தெரிந்து விட்டது. தனது காதல் நிறைவேறாது என்று நிச்சயம் செய்து கொண்டான். யாருக்கும் தெரியாமல் தங்கத்தைக் கடத்திச் சென்று, ரிஜிஸ்டர் திருமணம் செய்துகொள்ளலாமா என்று யோசித்தான். அவ்வாறு நடந்தால், சமூகத்தில் பெரிய பர பரப்பும், உயர்ந்த சாதிக்காரர்களென்று சொல்லிக்கொள்பவர் களிடையே ஆத்திரமும் உண்டாகும். இந்த வெளி அபாயத் தைச் சமாளிப்பதிலே காதல் வாழ்வில் உள்ள இனிமையை அனு பவிக்க முடியாது. இப்படிப் பகைப் புயல் வீசும்போது அமைதி யிருக்கமுடியாது. அமைதியும், இனிமையும் இல்லாவிட்டால் காதல் எதற்கு? கல்யாண வாழ்க்கைதான் எதற்கு? ஆம். இவ்விதமான பகையும், அபாயமும், எதிர்ப்பும், வெறுப்பும் நிறைந்த சூழ்நிலையிலே வாழ்வதைவிடச் சாவதுதான் மேல். சாதி, சமயம், அந்தஸ்து என்று பல்வேறு பகுதிகளாகப் பிரிந்து கிடக்கும் இன்றைய சமுதாய அமைப்பிலே உண்மையான காதல், தூய அன்பு வெற்றியடையப்போவதில்லை; காதல் வாழ்வு மலரப்போவதுமில்லை! இந்தச் சூதுநிறைந்த உலகில் வாழ்வதைவிடச் சாவதுமேல். ஆம். எவ்வித வேறுபாடும் இல்லாத மரணபுரிக்குச் சென்றுவிடுவது உத்தமம். அதுதான் நல்லது. தங்கத்தின் முடிவையும் அறிந்து, இருவரும் ஒன்றாகச் சாகவேண்டியதுதான். எங்களுடைய இந்தத் தீர்மானத்தை விளக்கி பாலுவுக்கு ஒரு கடிதமும் எழுதவேண்டும்—இப்படி யான சிந்தனைகள் எழுந்து ஒரு முடிவுக்கு வந்தான். ஆனால், தங்கத்தைச் சந்திப்பதற்கு முன்பே, அதாவது, ஆஸ்பத்திரியி லிருந்து வந்த மறுநாளே தங்கள் முடிவை விளக்கிப் பாலுவுக் குக் கடிதம் எழுதிவிட்டான். அதன் பிறகுதான் தன்னுடைய

அவசரத் தனத்தை நொந்துகொண்டான். தங்கத்தை அவன் இன்னும் சந்திக்கவுமில்லை, தன்னுடைய முடிவை அவளுக்குச் சொல்லவுமில்லை. தற்கொலை செய்துகொள்வதைப்பற்றி ஒரு திட்டமும் வகுக்கவில்லை. அதற்குள்ளாக நமது தீர்மானத்தைப் பாலுவுக்கு எழுதிவிட்டோம். ஒருவேளை அவன் போலிஸாருக்கு அறிவித்து ஏதாவது செய்துவிடுவானோ? நமது முடிவு முறிந்துவிடுமோ—என்றெல்லாம் கவலைப்படத் தொடங்கினான். அவனுக்கு மன அமைதியேயில்லை. திடீரென்று ஏதும் நடப்பதற்கு முன்பாக தங்கத்தைச் சந்தித்து முடிவைச் சொல்லிவிட்டுச் சாகவேண்டியதுதான் என்று துடித்துக்கொண்டிருந்தான். அவளைச் சந்திப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தான். தண்ணீர் எடுக்க கிணற்றுக்கு வருவாளென்று எதிர்பார்த்தபடி பின் வளவிலே காத்துக் கிடந்தான். ஆனால், அவள் வரவில்லை! ஆச்சர்யமும், திகிலும் அவன் உள்ளத்தில் புகுந்துவிட்டன. அவள் ஏன் வரவில்லை? அவளைக் காணவில்லையே: ஏன்? ஒருவேளை இங்கிருந்தால் தொல்லையென்று எண்ணி சொந்தக்காரர் வீட்டுக்கு அவளை அனுப்பிவிட்டார்களோ? இப்படியான பல எண்ணங்களும், கேள்விகளும் எழுந்தன. இந்த எண்ணச் சுழலுக்கிடையே நாலைந்து நாட்களைக் கடத்திவிட்டான்.

அன்றும் அதே எண்ணங்களுடன் உட்கார்ந்திருந்தான். அப்போது தபாற்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான். 'தங்கந்தான் எங்கேயாவது இருந்துகொண்டு எழுதியிருக்கிறாளோ?' என்ற சந்தேகத்துடன் அவசர அவசரமாகக் கடிதத்தை உடைத்துப் பார்த்தான். அது தங்கத்தின் கடிதமல்ல. நடராசனின் கடிதமென்று தெரிந்தது. எழுந்த பரபரப்பு அடங்கி, ஆச்சர்யம் மேலோங்க அஞ்சலைப் படிக்கத் தொடங்கினான்.

அன்புள்ள பூபதிக்கு,

வணக்கம். நாமிருவரும் ஒருவருக்கொருவர் புதியவர்களாயிருந்தபோதிலும், பாலுவின் கடிதங்கள் மூலமாக என்னைப் பற்றி நீ அறிந்திருப்பாயென்று நினைக்கிறேன். அதுபோல உன்னைப்பற்றியும் பாலுசொல்லியிருக்கிறான்.

பாலுவின் நெருங்கிய தோழன் என்ற முறையில் அவனுடைய குடும்ப விவரங்கள் அனைத்தும் எனக்குத் தெரியும். எனவே, உனக்கும், தங்கத்திற்குமுள்ள காதலையும் நான் அறிவேன் என்பதைச் சொல்லவேண்டியதவசியமில்லையல்லவா?

நீ, பாலுவுக்கு எழுதிய கடிதத்தை நானும் படித்தேன். அதில் நீயும், தங்கமும் தற்கொலை செய்யத் தீர்மானித்திருப்பதாகக் குறிப்பிட்டிருந்தாய்.

காதல் என்பது தென்றல். ஆனால், அது ஏமாற்றப்பட்டால் புயலாக மாறிவிடும். அந்தப் புயலிலே எத்தனையோ உயிர்கள் செத்துமடிய நேரிடலாம். ஆம். இதை நான் நன்ருக—தெளிவாக—அறிவேன்.

இரு இளம் உள்ளங்கள் ஒன்றை ஒன்று கவர்ந்து கருத்தொருமித்த காதற் செடியை வளர்ப்பது இயற்கை. ஆனால், சமுதாய வாழ்விலே ஆதிக்கம் செலுத்தும் சாதி. சமயம், அந்தஸ்து முதலிய வேறுபாடுகளென்ற நச்சு நீர், காதற் செடியைச் சிதைத்துச் சாகவைத்துவிடுகின்றன. இந்த காதற்செடி செத்து மடிந்ததைச் சகிக்காமுடியாது, காதலர்களும் தங்கள் வாழ்வை, தூக்குக் கயிற்றுக்கோ, நஞ்சுக் கோப்பைக்கோ, பாழுங் கிணற்றுக்கோ, உயிரைப் போக்கும் வேறு கருவிகளுக்கோ ஒப்படைத்துவிடுகிருர்கள். அவர்கள் இந்தச் சமுதாயத்தைச் சபித்துவிட்டு, சாவை நோக்கி ஓடுகிருர்கள். இப்படியான சம்பவங்கள் நம் நாட்டிலே தினமும் பெருகி வருகின்றன. ஈரமும், நேர்மையும் கொண்டவர்களின் நெஞ்சிலே வேதனைத் தணலைக் கொட்டும் இந்தச் சம்பவங்களின் எண்ணிக்கை ஏறிவருகின்றன. இந்தப் பட்டியலிலே உன்னுடைய பெயரும், தங்கத்தின் பெயரும் பொறிக்கப்படவேண்டுமென்று முடிவு செய்துவிட்டீர்கள்! தங்கள் காதல் தோல்வியில் முடிந்ததைப் பொறுக்கமுடியாமல், மரணத்தின் மடியிலே தவழ்ந்த அவசரக் காதலர்களைப்போல் நீங்களிருவரும் நடந்துகொள்ள முடிவு செய்துவிட்டீர்கள்!

வேண்டாம் பூபதி, வேண்டாம்! இந்த அவசர முடிவு வேண்டாம்! தற்கொலையென்பது கோழைத்தனத்தின் செயல்,

நெஞ்சிலே வலிமை கெட்டவர்களின் தவறான முடிவு. கொலை எப்படிக் கொடுமையானதோ, அதேபோல தற்கொலையும் கொடுமையானதுதான். ஒருவனுடையதை இன்னொருவன் கொல்வதற்கும், தன்னுடைய உயிரைத் தானே மாய்த்துக் கொள்கிறவனுக்கும் வித்தியாசமில்லை. அந்த மிருகச் செயலைச் செய்யவேண்டாமென்று மிக அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன். நீ மனிதப் பண்பு மலிந்தவனென்று எண்ணியிருக்கிறேன். எனவே, என்னுடைய வேண்டுகோளை ஏற்பாயென்று நம்புகிறேன்.

உலகில் மனிதன் பிறப்பது ஒரே ஒரு தடவைதான். உலகிலுள்ள லட்சக்கணக்கான உயிரினங்களைப் போன்றவன்தான் மனிதனும். எனினும், அவன் உயர்ந்தவன். உலகிலுள்ள எல்லா உயிரினங்களையும்விடச் சிறந்தவன். அவனுடைய வாழ்விலேதான் அளவிடற்கரிய உண்மைகளும், இன்பங்களும் இருக்கின்றன. உண்மைகளை உலகுக்கு அறிவித்தும், இன்பங்களை வாழ்வில் அனுபவித்தும் வாழவேண்டிய வாய்ப்பு ஒரே ஒரு தடவை தான் ஒருவனுக்குக் கிடைக்கிறது. அந்த வாய்ப்பை இழந்துவிடுவது முட்டாள்த்தனம் பூபதி, முட்டாள்தனம்! அறியாமை! சமுதாயத்திற்கு அளவிடமுடியாத நஷ்டம்!! ஆகவே, வாழப்பிறந்த மக்கள் சாவதைத் தடுக்கவேண்டுமென்ற கருத்துள்ள நான் உன்னையும், தங்கத்தையும் சாகவேண்டாமென்று அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

காதல் இல்லாத வாழ்வு, மனமொத்த கணவன் மனைவி கிடைக்காத வாழ்வு சுவையற்றது; சுகமற்றது; அமைதியற்றது; என்பது உண்மைதான். அதற்காகத் தற்கொலையா செய்து கொள்வது? அப்படிச் செய்வதால் உங்களுடைய இலட்சியம் நிறைவேறிவிடுமா?

தற்கொலை! இது எந்த ஒரு வாழ்க்கைச் சிக்கலையும் தீர்த்தது கிடையாது. வாழ்க்கையிலே புதைந்து கிடக்கும் எந்த ஒரு கொடுமையையும் நீக்கியதில்லை. ஆனால், போராட்டம் தீர்த்திருக்கிறது. ஆம். அறிவும், தெளிவும் கொண்ட, தீர்க்கமான

முடிவினால் வழிநடத்தப்படும் போராட்டம் தீர்த்திருக்கிறது. எத்தனையோ கொடுமைகளைக் கொன்று புதைத்திருக்கிறது. தோல்வியென்ற கடலில் மூழ்கப்போன எத்தனையோ காதற் கப்பல்களை மீட்டிருக்கிறது. காதல் இரதத்தைக் கல்யாண மாளிகைக்குள் இட்டுச் சென்று வெற்றி முரசு கொட்டியிருக்கிறது. ஆகவே, பூபதி, நீ சாகாதே! போராடு! என்று கேட்டுக் கொள்கிறேன். உன்னுடைய காதலைச் சிதைக்க வரும் தீய சக்திகளை, சமுதாயக் கொடுமைகளை எதிர்த்துப் போராடு! உன் காதலுக்காக, உன் சுகத்திற்காகப் போராடு! இந்தப் போராட்டத்திலே உனக்குச் சாவு வந்தால் சந்தோஷமாக ஏற்றுக்கொள்! ஆனால், மரணத்தை வலிந்து ஏற்றுக்கொள்ளாதே! போராட்டத்திலே நம்பிக்கையில்லாதவன், தன்னுள்ளத்திலே உரமில்லாதவன்தான் சமுதாயக் கொடுமைகளைக் கண்டு பயப்படுவான்! அவன்தான் தற்கொலை செய்துகொள்வான்! உன்னிடம் தைரியமும், தன்னம்பிக்கையுமிருக்குமென்று நம்புகிறேன். எனவே, தற்கொலை முடிவை மாற்றி போராடத் தீர்மானிப்பாயென்று எண்ணுகிறேன்.

உன் கடிதத்தைக் கண்டு பாலு பதைபதைப்புடன் இருக்கிறான். என்ன செய்வதென்றறியாது திகைத்து நிற்கிறான். "அப்படி ஒன்றும் நடக்காது!" என்று அவனுக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருக்கிறேன். நீ இப்போது செய்யவேண்டியது என்னவென்றால், தங்கத்தைச் சந்தித்து, அவளுக்குத் தேறுதல் சொல்லி, நம்பிக்கை ஊட்டி, அவசரத்தனத்தாலும், ஆவேசத்தாலும் ஏதும் செய்துவிடவேண்டாமென்று புத்திமதியைச் சொல்லிவிட்டு, நீ உடனே கொழும்புக்குப் புறப்படவேண்டியதுதான். உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். மற்ற விஷயங்களை நேரில் பேசிக்கொள்வோம்.

அன்புள்ள,
நடராசன்.

இந்தக் கடிதத்தைப் படித்தும் பலவிதமான உணர்ச்சிகள் குமுறியெழ ஆழ்ந்த சிந்தனையிலிருந்துவிட்டான். தன்னுடைய காதலுக்கு ஆதரவு தருபவர் தனக்கு எவருமில்லை என்று எண்ணி

யிருந்த பூபதிக்கு நடராசனின் கடிதம் பெரும் ஆதரவை அளித்தது. அவன் எழுதியுள்ள வார்த்தை ஒவ்வொன்றும் சரியென்று பட்டது. கருத்தாழமும், சிந்தனையைத் தூண்டக்கூடியதாயுமிருந்த அந்த அஞ்சலை இன்னொரு தடவை படித்தான் பூபதி. அதுவும், நடராசன் சொல்வது சரிதான். சாக முடிவு செய்த நான், போராடி, அந்தப் போராட்டத்தில் செத்தாலென்ன? காதலுக்காகப் போராடுவோம். அது கிடைக்காவிட்டால், அந்தப் போராட்டத்திலே சாவோம்! என்ற எண்ணங்கள் சுழன்றன. மரத்துப்போன அவனுடைய உள்ளத்திலே உற்சாகமும், தைரியமும், வீரமும் புகுந்தன. விறுவிறுப்பு ஏறிற்று; சோர்ந்திருந்த நரம்புகள் புடைத்தன. உடலெங்கும் புத்துணர்ச்சி பரவியது.

*　　*　　*

கடிதத்தைப் பற்றியும், கொழும்புக்குப் போகவேண்டியதைக் குறித்தும் அவசர அவசியமாகத் தங்கத்திற்கு அறிவிக்க வேண்டுமென்று எண்ணினான். அவளைக் காணத் துடித்தான்.

பின்னேரம், மணி நான்கு இருக்கும். தங்கத்தின் வளவுப் பக்கம் விழிகளைப் பதிய வைத்த வண்ணம் பழைய நினைவுகளுக்குள்ளே நீந்திக்கொண்டிருந்தான் பூபதி. திடீரென்று அந்தப் பக்கம் தோன்றினாள் தங்கம். புதையலைக் கண்டவன் எப்படிப் பூரிப்பானோ, அதுபோல பூரித்தவனாக வேலியண்டை ஓடிவந்தான் பூபதி. வெளியே வந்து நின்ற தங்கமும் அக்கம் பக்கம் பார்த்துவிட்டு வேலிப்பக்கம் வந்தாள்.

“தங்கம், இத்தனை நாள் எங்கே போயிருந்தாய்? உன்னைக் காணவில்லையே?”—என்று கேட்டுக் கொண்டே அவளுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்தான். அன்றலர்ந்த மலர்போல் பளபளப்புடன் மலர்ச்சியுடன் காணப்படும் அவளுடைய முகம், வாடி வதங்கிப் போயிருந்தது. விழிகள் சிறிது ஆழம் பாய்ந்து ஒளி மங்கிக் கிடந்தன. அவள் பூபதியின் வினவுக்கு விடை சொல்லாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் விழிகளில் கண்ணீர்த் துளிகள் பெருகி, கன்னங்களில் உருண்டன.

பூபதி திகைப்புடன், "என்ன தங்கம்? உனக்கு என்ன? சுகமில்லையா? ஏன் அழுகிறாய்?" என்று பதைபதைப்புடன் கேட்டான்.

"எனக்கு என்ன பூபதி...! பொன்னான உங்கள் உடம்பிலே, அந்தப் பொல்லாத மணியன் அடித்தானே... அடி அடியென்று அடித்தானே... உதைத்தானே...! ஐயோ பூபதி... பூபதி...!" என்று விம்மத் தொடங்கினாள்.

பூபதியிடமிருந்து ஒரு வேதனைச் சிரிப்பு வெளிப்பட்டது. "தங்கம் உனக்காக, நம் காதலுக்காக எதையும் தாங்குவேன்! மூடர்கள் மூர்க்கத்தனமாய்த் தாக்கிவிட்டால் நமது காதல் முறிந்துவிடுமா தங்கம்? மணியம் அடித்தான். அவன் ஒரு மடையன்! உன் நினைவிலே உணர்வுகளையெல்லாம் கலக்க விட்ட எனக்கு அவனுடைய அடி ஒவ்வொன்றும் ஒவ்வொரு மலர்ச் செண்டாயிருக்கும்போது எனக்கு எப்படி நோகும்? அதற்காக வருந்தாதே தங்கம்?"

"வருந்தாமல் இருக்கமுடியுமா பூபதி? அன்று நீங்கள் செத்துவிட்டீர்களென்றுதான் நினைத்தேன்."

"பைத்தியம். உன்னைவிட்டா?"

"இல்லை, பூபதி நீங்கள் இல்லாவிட்டால் நான்மட்டும் இருப்பேனா...? உடனே தூக்குப் போட்டுச் சாவதற்கு ஆயத்தம் செய்தேன். இதற்குள் அண்ணன் வந்து தடுத்துவிட்டார். இல்லாவிட்டால், இன்னேரம், எனது சாம்பல்தான் சுடுகாட்டிலிருக்கும்.

இதைக் கேட்டதும் பூபதியின் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது. தனக்காக, தன்னுடைய காதலுக்காக உயிரைத் தியாகம் செய்யும் ஒரு உத்தமி தனக்குக் கிடைத்திருக்கிறாளென்று பெருமிதமடைந்தது.

"எனக்கு இதெல்லாம் தெரியாதே!" என்றான்.

"நீங்கள் ஆஸ்பத்திரிக்குப்போன மறுநாளே எனக்கு உடம்பு சரியில்லை. அண்ணன் கொழும்புக்கு போன அன்று பிடித்த காய்ச்சல் நேற்றுப் பின்னேரம்தான் விட்டது. அறிவு நினைவேயில்லை. காய்ச்சல் கொஞ்சம் விட்டு உணர்வு வந்ததிலிருந்து உங்களுடைய நினைவுதான். ஒரு தடவையாவது பார்த்துவிடவேண்டுமென்று துடித்தேன். இன்று முழுதும் வேலிப்பக்கம் வருவதற்குச் சந்தர்ப்பம் இல்லை!"

இதைக் கேட்டதும் பூபதி பதறிப்போனுன். அவளுடைய முகம் வாடி, விழிகள் மங்கியிருந்த காரணம் அப்போதுதான் வெளிச்சமாயிற்று. நடராசனிடமிருந்து வந்த கடிதத்தைத் தங்கத்திடம் கொடுத்து, தன்னுடைய தீர்மானத்தையும் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, "ஆகையால் நான் நாளைக்குக் கொழும்புக்குப் போகிறேன். போனதும் அங்கு நடந்ததையெழுதுகிறேன். நான் திரும்பி வரும்வரை உன் உடம்பையும், உயிரையும் ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ளவேண்டும். ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம்!" என்ருன்.

"நான் வாழ்ந்தால் உங்களுடன் வாழ்வது. அல்லது சாவது என்று முடிவு செய்துவிட்ட பிறகு, நான் ஏன் கவலைப்படுகிறேன்? உங்கள் கருத்து எதுவோ அதன்படிதான் நடப்பேன்."

"சரி, தங்கம் நேரமாகிவிட்டது. உன்னைக் காணுவிட்டால் தேடக்கூடும். அதுவும் காய்ச்சலுடன் நிற்கிருய். சரி, போ...!" என்று அவசரப்படுத்தினுன்.

# 16

அன்று—ஞாயிற்றுக்கிழமை காலையில் தன் அறையில் திடீரெனக் காட்சியளித்த பூபதியைக் கண்டதும், அவனை ஆச்சர்யத்துடன் பார்த்தான் பாலு. வந்தது பூபதிதான் என்று உணர்ந்து கொண்டான் நடராசன். பாலுவைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்துவிட்டு, "வா பூபதி!" என்று அவனை வரவேற்றான். பாலுவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை பூபதியையும் நடராசனையும் மாறி மாறிப் பார்த்தான்.

"என்மேல் கோபமா பாலு?" என்று கேட்டான் பூபதி.

"இல்லை" என்று தலையை ஆட்டினான் அவன்.

"அப்ப, ஏன் கதைக்காமலிருக்கிறாய்?" என்று அடுத்த வினாவை வீசினான் பூபதி. ஆனால் பாலு ஒன்றும் பதில் சொல்லாமல் தலையைக் குனிந்துகொண்டான்.

"உன்னுடன் பேசக் கூச்சமாக இருக்கிறதாக்கும்!" என்றான் நடராசன்.

பாலு, நடராசனைச் சிறிது கோபத்துடன் பார்த்துவிட்டுத் திரும்பவும் தலையைக் குனிந்துகொண்டான்.

"உன் உடம்பு இப்போது எப்படியிருக்கிறது?" என்றான் நடராசன்.

"எல்லாம் சுகமாகிவிட்டது"

"அடி பலமானதோ?"

நடராசன் இப்படிக் கேட்டதும் பூபதி மெல்லச் சிரித்தான். அந்தச் சிரிப்பு பாலுவின் இதயத்தைக் குத்தியது. பூபதி பதில் ஒன்றும் பேசவில்லை. பாலுவும் வாயை மூடிக்கொண்டான்.

"பாலுவின் வீட்டில் எல்லோரும் சுகமா?" என்று கேட்டான் நடராசன்.

"எல்லோரும் சுகமாய்த்தானிருக்கிறார்கள். ஆனால், பாலு இங்கு வந்த நாளிலிருந்து தங்கத்திற்கு ஒரே காய்ச்சல் நேற்றுத் தான் கொஞ்சம் விட்டிருந்தது." என்றான் பூபதி.

இதைக் கேட்டதும் பாலு திடுக்கிட்டு நிமிர்ந்தான். "காய்ச்சலா...! வைத்தியரிடம் காட்டினார்களா? என்றான் துடிப்புடன்.

"காட்டித்தான் இருக்கவேண்டும்."

"நீ, இங்கே வந்தது தங்கத்திற்குத் தெரியுமா?" என்று இடையில் கேட்டான் நடராசன்.

"ஆம் .அவளிடம் சொல்லிவிட்டுத்தான் வந்தேன்" என்றான் பூபதி.

இந்தச் சமயத்தில் பாலுவைத் தேடிக்கொண்டு ஒரு நண்பன் அங்கே வந்தான். "என்ன பாலு இப்படியே இருக்கிறாய்? இன்னும் ரெடியாகவில்லை?" என்றான் அவன்.

அப்போதுதான் தன் சிநேகிதன் ஒருவனின் கல்யாணம்— போகவேண்டுமென்பது நினைவுக்கு வந்தது. 'டக்' கென்று எழுந்து "பூபதி, நடராசனுடன் கதைத்துக் கொண்டிரு. என் சிநேகிதன ஒருவனுக்கு இன்று கல்யாணம் மத்தியானத்திற்குள் வந்துவிடுகிறேன்!" என்று கூறிவிட்டுத் தன்னை அலங்கரித்துக் கொண்டு போய்விட்டான்.

அவன் போனதும் பூபதி பேச்சைத் தொடங்கினான். "என்னை இங்கு வரும்படி எழுதிய விஷயம் பாலுவுக்குத் தெரியாதோ?"

"ஆம். அவனுக்குத் தெரியாது. நான்தான் எழுதினேன். அவன் கடிதம் எழுதக்கூடிய நிலையிலில்லை" என்று கூறிவிட்டு, யாழ்ப்பாணத்திலிருந்து வந்த நாட்களிலிருந்து நாலைந்து தினங்களாக பாலு இருந்த நிலைமையையும், பூபதியின் கடிதம் வந்த பிறகு பாலு பதறிய விஷயத்தையும் விளக்கினான்.

நடராசன் கூறியதையெல்லாம் கவனமாகக் கேட்ட பூபதி மிகவும் வருந்தினான். துக்கத்தால் அவன் உள்ளம் துடித்தது. கொஞ்ச நேரம் மௌனமாயிருந்துவிட்டு, மீண்டும் பேசத் தொடங்கினான். "பானுவின் மனம் ரொம்பவும் குழம்பும், வேதனைப்படும் என்று எனக்குத் தெரியும். எனினும் தங்கத்தின் மேலும், என் மேலும் அவனுக்கு அதிக அன்பு இருப்பதால் எங்கள் பக்கம் நின்று வாதாடுவான் என்று எதிர்பார்த்தேன். முற்போக்கான உள்ளம் படைத்த அவன் எங்கள் காதலுக்குத் தடையாக நிற்கமாட்டான் என்று எதிர்பார்த்தேன்; நம்பினேன். ஆனால், அவன் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் வந்துவிட்டதை எண்ணும்போதுதான் என் உள்ளம் உடைந்தது. எங்கள் காதலை ஆதரித்து நிற்பவன் அவன் ஒருவன்தான் என்ற நினைப்பிலே தணலைக் கொட்டிவிட்டுச் சென்ற பிறகு உள்ளம்தான் நோகாமலிருக்குமா?" என்றான்.

பூபதியின் இந்த வார்த்தைகள், அவனுடைய நெஞ்சின் அடித்தளத்திலே புதைந்துகொண்டிருந்த கோபத்தீயை எடுத்துக் காட்டின. அமைதியாக வெளிவந்த அந்த வார்த்தைகளிலே சிறிது உணர்ச்சியும் கலந்திருந்தது.

நடராசன் பெருமூச்சு விட்டுவிட்டு, "பானு முற்போக்கான உள்ளம் படைத்தவன்தான். எனினும் உள்ளத்தில் உரமில்லாதவன்; சலன மனம் படைத்தவன். அவனுடைய அறிவு வளர்ந்திருக்கும் அளவுக்குத் துணிவு வளரவில்லை! இதுதான் விஷயம். நீ நினைப்பதுபோல் உங்கள் காதலை அவன் மதிக்காமலில்லை. சலன மனம் படைத்தவனாயிருந்தாலும் பெற்றோரையும், சமூகத்தையும் பொருட்படுத்தாமல் உங்களிருவரையும் தம்பதிகளாக்க பானுவைத் தூண்ட முடியும். ஆனால்...?"

"ஆனால்...? பானு வேறு என்ன நினைக்கிறான்?"

பூபதியிடமிருந்து வேகமாக வந்த இந்தக் கேள்வி வந்ததும் நடராசன் சில நிமிடங்கள் யோசனையிலாழ்ந்துவிட்டான். பிறகு, தனக்குள் ஏதோ தீர்மானித்துக் கொண்டவன்போல்,

பாலுவுக்கும், மனோன்மணிக்குமுள்ள காதலையும், தங்கத்திற்கும் பூபதிக்கும் திருமணம் நடந்தால் பாலுவின் காதலில் எழும் சிக்கலையும், இது சம்பந்தமாகத் தனக்கும் பாலுவுக்கும் நடந்த விவாதத்தையும் விரிவாக எடுத்துக் கூறியதோடு, பூபதியும் தங்கமும் தங்கள் காதலைத் தியாகம் செய்யவேண்டுமென்று பாலு எதிர்பார்ப்பதையும் சொன்னான்.

இதைக் கேட்டதும் பூபதி அதிர்ச்சியடைந்து கல்லாய்ச் சமைந்துவிட்டான். மனதிலே பெரும்புயல் வீசத்தொடங்கியது. முகம் வெளுத்து வியர்த்தது. விழிகள் கலவரத்துடன் நடராசனைப் பார்த்தன. பூபதியின் இந்த நிலையைக் கண்டு நடராசன் எவ்வித சலனமுமடையவில்லை; வருத்தப்படவுமில்லை. பாலுவின் காதலையும், பூபதியின் காதலைப் பற்றியும் அவன் கொண்டிருக்கும் எண்ணத்தையும் சொல்வதால் பூபதியின் சிந்தை குழம்பும், மனப்போராட்டம் எழும் என்று நடராசன் எதிர்பார்க்கத்தான் செய்தான். எனினும், பூபதிக்கு எழும் மனப்போராட்டம் ஒரு முடிவைக் கொடுக்கும். அந்த முடிவால் பூபதியின் காதலுக்கும், பாலுவின் காதலுக்குமுள்ள வித்தியாசத்தையும் இருவருக்குமுள்ள மனவளர்ச்சியையும், தியாக மனப்பான்மையையும் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுமென்று எண்ணினான்.

இவர்களிருவரும் இப்படிச் சிந்தனையிலீடுபட்டிருக்கும் போது பாலுவும் வந்துவிட்டான். உள்ளே நுழைந்த அவன், "இருவரும் என்ன யோசிக்கிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே உடுப்புகளைக் களைந்து ஸ்டாண்டில் மாட்டினான்.

கனவுகண்டவன் திடுக்கிட்டு விழிப்பவன்போல், சப்தம் வந்ததும் திடுக்கிட்டு நிமிர்ந்தான் பூபதி. நடராசன் ஒரு கதிரையில் அமர்ந்து அன்றையச் செய்திப்பேப்பரைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

பூபதி, பாலுவைக் கொஞ்சநேரம் உற்றுப்பார்த்துவிட்டு, "பாலு, உன் காதல் விஷயங்களையெல்லாம் நடராசன் சொன்னான். உன்னுடைய காதலுக்காக எங்களுடைய காதலைத் தியாகம் செய்தாலென்ன என்று கேட்டாயாம். நானும் தங்கமும்

தம்பதிகளாவதால் உன்னுடைய காதலுக்கு இடையூறு ஏற்படுமென்று நீ கருதினால், உன்னுடைய காதல் நிறைவேறுவதற்கு—நீயும், மனோன்மணியும் கணவனும் மனைவியுமாக மகிழ்ச்சியோடு வாழ்வதற்கு—எங்கள் காதலைத் தியாகம் செய்ய வேண்டுமென்று நீ விரும்பினால், உன் இஷ்டப்படியே எங்கள் காதலைத் தியாகம் செய்கிறோம். உனக்காக உன் சுகத்திற்காக நாங்கள் எதையும் தியாகஞ்செய்யப் பின்வாங்கமாட்டோம். எங்களுடைய காதலின் தன்மையையும், பெருமையையும் நீ உணராவிட்டாலும், உன்னுடைய காதலின் தன்மையையும், வளமையையும், நான் உணர்கிறேன். உன்னுடைய காதல் நிறைவேறுவதால் யாருக்கும் வருத்தமோ, நஷ்டமோ, தொல்லைகளோ ஏற்படாது. ஆனால் என்னுடைய காதல் நிறைவேறினால் எத்தனையோ தொல்லைகள், துயரங்கள் தொடரும். வேண்டாம். நான் இப்படிக் கூறுவதையிட்டு நீ, பல எண்ணக் கூடும். காதல் நிறைவேறாதென்று தெரிந்து, மனக் கஷ்டத்துடன் என் காதலைத் தியாகம் செய்கிறேனென்று நினைத்து விடாதே. என் காதல் நிறைவேறக்கூடிய நம்பிக்கை இருந்தாலும், நான் தங்கத்தைக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன். இந்த நிமிஷமுதல் அந்த எண்ணத்தை விட்டு விட்டேன். என் உள்ளத்தில் வெறுப்பில்லை, வேதனையில்லை. திருப்தியுடன்தான் என் காதலைத் தியாகம் செய்கிறேன்''.

அமைதியாகவும், உறுதியாகவும் இத்தனையையும் கூறி முடித்தான் பூபதி. இதைக்கேட்ட பாலு, அப்படியே அசந்து உட்கார்ந்துவிட்டான். அவனுடைய விழிகள் பூபதியின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தன.

நடராசன் பூபதியின் இந்த முடிவை ஓரளவுக்கு எதிர்பார்த்திருந்தானதலால், அவன் ஆச்சர்யப்படவில்லை. கொஞ்ச நேரம் மௌனமாக இருந்துவிட்டு, "பூபதி, இது அவசரத்தனமான முடிவு. உணர்ச்சி வேகத்தில் தெறித்து விழுந்த வார்த்தைகள்!" என்றான்.

பூபதியின் இதழ்களுக்குள் வேதனைச்சிரிப்பு ஒன்று நெளிந்து மறைந்தது. "வருந்துகிறேன் நடராசா, நீங்கள்கூட என்னை உணரவில்லையே......! அமைதியாக, ஆழ்ந்து சிந்தித்து விட்டுத்தான் கூறுகிறேன். பானு சந்தோஷமாக வாழவேண்டு மென்றுதான் விரும்புகிறேன். எங்களால் அவள் தன்னுடைய வாழ்க்கையை இழக்கவேண்டாம். என்னுடைய காதல் சாதி யைப் பார்க்கவில்லை. பானுவின் காதல் அந்தஸ்தைப் பார்க்க வில்லை. இந்தப்பேதங்களை எல்லாம் பார்க்காத காதலை நான் மதிக்கிறேன். ஒருவனுடைய காதலுக்காக மற்றொருவனுடைய காதல் தியாகம் செய்யப்படத்தான் வேண்டுமென்றால், அப் படியே செய்துவிடுவதுதான் காதலை கௌரவிக்கும் முறை; அதைப்போற்றும் முறை. நான் காதலைக் கௌரவிக்கிறேன்; போற்றுகிறேன். ஆகையால்தான் பானுவின் காதலுக்காக என்னுடைய காதலையிழக்க நான் சம்மதிக்கிறேன். இதனால் எனக்கு ஒரு வருத்தமுமில்லை. ஒருவனுடைய வாழ்க்கை மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பதற்கு என்னுடைய காதல் தியாகம் செய்வதற்குத் தகுதிவாய்ந்திருப்பதையிட்டுப் பெருமைப்படுகிறேன். உண்மையிலேயே பூரிப்படைகிறேன்!"

பூபதி தொடர்ந்து இப்படிக் கூறிவிட்டு, நடராசனைப் பார்த்தான். பானுவின்மேல் பூபதி கொண்டிருக்கும் அன்பை யும், அவனுடைய பரந்த உள்ளத்தையும் சிறந்த பண்பையும், பானுவின் உள்ளத்தையும், பண்பையும் ஒப்பிட்டுச் சிந்தித் துக் கொண்டிருந்தான் நடராசன். பானு ஒன்றுமே பேச வில்லை.

———

# 17

அன்று ஞாயிற்றுக்கிழமையாக இருந்ததால் ஏராளமானவர்கள் நேரத்துடன் விக்டோரியாப் பூங்காவுக்கு வந்துவிட்டார்கள். நடராசனும், பூபதியும் ஒரு பக்கமாகப் போய், அங்கிருந்த கல்லாசனத்தில் அமர்ந்தார்கள். பூங்காவிலிருக்கும் அழகிய மலர்களைப் போலவே, இளம் பெண்களும், இளைஞர்களும் ஆங்காங்கே ஜோடியாகக் காட்சியளித்தார்கள். அவர்களெல்லாம் காதலர்களாக இருக்கக்கூடும் என்று எண்ணினான் பூபதி. உள்ளத்திலே மகிழ்ச்சி, கண்களிலே கவர்ச்சி, முகத்திலே பொங்கி வழியும் பொலிவு, மணியோசையைப் போன்ற பேச்சு, சதங்கை குலுக்குவது போன்ற சிரிப்பு—இவற்றுடன் வந்து போய்க்கொண்டிருந்த இளங்காதலர்களையும், தம்பதிகளையும் கண்ட பூபதிக்கு, அவனுடைய கனவுக் காட்சிகளெல்லாம் நினைவுக்கு வந்தன. தானும், தங்கமும் இப்படிக் கைகோர்த்து இனிக்க இனிக்கப் பேசிக்கொண்டும், குலுங்கக் குலுங்கச் சிரித்துக் கொண்டும் சந்தோஷமாக உலாத்தப் போவதுபோல இதற்குமுன் கற்பனை செய்வது வழக்கம். உலகத்தின் இனிமையெல்லாம் தங்களிருவரின் ஒன்றுபட்ட அந்த சேர்க்கையில்தான் — அந்த சேர்க்கையின் விளைவால் எழும் மனோகரமான சம்பவங்களில்தான்—வழிந்து நிற்கும். அப்படிப்பட்ட சம்பவங்களிலே பூங்காவிலே உலாத்துவது, படம் பார்க்கப்போவது, கடற்கரைக்குப் போவது, நண்பர்களின் கலியாணத்திற்குப் போவது, ஊர்கள் பார்க்கப்போவது இன்னும் எத்தனை எத்தனையோ—இவைகளெல்லாம் நடக்குமா, சாத்தியமா? என்று பூபதி சிந்திக்கவில்லை. ஆனால், இப்படியெல்லாம் அவன் கற்பனை செய்திருந்தான்; கனவு கண்டுகொண்டிருந்தான். அவற்றிலே ஒன்று, இப்போது தன் எதிரே நடந்துகொண்டிருக்கிறது. ஆம். தன்னைப் போன்ற காளைகள், தங்கத்தைப்போன்ற தளிர்மேனியாளுடன் கைகோர்த்துக் களிப்புடன் உலவுகின்றனர்.

இப்படிப் பூபதி சிந்தித்துக் கொண்டிருக்கும்போது பாலுவின் நினைவும் ஓடிவந்தது. பாலுவும், மனோன்மணியும் கல

கலப்புடன் சிரித்துப் பேசிக்கொண்டு, சந்தோஷமாக, கைகோர்த்தபடி உலாத்துவதுபோன்ற ஒரு காட்சி அவன் மனக்கண்முன் தோன்றி நின்றது.

பூபதி இப்படிச் சிந்தனைக் குளத்தில் தன்னை மறந்து நீந்திக்கொண்டிருக்கும்போது நடராசன் அங்கிருந்த வாலிபர்களையும், வனிதைகளையும்பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தான். உடல் மினுக்கிகள், முகம் மினுக்கிகள், இவர்கள்தான் இப்போது பெருகிக்கொண்டு வருகிறார்கள். வேலையில்லாதோர் பெருகுவதுபோல! தோட்டத்திலே வேலை செய்யும் தொழிலாளி, வேறு துறைகளிலே பாடுபடும் பாட்டாளி ஆகியோருடைய வியர்வையால் விளையும் வெள்ளிப் பணம் மேல்நாட்டு ஆடம்பரச் சாமான்களுக்குச் செலவழிக்கப்படுவதற்குக் காரணம் இந்த அலங்காரிகள்தான். முடை நாற்றம் வீசும் முதலாளித்துவ நாகரிகம் முகமினுக்கிகளைத்தான் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறது. வாழ்வு நிர்வாணமாக்கப்படுகிறது. முகப்பவுடரும் உதட்டுச் சாயமும் விற்பனை செய்யும் முதலாளித்துவ நாடுகளான மேலைநாடுகள் இந்நாட்டிலே புகுந்து தேசியச் செல்வத்தைக் கொள்ளையடிக்கிறது. ரப்பரையும், தேயிலையையும் கொடுத்து, பவுடரையும், உதட்டுச் சாயத்தையும் அங்கங்களை வெளியே காட்டும் ஆடைகளையும் வாங்குகிறது இந்நாட்டு அரசாங்கம். இந்த வேதனை நடப்பு, வெட்கப்படவேண்டிய செயல் எப்போதுதான் இந்நாட்டைவிட்டு ஒழியுமோ—.

நடராசனின் சிந்தனைத் தீயிலே இப்படிப்பட்ட எண்ணப் பொறிகள் சிதறிக்கொண்டிருந்தன கொஞ்சநேரம் சென்றதும் கொழுந்துவிட்டெரிந்த தனது சிந்தனைத் தீயை அணைத்துவிட்டு, பக்கத்திலிருந்த பூபதியைப் பார்த்தான். அவனுடைய விழிகளிலிருந்து அப்போது கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது.

இதைக் கண்ட நடராசன் பதைபதைப்புடன் "ஏன் அழுகிறாய்?" என்றான்.

அப்போதுதான் திடுக்கிட்டு அவன் பக்கம் திரும்பினான் பூபதி. தன்னையறியாமல் தனது விழிகளில் நீர் வழிவதை அப்

போதுதான் அவன் உணர்ந்தான். "எதையோ நினைத்துக் கொண்டேன், என்னையறியாமலே கண்ணீர் வந்துவிட்டது" என்று சொல்லிவிட்டுக் கண்களைத் துடைத்தான் பூபதி.

அவன் அப்படிச் சமாதானம் சொன்னாலும், அவன் அழுத காரணத்தை ஓரளவுக்கு ஊகித்துக்கொண்டான் நடராசன். பூங்காவில் உலவும் இளங்காதலர்களின் இனிய காட்சி பூபதியின் காதல் நினைவுகளைக் கிளறி உள்ளத்திலே பெருகிக்கொண்டிருக்கும் துயரவெள்ளத்தை விழிகளின் வழியாகப் பாயவைத்துவிட்டது. பாவம்! எத்தனை மனக்கோட்டைகள் கட்டியிருப்பானோ—! எத்தனை இன்பக் கனவுகள் கண்டானோ—! அத்தனையும் இன்று பொசுங்கிவிட்டதை எண்ணித் தேம்புகிறான், என்று தனக்குள்ளே எண்ணினான். பூபதியைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது.

ஒரு நிமிடம் அவனை வருத்தத்துடன் பார்த்துவிட்டு, "பூபதி, உன்னுடைய காதலைத் தியாகம் செய்கிறேன் என்று பானுவுக்குச் சொல்லிவிட்டாய். ஆனால், உன்னுடைய உள்ளம் கரையில் கிடக்கும் மீனைப்போன்று துடிப்பதை நான் அறிவேன். உன்னுடைய காதலைப்பற்றி எனக்குத் தெரியும். அந்தக் காதலை இழக்க முன் வந்த உன் தியாக மனப்பான்மையை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் உன்னுடைய கண்ணீரைக் கண்டு கலங்குகிறேன்" என்றான் நடராசன் வருத்தத்துடன்.

"என் காதல் நிறைவேறாது என்று முதலில் எண்ணினேன். உங்களுடைய கடிதத்தைக் கண்டதும் என் உள்ளத்தில் நம்பிக்கை என்ற செடி முளைத்தது. இங்கே வந்ததும், அந்த நம்பிக்கைச் செடி கருகிவிட்டது. நான் இதை எதிர்பார்க்கவில்லை. இனி எதற்காக உயிர் வாழவேண்டும்?" என்று உடைந்த குரலில் கூறினான் பூபதி.

துயரத்தால் வெடித்துச் சிதறிய பூபதியின் இந்தச் சொற்கள் நடராசனின் இதயத்தைத் தாக்கிக் கலக்கியது. "அப்படி

N. SUBRAMANIAM, B. A. (Hons)
"THILEEPAN"
KALAIMAKAL NILAYAM
MULLIYAWALAI.



யானல் இனி என்ன செய்யப்போகிறாய்?" என்று ஒருவித சந்தேகத்துடன் கேட்டான்.

"முன்பு முடிவு செய்திருந்த தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டுவரப் போகிறேன்."

"தற்கொலை செய்யப்போகிறாயா?"

"ஆம். அதைத் தவிர வேறு வழியில்லை. காதலுக்காகப் போராடலாமென்றுதான் எண்ணியிருந்தேன். அந்தப் போராட்டத்திற்குக்கூட இனி இடமில்லை. எந்தக் காதலுக்காகப் போராடவேண்டுமென்று சொன்னீர்களோ, அந்தக் காதலைத் தியாகம் செய்த பிறகு போராட்டம் எதற்கு? காதலைத் தியாகம் செய்த பிறகு, அதை இழந்த பிறகு, வாழ்வுதான் எதற்கு? வாழத்தான் முடியுமா?"

"ஆம். வாழ்த்தான் வேண்டும். வாழமுடியும்!"

"அது வாழ்வாக இராது. உள்ளத்திலே வேதனையும், விசாரமும் கொண்டவனாக, உணர்வும், உற்சாகமும் இல்லாதவனாக நடைப்பிணம் போல் வாழ்வதும் ஒரு வாழ்வா? அப்படி வாழ்வதைவிடச் சாவது எவ்வளவோ மேல்!"

"நீ ஒரு பைத்தியம். அப்படிச் சாவதில்தான் என்ன பயன்? காதல் தியாகமும் சரி, உயிர்த் தியாகமும் சரி, அது பயனுள்ளதாக இருக்கவேண்டும். இப்போது உன்னுடைய உயிர்த் தியாகமும், காதல் தியாகமும் என்ன பயனைக் கொடுக்கும்? உண்மையைச் சொன்னால் உன்னுடைய இந்த இரண்டு தியாகங்களும் அர்த்தமற்றது; அனாவசியமானது."

நடராசனின் இந்த உபதேசத்தைக் கேட்டதும் அவனை ஆச்சர்யத்துடன் பார்த்தான் பூபதி. "ஏன், என்னுடைய காதல் தியாகத்தால் பாலுவின் வாழ்க்கை வளமுள்ளதாயிருக்கும். இது பயனில்லையா? என்று ஆச்சர்யத்தை விடாமல் கேட்டான்.

"ஆம் காதல் தியாகமானாலும் சரி, உயிர்த் தியாகமானாலும் சரி, அது ஒருவனுடைய வாழ்க்கையை வளமுள்ளதாக்கப் பயன்படக்கூடாது. ஒருவனுடைய எந்தத் தியாகமும் பலருடைய வாழ்க்கையை வளமுறப் பயன்படவேண்டும். அப்போதுதான் அந்தத் தியாகம் பொருளுடையதாக, உயர்ந்ததாக இருக்கும். சின்ன விஷயங்களுக்காகத் தனிப்பட்ட ஒருவருக்காக ஏன் தியாகம் செய்யவேண்டும்? அதனால் எந்த மாறுதலும், பயனும் ஏற்படாது".

அப்படியானால் நான் என்ன செய்யவேண்டுமென்று சொல்கிறீர்கள்?--என்று சிறிது ஆத்திரத்துடன் கேட்டான் பூபதி.

நடராசன் மெல்லச் சிரித்துவிட்டு, "தோல்வியும், துயரமும் சூழ்ந்திருக்கும் உள்ளத்திலிருந்து' செயல் ஊக்கமோ, தன்னம்பிக்கையோ துளிர்க்காது. இந்த நிலையில் உன்னிடமிருந்து இந்தக் கேள்விதான் பாயும். ஆனால் நான் சொல்வதைக் கவனி. ஒன்றுக்கும் கவலைப்படாமல் இங்கேயே இரு. எல்லாம் சந்தோஷமாக முடியும்".

"சந்தோஷமாகவா? எப்படி? நீங்கள் பகிடி பண்ணுகிறீர்கள்?"

"நான் ஏன் பகிடி பண்ணவேண்டும் பூபதி? வீணாக மனதை அலட்டிக்கொள்ளாதே. நிம்மதியாக இரு. நான் உன்னிடமிருந்து எதிர்பார்ப்பது இதுதான். மற்றவைகளையெல்லாம் நான் கவனித்துக்கொள்கிறேன்.

பூபதி இதற்குமேல் ஒன்றுமே பேசவில்லை.

# 18

வெள்ளவத்தைக்குப் போவதற்காக பஸ்ஸிலிருந்த பாலுவுக்குச் சிந்தனை சிறிட்டுப் பாய்ந்தது. பூபதியின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனுடைய காதில் ஒலித்துக்கொண்டிருந்தது. ஆறிக்கொண்டிருக்கும் காயம் தாக்கப்பட்டால் திரும்பவும் அப் புண்ணிலிருந்து ரத்தம் கசிவதைப்போல, இரண்டு மூன்று நாட்களாக ஓரளவுக்கு அமைதியுடன் இருந்த அவனுடைய உள்ளம், பூபதியின் வருகையாலும் அவனுடைய வார்த்தைகளாலும் திரும்பவும் கொந்தளிக்கத் தொடங்கியது. பூபதி தன்னுடைய காதலைத் தியாகம் செய்கிறேனென்று சொன்னது அவனுடைய மனதில் பெரிய புயலை எழுப்பிவிட்டது. சொர்ணவிலாசத்தில் தங்கி மனோன்மணியுடன் "காதல் லீலைகள்" புரிந்தானல்லவா; அன்றிலிருந்து பூபதி—தங்கம் இருவரின் காதலைப் பற்றி அவன் அதிகம் சிந்திக்கவில்லை. தானும் மனோன்மணியும் அனுபவித்த காதலின்பத்தை நினைத்துப் பரவசப்படுவதிலேயே பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தான். ஆனால், பாலுவின் இந்த இன்ப நினைவுகளையெல்லாம் பூபதியின் வார்த்தைகள் ஒதுக்கித் தள்ளிவிட்டது. இப்போது பூபதியின் வார்த்தைகளைப்பற்றிய எண்ணங்கள்தான் சுழன்று கொண்டிருந்தன. இது சம்பந்தமாக தான் நடராசனுடன் வாதிட்டதையும், "பூபதியும் தங்கமும் தங்கள் காதலைத் தியாகம் செய்தாலென்ன?" என்று தான் கேட்டதையும் நினைத்துக்கொண்டான். அந்தக் கேள்விக்குப் பூபதி இன்று பதில் சொல்லிவிட்டான். இதை நினைக்க, நினைக்க வேதனையும், வெட்கமும் அவனைச் சூழ்ந்தன. அவர்களுடைய வாழ்வுக்காகத் தன்னுடைய காதலைத் தியாகஞ்செய்ய மனம் இசையவில்லை. ஆனால், தன்னுடைய நன்மைக்காக, மகிழ்ச்சிக்காக, வாழ்வுக்காகப் பூபதி தன்னுடைய காதலைத் தியாகம் செய்துவிட்டான் என்று நினைத்துத் தன்னுடைய சுயநலத்தையும், பலவீனத்தையும் எண்ணி வெட்கப்பட்டான். பூபதிக்கு இருக்கும் தாராள மனம், தியாக உணர்ச்சி, மனோஉறுதி, தனக்கு இல்லையே என்று வேதனைப்பட்டான். தாழ்ந்த சாதிக்காரன் என்று சமூகத்தால் ஒதுக்கிவைக்கப்பட்ட பூபதி

யிடம் உயர்ந்த குணம், சிறந்த பண்பு, பாராட்டத்தக்க மனப்பான்மை முதலியவை, உயர்ந்த சாதிக்காரனென்று கருதப்படும் தன்னிடம் இல்லையே என்று எண்ணி தன்னையே நொந்துகொண்டான். நடராசன் தன்னையும், பூபதியையும் நிச்சயம் ஒப்பிட்டுப் பார்த்திருப்பான். அவனுக்குப் பூபதி உயர்ந்தவனுகவும், தான் தாழ்ந்தவனுகவும் தெரியும். சே! இதைவிட வெட்கக்கேடு என்ன இருக்கிறது. காதலைத் தியாகம் செய்யும் அளவுக்கு என்னிடம் மனஉறுதியில்லை. பூபதியிடம் இருக்கிறது என்று எண்ணியதும் அவமானத்தால் உள்ளமும், உடலும் குன்றிக் குறுகுவதுபோலிருந்தது. இதே சமயத்தில் பூபதி தன்மேல் கொண்ட களங்கமற்ற அன்பையும் எண்ணிப்பார்த்தான். 'என்மேல் உள்ள தூய நட்பின் காரணமாக, நான் வாழவேண்டுமென்று எண்ணுகிருன். எனவே, எனக்காகத் தன்னுடைய காதலை விட்டுக்கொடுத்து, அதைத் தியாகம் செய்து, தங்கத்திற்கும் பூபதிக்கும் மணம் செய்து வைத்தாலென்ன?' என்ற ஒரு எண்ணமும் ஓடிவந்தது. மறுகணம் மனோன்மணிக்குத் துரோகம் செய்வதா? என்ற மற்ருெரு கேள்வியும் அவன் உள்ளத்தில் எழுந்து நின்றது. அப்போதுதான் தன்னுடைய அவசரத்தை—உணர்ச்சிக்குத் தன்னை அடிமையாக்கிக் கொண்டதை—மனோன்மணியுடன் தேக சம்பந்தம் வைத்துக்கொண்டதை எண்ணி மனம் நொந்துகொண்டான். அவளை நினைத்து மனம் இரங்கினுன். பாவம் என்னையே நம்பியிருக்கிருள். கன்னிப் பெண்ணுயிருந்தாள். உணர்ச்சிக்கு அடிமையாகி அவளுடைய கன்னித்தன்மையை அழித்துவிட்டோம். இனிமேல் அவளைக் கைவிட்டால் அது துரோகம். ஒரு இளம் பெண்ணின் வாழ்வைக் குட்டிச் சுவராக்கிய பழி நம்மைச் சாரும். அவசரத்தனமாக அந்தக் காரியத்தைச் செய்திராவிட்டால் இன்று என்னுடைய காதலைத் தியாகம் செய்து பூபதியையும், தங்கத்தையும் தம்பதிகளாக்க முன் நிற்பேன். இனி என்ன செய்வது?...... அன்றைய இரவு மனோன்மணியுடன் உடலுறவு வைத்துக்கொள்ளாவிட்டால்,—சொர்ண விலாசத்திற்குப் போகாமலிருந்தால்......

அன்று நான் உணர்ச்சி வசத்தால் தவறிழைத்ததற்கு நான்தான் காரணமா...? இல்லை.... என் உணர்ச்சிகளைத் தூண்டி

யவள் மனோன்மணிதான்...! சே, அவள்மேல் குற்றம் எண்ணுவது பிழை. இருவரும் சேர்ந்துதான் தவறு செய்துவிட்டோம். எப்படியோ இந்தக் காரியம் நடந்துவிட்டது. இனி எந்தக் காரணத்தைக் கொண்டும் மனோன்மணியை மறப்பது, புறக்கணிப்பது மகாதுரோகம்.—இப்படி அவனுடைய மனச்சாட்சிக்கும், எண்ணங்களுக்குமிடையே பலத்த போராட்டம் நடந்துகொண்டிருந்தது. ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் திணறினான். சொர்ணவிலாசத்திற்குப் போகக்கூட அவன் மனம் விரும்பவில்லை. உடனே பஸ்ஸைவிட்டு இறங்கி அறைக்குத் திரும்பிவிட்டான்.

பாலு அறைக்கு வந்தபோது, பூபதியும் நடராசனும் இல்லை. அவர்களைப்பற்றி அவன் ஒன்றும் நினைக்கவுமில்லை. அந்த அளவுக்கு பாலுவின் மனம் குழம்பிக் கிடந்தது. 'தொப்'பென்று கட்டிலில் மல்லாந்து விழுந்து கண்களை மூடிக்கொண்டான்.

* * *

பூபதியும், நடராசனும் அறைக்குத் திரும்பும்போது இரவு எட்டு மணியிருக்கும். அவர்களிருவரும் வந்த சந்தடி கேட்ட பிறகுதான், பாலு சிந்தனை மயக்கத்தில் மூடிக்கிடந்த தனது விழிகளைத் திறந்தான். பூபதியைப் பார்க்க அவனுக்குத் தைரியமில்லை. வெட்கமாயிருந்தது. மனம் கூசிற்று. அவனிருக்கும் அந்த அறையிலிருக்கக்கூட பாலுவுக்குப் பிடிக்கவில்லை. இதற்குள், நடராசன் பூபதியையும், பாலுவையும் சாப்பிட அழைத்தான். பூபதி தனக்குச் சாப்பாடு வேண்டாமென்று சொல்லிவிட்டான். எவ்வளவோ வற்புறுத்தியும் தனக்கு வயிறும், உள்ளமும் சரியில்லாததால் சாப்பாடுவேண்டாமென்று தயவாக வேண்டிக்கொண்டதால், மேலும் அவனை வற்புறுத்தவில்லை. பாலுவுக்கும் சாப்பிட மனமில்லை. ஆனால், அந்த அறையிலிருப்பதைவிட வெளியே போவது நல்லதென்று பட்டதால் நடராசனுடன் வெளியே வந்தான்.

அவர்கள் உணவு விடுதிக்குக் கால் மைல்தூரம் செல்ல வேண்டும். இருவரும் உரையாடியபடி மெதுவாக நடந்துகொண்டிருந்தனர்.

"பானு, நீ, விரும்பியதுபோல், பூபதி தன்னுடைய காதலைத் தியாகம் செய்யச் சம்மதித்துவிட்டான். அவன் சாதியில் தாழ்ந்தவனென்றாலும், மனிதனில் உயர்ந்தவன். அவன் தன்னுடைய காதலைத் தியாகம் செய்வதன் மூலமாகத் தன் வாழ்க்கையை இழக்கச் சம்மதித்துவிட்டான். ஒரு நண்பனுக்காக இத் தியாகத்தைச் செய்ய முன்வந்த பூபதியை மனிதரில் உயர்ந்தவனென்று நான் கருதுகிறேன்; இதை எண்ணும்பொது உன்மீது வருத்தமும் ஏற்படுகிறது. அவனுக்கு இருக்கும் இதயம் உனக்கு இல்லையென்பதுதான் அந்த வருத்தம். பூபதியின் காதல் உன்னுடையதைப் போன்றதல்ல. அவன் தங்கத்தைக் கல்யாணம் செய்து கொண்டால் சாதிப் பிரச்சினைக்கு ஒரு சவுக்கடி கிடைக்கும். சீதன வழக்கத்திற்கு ஒரு சம்மட்டி அடி கிடைக்கும். சுருங்கச் சொன்னால், அவர்களுடைய திருமணம், வளர்ந்து வரும் முற்போக்கு உலகத்தின் முழக்கமாயிருக்கும். அவர்களுடைய காதலும், கலியாணமும், அவர்களுக்கு மட்டுமல்ல, சமுதாயத்திற்கே நன்மை பயக்க வல்லது; சமூக மாறுதலுக்கு ஒரு எடுத்துக்காட்டாயிருக்கும். முற்போக்கு எண்ணம் படைத்தவர்களாயிருந்தும் செயலில் இறங்க யோசித்துக்கொண்டிருக்கும் எத்தனையோ இளைஞர்களுக்கு உற்சாகத்தை ஊட்டும். அவர்களையும் அவ்வழி சென்று சமுதாயக் கோணலை நிமிர்த்தத் தூண்டும். மற்றவர்களுக்கும் ஒரு முன்மாதிரியிருக்கும். வைதிகர்களின் வரட்டுக் கொள்கைகள் வாழ்க்கைக்கு உதவாது என்பதை உலகுக்கு எடுத்துரைக்கும். இன்னும் எத்தனையோ நன்மைகள் உண்டு அவர்கள் திருமணத்தால். ஆனால், உன்னுடைய காதல் கல்யாணத்தால் இந்த நன்மைகளெல்லாம் கிடைக்குமா? நன்றாக யோசித்துப் பார்! சிந்தித்துப் பார்த்தால் தியாகம் செய்யப்படவேண்டியது உன்னுடைய காதலே தவிர, பூபதியின் காதலல்ல. இதைத்தான் நானும் விரும்பினேன்: எதிர்பார்த்தேன். ஆனால், நீ உன் சொந்த நலனைக் கருதி காதலைத் தியாகம் செய்ய மறுத்துவிட்டாய். நான் வெட்கப்படுகிறேன்; வேதனைப்படுகிறேன் பானு. வாழ்க்கையில் காதல் ஒரு முக்கிய அம்சமே தவிர, அதுவே வாழ்க்கையல்ல. ஒருவன் தன்னுடைய காதலை இழந்துவிடுவதால் ஒன்றுக்கும் உதவாதவனாகிவிடுகிறானென்

பது தவறு. காதலை இழந்தும் வாழலாம். எத்தனையோ அரிய பெரிய சாதனைகளையும் செய்யலாம். ஆனால், நீ அவ்வாறு நினைக்கவில்லை. உன் சகோதரிக்கும், நண்பனுக்கும் வாழ்வளிக்க விரும்பவில்லை நான் வெட்கப்படுகிறேன். நான் உன்னுடைய நிலையிலிருந்தால் நிச்சயம் என்னுடைய காதலைத் தியாகம் செய்துவிடுவேன். பாலு, ஒருவனுக்குக் காதல் உள்ளத்தோடு, தியாக உள்ளமும் இருக்கவேண்டும். அது உன்னிடமில்லா ததை எண்ணி மிகமிக வருந்துகிறேன்."

இத்தனையையும் கூறிவிட்டு ஒரு பெருமூச்சுவிட்டான் நட ராசன். அவனுடைய நடையைப்போலவே வார்த்தைகளும் மெல்ல மெல்ல வந்தன. ஆனால், அந்த வார்த்தைகள் ஒவ் வொன்றும் கூரிய ஈட்டியைப்போல் பாலுவின் உள்ளத்தில் பாய்ந்து குத்திக் கிளறியது. நடராசன் இப்படிப் பேசுவான் என்று பாலு ஓரளவுக்கு எதிர்பார்த்திருந்தாலும், அப்போதைய மனநிலையில், பாலுவால் அந்த வார்த்தைகளின் தாக்குதலைத் தாங்கமுடியவில்லை. துக்கமும், வேதனையும் அவனுடைய உள் ளத்தைப் பொருமவைத்தன; வாட்டி வதைத்தன. எனினும், ஒருவிதமாக அடக்கிக்கொண்டு "நடராசா, நீ நினைப்பதுபோல் நான் அவ்வளவு மட்டரகமான நெஞ்சு படைத்தவனல்ல, என் னுடைய காதலைத் தியாகம் செய்யத் தீர்மானித்துவிட்டேன்" என்று கூறவேண்டும்போலிருந்தது. அவனுக்கிருந்த வேகத் தில், அது தெருவாயில்லாமல், தன்னுடைய அறையாயிருந்தால் நிச்சயம் கத்தியேயிருப்பான். ஆனால், ஒன்றும் சொல்லாமல், 'ஓ' என்று அலறும் உள்ளத்துடன் நடந்துகொண்டிருந்தான்.

உணவு விடுதி வந்ததும், "நடராசா, எனக்குச் சாப்பாடு வேண்டாம். இப்படிக் கதைத்துக்கொண்டே நடப்போம்!" என்றான் பாலு. நடராசனும் 'சரி' என்று தலையை ஆட்டிக் கொண்டு நடையைத் தொடர்ந்தான்.

கொஞ்சத் தூரம்வரை இருவரும் மௌனமாக நடந்து கொண்டிருந்தனர். தன்னுடைய உள்ளத்தைத் திறந்து காட்டா மலிருக்க பாலுவால் முடியவில்லை. முட்டி மோதும் எண்ண

அலைகள், எல்லா விஷயங்களையும் நண்பனிடம் கூறிவிடும்படி உந்தித் தள்ளியது. "நடராசா...!" என்றான் பாலு. அவன் குரல் கரகரத்தது. நடராசன் கேள்விக் குறியுடன் அவனைப் பார்த்தான்.

பாலு பேச்சைத் தொடர்ந்தான். "நீ நினைப்பதுபோல் என் மனம் அவ்வளவு மரத்துவிடவில்லை! பூபதி தன்னுடைய தியாகத்தால் என்னுடைய சுயநலத்தை சுட்டுப் பொசுக்கிவிட்டான். காதலைத் துறக்கும் மனோவலிமை தனக்கிருக்கிறது என்பதைப் பூபதி எடுத்துக் காட்டுவதன் மூலமாக, என்னுடைய நெஞ்சிலே புகுந்திருந்த கோழைத்தனத்தைக் கொன்றுவிட்டான்......!' இத்தனையையும் கூறிவிட்டு ஒரு நிமிடம் மௌனமாயிருந்து ஏதோ யோசித்தான். பிறகு, தனது பேச்சை மீண்டும் தொடர்ந்தான். "உன்னிடம் அறிவும், அனுபவமும், சிறந்த குணமும் இருக்கின்றன. இப்படிப்பட்ட உன்னுடன் சிநேகமாயிருக்கும் என்னிடம் சுயநலமும், சுருங்கிய உள்ளமும் இருப்பதைக் கண்டு நீ வெட்கப்படுவதிலும், வேதனைப்படுவதிலும் நியாயமிருக்கிறது இப்போது என்னிடம் சுருங்கிய உள்ளமும், சுயநலமுமில்லை. பூபதிக்காகவும் தங்கைக்காகவும் என் காதலைத் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறேன். ஆனால்...!" இத்துடன் நிறுத்திவிட்டு மௌனமானான் பாலு.

பூபதியின் காதல் தியாகத்தினால், பாலுவின் மனம் இப்படி மாறுமென்று நடராசன் எதிர்பார்க்கவில்லையாதலால், பாலுவின் வார்த்தைகளைக் கேட்டு ஆச்சரியமடைந்தான். அந்த ஆச்சரியத்துடனேயே, "ஆனால் என்று நிறுத்திவிட்டாயே, மீதியையும் சொல்லேன்" என்றான்.

பாலு தன் மௌனத்தைக் கலைத்துவிட்டு, "ஆம். இனிமேல் எந்த விஷயத்தையும் மறைக்கவேண்டியதில்லை!" என்று சொல்லிவிட்டு, ஒருநாளிரவு தானும் மனோன்மணியும் 'காதல் சுகம்' அனுபவித்ததையும், அப்படி நடக்கவேண்டிய சூழ்நிலையையும் விவரமாகக் கூறினான். பிறகு, "இந்த நிலையில் நான் என்ன செய்வதென்று தெரியாமலே திணறிக்கொண்டிருக்

கிறேன். என்னுடைய காதலைத் தியாகம் செய்யச் சித்தமாயிருக்கிறேன். ஆனால், அந்தத் தியாகம் மற்றொரு பெண்ணுக்குத் துரோகமாகி, அவளுடைய வாழ்க்கையைப் பாழாக்கிவிடும். நான் தனக்குக் கணவனாக வருவேனென்ற நம்பிக்கையால்தான் இப்படி நடந்துகொண்டாள். அவளைக் கைவிட்டால்......? அதை நினைத்தாலே என் உடம்பு நடுங்குகிறது!" என்றான்.

பாலு கூறியதையெல்லாம் மௌனமாகக் கேட்டுக்கொண்டு வந்த நடராசன், "இதை நான் எதிர்பார்த்தேன்!" என்றான்.

"எதிர்பார்த்தாயா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் பாலு.

"ஆம், பாலு. இளமை உணர்ச்சிகள் காதல் வடிவம் பெற்றதும், காதலர்களின் உள்ளத்திலே இனிய உணர்வுகள் உலவத் தொடங்கிவிடும். தனிமை, நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம், கட்டுதிட்டங்கள் இல்லாத சுதந்திரமான சூழ்நிலை முதலியவை எக்காதலர்களுக்கும் இருக்குமானால் கல்யாணமாகுமுன்பே, கணவன் மனைவி உறவில் ஈடுபட்டுவிடுவார்கள். உங்களுக்கும் இந்தச் சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளுமிருப்பதால் நீங்களும் இப்படி நடந்துகொள்ளக்கூடுமென்று எதிர்பார்க்கலாம்தானே?" என்று எவ்வித பரபரப்புமில்லாமல் சொன்னான் நடராசன்.

"இப்போது என்ன செய்வதென்றே தெரியவில்லை!" என்று கலக்கம் நிறைந்த குரலில் கூறினான் பாலு.

"இதற்குத்தான் முன்யோசனையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று சொல்வது. முன்யோசனையற்ற நடத்தை வாழ்க்கையின் முதுகெலும்பை முறித்திருக்கிறது என்பதைப் பலருடைய அனுபவங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். சரி, நடந்தது நடந்துவிட்டது. இனி அதைக் குறித்து வருந்தி என்ன செய்வது? மனோன்மணிக்குத் துரோகம் செய்வதும் சரியல்ல!"

இவ்வாறு நடராசன் கூறிமுடிப்பதற்கும் தங்களுடைய அறைக்குள் நுழைவதற்கும் சரியாயிருந்தது. இத்துடன் அவர்களுடைய பேச்சும் நின்றது.

19

இந்த உரையாடல் நடந்து இரண்டு வாரங்களாகிவிட்டன. இதுவரை பாலுவோ, நடராசனோ இது சம்பந்தமாக ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. பாலு வழக்கம்போல் டியூஷனுக்குப் போவதும், சொர்ணவிலாசத்தில் மனோன்மணியுடன் பொழுது போக்குவதுமாயிருந்தான். எனினும், அவன் உள்ளத்தில் எங்கேயோ ஒரு மூலையில், 'நாம் பிழை செய்துவிட்டோம்' என்ற எண்ணம் முள்ளென உறுத்திக்கொண்டுதானிருந்தது.

நடராசனின் வேண்டுகோளையும், புத்திமதியையும் பூபதியால் புறக்கணிக்கமுடியவில்லை. தங்கத்திற்கு என்ன எழுதுவது, எப்படி எழுதுவது, அவள் என்ன நினைத்துக்கொள்வாளோ,—என்று ஏங்கிக்கொண்டிருந்தான். அவனுடைய செயல்களில், எதிலும் பற்றற்ற— வெறுப்பு மிகுந்த—உணர்ச்சியே காணப்பட்டது. இதைக் கவனிக்க நடராசன் தவறவில்லை.

ஒருநாள் பின்னேரம் மூன்று மணியிருக்கும். நடராசன் வேலைக்குச் சென்றிருந்தான். பூபதியும், பாலுவும் தன் அறையிலிருந்தனர். அப்போது ஒரு தந்தி வந்தது, பாலுவுக்கு. பரபரப்புடன் அதைப் படித்தான். "தங்கத்தைக் காணவில்லை. உடனே வரவும்!" என்று கூறிற்று அத்தந்தி. தந்தியைப் படித்ததும் பாலு பதறிப்போனான். திகிலால் கால் கைகளெல்லாம் நடுங்கத் "தங்கத்தைக் காணவில்லையாம் பூபதி!" என்று நாக்குளறிக்கொண்டே தந்தியை அவனிடம் கொடுத்தான்.

பூபதி, பரபரப்புடன் அதை வாங்கிப் படித்ததும், பாலுவைப்போல் அவனும் பதறினான். "எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே பாலு!" என்றான் படபடப்புடன்.

ஒன்றுமே தோன்றாமல், என்ன செய்வதென்றே தெரியாமல், இருவரும் கொஞ்ச நேரம்வரை கற்சிலைபோலிருந்தனர். பக்கத்து வீட்டில் டெலிபோன் இருப்பது திடீரென்று பாலு

வுக்கு நினைவு வந்தது. விழுந்தடித்துக்கொண்டு அடுத்த வீட்டுக்கு ஓடி, டெலிபோன் மூலமாக, நடராசனுக்குத் தந்திச் செய்தியை அறிவித்தான். "நீயும் எங்களுடன் யாழ்ப்பாணம் வர வேண்டும். ஆகவே, நாலைந்து நாட்களுக்கு லீவு எடுத்துக் கொண்டு வா" என்று கூறிவிட்டு, அடுத்து, சொர்ணவிலாசத்திற்கு டெலிபோன் செய்து மனோன்மணியுடன் கதைத்தான். "உடனே வரும்படி தந்தி வந்திருக்கிறது. என்ன விஷயமென்றே விளங்கவில்லை. இன்றிரவு யாழ்ப்பாணம் போகிறேன். திரும்புவதற்கு இரண்டு மூன்று நாட்கள் செல்லும்!" என்று கூறினான். மனோன்மணியும் "சரி" யென்றாள். தங்கத்தைக் காணவில்லை என்ற செய்தியைச் சொன்னால் அது குடும்ப கௌரவத்திற்கு இழுக்கு. இதை மனோன்மணியோ, அவள் பெற்றோரோ அவமானமாகக் கருதிவிட்டால் என்ன செய்வது என்ற பயத்தால் உண்மையைக் கூறவில்லை, அவன்.

* * *

மறுநாள் காலை யாழ்ப்பாணம் வந்திறங்கியதும், நடராசனை மட்டும் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனான் பாலு. பூபதிக்கு அங்குபோக விருப்பமில்லை. தன்னுடைய வீட்டிலிருந்தபடியே அலைமோதிக்கொண்டிருந்தான்.

பாலுவைக் கண்டதும் சபாபதியும், பாலுவின் அம்மாவும் ஒப்பாரி வைக்கத்தொடங்கினர். பாலு நடந்ததை விசாரித்தான். தங்கம் முதல் நாளிரவு படுத்திருந்ததாகவும், விடிந்தெழுந்து பார்க்கும்போது அவளைக் காணவில்லையென்றும், எங்கு தேடியும் இதுவரை அவளைப்பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லையென்றும் கூறிப் புலம்பத்தொடங்கினர்.

"இந்த விஷயத்தைப் போலீஸில் தெரிவித்தீர்களா?" என்று கேட்டான் பாலு.

"மத்தியானத்திற்குமேல்தான் போலீஸில் தெரிவித்தோம். பூபதிமேல்தான் எங்களுக்குச் சந்தேகம். ஒருவேளை அவன்தான் கடத்திக்கொண்டு போயிருக்கவேண்டும். இரண்டு

கிழமைகளாகப் பூபதியையும் இந்தப் பக்கம் காணவில்லை. ஒன்று அவன் இவளைக் கிளப்பிக்கொண்டு போயிருக்கவேண்டும். அல்லது, இவள் இருக்கும் இடத்திற்குத் தங்கம் போயிருக்க வேண்டும். போலீஸிலும் இப்படித்தான் முறைப்பாடு கொடுத் திருக்கிறேன்!" என்றார் சபாபதி.

அவருடைய இந்த ஊகத்தைக் கேட்டதும் நடராசனுக் குச் சிரிப்புத்தான் வந்தது. ஆனால், அவன் வாய் திறக்கவில்லை.

பாலுவுக்கோ தன் ஐயாவின் அபிப்பிராயம் ஆத்திரத்தைக் கிளறியது. உடனே "ஐயா, உங்கள் அகராதிப்படி பூபதி தாழ்ந்த சாதிக்காரனென்றாலும், இப்படி மட்டகரமான வேலை யைச் செய்யக் கூடியவனல்ல. வீணாக அவன்மேல் பழியைப் போட்டுப் போலீஸில் ஏன் சந்தேகத்தை உண்டாக்கினீர்கள்? பூபதி இந்த இரண்டு கிழமைகளாகக் கொழும்பில்—அதுவும் எங்களுடன்தான் இருந்தான். நேற்றுத் தந்தி வந்ததும் அவ னும் பதறிப் போனான். நாங்கள் மூவரும் உடனே புறப்பட்டு வந்தோம். அவன் தன் வீட்டில்தான் இப்போதிருக்கிறான்!" என்று விளக்கினான்.

இதைக் கேட்டதும், பாலுவின் பெற்றோருக்கு, பூபதியின் மேலிருந்த சந்தேகம் நீங்கிவிட்டதென்றாலும், மேலும் திகில் ஏறிவிட்டது. யார் கடத்திச் சென்றிருப்பார்கள்? எங்கே போயிருப்பாளென்ற கேள்விகளே எல்லோரிடத்திலும் எழுந்து நின்றது. அத்துடன், தன்னுடைய காதல் நிறைவேறாததால் தற்கொலை செய்துகொண்டாளோ என்ற அச்சமும் எழுந்தது.

மற்றவர்களுக்கு இந்த அச்சம் தோன்றினாலும், பாலுவுக் குத்தான் அளவுக்கு மிஞ்சிய அச்சம் மனதில் புகுந்து குடையத் தொடங்கியது. பூபதி அடிபட்ட நாளன்று தங்கம் தற்கொலை செய்ய முயற்சித்ததை நினைத்துக்கொண்டான். அத்துடன், பூபதி கொழும்புக்கு வந்து, தங்களுடன் பேசியதையும், தன் னுடைய காதலைத் தியாகம் செய்ததையும் ஞாபகப்படுத்திக் கொண்டான். இந்த விஷயத்தைப் பூபதி தங்கத்திற்கு எழுதி யிருக்கக்கூடும். அதனால், பலத்த ஏமாற்றமடைந்து, உள்ளம்

உடைந்து, தற்கொலை செய்யும் நோக்கத்துடன் எங்கேயாவது ஓடியிருக்கக்கூடும்—என்ற எண்ணங்கள் பிறந்தன. இப்படியான எண்ணங்கள் பிறந்ததும் பயத்தாலும், திகிலாலும் பாலுவின் உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது. தன்னால், தங்கத்தின் வாழ்வு முடிந்துவிட்டதென்றே எண்ணிவிட்டான். அவனுடைய விழிகளில் கண்ணீர் வெள்ளம்போல் பெருகத் தொடங்கியது. கொஞ்சம் நேரம்வரை பிரமை பிடித்தவன்போல் நின்றுகொண்டிருந்தான். பிறகு திடீரென்று வெறிபிடித்தவன் போல் பூபதியின் வீட்டுக்கு ஓடினான். நடராசனும் அவனைப் பின் தொடர்ந்தான். சபாபதிக்கும், அவர் மனைவிக்கும் ஒன்றும் விளங்கவில்லை. திகைப்பால் திறுதிறுவென்று விழித்தவண்ணம் அப்படியே இருந்துவிட்டனர்.

பாலுவும், நடராசனும் பூபதியின் வீட்டுக்குள் நுழைந்ததும் ஆச்சரியத்தால் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டனர். சுற்றிலும் நாலைந்து போலிஸ்காரர்கள் சூழ்ந்து நிற்க, கைவிலங்குடன் நின்றுகொண்டிருந்தான் பூபதி.

நடராசனுக்கும், பாலுவுக்கும் விஷயம் விளங்கிவிட்டது. எனினும் போலீஸாரிடம் விசாரித்தனர். அவர்கள் எண்ணியபடியே, தங்கத்தைக் கடத்திச் சென்றிருக்கக்கூடுமென்ற சந்தேகத்தில் பூபதியைக் கைது செய்திருப்பதாக அவர்கள் கூறினார்கள். இதைக் கேட்டதும் பாலுவுக்கும் நடராசனுக்கும் ஆத்திரம்தான் வந்தது. எனினும் பூபதி தங்களுடன் கொழும்பிலிருந்ததையும், தங்கம் காணமல் போனதற்கும் பூபதிக்கும் சம்பந்தமில்லையென்றும் கூறினார்கள். எனினும் போலீஸார் பூபதியைவிட்டுவிடவில்லை. எல்லோரையும் அழைத்துக்கொண்டு ஸ்டேசனுக்குச் சென்றார்கள். அங்கு பாலு, பூபதியின்மேல் சந்தேகம்கொள்ள இடமில்லையென்பதை மீண்டும் விளக்கினான். காணமற்போன தங்கத்தின் தமையனான பாலுவே, இப்படிக் கூறும்போது, அதை மறுக்கமுடியவில்லை போலீஸாரால். எனவே, அவர்களுடைய சாட்சியத்தைப் பதிந்துகொண்டு பூபதியை விடுதலை செய்தனர்.

மூவரும் வீட்டுக்கு வந்ததும், "கொழும்பிலிருந்து தங்கத்திற்குக் கடிதம் எழுதினுயா?" என்று கேட்டான் பாலு.

"இல்லை" என்ருன் பூபதி.

தங்கம் மறைந்துபோன மர்மத்தைப்பற்றி ஒரு தகவலும் கிடைக்காமல் மனம் குழம்பித் திகைத்தனர். நடராசன் மட்டும் தான் சற்றுத் தைரியத்துடன் இருந்தான். தங்கம் நிச்சயம் தற்கொலை செய்திருக்கமாட்டாள் என்ற ஒரு நம்பிக்கை அவன் மனதில் ஒளியெனப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. எதற்கும் பத்திரிகையில் ஒரு விளம்பரம் போடுவது நல்லதென்ற எண்ணத்துடன், அவளுடைய படத்துடனும், அடையாளங்களுடனும் விளம்பரம் செய்தான்.

"......இந்த அடையாளங்களும், வயதும், பெயருமுள்ள பெண்ணைக் கண்டால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு அறிவிக்கவும். அப்படி அறிவிப்பவர்களுக்கு தக்க வெகுமதி அளிக்கப்படும்." என்று அந்த விளம்பரத்தில் தெரிவித்திருந்தான். அத்துடன் நின்றுவிடவில்லை, எல்லோருக்கும் தைரியம் கூறி, தங்கத்தைத் தேடும் பணியில் தானும் முக்கிய பங்கெடுத்தான்.

* * *

பூபதியை அடித்து நொறுக்கியதன் மூலமாகத்தான் அவன் மீது வைத்திருந்த வஞ்சம் தீர்ந்துவிட்டதென்ற ஆறுதல் ஏற்பட்டாலும், தங்கத்தின் மீதுள்ள ஆசை, மணியத்தின் மனசை ஆறுதல் கொள்ளவிடவில்லை. தங்கத்தைத் தனக்குத் தாரமாகத் தாருங்கள் என்று கேட்டால், அவனுடைய பெற்ருேரும் சரி, மற்ருேரும் சரி, உதைக்க வருவார்கள் என்பது மணியத்திற்குத் தெரியும். தன்னுடைய 'குணம்' எல்லோருக்கும் தெரியும். குடிகாரன், பொல்லாதவன், காவாளி, ஊர் வம்பை விலைக்கு வாங்கும் சண்டியன்—என்றெல்லாம் சுற்று வட்டாரத்தினர் தெரிந்து வைத்திருக்கிருர்கள். இப்படிப்பட்ட தனக்குத் தங்

கள் மகளைத் தாரைவார்க்க எந்தப் பெற்றோரும் சம்மதிக்கமாட்டார்கள் என்றும் உணர்ந்திருந்தான். கீழ்சாதிப் பயல் பூபதிக்கு மனைவியாகி அதனால் மானம் போவதைவிட, பொல்லாதவனயிருந்தாலும், மணியம் நம்ம சாதி. அவனுக்கு மனைவியாயிருப்பதால் மானம் பறிபோகாது. ஆகவே, தங்கத்தை மணியத்திற்கே கலியாணம் செய்துவைப்போம் என்று அவனுடைய பெற்றோர் விரும்பினாலும், தங்கம் அதற்கு இணங்கமாட்டாள். அவர்கள் வற்புறுத்தினால் தற்கொலை செய்துகொள்வாளே தவிர, ஒருக்காலும் தன்னைக் கலியாணம் செய்துகொள்ளமாட்டாள். தவிரவும், பானுவும் சம்மதிக்கமாட்டான். அவனுக்கும் தன் மேல் நல்லபிப்பிராயம் இல்லை. ஆகவே, தன்னுடைய எண்ணம் ஈடேறவேண்டுமானால், ஒருநாளிரவு தங்கத்தை எப்படியாவது இளப்பிக் கொண்டுபோய் ஒளித்து வைத்து அவளைக் கெடுத்துவிடவேண்டும். மானமிழந்தவளை எவன்தான் ஏற்பான்? பூபதிகூட வெறுத்துவிடுவான். கடைசியில் என்ன செய்வது, எப்படியோ காரியம் நடந்துவிட்டது. தங்கத்தைக் கெடுத்த மணியமே, அவளை ஒப்புக்கொள்ளட்டும் என்று சொல்வார்கள். அப்படியில்லாமல் வம்பு வழக்குக்கு வந்தாலும் பரவாயில்லை. நான்தானே கெடுத்தேன். இப்போது அவளை வேண்டாம் என்று சொல்லவில்லை. அவளை நானே கலியாணம் செய்துகொள்கிறேன் என்று சொன்னால், ஒரு நாலு பேராவது இதை ஒப்புக்கொள்ளத்தானே செய்வார்கள். அவர்களைக் கொண்டு சபாபதியாரைச் சரிசெய்துவிடலாம் — இப்படியான எண்ணங்கள் எல்லாம் மணியத்தின் முரட்டு மூளையில் உதயமாயின. உடனே திட்டத்தைத் தீட்டத் தொடங்கிவிட்டான்.

தான் போட்ட திட்டப்படி ஒருநாள் இரவு சபாபதியின் வளவுக்குள் இரண்டு பேருடன் நுழைந்தான். தன்னுடன் வந்த இருவரையும் வெளி முற்றத்திற்குள் நிற்க வைத்துவிட்டு, மணியம் மெல்ல உள்ளே போனான். வெளி விறுந்தையில் ஒரு ஓரமாகக் கட்டிலில் படுத்திருந்தார் சபாபதி. மனைவி பொன்னம்மா, இன்னொரு மூலையில் படுத்திருந்தாள். விறுந்தையோடு ஒட்டியிருந்தது உள்வீடு. அந்த வீட்டின் கதவு திறந்திருந்த

தோடு, உள்ளே லாம்பு வெளிச்சமும் மங்கலாகத் தெரிந்தது. 'தங்கம் அங்கேதான் படுத்திருப்பாள்'—என்று முடிவு செய்து கொண்டான் மணியம். சதாசிவத்தையும் அவர் மனைவியையும் பார்த்தான். அவர்களிருவரும் அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்திருந்தார்கள். அரவம் காட்டாமல் வீட்டுக்குள் நுழைந்தான். தங்கம் ஒரு பாயில் படுத்து நித்திரை செய்துகொண்டிருந்தாள். மெதுவாக அவள் அருகில் அமர்ந்து தான் கொண்டுவந்த மயக்க மருந்தை அவள் மூக்கின் முன்னால் சில நிமிடங்கள் பிடித்துக் கொண்டிருந்தான். பிறகு, மங்கலாக எரிந்து கொண்டிருந்த லாம்பை அணைத்துவிட்டு, தங்கத்தை வாரி எடுத்து அணைத்துக் கொண்டு வெளியே வந்தான். முற்றத்தில் நின்ற மற்ற இருவர்களும், மணியனைப் பின் தொடர்ந்து வந்தார்கள். அடுத்த நிமிடம் அங்கே தயாராக நின்று கொண்டிருந்த காரில் தங்கத்துடன் ஏறினார்கள். மறுகணம் அந்தக் கார் மறைந்தது.

# 20

தங்கம் காணமற் போய் ஒரு கிழமையாய்விட்டது. இந்த இடைக்காலத்திற்குள் அவளைப்பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை. தங்கத்தை மணியம் கடத்திக்கொண்டு போயிருப்பானென்று ஒருவருமே சந்தேகிக்கவில்லை. சுருக்கமாகச் சொன்னால், பூபதியை மணியம் தாக்கிய தினத்திற்குப் பிறகு அவனைப் பற்றிய நினைவேயில்லை அவர்களுக்கு. ஆகவே, தங்கத்தைத் தேட எடுத்துக்கொண்ட முயற்சி பயனளிக்கவில்லை.

ஒரு நாள் காலை எட்டு மணியிருக்கும், பாலுவின் வீட்டைத் தேடி ஒரு இளைஞன் வந்தான். அவனைக் கண்டதும், பாலுவும், நடராசனும் அவன் வந்த விஷயத்தை விசாரித்தனர்.

" ஒரு கிழமைக்கு முன்பாகக் காணமல் போன ஒரு பெண்ணைப் பற்றிப் பத்திரிகையில் ஒரு விளம்பரம் வந்திருந்தது. அவர்களுடைய வீடு இதுதானே?" என்று கேட்டான் அந்த வாலிபன்.

" ஆம்!... ஏன்?... அந்தப் பெண்ணை நீ கண்டாயா?" என்று பதட்டத்துடன் கேட்டான் பாலு.

" ஆம். பத்திரிகையில் தெரிவித்திருந்த அடையாளமுள்ள ஒரு பெண்ணை அளவெட்டிக் கிராமத்தையண்டியிருக்கும் ஒரு இடத்தில் கண்டேன்!" என்றான் அவன்.

ஆவலும், மகிழ்ச்சியும், பரபரப்பும் அடைந்தவர்களாய், எல்லோரும் அந்த இளைஞனைச் சுற்றி வளைத்துக்கொண்டு, எல்லா விபரங்களையும் கேட்டனர்.

" நான் பிடவை வியாபாரம் செய்கிறவன், சைக்கிளில், சுற்று நாடுகளுக்குச் சென்று பிடவைகள் விற்பேன். நேற்று காலை, அளவெட்டிப் பக்கம் போனேன். அப்போது மணி நான்கு இருக்கும். அளவெட்டிக் கிராமத்தின் உள்பகுதியில் வியாபாரம் பார்த்துக்கொண்டு மல்லாகத்திற்குப் போகும் எண்

ணத்துடன் ஒரு ஒற்றையடிப் பாதையால், சைக்கிளை உருட்டிக் கொண்டு, ரோட்டை நோக்கி வந்துகொண்டிருந்தேன். கொஞ்சதூரம்வரை வந்திருப்பேன். யாரோ என்னைக் கூப்பிடுவது கேட்டது. திரும்பினேன். முப்பது வயது மதிக்கத் தக்க ஒரு கருத்த ஆள் என்னைக் கூப்பிட்டான். நான் அங்கே போனேன். அவன் ஒரு மண் வீட்டுக்கு முன்னால் நின்றுகொண்டிருந்தான். அந்த ஆளுக்குச் சிறிது தூரத்தில், விழுந்து கிடந்த ஒரு பனை மரத்தின் மேல் ஒரு பெண் இருந்தாள். முதலில் நான் அவளைக் கவனிக்கவில்லை. என்னைக் கூப்பிட்டவன், "நல்ல சேலை இருக்கிறதா?" என்றான். நான் இருக்கிறதென்று சொல்லி நாலைந்து சேலைகளை எடுத்துக் கொடுத்தேன். அவன் அதை வாங்கி அந்தப் பெண்ணிடம் காட்டி உனக்கு எது பிடித்திருக்கிறது?" என்று கேட்டான். அவள் டக்கென்று திரும்பி அவனைக் கோபமுடன் பார்த்தாள். அப்போதுதான் அவளைப் பார்த்தேன். அழகான பெண். எனக்கு உடனே அவளை எங்கேயோ பார்த்த நினைவு வந்தது. எங்கே பார்த்தோம்? என்று எனக்குள்ளேயே பல தடவை கேட்டுக்கொண்டேன். கொஞ்ச நேரம் வரை எனக்கு நினைவே வரவில்லை. அவளையே ஞாபகப் படுத்திக்கொண்டேயிருந்தேன். இதற்குள் அந்த ஆள் அவளைப் பார்த்துச் சிரித்துவிட்டு ஏன் இப்படிக் கோபமாய்ப் பார்க்கிறாய் தங்கம்?"—என்று கேட்டான். "தங்கம்" என்று பெயர் என் காதில் விழுந்ததும், 'டக்'கென்று, பேப்பரில் பார்த்த விளம்பரம் நினைவுக்கு வந்தது. அந்தப் பெண்ணை நன்றாகக் கூர்ந்து கவனித்தேன். பேப்பரில் தெரிவித்திருந்த அத்தனை அடையாளங்களும் அவளுக்கு இருந்தன. சந்தேகமேயில்லை. காணாமல் போன தங்கம் இவள்தான் என்று நிச்சயம்செய்துகொண்டேன். இதற்குள் அந்தப் பெண்ணும் வீட்டுக்குள் போய்விட்டாள். அந்த மனிதன் என்னிடம் மூன்று சேலைகளை வாங்கிக் கொண்டு காசைக் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன். வரும் வழியில் பல வாடிக்கைக்காரர்களிடம் வியாபாரம் பார்க்கவேண்டி வந்ததால், டவுனுக்கு வர இருட்டிவிட்டது. இராத்திரி வந்து இங்கே சொல்லலாமென்று நினைத்தேன்.

இதற்குள் வேறு அவசர வேலைகள் குறுக்கிட்டன. ஆகவே தான், விடிந்ததும் இங்கு வந்தேன்!''—என்று தங்கத்தைக் கண்ட வரலாற்றைக் கூறினான் அந்தப் பிடவை வியாபாரி.

எல்லோருடைய முகத்திலும் அப்போதுதான் நம்பிக்கையின் ஒளி சுடர்விட்டது. உடனே அந்த இளைஞனையும் அழைத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேசனுக்குப் புறப்பட்டனர் நடராசனும், பாலுவும். அவர்களுடன் பூபதியும் கூடச்சென்றான்.

போலீஸ் ஸ்டேசனுக்குச் சென்றதும், அங்கே, விஷயத்தைச் சொல்லி, நாலைந்து போலீஸாருடன் சென்றார்கள் அளவெட்டிக்கு.

வீட்டுக்கு முன்னால் வாயில் சிகரட்டுடன் பனை மரத்தின் மேல் அமர்ந்து எதையோ யோசித்துக்கொண்டிருந்த மணியம், போலீஸ் வானையும், அதிலிருந்து மளமளவென்று இறங்கிய போலீஸ்காரரையும் கண்டதும் திகைத்துப்போய் கல்லாய்ச் சமைந்துவிட்டான். மறுகணம், அவன் கையில் விலங்கிடப்பட்டது. பாலுவும், பூபதியும் வீட்டுக்குள் ஓடினர். அவர்களைக் கண்டதும் "அண்ணே...!" என்று அலறிக்கொண்டு ஓடி வந்தாள் தங்கம்.

எல்லோரும் யாழ்ப்பாணம் போலீஸ் ஸ்டேசனுக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு வந்ததும், தங்கத்திடம் வாக்கு மூலம் கேட்கப்பட்டது.

"வழக்கம்போல் அன்றிரவு நித்திரை செய்துகொண்டிருந்தேன். மணியம் வந்தது, என்னைத் தூக்கிச் சென்றதெல்லாம் எனக்குத் தெரியாது. மயக்க மருந்து கொடுத்து என் உணர்வைக் கெடுத்துத்தான் என்னைத் தூக்கிச் சென்றிருக்கிறான் என்று நினைக்கிறேன்.

மறுநாள் காலைதான் கண்விழித்தேன். அப்போது நான் என் வீட்டிலில்லாது புதிய ஒரு வீட்டிலிருப்பது தெரிந்தது. எனக்குச் சற்றுத் தூரத்தில் மணியம் இருந்தான். அவனைப்

பார்த்ததும், எனக்கு எல்லாம் விளங்கிவிட்டது. என்னைக் கெடுக்கத்தான் இந்த வேலை செய்திருக்கிறான் என்று சடுதியில் விளங்கிக் கொண்டேன். ஆபத்தில் மாட்டிக்கொண்டோம். தப்புவதற்கு வழியென்ன என்று யோசித்தேன். மணியத்தை எதிர்த்து ஏதும் பேசினால், இங்கிருந்து தப்பமுடியாது. ஆனால், அவனுடன் ஒற்றுமையாக இருப்பதுபோல் நடித்தால், இங்கிருந்து தப்பிப் போவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று எண்ணி அவனுடன் கோபமாகவோ, ஆத்திரமாகவோ ஒன்றும் கதைக்கவில்லை. என்னைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென்ற எண்ணத்தில்தான் தூக்கி வந்ததாகச் சொன்னான் மணியன். மேலும், என்னைக் கெடுக்கவும் முயன்றான். நான் அதற்கு இடங்கொடுக்கவில்லை. தந்திரமாகக் கடத்திக்கொண்டு வந்தேன். இப்படி ஒரு கிழமை சென்றுவிட்டது. இன்றுதான் நீங்கள் எல்லோரும் வந்து என்னை மீட்டீர்கள்''—என்று சொன்னாள் தங்கம்.

ஒரு பெண்ணைப் பலாத்காரமாகக் கடத்திச் சென்ற குற்றத்திற்காக மணியத்தின்மேல் ஒரு வழக்கைப் பதிவு செய்துகொண்டு அவனை விளக்கமறியலில் வைத்தனர் போலிஸார். பாலுவும், மற்றவர்களும் அங்கு செய்யவேண்டிய வேலைகளை முடித்துக்கொண்டு வீட்டுக்கு வந்தனர்.

தங்கத்தைக் கண்டதும் அவளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஒப்பாரிவைக்கத் தொடங்கினாள் பொன்னம்மா. மகளைப் பார்த்த பிறகுதான் சபாபதிக்கும் மனம் ஆறுதலடைந்தது.

* * *

அன்றைய சாயங்காலம், பூபதியை இரகசியமாகச் சந்தித்தாள் தங்கம். பூபதி கொழும்பில் நடந்ததையெல்லாம் கூறினான். அதைக் கேட்டதும், தங்கத்தின் உள்ளம் சுக்கல் சுக்கலாக உடைந்துவிட்டது. தனது காதல் பெருஞ் சூறுவளிக்கிடையில் சிக்குண்டிருந்தாலும், அது மீளும் என்ற ஒரு நம்பிக்கை இருக்கவும் செய்தது. ஆனால், தனது தமையன் கொழும்பிலுள்ள ஒரு கோதையுடன் காதல் கொண்டிருப்பதையும், தங்

களுடைய காதல் நிறைவேறினால், அண்ணனின் காதல் நிறை வேறாது என்பதையும் பூபதி சொன்னதும், அந்த நம்பிக்கை தூள் தூளாக நொறுங்கிவிட்டது. கொஞ்சநேரம் அவளுடைய மனம் பெரிய போராட்டத்திற்குள் தத்தளித்து நின்றது. முடிவில் பூபதி, தங்களது காதலைத் தியாகம் செய்கிறோம் என்று தன் தலைவனிடம் கூறியது சரியென்றுபட்டது, எனினும், ஏமாற்றத்தால் தாக்குண்ட அவளுடைய உள்ளம் துயரம் தாங்காமல் துடித்தது. விழிகளிலிருந்து கண்ணீர் பெருகியது. அதை காண வேதனையாயிருந்தது பூபதிக்கு.

"தங்கம், எதிர்பாராத விதமாக ஒவ்வொரு சம்பவமும் வந்து மோதுகின்றன. இந்த மோதுதலினால், நம்முடைய காதல் கனவுகளெல்லாம் சிதறுகின்றன. என்ன செய்வது? பரிசுத்தமான அன்புக்கு இத்தகைய சோதனையேற்படுவது சகஜம்தான்!—இதற்காக நாம் வருந்தி என்ன செய்யமுடியும்? நடப்பது நடக்கட்டும்!"—என்று உடைந்த குரலில் கூறினான் பூபதி.

தங்கத்திற்கு அதற்குமேல் அங்கு நிற்கமுடியவில்லை. துக்கம் நெஞ்சை அழுத்த, பொத்துக்கொண்டு வரும் அழுகையுடன் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தாள். கண்ணீர் பெருகும் கண்களுடன் சென்ற தங்கத்தைப் பார்த்துக்கொண்டு நின்றான் பூபதி. அவனுடைய விழிகளிலும் நீர் முத்துக்கள் தோன்றின.

*    *    *

அன்றிரவு நித்திரையே வரவில்லை தங்கத்திற்கு. படுக்கையில் கிடந்தபடி பலவாறு எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள். தனது அண்ணனின் வாழ்வுக்காக, தங்களுடைய காதலைப் பலியிடுவது சரியென்றுபட்டது. ஆனால், தன்னுடைய வாழ்க்கை எப்படியிருக்கும்? என்று எண்ணினாள். காதல் கைகூடாத பொழுது நடைப்பிணமாகத்தான் திரியவேண்டும். நான் பூபதியைப் பார்த்ததும், அவர் என்னைப் பார்த்ததும் பெருமூச்சுவிட்டுக் கொண்டு, வேதனைக் கண்ணீர் விட்டுக்கொண்டு எத்தனை நாட்கள் வாழமுடியும்?... அதற்காகச் சாகவேண்டுமா? கூடாது!

சாகவே கூடாது. நாங்களிருவரும் தற்கொலை செய்துகொண்டால் ஐயாவும், அம்மாவும் மனம் உடைந்துவிடுவதோடு, அண்ணனின் உள்ளமும் உடைந்துவிடும். அவருடைய காதல் நிறைவேறினாலும், எங்களுடைய தற்கொலையினால், அந்தக் காதல் வாழ்க்கை இனிக்காது. எதிர்பார்த்த இன்பத்தையும் அமைதியையும் அனுபவிக்கமுடியாது! எங்கள் காதல் தியாகத்தினால் அண்ணன் பயனடைய வேண்டுமானால், நாங்கள் தற்கொலை செய்து கொள்ளக்கூடாது. சாகும்காலம் வரும்வரை, கன்னியாக இருக்கவேண்டியதுதான். வேதனையையும், துயரத்தையும் தாங்கிக் கொண்டு வாழவேண்டியதுதான்!''—இப்படியான எண்ணங்கள் எழுந்தன.

மறுநாள் தன்னுடைய தீர்மானத்தைப் பாலுவிடம் சொன்னாள் தங்கம்.

''பூபதி எல்லா விஷயமும் சொன்னார். உங்கள் காதல் வெற்றியடைந்து, நீங்கள் சந்தோஷமாக வாழவேண்டுமென்பது தான் என்னுடைய எண்ணமும். எங்கள் காதலைத் தியாகம் செய்கிறோம் என்று பூபதி சொன்னது சரிதான் அண்ணா...! அவர் சொன்னதைத்தான் நானும் கூறுகிறேன். இதற்காக—எங்கள் காதல் நிறைவேறவில்லையென்பதற்காக நீங்கள் வருந்தக் கூடாது. நீங்கள் காதலிக்கும் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டு சந்தோஷமாக வாழுங்கள். நானும், பூபதியும் இதைத் தான் விரும்புகிறோம்!''

தன் தங்கையின் வார்த்தைகளைக் கேட்டதும், அசந்து போனான் பாலு. ஒரே தாய் வயிற்றில்தான் பிறந்தோம். அவளுக்கிருக்கும் குணம், தியாக உள்ளம், தனக்கு இல்லையே என்று மனம் குமுறினான் பாலு. அவனுடைய உள்ளம் தீயிலிட்ட மெருகுபோல் உருகியது. வாய் திறவாமல் சிந்தனை அலைகளுக்கிடையே மிதந்து கொண்டிருந்தான்.

கொழும்பிலிருந்து வந்து ஒரு கிழமையாகிவிட்டது. நடராசன் புறப்படுவதற்கு ஆயத்தம் செய்தான். பாலுவுக்கும் அங்கு நிற்க விரும்பவில்லை. வழக்குத் தவணைகளில் வந்துபோவதாகச் சொல்லி அவனும் புறப்பட்டுவிட்டான்.

பாலுவையும், நடராசனையும் வழியனுப்ப பூபதியும் ஸ்டேசனுக்கு வந்திருந்தான். அவனுக்கு தேறுதல் சொன்னான் நடராசன். தான் கடிதத்தில் எழுதியபடியும், நேரில் சொன்னபடியும் நடந்துகொள்ளவேண்டுமென்றும், தற்கொலை செய்யும் எண்ணமே உதயமாகக்கூடாதென்றும், அவர்களுடைய காதல் நிறைவேறும் என்றும் கூறினான். நடராசனின் கருத்துப்படியே தான் நடப்பதாக உறுதியளித்தான் பூபதி.

# 21

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. ஒருநாள் மணியத்தின் மேல் தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது, தான் சுற்றவாளி என்று காட்டிக்கொள்வதற்கு அடாத பொய்களையெல்லாம் கூறினான் மணியம்.

"நான் தங்கத்தைப் பலாத்காரமாகக் கடத்திக்கொண்டு போகவில்லை. அவள் தானாகவே என்னைத் தேடி வந்தாள். என்மேல் தனக்கு ஆசை உண்டென்றும், வீட்டிலிருந்தால் அந்த ஆசை நிறைவேறாது என்றும், ஆகையினால் தன்னை அழைத்துச் சென்று எங்கேயாவது ஒளித்து வைக்கும்படியும் சொன்னாள். அதனால்தான் ஒருநாளிரவு அவள் என்னிடம் வந்தபோது, அவளை அழைத்துச் சென்றேன். மேலும், தங்கம் கெட்ட நடத்தைக்காரி. கீழ்சாதிக்காரன் என்று தெரிந்தும் பூபதியோடு தொடர்பு வைத்துக்கொண்டாள். திடீரென்று அவன் வீட்டை விட்டு வெளியூர் சென்றதும் என்மீது தன்வலையை வீசினாள். இந்த விஷயம் எனக்குப் பிறகுதான் தெரியவந்தது!"—என்று வீண் பழியைச் சுமத்தினான்.

இதைக் கேட்டதும் பானு, பூபதி, தங்கம் எல்லோருக்கும் உள்ளம் கொதித்தது. தங்கத்திற்கு ஆவேசமும், ஆத்திரமும் குமுறியெழுந்தன. கொஞ்சம் படபடப்புடனும், உணர்ச்சி வேகத்துடனும் கோட்டாருக்குப் பின்வருமாறு சொன்னாள்:

"தன்னுடைய எண்ணம் நிறைவேறாததால்—தன்னுடைய திட்டம் தவிடுபொடியாய்ப்போன ஏமாற்றத்தால்—தன்னுடைய மோசடி வெளியாகிவிட்டதே என்ற ஆத்திரத்தால்—என்னை அவமானப்படுத்த நினைத்து, இந்தக் கட்டுக் கதையைக் கூறியிருக்கிறான் மணியன். நான் பூபதியைக் காதலிப்பது உண்மை. அதை மறைக்கவோ, மறுக்கவோ விரும்பவில்லை. ஆனால், மணியன் சொன்னதுபோல், மனம் விரும்பியவர்களின் மார்பிலே சாய்ந்து ஒழுக்கத்தை உதறி நடக்கும் நாசகாரியல்ல. நான் கெட்ட நடத்தைக்காரி என்று எதிர்வீட்டு மணியத்திற்குத் தெரியுமென்

ருல், உள்வீட்டுக்காரர்களாகிய என் பெற்ருேருக்கும் தெரியத்தானே வேண்டும்? என்னுடன் பால்யமுதல் பழகிக் காதல் கொண்டிருக்கும் பூபதிக்கும் தெரியத்தானே வேண்டும்? நான் அப்படி நடத்தை கெட்டவளென்ருல் பெற்ருேர் என்னை வீட்டில் வைத்திருப்பார்களா? பூபதிதான் என்னைக் காதலிப்பாரா? கோட்டிலே சாட்சியம் கூற முன்வருவாரா? கண்ணியமான முறையில் காதல் கொண்டாலும், அந்தக் காதல், ஒரு தாழ்ந்த சாதிக்காரன்மேல் ஏற்பட்டிருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக. "நீ செத்தாலும் பரவாயில்லை. கீழ்சாதிக்காரனைக் கலியாணம் செய்துகொள்ள நான் விடமாட்டேன்!" என்று கூறிய என் தந்தை தன் மகள் ஒழுக்கத்தை மறந்தவள்; பலரை மயக்கும் பாசாங்குக்காரி ஊரைக் கெடுக்கும் வேசி என்று தெரிய வந்தால் உயிருடன் என்னை விட்டுவைப்பாரா?" என்று கேள்வி மேல் கேள்விகளை அடுக்கி, மணியத்தின் கூற்றைக் கட்டுக்கதை, ஏமாற்றமடைந்த உள்ளத்தில் முளைத்த பொய்யென்று நிரூபித்தாள் தங்கம்.

பூபதியும் தன் சாட்சியத்தில் தங்கம் சொன்னதை மெய்ப்படுத்தி, அவள் மாசு மறுவற்றவள்; ஒழுக்கமுடையவள்; தூய நடத்தை கொண்டவள் என்பதையும் சொன்னான். அத்துடன், மணியத்திற்கும், தனக்குமுள்ள பகையை எடுத்துச் சொல்லி, அந்தப் பகை எதனால் ஏற்பட்டது என்பதையும் விளக்கி, மணியத்தின் குணங்களையும், ஊரார் அவனைப்பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயத்தையும், மணியம் பல குற்றங்களுக்காகப் பல தடவை கோட்டாரால் தண்டிக்கப்பட்டவனென்பதையும் விளக்கினான். இதைப் போலீசாரும் ஊர்ஜிதப்படுத்தினர்.

பாலுவும், பூபதியைப் போலவே சாட்சியம் சொன்னான் தங்கத்தைக் காட்டிக் கொடுத்த பிடவை வியாபாரியான அந்த இளைஞனும் சாட்சியம் சொன்னான். இவர்களுடைய ஆதார பூர்வமான சாட்சியங்களாலும், மணியம் குற்றவாளியென்று கோட்டாரால் கருதப்பட்டு, ஒரு வருஷம் மறியல் தண்டனையும் பெற்றான்.

காலமென்னும் பெருங்கடலில் இரண்டு மாதங்கள் களிமண் கப்பலைப்போல் கரைந்துவிட்டன. இந்த இடைக்காலத்தில் எவ்விதமான விசேஷ சம்பவங்களும் நடக்கவில்லை.

மணியத்தின் வழக்கில் தாங்கள் வெற்றியடைந்ததையிட்டு பாலுவுக்கு ஆறுதலேற்பட்டாலும், தங்கத்தைப்பற்றி அவன் கவலைப்பட்டுக் கொண்டுதானிருந்தான். தன்னுடைய சுயநல மனப்பான்மையால், தங்கத்தின் வாழ்க்கை மலர் வாடி உதிரும் பக்குவத்திலிருப்பதையிட்டுக் கவலைப்பட்டுக் கொண்டுதானிருந்தான். தன் தங்கையின் தங்கமான உள்ளத்தையும், பூபதியின் தியாக உள்ளத்தையும் எண்ணி எண்ணிக் கண்ணீர் உகுத்தான். ஐயா அம்மா எதிர்த்தாலும் சரி, மற்றவர்கள் எதிர்த்தாலும் சரி, பூபதியும் தங்கமும் தம்பதிகளாகவேண்டும். இதே சமயம் தன்னுடைய காதலும் நிறைவேறவேண்டும். இதற்கு என்ன வழியென்பதைச் சிந்திப்பதிலேயே பெரும்பொழுதையும் செலவழித்தான். அவனுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றிற்று. முதலில் தானும் மனோன்மணியும் கல்யாணம் செய்துகொள்வது. பிறகு பூபதிக்கும், தங்கத்திற்கும் கலியாணம் செய்து வைப்பது. இவ்வாறு நடந்தால் காதல் தோல்வியுறாது. தாழ்ந்த சாதிக்காரனோடு சம்பந்தம் வைத்துக் கொண்டிருப்பவன் நமது மருமகனாகிவிட்டானே என்று மனோன்மணியின் பெற்றோர் மனம் வருந்தினாலும், அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. வேண்டுமானால், தங்கத்துடனும், பூபதியுடனும் உறவு முறை வைத்துக்கொள்ளக்கூடாது என்று தன்னைத் தடை செய்யலாம். அப்படித்தான் நடக்காவிட்டால் சதாசிவம் தம்பதிகள் தன்னுடன் ஒருவித உறவும் வைத்துக்கொள்ளாதிருக்கலாம். இதைத் தவிர, வேறு என்ன செய்யமுடியும்? பெற்றோரைப் பகைத்து வாழமுடியாது என்று மனோன்மணி கருதினால், தங்கத்துடனும் பூபதியுடனும் நான் சொந்தங்கொண்டாடாமலிருந்தால் சரி. இந்தச் சிறு விஷயங்களால் தங்கத்தின் வாழ்க்கையோ, என்னுடைய வாழ்க்கையோ பாதிக்காது. எவ்வித இடரும்

தோன்றுது. எனவே, எனக்கும் மனோன்மணிக்கும் விரைவிலே கல்யாணம் நடப்பதற்கு முயற்சி செய்யவேண்டும் — என்று தனக்குள் தீர்மானம் செய்துகொண்டான். தன்னுடைய இந்தத் தீர்மானத்தைத் தங்கத்திற்கும் பூபதிக்கும் எழுதினான்.

* * *

மணியம் சம்பந்தமான வழக்கு வெற்றியடைந்தாலும், பூபதியோ தங்கமோ அதைக் குறித்துச் சந்தோஷப்படவில்லை. தங்களுடைய காதல் நிறைவேறாமல் போய்விட்டதை எண்ணி உள்ளம் உடைந்துபோயினர். இந்தச் சமயத்தில்தான் பாலுவின் கடிதம் வந்தது. அதைப் படித்ததும் இருவரும் மகிழ்ச்சிக் கடலில் நீந்தினார்கள். பாலு தெரிவித்த அபிப்பிராயத்தை நடராசனுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று பூபதியின் மனம் துடித்தது. உடனே அவனுக்கு கடிதம் எழுதினான்.

பாலு தன்னுடைய தீர்மானத்தை நடராசனுக்குச் சொல்லவில்லை. எனவே, பூபதியின் கடிதத்தைக் கண்டதும் அவனுக்கு ஆச்சர்யம் ஏற்பட்டது.

அன்றிரவு பாலு டியூஷனால் வந்ததும், பூபதி எழுதிய கடிதத்தைக் கொடுத்தான் நடராசன். அதைப் படித்துப் பார்த்து விட்டுப் புன்னகை செய்தான் பாலு.

"உனது தீர்மானத்தை இதுவரை ஏன் எனக்குச் சொல்லவில்லை?" என்று கேட்டான் நடராசன்.

"உனக்குச் சொல்லாமலே இதைச் செய்துகாட்டி, உன்னை அதிர்ச்சிக்குள்ளாக்க வேண்டும். அதுமட்டுமல்ல, என்னுடைய காதல் நிச்சயம் தோல்வியடையுமென்று சொன்னாயல்லவா, அது தப்பு என்பதைக் காட்டவேண்டும். அதாவது, எனக்கும் மனோன்மணிக்குமுள்ள காதலைப்பற்றி நீ கொண்டிருக்கும் கருத்தைத் தோற்கடிக்கவேண்டும். எனக்கும் கொஞ்சம் புத்தியிருக்கிறது என்று நீ உணரவேண்டும்; ஒப்புக்கொள்ளவேண்டும். எனவேதான் சொல்லவில்லை."

உற்சாக வெள்ளம் பெருக்கெடுத்தோட இத்தனையையும் கூறிமுடித்தான் பானு. தன்னுடைய இத்திட்டம் நிச்சயம் வெற்றியடையுமென்ற நம்பிக்கையால்தான் இப்படி உற்சாகத் துடன் பேசுகிருன் என்பதை உணர்ந்துகொண்டான் நடரா சன். அவன் உள்ளூரச் சிரித்துக்கொண்டான். அதே வேளை யில் அவன்மேல் அனுதாபமும் பிறந்தது. சமூக உறவுகளைப் பற்றிச் சரிவரத் தெரிந்துகொள்ளாத பானுவின் மூளை, இந்த நிறைவேருத திட்டத்தைத்தான் உருவாக்குமென்பதை எண்ணிச் சிரித்தான். ஆனல், இத்திட்டம் தோல்வியடைவது நிச்சயம். அதனல் ஏற்படும் அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் எப்படித் தாங்கப்போகிருனே என்பதை எண்ணி அனுதாபமும் பிறந்தது. ஆனல், இதை அவன் பானுவுக்குச் சொல்ல விரும்பவில்லை. நாம் என்ன சொன்னலும் அவனுடைய காதில் ஏருது. அனுப வத்தின் மூலமாக அறிந்துகொள்ளட்டும் என்று பேசாமலிருந்து விட்டான்.

# 22

தங்கள் திருமணத்தை விரைவில் நடத்த முயற்சிக்கவேண்டுமென்ற தனது தீர்மானத்தை மனோன்மணியிடம் சொல்ல, பானுவுக்கு வாய்ப்பு ஏற்படவில்லை. ஏனெனில், இரண்டு மூன்று நாட்களாக அவனுக்கு நெஞ்சுத் தடிமலும் காய்ச்சலுமாயிருந்தது. அதனால் அவன் சொர்ண விலாசத்திற்குப் போகவில்லை.

இந்த நோய்கள் விடைபெற்று, சுகமடைந்ததும், வழக்கம் போல் ஒருநாள் சொர்ணவிலாசத்திற்குச் சென்றான் பானு. அவன் போனபோது, அந்தப் பங்களா நன்றாக ஜோடிக்கப்பட்டு அலங்காரமாகக் காட்சியளித்தது. 'பெரிய மனிதர்கள்' பலர் அங்கேயிருந்தார்கள். மகிழ்ச்சியும், கலகலப்பும் மண்டிக் கிடந்தது அங்கே. வழக்கத்தைவிட அப்போது மிக உற்சாகத்துடன் இருந்தார்கள் சதாசிவம் தம்பதிகள். சர்வ சாதாரணமாக உள்ளே நுழைந்த பானு இந்தக் காட்சியைக் கண்டு ஆச்சர்யமடைந்தான். "இன்று என்ன விசேஷம்?" என்ற கேள்வி உள்ளத்தில் எழுந்தது.

"நல்ல சமயத்தில் நீரும் வந்தீர்?" என்று பானுவை வரவேற்றார் சதாசிவம். மறுகணம், வெள்ளைக்காரத் துரைபோல் காட்சியளித்த ஒரு இளைஞனைச் சுட்டிக் காட்டி "இவர்தான் என் மருமகன் இராஜலிங்கம். இத்தனை நாட்களாக இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்தார். இப்போது என்ஜினியரிங் படித்துவிட்டு வந்திருக்கிறார்!" என்று அறிமுகப்படுத்தினார். பானு புன்சிரிப்புத் தவழ அந்த என்ஜினியரான இளைஞனுடன் கைகுலுக்கினான்.

சதாசிவம் உற்சாக மிகுதியால் தன் பேச்சை மீண்டும் தொடர்ந்தார். "நேற்றுத்தான் விமானத்தில் வந்தார். இவருக்காக இன்று ஒரு விருந்து நடத்துகிறோம். மனோன்மணிக்கு மாப்பிள்ளையாக வரப்போகிறவரை வரவேற்று உபசரிப்பது என்றால் அது எவ்வளவு சந்தோஷமான விஷயம்!" என்று ஒரு கேள்வியுடன் நிறுத்தினார் சதாசிவம்.

இதைக் கேட்டதும் திடுக்கிட்டான் பாலு. சற்று முன்பு மலர்ந்திருந்த முகம் வாடிக் கறுத்தது. கலவரத்துடன் அங்குமிங்கும் பார்த்தான். மனோன்மணியைக் காணவில்லை. அந்த அலங்கார மாளிகை சுழலுவதுபோலிருந்தது. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. மௌனமாகச் சென்று ஓரமாகக் கிடந்த ஒரு கதிரையில் அமர்ந்தான். கொஞ்சநேரம் சென்றதும், அந்த வாலிபனும் சதாசிவமும் எழுந்து உள்ளே சென்றார்கள். பாலுவுக்கு அங்கே இருக்கப் பிடிக்கவில்லை. எப்போதும் குளிர்ச்சியைக் கொடுக்கும் சொர்ண விலாசம் அப்போது கொதிக்கும் வெயில் ஆட்சி செய்யும் பாலைவனத்தைப் போன்றிருந்தது. ஒருவருடனும் பேசாமல் மெல்ல வெளியே வந்தான். சொர்ண விலாசத்திலிருந்து திரும்பும்போதெல்லாம் பாலுவின் மனம் தென்றலைப்போல் அமைதியாகவும், இனிமையாகவும், குளிர்ச்சியாகவுமிருக்கும். இப்போது அவன் மனதில் என்றுமில்லாத புயல் கோரமாகவீச நடந்துகொண்டிருந்தான்.

*　　　*　　　*

இராஜலிங்கம் என்ற அந்த வாலிபன் சதாசிவத்தின் சொந்த மருமகன். அவன் பெரிய இடத்துப் பிள்ளையாதலால் இங்கிலாந்தில் படித்துப் பட்டத்துடன் வந்திருந்தான் அவனைத் தன் மனோன்மணிக்கு மணம் செய்து வைக்கவேண்டுமென்று ஏற்கனவே திட்டம் போட்டிருந்தனர் சதாசிவம் தம்பதிகள். பெற்றோரின் இந்த எண்ணத்தை மனோன்மணியும் அறிவாள். பாலுவைச் சந்திக்கும்வரை, இராஜலிங்கத்தைத்தான் கல்யாணம் செய்துகொள்ள நேரும் என்று எண்ணியுமிருந்தாள். ஆனால், பாலுவின் அழகிலே, அவனுடைய கவர்ச்சியான தோற்றத்திலே, இனிமையான பேச்சிலே மனதைப் பறிகொடுத்து, அவனுடன் காதல் தொடர்பு கொண்ட பிறகு அந்த எண்ணம் மறைந்துவிட்டது. சுருங்கச் சொன்னால், இராஜலிங்கத்தைப்பற்றிய நினைவேயில்லை. இப்போது அவன் திடீரென்று வந்ததையும், ஐயாவும், அம்மாவும் வரவேற்று உபசரித்து மகிழ்ச்சி கொண்டாடுவதையெல்லாம் கண்டதும் அவள் மனதிலே பெரிய திகில் உண்டாயிற்று. இதற்குமுன்பெல்லாம், தனது இஷ்டத்திற்கு விரோதமாக நடக்கமாட்டார்களென்ற துணிவு அவளுள்ளத்தில்

வேரோடியிருந்தது. ஆனால், இராஜலிங்கத்தின் வருகை. அந்தத் துணிவென்ற வேரைத் துண்டுதுண்டாக்கும் கோடரி போன்றிருந்தது அவளுக்கு. சாதாரணமாக இருந்தால்கூட. இராதுலிங்கத்தின் வருகையைப்பற்றி அதிகம் பயந்திருக்கமாட்டாள். ஆனால், இப்போதைய அவளுடைய நிலை அளவுக்கு மீறிய பயத்தைக் கொடுத்துவிட்டது. ஆம். இப்போது அவள் கர்ப்பவதியாக இருந்தாள்! ஒரு நாளிரவு பாலுவுடன் பஞ்சணை விளையாட்டில் இறங்கியதன் பலனாக, இப்போது ஒரு பாலகன் வயிற்றில் வளர்ந்து கொண்டிருந்தது. கர்ப்பவதியின் குறிகளும், குணங்களும் இப்போது ஒருவாரமாகத் தெரிய ஆரம்பித்தன. ஐயா, அம்மா இதை அறிந்தால் அனர்த்தந்தான் ஏற்படும். தனது அவசரத் தனத்தையும், அறியாமையும் விளைவித்த இந்த விஷயத்திற்காக தன் மேல் எரிந்துவிழுவார்கள்; ஏசுவார்கள் என்ற பயத்தின் காரணமாக அந்தக் குறிகளையும், குணங்களையும் வெளிக்குத் தெரியாதவாறு உள்ளடக்கிக் கொண்டிருந்தாள். தன்னை மீறி இந்த விஷயம் எப்படியாவது ஒரு நாள் வெளிவரத்தான் செய்யும். அப்போது சமாளித்துக்கொள்ளலாம். திட்டத்தான் செய்வார்கள். கண்டிக்கத்தான் செய்வார்கள். என்றாலும் என்ன செய்யமுடியும்? விஷயம் வெளியாக முன்பு தனக்கும் பாலுவுக்கும் கலியாணத்தை முடித்துவிடுவார்கள் என்றெல்லாம் எண்ணியிருந்தாள். ஆனால், இராஜலிங்கத்தின் வரவு இந்த எண்ணத்திலே மண்ணைப் போட்டதுபோலிருந்தது. இராஜலிங்கத்தை அவர்கள் வரவேற்று உபசரித்து மகிழ்ச்சி கொண்டாடியது தன்னை அவனுக்கு மணமுடித்துவைக்க ஏற்கெனவே போட்டிருந்த திட்டத்தை விரைவிலே செய்துமுடிக்க முன் அறிவித்தல் கொடுப்பதுபோலிருந்தது. இந்த மகிழ்ச்சி வெறியிலிருப்பவர்களுக்குத் தன் விஷயம் தெரியவந்தால் என்ன நடக்கும்? அவர்கள் என்ன செய்வார்கள்? என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்தாள். இந்த அனுபவம் அவளுக்குப் புதுமையாக இருந்ததால் இதன் விளைவு என்ன, எப்படியிருக்கும் என்று ஒன்றும் விளங்காது, பீதி பிடித்தாட்ட ஆலோசனை செய்து கொண்டிருந்தாள். தன்னுடைய மனக்கொந்தளிப்பும், கர்ப்பத்தின் குணங்குறிகளும் எங்கே வெளியாகிவிடுமோ என்ற பயம்

வேறு அவள் நெஞ்சை அரித்துக் கொண்டிருந்ததால் அப்போது நடக்கும் விருந்து வேடிக்கையில் கலந்துகொள்ளாது தன் அறையில் படுத்தவாறு தனது காதலைப் பற்றிப் பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

வெளியிலே விருந்தும் வேடிக்கையும் நடந்துகொண்டிருக்க, அதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்திக்கொண்டிருந்த சதாசிவம் தம்பதிகளுக்கு அப்போதுதான் மனோன்மணியின் நினைவு வந்தது. அவளை அழைத்துவரும்படி தன் மனைவியிடம் சொல்லி விட்டுத் திடீரென்று, ஏதோ நினைத்துக்கொண்டவர்போல் பாலு இருந்த இடத்தைக் கவனித்தார். அவனைக் காணவில்லை! தன்னுடைய விழிகளைச் சுற்றிலும் மேயவிட்டார். காணவில்லை அவனை. "பாலு போய்விட்டானே...? நம்மிடம் சொல்லாமல் போகமாட்டானே?" என்று தனக்குள்ளேயே கேள்விகளைக் கேட்டுக்கொண்டு, விருந்து விஷயத்தைக் கவனித்தார்.

மனோன்மணியை அழைப்பதற்காக அவளுடைய அறைக்குள் நுழைந்த அவனுடைய அம்மா, சோர்ந்துபோய் படுக்கையில் கிடந்த மகளைக் கண்டதும் திடுக்கிட்டுவிட்டாள்.

"உனக்கு என்ன செய்கிறது மனோன்மணி? ஏன் இங்கே படுத்திருக்கிறாய்?"—என்று கேட்டுக்கொண்டே அவளருகில் வந்தாள்.

தன் அம்மா என்ன சொல்லப்போகிறாள் எங்கே அழைக்கப்போகிறாள் என்பதையெல்லாம் தெரிந்துகொண்டாள். "அம்மா, தலையிடி கடுமையாக இருக்கிறது. அதுதான் நான் வரவில்லை!" கொஞ்சநேரம் நித்திரை செய்யப்போகிறேன். என்னைத் தொந்தரவு செய்யாமல் போங்கள்!—என்றாள் மனோன்மணி.

"தலையிடியென்றால், ஓடிகலனைப் போடவேண்டியதுதானே...? மனோ, நான் சொல்வதைக் கொஞ்சம் கேள். இராஜலிங்கம் அங்கிருக்கிறான். இன்று முழுதும், நீ அவனுடன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையென்று சொன்னான் உன்

னுடன் கதைக்க, உன்னைப் பார்க்க ஆவலுடன் இருக்கிறுன். எல்லோரும் அங்கிருக்கிறுர்கள். நீ இல்லாவிட்டால், ராஜா என்ன நினைப்பான்?''—என்று ஒரு கேள்வியைப் போட்டுவிட்டு வெளியே போனுள்.

மனோன்மணிக்குத் தர்மசங்கடமாகிவிட்டது. இந்த நேரத்தில் வரமுடியாது என்று சொன்னுல், தனக்கு தலையிடியோடு வேறு ஏதும் நோயோ என்று டொக்டரைக் கூப்பிட்டுவிடுவார்கள், டொக்டர் வந்தால் எல்லாம் வெளியாகிவிடும். அதைவிட, போய் ஒன்றும் கதைக்காமல் கொஞ்சநேரம் இருந்துவிட்டு வந்துவிடுவோம், என்று எண்ணிக்கொண்டிருக்கும்போதே, பழையபடியும், அவளுடைய அம்மா அங்கு வந்துவிட்டாள்.

"இந்தா, டைகர் பாம்! இதைப் பூசு! சரியாய்விடும்!" என்று தைலப் புட்டியைக் கொடுத்தாள்.

அதை வாங்கிக் கொஞ்சம் தலைக்குத் தேய்த்துவிட்டு, அலங்காரம் செய்துகொண்டு அம்மாவுடன் புறப்பட்டாள்.

விருந்துமுடியும்வரை மனோன்மணி இருக்கவேண்டிவந்துவிட்டது. இராஜலிங்கம் அவளுடன் கதைக்க மிக ஆர்வங்கொண்டவனுக எத்தனையோ கேள்விகளையெல்லாம் கேட்டான். மனோன்மணி சில கேள்விகளுக்குமட்டும் விடையிறுத்துவிட்டு, மற்றவைகளுக்குப் புன்னகையால் பதில்சொல்லிக் கொண்டிருந்தாள்.

# 23

இராஜலிங்கம் சிறுவனுயிருக்கும்போதே அவனுடைய தாயார் இறந்துவிட்டாள். தந்தைமட்டும்தான் இருந்தார். அவர் இப்போது கண்டியில் நீதிவானுகக் கடமையாற்றிக்கொண்டிருந்தார். இராஜலிங்கம் கொழும்புக்கு வந்தபோது அவனைச் சந்திக்கத் தந்தை வரவில்லை. உத்தியோக அலுவல்களால் அவர் வரமுடியாது போய்விட்டது. ஆதலால், இராஜலிங்கம் ஐயாவைப் பார்க்கக் கண்டிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

சதாசிவம் தம்பதிகள் முதல் நாளிரவே, அவனுடன் கல்யாண விஷயத்தைப் பற்றி முடிவு செய்திருந்தனர். அதைப் பற்றித்தான் இப்போதும் நினைவுபடுத்திக்கொண்டிருந்தனர்.

"உன் வருகைக்காகத்தான் இத்தனை நாட்களாகக் காத்துக் கொண்டிருந்தோம். உன் ஐயாவும், நீ வந்ததும் கல்யாணத்தை முடித்து விடுவோமென்று சொன்னார். இதைப்பற்றி அவரிடம் சொல்லு. இன்னும் இரண்டு மூன்று நாட்களில் நானே நேரில் வந்து ஐயாவுடன் பேசிக் கல்யாண நாளைத் தீர்மானப்படுத்தலாம்" என்றார் சதாசிவம்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மனேன்மணிக்கு, அந்த மாளிகையே சுழல்வதுபோலிருந்தது. சதாசிவத்திடமிருந்து வந்த ஒவ்வொரு சொல்லும் அவளுடைய உள்ளத்தில் ஈட்டியைப்போல் தைத்தது. உணர்ச்சிகள் குமுறிக் குமுறி எழுந்தன.

இராஜலிங்கம் இதையெல்லாம் எப்படி அறிவான்? அவன் மனேன்மணியைக் கண்டதும், அவளுடைய அழகிலும், கவர்ச்சியிலும் தன் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டான். இங்கிலாந்திற்குப் போகுமுன்னிருந்ததைவிட இப்போது எவ்வளவோ அழகுமிகுந்தவளாகக் காணப்பட்டாள். இந்த அழகுக் குவியல் தனக்குச் சொந்தமாகப்போகிறது என்ற எண்ணத்தால் அவன்

உள்ளம் பூரித்திருந்தது. அவளுடைய அழகைப் பருகிக் கொண்டே சதாசிவம் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண் டிருந்தான்.

மனோன்மணிக்கு அதற்குமேல் அங்கிருக்கப் பிடிக்கவில்லை. மெல்ல எழுந்து உள்ளே போனாள். கொஞ்சநேரத்தில் இராஜ லிங்கமும் சொர்ணவிலாசத்தைவிட்டுக் கண்டிக்குப் புறப்பட் டான்.

இராஜலிங்கம் போகும்சமயம், மனோன்மணி அவனுடன் ஒன்றும் கதைக்காது முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு உள்ளே போனது சதாசிவத்திற்குப் பிடிக்கவில்லை. மனோன் மணி ஏன் ஒருமாதிரியிருக்கிறாள்? கலகலப்பாக நாலு வார்த் தைகள்கூட இராஜலிங்கத்துடன் கதைக்கவில்லையே...! அவ ளுக்கு என்ன? என்ற கேள்விக் கணைகளைத் தன் மனைவிமீது தொடுத்தார்.

"ஆமாம். இரண்டு மூன்று நாட்களாக ஒருமாதிரியாகத் தானிருக்கிறாள். இராஜலிங்கம் வந்திருந்த பரபரப்பில் நானும் அதை அதிகம் கவனிக்கவில்லை. என்ன என்று எனக்கும் தெரியவில்லை!" என்று சொல்லிக்கொண்டே மனோன்மணியின் அறைக்குள் போனாள். தன் மனைவியைத் தொடர்ந்து சதாசிவ மும் சென்றார்.

மனோன்மணி கட்டிலில் குப்புறப் படுத்தவாறு அழுது கொண்டிருந்தாள். "மனோ...!" என்று அம்மா அழைக்கும் சப்தம் கேட்டதும், தன் விழிகளில் பெருகும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பரபரப்புடன் எழுந்தாள்.

"என்னம்மா உனக்குச் செய்கிறது? ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? இரண்டு மூன்று நாட்களாகச் சோர்ந்துபோயிருக் கிறாயே?" என்றாள், மிஸஸ் சதாசிவம்.

மனோன்மணி பதில் சொல்லக்கூடிய நிலையிலில்லை. கொஞ்சநேரமாக வயிற்றை என்னமோ செய்வதுபோலிருந்தது.

இப்போது வயிற்றைகுமட்டியது. தன்னையறியாமலே கையால் வயிற்றைக் கசக்கினாள். மறுவிநாடி அவள் வாயிலிருந்து வாந்தி வந்தது. கண் இருண்டது. மயக்கம் வந்தது. தொப்பென்று கட்டிலில் படுத்தாள்.

இதைக் கண்டதும் சதாசிவம் தம்பதிகள் திடுக்கிட்டுவிட்டனர். "டொக்டருக்குப் போன் பண்ணுங்கள்...! டொக்டருக்குப் போன் பண்ணுங்கள்...!" என்று கணவனைப் பார்த்துக் கூவினாள் மனைவி. சதாசிவம் டெலிபோன் இருக்கும் இடத்தை நோக்கி ஓடினார். ஓடும்போதே "வில்லியம்...! வில்லியம்...!" என்று கத்திக்கொண்டே ஓடினார். அவனும் பரபரப்புடன் ஓடி வந்தான். "சின்ன அம்மாவின் அறைக்கு ஓடு!" என்று அவனுக்கு உத்தரவு போட்டுவிட்டு டொக்டருக்கு டெலிபோன் செய்தார்.

டொக்டர் வந்தார். மயக்கத்திலிருக்கும் மனோன்மணியைப் பரிசோதித்தார். மறுகணம் திடுக்கிட்டுப் போனார். அவள் கர்ப்பவதியென்பதை எப்படிச் சொல்வது என்று சில விநாடிகள் தத்தளித்தார். அவருடைய மௌனத்தைக் கண்டதும் சதாசிவம் தம்பதிகள் பதைபதைத்தனர். டொக்டர் அவர்களை அழைத்துக்கொண்டு நடு ஹோலுக்குள் வந்து அவர்களிடம் விஷயத்தைச் சொன்னார். இதைக் கேட்டதும், தேள் கொட்டினால் திடுக்கிட்டுத் துள்ளுவதுபோலத் துள்ளினர் சதாசிவம் தம்பதிகள். டொக்டர் சொல்வது உண்மைதானா என்ற சந்தேகம்கூட வந்துவிட்டது அவர்களுக்கு. சில விநாடிகள் ஒன்றும் தோன்றாது கற்சிலைபோல் நின்றுவிட்டனர்.

டொக்டர் திரும்பவும் மனோன்மணியின் அறைக்குள் சென்று அவளுக்கு மருந்து கொடுத்துவிட்டு மீண்டும் ஹோலுக்குள் வந்தார். சதாசிவம் தம்பதிகள் முகம் வெளுக்க உட்கார்ந்திருந்தனர். டொக்டரும் ஒரு பெருமூச்சுடன் அவர்களுக்கெதிராக அமர்ந்தார்.

மனோன்மணி இந்த நிலையிலிருப்பாளென்று சதாசிவம் தம்பதிகள் எதிர்பார்க்கவேயில்லை. யாருடன் சம்பந்தம் வைத்துக்

கொண்டாளென்ற கேள்விதான் இருவரின் உள்ளத்திலும் எழுந்து சதுராட்டம் போட்டது. பாலுவின்மேல் சதாசிவத்திற்குச் சந்தேகம் எழுந்தது. கொஞ்சநேரம்வரை தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்துவிட்டு, எழுந்து மனோன்மணியின் அறைக்குள் சென்றார். அப்போது மயக்கம் தெளிந்து சோர்வுடன் படுத்திருந்தாள் மனோன்மணி. தன் தந்தைக்கு விஷயம் தெரிந்துவிட்டதென்று உணர்ந்துகொண்டாள். அவர் முகத்தைப் பார்க்க அவளுக்குச் கூச்சமாயிருந்தது. முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டாள்.

சதாசிவம் மகளின் பக்கம் சென்று, "மனோ..." என்று அன்பு ததும்ப அழைத்தார். அவள் மெல்லத் தன் முகத்தைத் திருப்பினாள்.

"நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். ஆனால், உன்னுடைய காதலன் யார் என்பதைமட்டும் சொல்லிவிடு. இதனால் உனக்கோ, அவனுக்கோ ஒரு கெடுதலும் ஏற்படாது!" என்றார் விநயமாக.

மனோன்மணி ஒருசில விநாடிகள் யோசித்தாள். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவள்போல், "பாலு...!" என்றாள் அமைதியாக.

இதைக் கேட்டதும் சதாசிவத்தின் முகம் கறுத்தது. தான் சந்தேகப்பட்டது சரிதானென்று எண்ணிக்கொண்டே வெளியே வந்து, பழையபடி தீவிர ஆலோசனையிலமர்ந்தார். அவர் மனைவியின் முகம் அப்போது கலவரத்துடனிருந்தது.

கால்மணி நேரம் சென்றிருக்கும். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்போல் டொக்டரைப் பார்த்தார் சதாசிவம். பிறகு, "டொக்டர் இந்த விஷயம் உங்கள் மனதிலே இருக்கட்டும். யாருக்கும் சொல்லவேண்டாம். மனோன்மணியின் வருங்கால வாழ்க்கை, என் குடும்பத்தின் கௌரவம்—எல்லாம் இந்த இரகசியத்தில்தான் இருக்கிறது. என் மருமகன் இராஜலிங்கத்திற்குக் கல்யாணம் செய்துவைக்க ஏற்பாடாகியுள்ளது உங்களுக்குத் தெரியும். இப்படியிருக்கையில் மனோன்மணி கர்ப்ப

வதியென்று, தெரியவந்தால் மானமே போய்விடும். இராஜலிங்கமும் திருமணம் செய்துகொள்ளமாட்டான். என் மகள் யாருக்குச் சூழ்கொண்டாளோ அவனுக்கே திருமணம் செய்து வைப்பதும் சாத்தியமில்லை. அப்படிச் செய்தால் என் குடும்ப கௌரவத்திற்கும், அந்தஸ்திற்கும் கேடு உண்டாகும். மேலும் இராஜலிங்கத்தின் நம்பிக்கையைக் குலைத்ததாகிவிடும். அது மட்டுமல்ல, இராஜலிங்கத்திற்குத்தான் மனோன்மணியைத் திருமணம் செய்யத் தீர்மானித்திருக்கிறோமென்பது எல்லோருக்கும் தெரியும். இந்த நிலையில் அவனுக்குச் செய்துவைக்காமல், மனோன்மணியின் கருவுக்குக் காரணமானவனைக் கணவனுக்கினால் உலகம் என்ன நினைக்கும்? இதனால் அபகீர்த்தியும், அந்தஸ்திற்குக் குறைவும் ஏற்படும். ஆகையினால், தயவு செய்து நீங்கள்தான் உதவிசெய்யவேண்டும். இப்போதே மனோன்மணியின் வயிற்றிலுள்ள கருவை அழித்துவிடுங்கள். மற்ற விஷயங்களை நான் கவனித்துக் கொள்கிறேன். கருவை அழிக்கும் விஷயம் மனோன்மணிக்குக்கூடத் தெரியக்கூடாது. இந்த உதவியைச் செய்து என் குடும்ப கௌரவத்தை—என் மானத்தை—காப்பாற்றவேண்டிய பொறுப்பு உங்களைச் சேர்ந்தது. மனதில் விகற்பம் எண்ணாமல் இந்தக் காரியத்தைச் செய்துவிடுங்கள்!"—என்று பணிவோடும், சோகத்தோடும் கூறிமுடித்தார் சதாசிவம். இதைக் கூறும்போது அவரது உள்ளத்தில் குமுறியெழுந்த துக்கத்தை எடுத்துக்காட்டும் அறிகுறியாக கண்கள்கூடக் கலங்கிவிட்டன. இதே சமயம் அவருடைய மனைவியின் கண்களிலிருந்தும் நீர் முத்துக்கள் உருண்டன.

டொக்டர் கொஞ்சநேரம் சிந்தித்தார். பிறகு, நீங்கள் இப்படித் தயவுடன் வேண்டும்போது, அதற்குச் செவி சாய்க்காமலிருக்கமுடியாது. உங்கள் இஷ்டப்படியே செய்துவிடுகிறேன். "நான் உங்கள் குடும்ப டொக்டர். ஆகவே, உங்கள் குடும்ப இரகசியம், என் குடும்ப இரகசியத்தைப் போன்றது. ஆகையினால் என்னை நம்பலாம்!" என்றார்.

இராஜலிங்கத்திற்கு மனோன்மணியைக் கல்யாணம் செய்து வைக்கப் போகிறார்களென்ற செய்தியை அறிந்ததிலிருந்து பாலுவின் மனதிலே அமைதியேயில்லை. ஒரே குழப்பமாயிருந்தது. பல எண்ணங்கள் எழும்பிக் குதித்துக்கொண்டேயிருந்தன. மனோன்மணி இத்திருமணத்திற்கு இணங்கிவிடுவாளா? அல்லது எதிர்த்து நிற்பாளா? எதிர்த்து நின்றால் என்ன நடக்கும்? என்ற பல கேள்வி அலைகள் அவன் இதயக் கடலில் அடிக்கத் தொடங்கின. முதல் நாளிரவு அவனுக்கு நித்திரையேயில்லை. மறுநாளும் இதே கேள்விகளும், சிந்தனையும்தான். நடராசனுடன்கூட அவன் ஒன்றும் கதைக்கவில்லை.

பாலுவுக்குத் திடீரென்று ஒரு யோசனை பிறந்தது. மனோன்மணிக்கு டெலிபோன் பண்ணி விசாரிக்கவேண்டுமென்பதுதான் அந்த யோசனை உடனே அடுத்த வீட்டுக்குச் சென்று, சொர்ணவிலாசத்திற்கு டெலிபோன் பண்ணினான்.

மனோன்மணிக்குப் பதிலாகச் சதாசிவத்தின் குரல்தான் கேட்டது. பாலு மனோன்மணியை விசாரித்ததும், சதாசிவத்திற்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. "பூல்! டாமிட்! ராஸ்கல்! என் மகளைக் கெடுக்க எத்தனை நாட்களாகத் திட்டம் போட்டிருந்தாய்? ராஸ்கல்! இனி சொர்ணவிலாசத்தையோ, மனோன்மணியையோ நினைக்கவும்கூடாது. உனக்கு உயிரின் மீது ஆசையிருந்தால், மனோன்மணிக்கும் உனக்குமுள்ள காதலை யாருக்கும் தெரிவிக்கக்கூடாது. ரொம்பவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்" என்று கடூரமான குரலில் கத்தினார்.

பாலு கலகலத்துப் போனான். அவமானத்தால் உணர்ச்சிகளெல்லாம் குன்றின. உடம்பு குறுகுவதுபோலிருந்தது. அவனையறியாமலே ஒருவிதத் திகில் உள்ளத்தில் புகுந்து உடம்பை 'வெடவெட' என நடுங்கவைத்தது. வியர்வைத் துளிகள் முகத்திலே முத்துக் கோர்த்தன. ஒன்றுமே தோன்றாதவனாக டெலிபோன் இருக்கும் இடத்திலேயே அசந்துபோய் உட்கார்ந்துவிட்டான். கால்மணித்தியாலத்திற்குப் பிறகுதான் தன்னுணர்வு வரப்பெற்றான்.

சோர்வுடன் தன் அறைக்குள் வந்த பாலு கட்டிலில், சலிப்புடன் விழுந்து படுத்தான். வெளியில் தலைகாட்டமுடியாது. சதாசிவம் இனிச் சும்மா இருக்கமாட்டார். நான் டியூஷன் சொல்லிக்கொடுக்கும் வீடுகளுக்கும் என்னைப்பற்றிக் கேவலமாகச் சொல்லி என் பிழைப்பிலும் மண்ணைப் போட்டுவிடுவார்!" என்ற எண்ணங்கள் வேறு மூளையைக் குழப்பி, மனதை அச்சத்திற்குள்ளாக்கியது. தன்னுடைய குழந்தை மனோன்மணியின் வயிற்றில் வளருவது அவனுக்குத் தெரியாது. மனோன்மணியும் அவனுக்குச் சொல்லவில்லை. எனவே, அவனுக்கு மனோன்மணியைப் பற்றிக் கவலை அதிகமாயில்லை. ஆனால், சதாசிவம் என்ன செய்துவிடுவாரோ என்ற பீதிதான் பிடித்தாட்டத் தொடங்கியது. இதைப்பற்றி நடராசனுக்குச் சொல்ல அவன் விரும்பவில்லை. இதையறிந்தால் அவன் மனம் வருந்துவான். தன்னால் அவனுக்கு மீண்டும் கரைச்சல்களும் உண்டாகும் என்று நினைத்தான். முடிவில், கொஞ்ச நாட்களுக்கு யாழ்ப்பாணம் போயிருந்து என்ன செய்வது என்று யோசிப்போம் என்று தீர்மானித்தான்.

பாலு தன் தீர்மானப்படியே யாழ்ப்பாணம் புறப்பட்டான். உடனே வரும்படி வீட்டிலிருந்து கடிதம் வந்திருப்பதாவும், எனவேதான் யாழ்ப்பாணம் போவதாகவும் நடராசனுக்குப் பொய் கூறிவிட்டு வண்டியேறினன்.

# 24

பதினைந்து நாட்கள் பறந்து மறைந்தன.

மனோன்மணியின் கருவும் அழிக்கப்பட்டுவிட்டது. இந்த விஷயம் பிறகுதான் மனோன்மணிக்குத் தெரியும். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தாள். மூன்று வார மாக அவள் பாலுவைச் சந்திக்கவேயில்லை. அவன் யாழ்ப்பா ணம் போயிருப்பானென்று நினைத்தாள். எனவே, இராஜலிங் கத்திற்கு வரவேற்பு விருந்து நடந்த நாளன்று பாலு சொர்ண விலாசத்திற்கு வந்ததோ, பாலுவுக்கும் தன் தந்தைக்கும் நடந்த டெலிபோன் சம்பாஷணையோ அவளுக்குத் தெரியாது. எனவே, தன்னுடைய கருவை அழித்தது, இராஜலிங்கத்தின் வருகை—எதுவுமே பாலுவுக்குத் தெரியாதென்று நினைத்தாள். இதையெல்லாம் பாலு அறிந்தால் அவன் மனம் என்ன பாடு படும் என்று சிந்தித்துப் பார்த்தாள். அவளுக்கே பெருந்துக்க மாயிருந்தது. கரு அழிந்தாலும் பாதகமில்லை. தன் காதலைப் பெற்றோர் அழித்துவிடுவார்களோ என்ற பயமும், கவலையும் தான் அவளை வாட்டி வதைத்தன.

ஒரு நாள் மனோன்மணியுடன் இராஜலிங்கத்தைப் பற்றி யும், திருமணத்தைப் பற்றியும் கதைத்துக் கொண்டிருந்தாள் அவள் அம்மா. இதே சமயம், சதாசிவமும் அங்கிருந்தார். அவர் மகளைப் பார்த்து: "மனோ, நடந்தது நடந்துவிட்டது சென்று போனதையெல்லாம் மறந்துவிடு. நீ, இம்மாதிரி நடப் பாயென்று நான் எதிர்பார்க்கவேயில்லை. அந்தப் பயல் பாலு வைப் பற்றி நல்லபிப்பிராயந்தான் வைத்திருந்தேன். உன்னைத் தன் வலையில் விழுத்திக் கெடுத்துவிடுவானென்று நான் நினைக் கவேயில்லை. நீயும் அறிவுமயங்கி, நமது குடும்ப கௌரவத்தை யும், அந்தஸ்தையும் மறந்து, அவன் வலையில் விழுந்துவிட்டாய்! சரி, போனது போகட்டும். இந்த இரகசியம் நம்மோடு இருக் கட்டும்" என்றார்.

சதாசிவத்தின் இந்த வார்த்தைகள் கூரிய ஈட்டியைப் போன்று மனோன்மணியின் நெஞ்சைத் துளைத்தன. அவளுடைய

முகம் விகாரமாக மாறிற்று. நிலைமை மோசமாகிவிட்டதென்று சட்டென்று விளங்கிக் கொண்டாள். இனியும் மௌனமாயிருப்பது உசிதமல்ல என்று தோன்றிற்று. எனவே, தன்னுடைய எண்ணத்தைச் சொல்லத் தொடங்கினாள். "நான் பாலுவைத்தான் காதலிக்கிறேன். அவரைத்தான் கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்பது என் விருப்பம். என் இஷ்டத்திற்கு எதிராக நீங்கள் ஒன்றும் சொல்லமாட்டீர்களென்ற துணிவில்தான் அவருடன் நெருக்கமாகத் தொடர்பு வைத்துக்கொண்டேன்!" என்றாள்.

இதைக் கேட்டதும் சதாசிவத்திற்கு ஆத்திரம் வரத்தான் செய்தது. எனினும் அதை அடக்கிக்கொண்டே "உனக்கென்ன பைத்தியமா? பாலுவைத்தான் கல்யாணம் செய்துகொள்வேனென்கிறாயே? அவனிடம் என்ன இருக்கிறது? அன்னக்காவடி. உனக்குக் கொஞ்சமாவது புத்தியிருக்கிறதா? நமது அந்தஸ்து என்ன, கௌரவம் என்ன, மதிப்பு என்ன— இதையெல்லாம் மறந்து வேலையில்லாத அந்த வெட்டிப் பயலைக் கல்யாணம் செய்தால் நம்மவர்கள் என்ன நினைப்பார்கள்? நமது கௌரவமும், அந்தஸ்தும் அழிந்துபோய்விடும். நம்மைச் சேர்ந்தவர்கள் காறித் துப்புவார்கள்! இராஜலிங்கமும், மாமாவும் என்ன நினைப்பார்கள்! உனக்கும் அவனுக்கும் கல்யாணம் என்று எல்லோருக்கும் தெரியும். இந்த நிலையில் பாலுவைத் திருமணம் செய்துகொண்டால் இராஜலிங்கத்தையும், அவன் ஐயாவையும் பகைத்துக்கொள்ளநேரிடும். அவர்களின் விழிகளில் மட்டுமல்ல, மற்றவர்களின் கண்களில்கூட விழிக்க முடியாது!" என்றார்.

இத்தனையையும் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த மனோன்மணிக்குத் தன் தந்தை சொல்வது நியாயமாகத்தான் தோன்றிற்று. அப்படியானால் தன்னுடைய காதல்? சில நிமிடங்கள் யோசித்தாள். பிறகு, "எனக்கு இராஜலிங்கத்தின் மேல் விருப்பமில்லை!" என்றாள்.

சதாசிவம் ஆச்சரியத்துடன் மகளைப் பார்த்தார். அவருடைய மனைவி, "விருப்பமில்லையா? ஏன்? அவனுக்கு என்ன

குறை? அழகு, பணம், படிப்பு, பட்டம், இளமை—எல்லாம் இருக்கத்தானே செய்கின்றன. பாலுவைவிட எத்தனையோ மடங்கு சிறந்தவனாயிற்றே?'' என்றாள்.

அம்மாவின் வார்த்தைகளும் சரியென்றேபட்டது மனோன் மணிக்கு. எனினும், பேசாமலிருந்தாள். சதாசிவம் தொடர்ந் தார். ''மனோ, நான் இப்போது தீர்மானமாகச் சொல்கிறேன். பாலுவை நீ மறந்துவிடவேண்டும். நம்முடன் சம்பந்தம் வைத் துக்கொள்ள அவனுக்குத் தகுதியில்லை. அவனைச் சொர்ணவிலா சத்திற்குச் சொந்தமாக்கினால், நாலுபேர் மத்தியில் நீ தலை நிமிர்ந்து நிற்கமுடியாது. நாங்களும் மதிப்போடு வாழமுடி யாது! ஏளனத்திற்கும், இகழ்ச்சிக்கும் உட்பட்டு வாழ நேரி டும். அப்படி வாழ நான் விரும்பமாட்டேன். தூக்குப் போட் டுக்கொண்டு செத்துவிடுவேன். ஆனால் இதெல்லாம் நடக்கக் கூடியதல்ல. எங்களுடைய சொல்லை மீறி, பாலுவைத்தான் கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்றால், எங்களையும் சொர்ணவிலாசத்தையும் இழந்துவிடவேண்டியதுதான். நன் றாகச் சிந்தனை செய்!'' என்று கூறிவிட்டு எழுந்து போய்விட் டார். அவர் மனைவியும், ஒரு பெருமூச்சுடன் எழுந்து நின்று, ''ம்... கரும்பை விட்டுவிட்டு இரும்பைக் கடித்தாளாம் ஒருத்தி, அதுபோல இருக்கிறது உன் புத்தி!'' என்று சலிப்போடு சொல்லிவிட்டு வெளியே சென்றாள்.

அவர்களிருவரும் போனபிறகு, மனோன்மணி தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினாள். பெற்றோரின் கருத்துச் சரியாகவும், நியாயமாகவும் பட்டது அவளுக்கு. பெற்றோரை வெறுத்துப் பாலுவைக் கல்யாணம் செய்துகொண்டால் சொத்து சுகத்தை இழந்து, இனசனத்தை மறந்து வாழவேண்டிவரும். அந்த வாழ்க்கையிலே இன்பம் இருக்காது; சந்தோஷமும், அமைதியும் இருக்காது. பாலு பணம், சொத்து இல்லாதவன்; நிரந்தர மான வேலையுமில்லை; அவனைத் திருமணம் செய்துகொண்டால், நிச்சயம் வறுமையையும், கஷ்டத்தையும் ஏற்கவேண்டிவரும். இதையெல்லாம் எண்ணிப் பிறகு வருந்தவேண்டிவரும். இப் படியெல்லாம் அவளுடைய சிந்தனைச் சக்கரம் சுழன்றது.

இராஜலிங்கத்துடன் வாழும் வாழ்க்கையையும் கற்பனைத் திரையில் வைத்து ஒத்திட்டுப் பார்த்தாள். இராஜலிங்கத்துடன் வாழும் வாழ்க்கை தென்றலாகவும், பாலுவுடன் வாழும் வாழ்க்கை புயலாகவும் இருக்கும். அங்கே மாளிகை, சொத்து, சுகம், சந்தோஷம், அமைதி, இனபந்துக்களின் ஆதரவு, பெற்றோரின் மகிழ்ச்சி, சமூகத்தில் மதிப்பு—எல்லாம் இருக்கும். அந்த வாழ்க்கை சோலையாயிருக்கும். ஆனால், பாலுவை மணமுடித்துக்கொண்டால் இவையெல்லாம் இருக்காது, வாழ்க்கை வரண்ட பாலைவனமாயிருக்கும். இராஜலிங்கத்திற்குத்தான் என்ன குறைச்சல். அம்மா சொன்னதுபோல், அழகு, பணம், நாகரிகம், படிப்பு எல்லாம் இருக்கின்றன. 'காதலுக்காகக் கஷ்டமான வாழ்க்கையில் துன்புறமுடியுமா? காதலுக்காக நிழலிலிருந்து வெயிலுக்குப் போகமுடியுமா?' இப்படியான சிந்தனைகளில் அன்றுமட்டுமல்ல பல நாட்கள்வரை மூழ்கிக் கிடந்தாள்.

ஒரு வாரமாக இதே சிந்தனையில் மூழ்கிக் கிடந்த மனோன்மணி, பெற்றோரின் விருப்பப்படி இராஜலிங்கத்தைத் தான் திருமணம் செய்துகொள்ளவேண்டுமென்ற முடிவுக்கு வந்தாள். தன் முடிவை அவர்களுக்குத் தெரிவித்தாள்.

மகளின் சம்மதத்தை அறிந்ததும் சதாசிவம் தம்பதிகளுக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. ஆனால், அவளுடைய உடல் நிலை, கரு அழிப்பால் கொஞ்சம் பாதிக்கப்பட்டிருந்தது. எனவே, இன்னும் இரண்டு மாதங்கள் கழித்துக் கல்யாணத்தை நடத்துவதென்று முடிவு செய்தனர். ஆனால், இராஜலிங்கத்தைக் கொழும்புக்கு அழைத்து, மனோன்மணியுடன் பழகினால், அவளுடைய மனம் மேலும் மாறி உறுதிப்படும் என்று எண்ணினார்கள். உடனே, கொழும்புக்கு வருமாறு இராஜலிங்கத்திற்குக் கடிதம் எழுதினார்கள்.

இராஜலிங்கம் கொழும்புக்கு வந்ததிலிருந்து மனோன்மணியின் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டுவிட்டது. இராஜலிங்கத்தின் நட்பிலும், அவனுடன் இன்பமாகப் பொழுது போக்

குவதிலும், பாலுவையும், அவன் மேலுள்ள காதலையும் மறந்து கொண்டிருந்தாள் மனோன்மணி.

ஒரு மாதகாலமாக யாழ்ப்பாணத்திலிருந்து தன் காதலையும், வருங்கால வாழ்க்கையையும் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந் தான் பாலு. ஆனால், ஒரு முடிவுக்கும் வரவில்லை. சிந்தித் துச் சிந்தித்து அவன் மூளை கலங்கியதே தவிர, உருப்படியான ஒரு யோசனையும் உதயமாகவில்லை. எப்படியாவது மனோன் மணியை நேரில் சந்தித்து, அவளுடைய அபிப்பிராயத்தை அறிந்துகொள்ளவேண்டுமென்ற துடிப்புத்தான் அவனுடைய உள்ளத்தை அலட்டிக்கொண்டிருந்தது. எனவே, ஒரு நாள் திடீரென்று கொழும்புக்குப் புறப்பட்டுவிட்டான்.

கொழும்புக்கு வந்த அன்றைய தினமே சொர்ணவிலாசத்திற் குச் சென்றான். அவன் போன சமயம் சதாசிவம் தம்பதிகள் வீட்டிலில்லை. மனோன்மணி மட்டும் நடு ஹோலில் பேப்பர் படித்துக்கொண்டிருந்தாள். பாலு ஆர்வத்துடன் "மனோ...!" என்று கூப்பிட்டான். அவள் சட்டென்று முகத்தைத் திருப் பிப் பார்த்தாள். மறுகணம், அவள் முகம் இருண்டது. சில விநாடிகள் ஏதோ யோசித்தாள். பிறகு, சட்டென்று எழுந்து உள்ளே போக ஆயத்தமானாள். மனோன்மணி தன்னுடன் ஒரு வார்த்தையும் பேசாமல், அலட்சியமாக உள்ளே போக ஆயத்த மானதைக் கண்டதும், பாலுவுக்கு ஆச்சரியமாயிருந்தது. "ஏன் மனோ... என்னுடன் பேச விருப்பமில்லையா...?" என்று ஏக்கத் துடன் கேட்டான்.

"ஆம். நீங்கள் இனி இங்கே வரவேண்டாம். என்னை மறந்துவிடுங்கள். நானும் உங்களை மறந்துவிட்டேன்!" என்று படபடப்புடன் உறுதியாகக் கூறினாள். இதே சமயம், உள்ளே யிருந்து "டார்லிங்...!" என்று கூப்பிட்டுக்கொண்டே அங்கே வந்தான் இராஜலிங்கம். பாலுவைக் கண்டதும், ஒரு கேள்விக் குறியுடன் மனோன்மணியைப் பார்த்தான். அவள் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், ஒரு புன்னகையுடன் இராஜலிங்கத் தின் கரத்தைக் கோர்த்தவாறு அவனை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

பானுவுக்கு அந்த மாளிகையே சுழலுவது போலிருந்தது. அவமானமும், ஆத்திரமும் குமுறியெழுந்து ஆர்ப்பாட்டம் செய்தன. உணர்ச்சிகள் தறிகெட்டு ஓடின. விழிகளிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. தன்னுடைய காதல் மாளிகை தகர்ந்து துகல் துகலாய்ப் போய்விட்டதை எண்ணியதும் துக்கம் தாளாமல் அவன் நெஞ்சு 'ஓ' என்று அலறியது! மனோன் மணிக்கும் தனக்கும் நடந்த சம்பவங்களெல்லாம் கனவுபோல் தோன்றின. 'வேஷக்காரி, விபசாரி, வேசை, துரோகம் செய்து விட்டாள். தன் கற்பைத் தானம் செய்துவிட்டு இன்னொருவனுடன் கொஞ்சிக் குலவப் போகிறாள் வெட்கங்கெட்ட வேசை' என்று கோபங் கொப்பளிக்கத் தனக்குள் கூறிக்கொண்டான். மனோன்மணி அங்கிருந்திருந்தால், பானு தன் ஆத்திரந்தீர, அனலென வார்த்தைகளைக் கொட்டியிருப்பான். அவள் தானில்லையே! அவமானம், ஆத்திரம், ஏமாற்றம், துக்கம்—இப்படிப் பலதரப்பட்ட உணர்ச்சிகளின் கூட்டுருவமாகத் தள்ளாடிய வண்ணம் சொர்ணவிலாசத்தை விட்டு வெளியே வந்தான் பானு.

# 25

வழக்கம்போல் அன்று சாயங்காலம் நடராசன் வேலை முடிந்து அறைக்கு வந்ததும், பாலு முகம் வெளுத்து, 'விசரனை'ப் போலிருந்ததைக் கண்டான். அவனிருந்த நிலை நடராசனைக் கூடத் திகைக்கவைத்துவிட்டது. "ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்!" என்று திகைப்போடு கேட்டான் நடராசன்.

பாலு, சட்டென்று முகத்தைத் தூக்கி நடராசனைப் பார்த்தான். அந்தப் பார்வையில் ஏக்கமும், வெறுப்பும் கூத்தாடின. ஆத்திரம் குமுறிக் கொந்தளிக்கும் நிலையில் பேச நாவெழவில்லை. உதடுகளைக் கடித்துக்கொண்டு மீண்டும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான்.

ஏதோ விசேஷம் நடந்துவிட்டது என்று ஊகித்த நடராசன், "முகத்தைப் பார்க்கப் பயமாயிருக்கிறதே! ஏன் இவ்வளவு கோபமாயிருக்கிறாய்? என்ன நடந்தது?" என்று கேள்விக் கணைகளைத் தொடுத்தான்.

"நீ வெற்றியடைந்துவிட்டாய்! உன் தீர்க்கதரிசனம் சரியாய்விட்டது! மனோன்மணி என்னை மோசம் செய்துவிட்டாள்! என் காதல் தோற்றுவிட்டது! நீ சொன்னதுபோல் என் காதல் தோற்றேவிட்டது!"—துக்கம் தோய்ந்த குரலில், ஆவேசம் தொனிக்கச் சற்று உரத்துக் கத்தினான் பாலு.

"பாலு, எனக்குத் தெரியும். உன் காதலி மனோன்மணிக்கும், புதிதாக லண்டனிலிருந்து வந்திருக்கிறானே ஒரு கறுப்புத் துரை, அதாவது, இராஜலிங்கம் என்பவன்—அவனுக்கும் விரைவிலே கல்யாணம் நடக்க இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். இது ஆச்சரியமல்ல. நான் உனக்கு ஏற்கனவே சொல்லியிருக்கிறேன், காசைப் பொறுத்துத்தான் காதல் விஷயமும் கணிக்கப்படுகிறதென்று. நீ அதை நம்பவில்லை. அது சரி, சொர்ணவிலாசத்தில் என்ன நடந்தது? மனோன்மணி என்ன சொன்னாள்?" என்று கேள்விகளை அடுக்கினான் நடராசன்.

இராஜலிங்கம் லண்டனிலிருந்து வந்ததிலிருந்து நடந்ததையெல்லாம் விவரமாகக் கூறிவிட்டு, சதாசிவம் என்னைக் கேவல

மாகப் பேசியதைக்கூட நான் பொருட்படுத்தவில்லை. மனோன் மணியின் அழியாத அன்பு என்மேலிருக்கும்போது இந்தச் சிறு அவமானம் என்னை என்ன செய்யப்போகிறது என்று எண்ணினேன். காதலுக்காக வாதாடுவாள்; பெற்றோர் மறுத்தால் அதையும் மீறி என்னுடன் வாழத் துணிவாள். எனக்காக சொத்து சுகம் தாய் தந்தை எல்லாவற்றையும் வெறுக்கவேண்டியிருந்தாலும், அதற்குத் தயங்கமாட்டாள் என்று நம்பினேன். எல்லாம் வெறும் கற்பனையாகிவிட்டன" என்றான்.

நடராசன் மெல்லச் சிரித்துவிட்டு, "கண் நிறைந்த கணவனும், கருத்துக் கிசைந்த மனைவியும் கிடைத்துவிட்டால் மட்டும் காதல் வாழ்வு இன்பமாயிருக்குமென்று நினைக்கக்கூடாது. காசும் இருக்கவேண்டும். அப்போதுதான் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும். இதைச் சிந்தித்திருப்பாள் மனோன்மணி. அதனால்தான் தன் காதலை மறக்கத் துணிந்திருக்கிறாள். சொத்து சுகத்தையும் பெற்றோரையும் இழந்து உன்னை நாடிவருவதற்கு உன்னிடம் அப்படி என்னதான் இருக்கிறது? காதல் இருக்கிறது என்று சொல்வாய். அந்தக் காதல் எப்படியிருக்கும்; என்ன செய்யும் என்பதையெல்லாம் அவள் அனுபவித்துப் பார்த்துவிட்டாள். இனிமேல் நீ எதற்கு? எல்லாவற்றையும் துறந்து உன் காதலை மதித்து வருவதற்கு நீயும் ஒரு பணக்காரனாயிருக்கவேண்டும். நீயோ ஏழை. ஒன்றுமில்லாதவன். நாலு வீடுகளுக்கு டியூஷன் சொல்லிப் பிழைக்கிறவன், உன்னைக் கல்யாணம் செய்துகொண்டால், தன்னுடைய கனவுகள், ஆசைகளெல்லாம் நிறைவேறாது என்று யோசித்திருப்பாள். உன்னைக் கல்யாணம் செய்துகொண்டால் கண்ணீரும், கஷ்டமும் நிறைந்த வாழ்க்கையைத்தான் அனுபவிக்கவேண்டியிருக்கும் என்று எண்ணியிருப்பாள். அதனால்தான் உன்னை மறந்து, தன் மைத்துனனை மணக்கச் சம்மதித்திருக்கிறாள்!" என்றான்.

இத்தனையையும் மௌனமாகக் கேட்ட பாலு கேலியாகச் சிரித்துவிட்டு, காதலனுக்காக செல்வத்தையும் சீருடன் வளர்த்த பெற்றோரையும் தியாகம் செய்தவர்களும் இருக்கிறார்களென்பதை நீ மறந்துவிட்டாய் போலிருக்கிறது" என்றான்.

"காதலுக்காகச் சுகபோகத்தையும் பெற்றோரையும் துறந்த காரிகையரைக் கதைகளிலும், காவியங்களிலும்தான் காணமுடியும். நடைமுறை வாழ்க்கையில் அப்படிப்பட்டவர்களைக் காண்பது அரிது. ஓரிருவருக்கு அந்த மன உறுதியிருந்து, காதலனைக் கைப்பிடித்து, அவனுடைய வறுமையிலும், கஷ்டத்திலும் பங்கேற்றாலும், அவள் சந்தோஷத்துடனும் மனத்திருப்தியுடனும் இருப்பாளென்று எதிர்பார்க்கமுடியாது. காதல் நிறைவேறி விட்டது என்ற திருப்தியால் தன்னையே ஏமாற்றிக்கொண்டிருப்பாள். நாளடைவில் நடிப்புக்காரியாகிவிடுவாள். அவள் உள்ளத்தில் ஒரு வெறுப்பும், கசப்பும் வேரூன்றிவிடும். ஆனால், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், புன்னகை மலர, வறுமை என்ன செய்யும்? கஷ்டம் என்ன செய்யும்? என் துரை பக்கத்திலிருக்கும்போது எதுவும் ஒன்றும் செய்யாது"—என்றெல்லாம் பேசுவாள்' ஆனால், அவளுடைய உள்ளத்தில் வெறுப்பென்னும் தீ கொளுந்துவிட்டெரிவதை அவள் மறுக்கமுடியாது. ஆனால், சுகபோகத்தில் மிதக்கிறவர்கள் காதலுக்காகக் கஷ்டத்தை ஏற்க முன்வருவார்களென்று எதிர்பார்ப்பது முட்டாள் தனம்! பாலு, இன்றைய சமுதாயம் இருக்கிறதே, இது பல வர்க்கங்களாகப் பிளவுண்டு கிடக்கிறது. குறிப்பாகச் சொன்னால், மேல் வர்க்கத்தாரின் எண்ணங்கள், இலட்சியங்கள், நீதி, நெறி கலாச்சாரம், முதலியவை வேறு. நம்முடையவை வேறு. இந்த எதிர்வர்க்கங்களின் விருப்பு வெறுப்புக்களை ஒன்றாக்கி விடும் சக்தி காதலுக்கு இருக்கிறது என்று சொல்கிறவர்கள் வெறும் கற்பனாவாதிகள். யதார்த்தவாதிகளல்ல. அவர்களுடைய வாதம் உண்மையானால், எல்லா ஏழை மக்களும் பணக்கார வீட்டாரைக் காதலிக்கத் தொடங்கிவிடுவார்கள்! இன்றைய சமூக அமைப்பை—இந்தச் சமூக அமைப்பின் விளைவாகத் தோன்றியிருக்கும் கீழிருந்து மேல்வரை இருக்கும் வர்க்கங்களின் உறவுகளை—நன்றாக ஆராய்ந்து பார்த்தால் இந்த உண்மை தெரியவரும். பாலு, உன்னுடைய காதல் இப்போது தோற்றுவிட்டது உண்மை, ஆனால், இதற்காகக் காதலை வெறுத்துப் பேசுவதிலும் அர்த்தமில்லை. காதல்மேல் கோபப்படுவது முட்டாள்தனம்! காதலென்பது ஒரு பிரமையென்று எண்ணி

ஞல், தங்கத்திற்கும் பூபதிக்குமுள்ள காதலேயும் பிரமை என்று தான் எண்ணவேண்டும். உண்மையில் அவர்களுடைய காதல் பிரமையல்ல. இதில் நாம் கவனிக்கவேண்டியது என்ன வெனில், இன்றைய சூழ்நிலேயில், சமூக அமைப்பில் காதல் எப்படியிருக்கிறது; எந்த முறையில் அது செயல்படுகிறது என்பதைத்தான், இன்றைய சமுதாயத்தில் காதல் பாராட்டவும்படுகிறது; பழிக்கவும்படுகிறது. வெற்றியுமடைகிறது; தோல்வியுமடைகிறது. ஒரே அந்தஸ்திலிருப்பவர்களிடையே ஏற்படும் காதல் வெற்றியடைகிறது. பாராட்டவும் படுகிறது. ஏற்றத் தாழ்வான அந்தஸ்துள்ளவர்களிடையே ஏற்படும் காதல் தோல்வியடைகிறது; பழிக்கவும்படுகிறது. இதற்கு உன்னுடைய காதலும், பூபதியின் காதலும் அத்தாட்சி. எனவே, காதலேக் குலேப்பது, அதன்மேல் கத்தியைப் பாய்ச்சுவது, காதலேக் கொன்று புதைப்பது, அந்தஸ்து வேற்றுமைதான். இந்த அந்தஸ்து வேற்றுமையுள்ள, வர்க்க வேற்றுமையுள்ள இன்றைய சமுதாய அமைப்பு அடியோடு மாறி, வர்க்க வேற்றுமையில்லாத ஒரு சமுதாய அமைப்பு ஏற்பட்டால்தான் காதல் சுதந்திரகீதம் பாடும். வெற்றி முரசு கொட்டும். காதல் ஏமாற்றங்களும், அதனுல் கொலேகளும், தற்கொலேகளும் முற்றுப் பெறும்!'' என்று ஒரு 'நீண்ட சொற்பொழிவைச் செய்தான் நடராசன்.

நடராசனின் இந்தச் 'சொற்பொழிவு' பாலுவின் காதுகளில் எந்த அளவுக்கு நுழைந்ததோ — நடராசன் பேச்சை நிறுத்தியதும், தன் மௌனத்தைக் கலேத்துவிட்டு, "என்ன இருந்தாலும் இப்படிச் செய்வார்களென்று நான் எண்ணியிருக்கவில்லே. என்னுடன் கூடிச் சுகமனுபவித்தவளே இன்னொருவனுக்கு மணமுடித்து வைப்பதற்கும், விபச்சாரத்திற்கும் என்ன வித்தியாசம்? இதற்கு மனேன்மணிகூடச் சம்மதித்திருக்கிருளே...! அவளுடைய மனம் கூசவில்லேயே...! இந்த அளவு மனேன்மணி மட்டரகமானவள் என்று நான் நினேக்கவேயில்லே!'' என்ருன். அவனுடைய குரலில் பலத்த ஏமாற்றத்தின் பிரதிபலிப்பு நன்ருகத் தொனித்தது. இதே சமயத்தில் அவனுடைய முகத்தில் அருவருப்பு உணர்ச்சியும் தோன்றியது.

நடராசன் மெல்லச் சிரித்துவிட்டு, "பானு, பணக்காரர்களுக்கு, பெரிய அந்தஸ்தில் உள்ளவர்களுக்கு இதெல்லாம் சர்வ சாதாரணம். நம்மைப்போன்ற நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும், ஏழைகளும்தான் காதல், மானம், ஒழுக்கம் என்றெல்லாம் கத்திக்கொண்டிருக்கிறோம். அதற்கு ஒரு இழுக்கு வந்தால் மனம் கொதிக்கிறோம். எதிர்த்துப் போராடவும் செய்கிறோம். சில சமயங்களில் உயிரையும் இழந்துவிடுகிறோம். ஆனால், உயர்ந்த அந்தஸ்திலுள்ள மாளிகை வாசியினர் இதையெல்லாம் பொருட்டாக மதிக்கமாட்டார்கள். அவர்களுடைய அகராதியில் இவற்றுக்கெல்லாம் அர்த்தம் வேறு. அவர்களுக்கு இவற்றைப் பற்றி அக்கறையுமில்லை; கவலையுமில்லை. தங்களுடைய சுக போக வாழ்க்கைக்கு இடையூறு வரக்கூடாது. இதை மட்டும் தான் அவர்கள் கவனிப்பார்கள்!" என்றான்.

"இப்போ, நடந்த விஷயங்களைப் பார்த்தால் நீ சொல்வது உண்மைதானென்று படுகிறது. ஆனால், என்னுடைய நம்பிக்கை, கனவுகள், ஆசைகள்—எல்லாம் தகர்ந்து ஒழிந்துவிட்டன. வாழ்க்கையிலே இனி மகிழ்ச்சி மலரும் என்று நான் நினைக்கவில்லை!"

"நீ ஒரு பைத்தியம்! வாழ்க்கையென்பது ஒரு கண்ணாடி என்று பலர் நினைத்துவிடுகிறார்கள். அது உடைந்து நொறுங்கி விட்டால் மீண்டும் எப்படி ஒன்றாகும் என்று எண்ணி ஏக்கம் கொண்டு, சித்தம் கலங்கி பித்தராகிவிடுகிறார்கள்! பானு, வாழ்க்கையென்பது கண்ணாடியல்ல. அது நீண்டு நெளிந்தோடும் ஆறு. தன்னம்பிக்கையுடன் நீந்தினால், நிச்சயம் கரையேறலாம். காதல் வரும், போகும். ஆனால் வாழ்க்கை நிற்கிறது. இந்த வாழ்க்கை வண்டியைச் செலுத்தும் சமுதாயம் இருக்கிறது. அது எப்போதும் போலிருக்கிறது! முதற் காதலே வாழ்க்கையல்ல. அது தோல்வியடைந்துவிட்டால், வாழ்க்கையே இல்லையென்று எண்ணுவது தவறு. ஆண்களும் பெண்களும் கோடி கோடி உண்டு. ஆதலால் காதலுக்கும் பஞ்சமில்லை", என்று சிரித்துக்கொண்டே கூறினான் நடராசன்.

# 26

நடராசனின் தேறுதலும், சமாதானமும், பானுவின் உடைந்துபோன மனதை உறுதியாக்கவில்லை. சுருங்கச் சொன்னால் அவன் நடைப்பிணம் போல் ஆகிவிட்டான். வாழ்க்கையில் வெறுப்பு, விரக்தி கொண்டவனாக மாறிவிட்டான். எனினும், தன்னுடைய காதல் தோல்வியில் முடிந்தது போல் தன் தங்கையின் காதலும் தோல்வியடையக்கூடாதென்று எண்ணி, பூபதிக்கும், தங்கத்திற்கும் கல்யாணம் நடத்திவிடவேண்டுமென்று உறுதிகொண்டான். தன்னுடைய எண்ணத்தை நடராசனிடம் சொன்னான். அவனும் ஆனந்தத்துடன் வரவேற்றான்.

ஒரு நாள் இருவரும் யாழ்ப்பாணம் புறப்பட்டுச் சென்றனர்.

தன்னுடைய இத்தீர்மானத்தைப் பெற்றோர் எதிர்ப்பார்களென்பது பானுவுக்குத் தெரியும். என்றாலும், அவர்களுடைய இஷ்டத்தைப் பெற முயற்சிக்கவேண்டுமென்று நடராசன் சொல்லியிருந்தான். அதனால், முதலில் தன் தாயிடம் விஷயத்தை விளக்கினான்.

அவளுக்குத் திகைப்பாயும், திகிலாயுமிருந்தது. அதே சமயத்தில் அருவருப்பாயுமிருந்தது. கீழ்சாதிக்காரனுக்குத் தன் மகளைக் கொடுப்பது, குடும்பத்திலில்லாத வழக்கம் என்று இரையத் தொடங்கினாள். தன் கணவனிடத்திலும் பானுவின் தீர்மானத்தைக் கூறினாள். இதைக் கேட்டதும், ஆத்திரத்தால் துள்ளிக் குதித்தார் சபாபதி. நான் உயிரோடு இருக்கும்வரை இந்தக் கல்யாணத்தை நடக்கவிடமாட்டேன் !'' என்று இரைந்தார்.

பானுவுக்குத் தன் பெற்றோர்மீது அடங்காத கோபம் வந்தது. ''இப்படிப் பிடிவாதம் செய்வதாயிருந்தால் நான் எங்கேயாவது தொலைந்து போகிறேன். உங்கள் கண்களில்கூட விழிக்கமாட்டேன். தங்கமும், குளத்திலே, கிணற்றிலே விழுந்து சாகட்டும். அப்புறம், நீங்களும் அம்மாவும் சந்தோஷமாக வாழுங்கள் !'' என்று அவனும் இரைந்தான்.

"பரவாயில்லை. அப்படிச் செத்துத் தொலைந்தாலும், தொலைத்துபோகட்டும். அதற்காக, ஊரிலில்லாத வழக்கத்தை தையும், நம்மவர்கள் செய்யாத காரியத்தையும் செய்து, குடும்பத்திற்குக் களங்கம் வரவிடமாட்டேன்! உன்னுடைய புத்தி இப்படிப் போகுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. அந்தக் கழிசறை நாயின் விருப்பத்திற்கு நீயும் ஒத்துக்கொண்டு இப்படிச் சொல்கிறாயே...!" என்று கூச்சல் போடத் தொடங்கினார்.

இப்படித் தந்தைக்கும், தனயனுக்கும் வாக்குவாதம் முற்றிக் கொண்டு போயிற்று. நடராசனுக்கு இது பிடிக்கவில்லை. இடையில் குறுக்கிட்டுச் சமாதானம் சொல்லத் தொடங்கினான்."

"ஐயா, பெரியவரே, நீங்கள் என் தந்தைக்குச் சமானம். என்னையும் உங்கள் மகனென்று எண்ணிக்கொள்ளுங்கள். நான் சொல்வதையும் தயவுசெய்து கேளுங்கள். ஆத்திரப்படாதீர்கள். ஒரு தாழ்ந்த சாதிக்காரனுக்கு நம்முடைய பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுப்பது ஊரிலில்லாத வழக்கம்தான். ஆனால், இந்த ஊரிலில்லாத வழக்கம் என்பதற்காக, நீதியையும், நியாயத்தையும், நாம் புறக்கணிக்கக்கூடாது. உலகத்தில் எந்த நாட்டிலும், எந்தச் சமூகத்திலும், நம்மவர்களிடையே இருக்கும் சாதி வித்தியாசங்கள் கிடையாது. உலகத்திலுள்ள நாமெல்லோரும் கடவுளின் குழந்தைகள் என்று சொல்லிக்கொள்கிறோம். காந்தியடிகள்கூட இதைத்தான் சொல்கிறார். சாதிகள் இருக்கக்கூடாது என்று போராடினார். கீழ்சாதிக்காரர் என்று யாருமேயில்லை. எல்லாம் நாம் வைத்துக் கொண்டது தான். நாமெல்லோரும் பத்துமாதம் தாய் வயிற்றில் இருந்து பிறந்தவர்கள்தான். நம்முடைய இரத்தத்தில் வேற்றுமையில்லை. இப்படியிருக்கும்போது, கீழ் சாதியென்றும், மேல் சாதியென்றும் பிரிக்கலாமோ...? "சாதி இரண்டொழிய வேறில்லை...! இட்டார் பெரியார், இடாதார் இழிகுலத்தோர்...!" என்று ஔவைப் பாட்டிகூடச் சொல்லியிருக்கிறாள். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று வள்ளுவர் பெருமான் கூறியிருக்கிறார். சாதி ஒழிந்தால்தான் நம் சமூகம் முன்னேறும் என்று அறிவாளிகள் முழக்கம்செய்து கொண்டிருக்

கிறார்கள். இப்படியெல்லாம் இருக்கும்போது, பழைய வழக்கத்தை—நீதிக்கும், நியாயத்திற்கும் புறம்பான வழக்கத்தைக்—கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதுதான் மதியீனம். இன்று உலகம் மாறிக்கொண்டிருக்கிறது. காலமாற்றத்திற்கு ஒத்தபடி நாமும் மாறவேண்டும். நம்மைப் போன்றவர்கள்தான் இப்படிக் கலப்புமணம்செய்து வைப்பதன் மூலமாக மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். இன்று ஊரும், சமூகமும், ஏசினாலும், பழித்தாலும் நாளை நம்மைப் பாராட்டும். தங்கத்தின் வாழ்வு இப்போது அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது. நீங்கள் தைரியத்துடன் சம்மதம் அளியுங்கள். இதனால் உங்களுக்கு ஒரு நஷ்டமும் வராது!" என்று கூறினான்.

பழமையில் ஊறிப்போன சபாபதியின் காதில் நடராசனின் அறிவுரைகள் ஏறவில்லை. "தம்பி, நீங்களெல்லாம் கற்றுக்குட்டிகள். நாலைஞ்சு புத்தகத்தைப் படித்துவிட்டுப் பேசுகிறீர்கள். பரம்பரை பரம்பரையாக உள்ள வழக்கத்துக்கு மாறாக நாம் நடந்துகொண்டால் என் சந்ததிக்கே தீராப் பழி உண்டாகும். சாதி ஆசாரத்தையெல்லாம் கடைப்பிடித்து வந்த நமது முன்னோர்களெல்லாம் முட்டாள்களா? நீங்கள் நேற்றுப் பிறந்தவர்கள். உங்களுக்கு அனுபவம் போதாது. நான் ஊருக்குப்பயந்து இப்படிச் சொல்லவில்லை. நமது வாழையடி வாழையாக வந்த வழக்கத்துக்கு மாறாக நான் எதையும் செய்யமாட்டேன். ஏழையோ, கூனோ, குருடோ, முடமோ—நம்ம சாதிக்காரன் ஒருவனைக் கொண்டுவந்து தாலியைக் கட்டச்சொல்லுங்கள். நான் தடைசெய்யவில்லை. ஆனால் பூபதியை மருமகனாக்க நான் சம்மதிக்கமாட்டேன். என்னுடன் வீண் தர்க்கம் செய்யவேண்டாம்!" என்று கண்டிப்புடன் சொல்லி விட்டார்.

நடராசன் பானுவை அழைத்துக்கொண்டு வெளியே வந்தான். "பானு, உன் ஐயாவைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. இவ்வளவு சொல்லியும் அவர் சம்மதம் அளிக்காத ஆச்சரியமில்லை. சமூகம் கடைப்பிடித்து வந்த சாதியுணர்ச்சி, அவருடைய இரத்தத்தில் ஊறிவிட்டது. வைதிக மனப்

பான்மை வேரூன்றி விட்டது. பழைமைப்பாசம் நெஞ்சிலே நிறைந்து விட்டிருக்கிறது. அவர்கள் நமது ஒரு நாள் பேச்சிலோ பலநாள் பேச்சிலோ மாற்றிவிட முடியாது. அது கட்டையோடுதான் போகும். உன் ஐயாவின் தலைமுறையிலுள்ளவர்கள் மாறவே மாட்டார்கள். ஆனால், நமது தலைமுறையில் இந்த மறுமலர்ச்சியைக் காணவேண்டும். ஆதலால் நாம் திடசித்தத்துடன் நமது இலட்சியத்தை நிறைவேற்றவேண்டியதுதான்!'' என்றான்.

"எப்படி நிறைவேற்றுவது?''

"இருவருக்கும் ரிஜிஸ்தர் திருமணம் செய்துவிட வேண்டியதுதான்.''

நடராசனின் இந்த ஆலோசனைக்குப் பாலுவும் ஒத்துக்கொண்டான். இதுபற்றி இருவரும் பூபதியுடன் கலந்து யோசனை செய்தார்கள்.

ஒருநாள், தங்கத்துக்கும், பூபதிக்கும் ரிஜிஸ்தர் திருமணம் நடந்தது. இதையறிந்த சபாபதி ஆவேசம் கொண்டவராக "தங்கம் என் மகளல்ல, அவள் யாரோ? நான் யாரோ? அவள் இந்த வீட்டின் வாசலைக்கூட மிதிக்கக்கூடாது!'' என்று கத்தினார். தாய் தந்தையரின் கோபம் தணியுமட்டும் தங்கம் பூபதியின் வீட்டில் இருப்பது என்று முடிவுசெய்தார்கள். பாலு கூடப் பூபதியின் வீட்டில்தான் இருந்தான். பாலுவின் இந்தத் துணிச்சலான காரியத்தை எண்ணி, வைதிகரும், பழமைப் பற்றுடையோரும் சீறினர்; முற்போக்கு எண்ணம் படைத்த அனைவரும் ஆதரவளித்தார்கள். ஆரவாரத்துடன் வரவேற்றுத் தம்பதிகளை வாழ்த்தினார்கள். பூபதியும் தங்கமும் தங்களுடைய காதல் நிறைவேறியதை எண்ணி உள்ளம் பூரித்தனர்.

நடராசன் நாலைந்து நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கிவிட்டுக் கொழும்புக்குப் புறப்பட்டான். பாலு கொழும்புக்குப்போக விரும்பவில்லையாதலால் அவன் யாழ்ப்பாணத்திலேயே தங்கிவிட்டான்.

நாட்கள் ஒவ்வொன்ருக மடிந்துகொண்டிருந்தன.

மனேன்மணிக்கு கரு அழிவால் ஏற்பட்ட உடல் நிலை முற்றிலும் தேறிவிட்டதால், திருமணத்துக்காக வேண்டிய ஏற்பாடுகளைச் சதாசிவம் தம்பதிகள் மிக மும்மரமாகச் செய்து வந்தனர்.

குறித்த நாளில் இராஜலிங்கத்துக்கும் மனேன்மணிக்கும் சொர்ணவிலாசத்தில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. பத்திரிகையில் இருவருடைய படமும் போட்டு, திருமணமான செய்தி வெளிவந்தது.

பாலு பத்திரிகை மூலமாக இந்தச் செய்தியை அறிந்ததும் தனக்கு இனி வாழ்க்கையே இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டான். ஏற்கனவே மனமுடைந்து நடைப்பிணம் போலிருந்த அவன் இப்போது, ஊன் மறந்து, உறக்கம் மறந்து, வியாதிக்காரனுக மாறிவிட்டான். மன நோயுடன் உடல் நோயும் சேர்ந்து, விரைவிலேயே படுக்கையில் கிடக்கவேண்டி வந்துவிட்டது. பூபதியும், தங்கமும், அவனுக்குப் பக்கத்தில் இருந்து, பணிவிடை செய்தனர். பாலு பிழைத்து விடவேண்டுமென்ற எண்ணத்தில் பூபதி, பணத்தைத் தண்ணீர்போல் செலவு செய்தான். ஆனல், மனநோயுடன் சம்பந்தப்பட்ட உடல் நோய் எப்படி மாறும்? பாலுவுக்குக்கூட அது விருப்பமில்லை!

பாலுவைப்போல் தான் சபாபதியும் நோயில் கிடந்தார். தங்கத்தின் திருமணம் நடந்ததிலிருந்து அவருடைய மனம் சொல்லொணுத் துன்பமடைந்தது. குடும்ப மானமே போய் விட்டதென்று உணர்ச்சி அவரை ஊமையாக்கி விட்டது. சாப்பிடுவதில்லை; பேசுவதில்லை. "பெருமானே என்னைச் சீக்கிரம் உன் திருவடி சேர்த்துக்கொள்" என்று மனதுக்குள் வேண்டிக் கொள்வார். வயது முதிர்ந்த பருவம், தளர்ந்து போன உடம்பு, ஏற்கனவே பாரிசவாத நோய். அத்துடன் இந்த மனநோயாலும், ஊணில்லாததாலும் அவரும் படுத்த படுக்கையாகி விட்டார்.

இதையறிந்த பூபதியும், தங்கமும் துடிதுடித்தனர். ஆனால், வீட்டுவாசலைக் கூட மிதிக்க முடியாது தவித்தனர். பூபதி, உடனே நடராசனுக்கு விஷயத்தை விளக்கிக் கடிதம் எழுதினான்.

நடராசன் துடிதுடிப்புடன் யாழ்ப்பாணம் வந்தான். தந்தையையும், தனயனையும் காப்பாற்றத் தன்னாலியன்ற முயற்சி எடுத்துக் கொண்டான். ஆனால்—

ஒருநாள் காலை, நடராசனைப் பக்கத்தில் இருக்கச் சொன்னான் பாலு. "நடராசா, நான் பிழைக்கமாட்டேன். பிழைக்க விரும்பவில்லை. என்காதல் தோற்றுவிட்டது உண்மைதான். ஆனால், அதற்காக நான் வருந்தவில்லை. என் தங்கையின் காதல் நிறைவேறிவிட்டது. அதுவே போதும். ஆனால், மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கும் என் தந்தையைப் பார்க்க முடியவில்லையே என்ற துக்கந்தான். அவருக்கு அருகிலிருந்து பணிவிடை செய்ய முடியாது போய்விட்டதே என்ற கவலைதான். அதற்காக நாம் என்ன செய்ய முடியும்? கடைசியாக ஒரு வேண்டுகோள். என் தங்கையைப் பூபதி ஒரு குறைவுமில்லாமல் காப்பாற்றுவானென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால், என் அம்மாவை நீதான் காப்பாற்ற வேண்டும். உன் தாயாக நீ நினைத்துக்கொள்ள வேண்டும். இதுதான் என் வேண்டுகோள்."

நடராசனின் விழிகள் நீரைப் பெருக்கவில்லை. ஆனால், அவன் மனம் அழுதது. உற்ற நண்பனைப் பிரியப்போகிறோமென்ற துக்கம் நெஞ்சை அடைத்தது. ஒன்றுமே பேசவில்லை. பேச நாவெழவில்லை. பாலுவின் கையைப்பிடித்து. தன் தலையசைப்பால், அவன் வேண்டுகோளைக் காப்பாற்றுவதாக வாக்குறுதியளித்தான்.

இதற்கிடையில் பக்கத்து வீடான சபாபதியின் வீட்டில் இருந்து ஒப்பாரிச் சப்தம் கேட்டது. அதற்குமேல் தங்கத்தால் வீட்டிலிருக்க முடியவில்லை. பின்தொடர்ந்த எல்லை வெளியால் தங்கள் வளவுக்குள் ஓடினாள். பூபதியும் பின் தொடர்ந்தான்.

வீட்டுக்குள்ளே பதட்டத்துடன் நுழைந்த தங்கம் தன் தந்தையின் காலடியில் போய் விழுந்து கால்களைக் கட்டிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். சூழ இருந்தவர்கள் தடைசெய்யவில்லை. சபாபதியின் கடைசி மூச்சுப் போய்க் கொண்டிருந்தது.

தங்கத்தைப் பின்தொடர்ந்து ஓடிவந்த பூபதியைக் கண் டதும், வளவுக்குள் நின்ற சில 'பெரிய மனுஷர்கள்' "டேய் உள்ளே போகாதே! காலை வெட்டிவிடுவோம்!" என்றனர். பூபதி அப்படியே திடுக்கிட்டு நின்றுவிட்டான். அவன் கண் களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வழிந்தது. ஒரு மனி தனுக்குக் கடைசி மரியாதை செய்யக்கூடச் சமூகம் சம்மதம் அளிக்கவில்லை! பூபதியின் உள்ளம் நொந்தது. வெந்தது. தலை யைக் கவிழ்ந்துகொண்டு திரும்பிவிட்டான்.

சபாபதி செத்துவிட்டார்! ஒப்பாரியும், பிலாக்கணமும் தொடங்கிவிட்டது!

சபாபதி இறந்து சில மணி நேரங்களுக்குள் பாலுவும், மரணத்தைக் கட்டித் தழுவிக்கொண்டான்.

அன்று மாலை தந்தையும், தனயனும் சுடு காட்டிலே எரிந்துகொண்டிருந்தார்கள். பூபதியும், நடராசனும் சோகமே உருவாகிச் சிலைபோல் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரின் கண்களிலிருந்தும் நீர் முத்துக்கள் உருண்டுகொண் டிருந்தன.

கொழுந்துவிட்டெரியும் பிணத்தைப் பார்த்தான் நடராசன். ஆகாயத்தைப் புகைமயமாக்கி எரிந்துகொண்டிருந்த தீயின் வெளிச்சத்திலே பாலுவின் முகம் தெரிந்தது. நடராசனுக்கு அப்போது அவன் உள்ளத்தில் ஆயிரம் எண்ணங்கள் எழுந்தன.

வீட்டுக்கு வந்ததும் "அண்ணே......! அண்ணே......! என்றும், ஐயா... அப்பு... என்றும் தேம்பிக்கொண்டிருந்தாள் தங்கம். இரண்டு மூன்று நாட்கள் வரை அத்தேம்புதல் நிற் கவில்லை. பாலுவின் தாயார் கணவனையிழந்த சோகத்திலும், மகனையிழந்த துக்கத்திலும் பித்தம் பிடித்தவள் போலானாள்.

நாலைந்து நாட்கள் சென்று மறைந்தன. அன்றும் சோகத்தின் சுமைதாங்காது அழுதுகொண்டிருந்தாள் தங்கம். நடராசன் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். பூபதி அவளைத் தேற்றினான். "தங்கம் உன் அண்ணன் செத்துவிட்டானென்ற துயரம் உன்னை எப்படித் துளைக்கிறது என்பது எனக்குத் தெரியும். என்ன செய்யலாம். ஆனால், "நடராசன் இருக்கிறார். உன் அண்ணனுக்குச் சமானமானவர். நமது குடும்பத்தின் தலைவர் அவர்தான்." என்று நடராசனைச் சுட்டிக் காட்டினான்.

சிந்தனையிலிருந்த நடராசன் தங்கத்தின் பக்கம் திரும்பி, "ஆம் தங்கம்! நான் உன் அண்ணன்தான்! பாலுவுக்குப் பதிலாக நான் இருக்கிறேன். நீ என் சகோதரி!" என்று சொல்லிவிட்டு, ஒரு மூலையிலிருந்து கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த பாலுவின் அம்மாவைப் பார்த்தான். நடராசனின் உள்ளம் துக்கத்தால் துடித்தது அதையும் அடக்கிக்கொண்டு "இதுவரை தாய் தந்தையில்லாத அனாதையாக விருந்தேன். இனிமேல் நீங்கள்தான் தாய். தங்கம் என் தங்கை!" என்று சொல்லி விட்டுத் தன் கண்களைத் துடைத்துக் கொண்டான். மறுகணம் அவன் விழிகள் சுவரில் மாட்டப்பட்டிருந்த பாலுவின் படத்திலே பாய்ந்தன. கொஞ்சநேரம் அதையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"பூபதியின் காதல் புயலாகவிருந்தது. உன்னுடைய காதல் தென்றலாகவிருந்தது. இப்போது பூபதியின் காதல் தென்றலாக மாறிவிட்டது. உன்னுடைய காதல் புயலாக மாறி உன் உயிரையே குடித்துவிட்டது. ஆம். காதல் தென்றலாகவும் இருக்கும்; புயலாகவும் இருக்கும்!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் நடராசன்.

முற்றிற்று.

# இளங்கீரனின் இதர நூல்களிற் சில.

## காதல் உலகிலே

காதலைப்பற்றிய இன்றைய நடைமுறைக் கருத்துக்களுக்கு முற்றிலும் எதிரிடையான ஒரு புதுக்கருத்தையும் வாழ்க்கையைப்பற்றிய பல உண்மைத் தத்துவங்களையும் முழக்கமிடும் சிந்தனை நாவல்.

விலை 1-8-0

## கலாராணி

கலைகள் பல. அவை எவருடன் கூடிக் குலாவுகிறது. எவருடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கிறது. எவருக்குப் பயனளிக்கிறது என்பதையும் இன்றைய நடைமுறைச் சம்பவங்களையும் விளக்கமாக எடுத்துக் காட்டும் இனிமையான நாவல்.

விலை 1-8-0

## நீதிபதி

ஒன்றுமில்லாதவர்கள் தங்களுடைய எண்ணங்களை நிறைவேற்ற வேண்டுமானால் அவர்கள் எத்தகைய கோரமான சம்பவங்களிடையே சிக்கிச் சிதைய வேண்டியிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் கருத்தோவியம்.

விலை 1-8-0

## ஆணும் பெண்ணும்

ஆதிகாலம் தொட்டு இன்றுவரை வளர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கும் ஆண் — பெண் உறவுகளை மனோதத்துவ, உடல்தத்துவரீதியால் விளக்கிக் காட்டும் ஆராய்ச்சி ஏடு,

விலை 1-8-0

## பாரதி கண்ட சமுதாயம்

மக்கள் கவி பாரதியைப் பற்றிய ஒரு ஆராய்ச்சி ஏடு. புரட்சிக்கவி பாரதி, சமுதாயம் — அதன்வாழ்வு எப்படியிருக்க வேண்டுமென்று கனவு கண்டான் என்பதையும், அவனுடைய இதய முழக்கத்தையும், இலட்சிய கீதத்தையும் தெளிவாக விளக்கிக்காட்டும் அரிய நூல்.